அரசியற்கலை

மேல் நிலை — முதலாம் ஆண்டு

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

அரசியற்கலை

மேல் நிலை – முதலாம் ஆண்டு

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
சென்னை

© தமிழ்நாட்டு அரசு
முதல் பதிப்பு — 1978

(தமிழ்நாட்டு அரசு ஆணைக்கிணங்க அமைக்கப்பட்ட குழுவினால் தயாரிக்கப்பட்டது)

விலை : ரூ. 3-80

இந்நூல் 60 ஜி. எஸ். எம். தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

அச்சிட்டோர் :
குமரன் பிரஸ், சென்னை-600 001

பொருளடக்கம்

			பக்கம்
1.	அரசியல் நூல் பயிற்சி	...	1
2.	அரசியல் நூலின் இலக்கணமும் இயல்பும் அளவும்	...	9
3.	அரசியல் விஞ்ஞானத்துக்கும் ஏனைய சமுதாய அறிவியல்களுக்கும் உள்ள தொடர்பு	...	19
4.	அரசு என்பதைப் பற்றிய கோட்பாடு	...	28
5.	நாடு : இலக்கணம், இயல்பு, அலுவல்கள்	...	39
6.	அரசின் தோற்றம்	...	49
7.	இறைமை	...	62
8.	சுதந்திரமும் சமத்துவமும்	...	80
9.	உரிமைகளும் கடமைகளும்	...	93
10.	சட்டம் : தன்மை, மூலங்கள், வகைகள்	...	100
11.	மக்களாட்சியும் வல்லாட்சியும்	...	115
12.	சமுதாய உடைமை அல்லது சோஷலிஸம்	...	124
13.	பாஸிஸமும் நாஸிஸமும்	...	137
14.	காந்தியமும் சர்வோதயமும்	...	150

இயல் 1

அரசியல் நூல் பயிற்சி

'அரசியல் நூலைக் கற்பவர் மனிதச் செயலைப்பற்றிக் கற்கின்றவரே ஆவர்.'[1] அரசியல் நூல் பயிற்சி பல்வேறு சர்ச்சைகளுக்கு உள்ளாகி இருக்கிறது அரசியல் நூலைப் பயிலுவதற்குப் பல்வேறு வழிகள் இருக்கின்றன. முற்காலத்தில் கையாளப்பட்ட வழிகளெல்லாம் வரலாறு, தத்துவம், சட்டம் முதலிய நூல்களோடு தொடர்புடையவை. தற்போது சமுதாய இயல், உளவியல், புள்ளி இயல் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகள் அல்லது புதிய கருத்துக்கள் அரசியல் நூல் பயிற்சிக்குப் புதிய அடிப்படை அமைத்துக் கொடுக்கின்றன. அரசியல் நூல் பயிற்சியில் இக்காலத்தில் கையாளப்படுகின்ற வழிகளெல்லாம் ஐக்கிய அமெரிக்க நாட்டில்தான் முதன்முதலில் தோன்றின. இக்காலத்திய அரசியல் நூலாசிரியர்களுடைய கருத்தெல்லாம் மனிதரின் அரசியல் செயல்களை அளவிட்டு வகைப்படுத்தி எதிர்காலத்திய அரசியல் போக்கினை முன்னதாகவே எடுத்துக்கூறுதல் எப்படி என்ற பிரச்சினையைப் பற்றியதுதான். இத்தகைய முறை தற்காலத்தில் தோன்றியுள்ளது. புள்ளிவிவரங்களோடு அளவிட்டுக் கூறுதலும், விஞ்ஞான அல்லது அறிவியல் முறையில் எதிர்காலப்போக்கை முன்னரே கூறுதலும்தான் இக்கால அரசியல் நூல் பயிற்சியில் இடம்பெற்றுள்ள வழிகளாகும். முற்காலத்தில் இத்தகைய வழி கையாளப்படவில்லை. அரசியல் நூல் பயிற்சியில் இத்தகைய ஒரு புதியவழி தோன்றியுள்ள மாறுதலைச் சுருக்கமாகக் கூறுதல் பொருத்தமுடையதே.

ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளாக அரசியல் வாழ்க்கை என்பது படிப்பிற்குரிய ஒரு பொருளாக இருந்து வந்துள்ளது. மனிதனுடைய அரசியல் வாழ்வைப் பற்றிப் படித்து, அதைப்பற்றி ஒரு முறையான வழியில் சிந்திப்பதற்கு முயன்றவர்கள் முதன் முதலில் கிரேக்கர்களேயாவர். (கிரீக் மொழியில்) 'போலிஸ்' (Polis) என்று அழைக்கப்பட்ட நகர் அரசைப்பற்றி புகழ்மிக்க கிரேக்க தத்துவ ஆசிரியர்களாகிய பிளேட்டோவும், அரிஸ்டாட்டிலும் ஆராய்ந்து, அரசியல்

[1] பி. எஸ். ஹாரிஸ் : அரசியல் நூலின் ஆதாரங்கள், பக். 37

கருத்துக்கள் என்ற கருவூலத்துக்கு மிகுதியும் வழங்கியிருக்கின்றனர் 'போலிஸ்' என்ற கிரேக்க சொல்லிலிருந்துதான், அரசியல் நூல் என்று பொருள்படும் 'பாலிட்டிக்ஸ்' என்ற ஆங்கிலச் சொல் வருவிக்கப்படுகிறது ; போலிஸ் என்பது ஒரு சிறிய, சுயாட்சியுடைய, தன் நிறைவையுடைய அரசியல் சமுதாயத்தைக் குறிப்பிடுகிறது. பிளேட்டோவும், அரிஸ்டாட்டிலும் ஒரு நல்ல அரசியல் வாழ்வு அமைவது எப்படி என்ற கேள்வியைப் பற்றி ஆராய்ந்தனர். இதுவே நாடு அல்லது அரசு என்ற கருத்தைப் பற்றியும், அரசியல் வாழ்வின் தன்மையைப் பற்றியும் ஒரு தத்துவ வகையிலான ஆராய்ச்சி தோன்றுவதற்கு ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திற்று. அரசியல் சிந்தனை அல்லது தத்துவம் என்பது அரசியல் வாழ்வைப் பற்றிய ஆராய்ச்சிகள் அடங்கியது. அரசியல் செயல்களை ஆராய்ந்து கோட்பாடுகளை வகுத்தலும் நல்வாழ்வைப் பற்றிய தத்துவ ஆராய்ச்சி செய்தலும் ஆகிய இவை இரண்டும்தான், அரசியல் நூலைப் பயிலுதலில் கையாளப்பட்ட இரட்டை வழிகள் ஆகும் ; இவையே அரசியல் நூலைப் பயிலுதற்குரிய முறையான வழி (Normative approach) என்றும் குறிப்பிடப்படும்.

இக்காலத்தில் நிகழ்ச்சிகளையும், சூழ்நிலைகளையும் காரண காரிய வகையில் விளக்குவதற்குரிய அரசியல் கோட்பாட்டிற்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இத்தகைய ஆய்வு முறையை இடைக் காலத்திலிருந்தே பத்தொன்பதாம் நூற்றுண்டு வரை தோற்றுவித்தது எதுவென்றுல், அது மக்கள் நேரடியாகவோ, தங்களுடைய பிரதிநிதிகள் மூலமாக மறைமுகமாகவோ அரசாங்கத்தில் பங்கு கொள்ளுதல் என்ற பிரச்சினைதான். இந்தப் பிரச்சினை (செயலுக்குரிய) கோட்பாடு வகுத்தலையும் தூண்டிற்று. அரசிலும், அரசியலிலும் மனிதனின் பங்கு என்பதைப் பற்றிப் பல அறிஞர்கள் கோட்பாடுகளை வகுத்தனர். அண்மைக்காலத்தில், 'தற்கால செயல் அறிவு சார்ந்த கோட்பாடு என்ற முறை வளர்ந்ததின் விளைவாகக் கோட்பாடு வகுக்கும் முறையையும், ஆராய்ச்சி முறையையும் இணைப்பது என்ற நிலை தோன்றியுள்ளது.'[1] 'அரசியல் நிகழ்ச்சிகளைத் தருக்க வகையாக அறிந்துகொள்ளுவதற்குரிய அளவிலே, அதற்கு வேண்டிய செய்திகளையெல்லாம் முழுமையாக அறிந்து கொள்ள இயலும் என்ற நிலை அரசியல் நூலின் வரலாற்றில் ஒரு காலத்தில் இருந்தது. ஆனுல் வாழ்வின் மற்றெல்லாத் துறைகளிலும் ஏற்பட்டுள்ளதுபோல், அறிவியல் ஆராய்ச்சியிலும் தொழில் முறையிலே சிறப்பான அல்லது வல்லுநர் நிலை என்ற அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது ;

[1] எஸ். எல். வாஸ்பி : அரசியல் நூல்—பாடமும் அதன் அளவுகளும், பக்.37

ஆகையால் கிடைக்கக் கூடிய செய்திகளையெல்லாம் நினைவில் கொள்ளுதல் என்பது ஒரு தனி ஆள் அல்லது ஒரு சிறிய குழுவினருடைய ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாக ஆகிவிட்டது; இந்த அளவுக்கு அறிவியல் ஆராய்ச்சி முறை முன்னேறியுள்ளது.'[1]

அரசைப் பற்றிய தத்துவமும், அரசியல் கோட்பாடுகளும் மட்டுமல்லாமல், அரசியல் நூல் பயிற்சியில் அரசியல் நிறுவனங்களைப் பற்றிய படிப்பிலும் முக்கியத்துவம் செலுத்தப்படுகிறது. அரசாங்க அமைப்புக்கள், அதனுடைய பல்வேறு வகைகள் ஆகியவை பற்றியும் முறையாக ஆராயப்படுகின்றன. இன்று அரசாங்கத்தைப் பற்றிய படிப்பு அரசியல் நூலில் ஒரு முக்கியமான பகுதியாக அமைந்திருக்கிறது. 'அரசாங்கத்தை நிறுவுவதற்கு மனிதனுக்கு விருப்பமும் தேவையும் ஏற்பட்டது எவ்வாறு, எப்போதும் மாறுதலுக்கு உள்ளாகிற தனது தேவைகளுக்கு ஏற்ப அரசாங்கத்தை மாற்றி அவன் எவ்வாறு அமைக்கிறான். அவன் எவ்வாறு, ஏன் அரசாங்கக் கோட்பாடுகளை உருவாக்குகிறான் என்பதையெல்லாம் பற்றி அரசியல் நூல் கூறுகிறது. மனித செயல்களின் சூழ்நிலைகளையும், விளைவுகளையும் பற்றி அரசியல் நூல் குறிப்பிடுகிறது.'[2] நிறுவன வகையில் அல்லது அமைப்பு வகையில் (அரசியல் நூலைப்) பயிலுதல் என்ற முறை அரசாங்கங்களைப் பற்றிப் படிப்பதில் கையாளப்படுகிறது. அரசியலைக் கற்பதில் இந்த முறையே அல்லது வழியே மிக முக்கியமான வழியாகத் தொடர்ந்து இருந்து வருகிறது. இந்த வகையிலான அரசியல் நூல் பயிற்சியைப் பற்றி சோமிட், டானன்ஹாஸ் என்ற இரு ஆசிரியர்கள் குறிப்பிட்டு, 'இது முறையான அரசியல் அமைப்புக்களையும், வழிகளையும் வழக்கமான விவரங்களுடன் ஆராயும் வழி,' என்றும், 'இது எப்பொழுதும் கிடைக்கக் கூடிய அலுவலக ஆதாரங்களையும், பதிவேடுகளையும் ஆதாரமாக உடையது' என்றும் கூறுகின்றனர்,[3]

இந்நூலின் பின்வரும் பக்கங்களிலிருந்து. அரசியல் நூல் என்பது, 'அரசு' அல்லது 'நாடு' என்ற சொல்லைப் பற்றியே மிகுதியும் குறிப்பிடுகிறது என்று தெரிந்து கொள்ளலாம். இதற்கான காரணங்களை ஆராய்தல் நல்லது.

[1] டி. ஈஸ்ட்டன் : அரசியல் வாழ்வைப்பற்றி முறைகள் வகையிலான ஆய்வு, பக். 471

[2] எச். யூலவ் : அரசியல் நூலில் செயல்வகை இயல்பு, பக். 133

[3] ஆல்பர்ட் சோமிட், ஜோசப் டானன்ஹாஸ் : அமெரிக்க அரசியல் நூலின் வளர்ச்சி—பர்கஸ் காலத்திலிருந்து செயல்வகை இயல்பு முறை, பக். 70

சமுதாயம் என்பது பல கூறுகளைத் தன்னிடத்து உடையது. தனி ஆள் எவரும் ஒரே சமயத்தில் ஒரு அல்லது பல கூறுகளில் உறுப்பினராக இருத்தல் கூடும். குடும்பம், உறவு, குடும்பங்களின் தொகுதி, சாதி, தொழில் சங்கம், கலாசாரக் குழுக்கள் ஆகியவை களைச் சமுதாயத்திலுள்ள குழுக்களுக்கு எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம். இந்தக் குழுக்களெல்லாம் சமுதாயத்தில் அளவில் பெரியவையாக இருந்தபோதிலும், மிக்க ஆற்றலைக் கையாளு கின்ற ஓர் அதிகாரி ஒவ்வொரு சமுதாயத்திலும் இருக்கிறார். இவ்வதிகாரி எந்த ஒரு ஆளையும் கொல்லுதற்குக் கூட அதிகாரம் பெற்றிருத்தல் கூடும். இவ்வதிகாரிக்கு உள்ள அதிகாரங்க ளெல்லாம் பிறரைக் கட்டுப்படுத்தவல்ல அதிகாரங்கள் என்று கூறப்படும். எனவே, இவ்வதிகாரிக்கு அளவற்ற அல்லது வரம் பற்ற ஆற்றல் இருப்பதாகப் பொருள்படும். ஒரு சமுதாயத்தில், இத்தகைய கட்டுப்படுத்தும் அதிகாரமும், ஆற்றலும் ஒரே ஓர் அதிகாரியிடம்தான் இருத்தல் கூடும். இத்தகைய அதிகாரியே அரசு (State) ஆகும். அரசியல் வாழ்வுக்கு நிறுவன அமைப்புக்கள் ஏற்படும்போது, அரசு என்பது மிக உயரிய அரசியல் அமைப் புடைய வடிவத்தில் தோன்றுகிறது. அரசின் அமைப்பில் இத்தகைய மாறுதல் ஏற்படுவதற்குப் பின்வரும் காரணங்கள் இருக்கின்றன.

சமுதாயத்திலுள்ள கூறுகளில் அரசு என்பதே மிக்க வலிமை யுடையதாகும். தனக்குக் கீழ்ப்படியுமாறு அது மற்றவர்களைக் கட்டாயப்படுத்த இயலும். அரசுக்குக் கீழ்ப்படிய மறுத்தல், தண்டனையை விளைவிக்கும். தனிப்பட்ட ஆட்கள் அரசிலிருந்து விலகிக்கொள்ள இயலாது. ஒருவர் ஒரு அரசிலிருந்து விலகுவா ராயின், அவர் வேறொரு அரசின் அதிகாரத்தின் கீழ் வருகிறார். அரசின் கைவசம் இருக்கக்கூடிய செல்வ ஆதாரங்கள், பணம், படைக்கலங்கள் முதலியவைகளுக்கு சமுதாயத்திலுள்ள எந்தக் கூறும் ஒப்பாகாது. இவ்வகையாகத் தனது நில எல்லைகளுக்கு உட்பட்டு வாழும் எல்லாரையும் கட்டுப்படுத்தக்கூடிய முழு ஆற்றலையும் உடைய ஒரு வலிய அமைப்பாக அரசு தோன்றி யுள்ளது. அரசினைப் பற்றிய இந்தக் கருத்து அரசியல் நூலார் பலருடைய சர்ச்சைக்கு உள்ளான ஒரு கருத்து ஆகும்.

எவ்வளவுக்கெவ்வளவு அரசாங்க அதிகாரம் குறைவாகக் கையாளப்படுகிறதோ, அவ்வளவுக்கு அது மிகநல்ல அரசாங்கமாக அமைகிறது. இதுவே அரசு நீக்கப்படுதல் வேண்டுமென்று கூறும் அரசு மறுப்பாளர்களின் (Anarchists) கருத்து ஆகும். அரசி னிடத்தே அதிகாரக் குவிப்பு ஏற்பட்ட நிலையே, 'ஒரு நிலைக்

கோட்பாடு' (monism) என்பது தோன்றுவதற்குக் காரணமாக இருந்தது. இதற்கு நேர்மாருன கருத்தே 'பன்முகக் கோட்பாட்டாள'ருடையது ஆகும்; அதிகாரம் பல்வேறு குழுக்களிடையே பகிர்ந்து கொள்ளப்படுதல் வேண்டுமென்பதும், அது அரசினுல் மட்டுமே எடுத்துக்கொள்ளப்படுதல் கூடாது என்பதும் இக்கோட்பாட்டினருடைய கருத்து ஆகும். இதற்கு மாருக, பொதுவுடைமையாளர் அரசின் மக்களை ஒடுக்குதற்கு உரிய ஒரு கருவியாகக் கருதுகின்றனர். பல நாடுகளிலே அரசாங்க அதிகாரம் கூடுதலாவதைத் தடுத்தற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இவ்வகையில் தோன்றிய ஒரு குறிப்பிடத்தக்க முயற்சிதான், அரசாங்க உறுப்புக்களின் அதிகாரங்களை வரையறை செய்கின்ற அரசியலமைப்பின் வளர்ச்சி ஆகும்.

இதுவரை கூறியவற்றிலிருந்து, அரசினைப்பற்றிய கருத்து மிகவும் மாறுதலுக்கு உள்ளாகியிருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. இவ்வாறு ஏற்பட்டாலும், அரசு என்பதே அரசியல் நூலாசிரியர்களுடைய ஆய்விலே மையக் கருத்தாக இன்னும் இருந்து வருகிறது. மேற்கத்திய அரசுமுறையானது, உலகின் எல்லா பாகங்களிலும் பொருந்தி வரக்கூடிய ஒன்று என்பதாக அண்மையில் யாவராலும் உணரப்பட்டு வருகிறது. மேற்கத்தியாருடைய மரபுகள், அனுபவங்கள் ஆகியவற்றிலிருந்து அரசுமுறை தோன்றியுள்ளதாகையால், அச் சமுதாயத்தினர் அவ்வரசுமுறையோடு ஒன்றியே வாழ்ந்து வந்துள்ளனர். இத்தகைய அரசுமுறை ஆசிய, ஆப்பிரிக்க மக்களுக்குப் புதியதான, புறம்பான ஒன்று. இந்த நிலையே, தற்போது (மேற்கத்திய) அரசுமுறைக்கு ஒரு எதிர்ப்பு நெடுகிலும் வளர்ந்து வந்துள்ளதை எடுத்துக்காட்டுகிறது. இவ்வரசு முறையினுல் ஏற்படக்கூடிய பயன்கள் மிகவும் சுருக்கமாகையினுல், இவ்வரசு முறைக்கு மேற்கத்தியர் எதிர்ப்புக் காட்டுகின்றனர். கிழக்கத்தியார். அரசு என்பதை குடியேற்ற நாட்டு ஆதிக்க ஆட்சியோடு ஒன்றுபடுத்தியே எண்ணுகின்றனர்; எனவேதான் அவர்கள் அதனைக் கவலையோடு நோக்குகின்றனர். அரசு என்பதை ஒரு நல்ல, விரும்பத்தக்க நிறுவனமாகக் கருதுகிற மூன்ருவது கருத்து ஒன்றும் இருக்கிறது. அரசியல் கட்சி போன்ற அரசியல் சக்திகளின் தோற்றத்தினுலேயே மேற்கூறிய மூன்ருவது தோன்றிற்று.

அரசியல் நூலைப்பற்றிய இக்காலக் கருத்து

அரசியலை, அறிவைப் பெறுவதற்குரிய ஒரு கலையாகக் கருதாமல். அதனை ஒரு பிழைப்பாக அல்லது தொழிலாக ஆக்கும் இயல்பு இன்று தோன்றியுள்ளது. இத்தகைய இயல்பை

ஏற்படுத்தியோர் 'செயல்வகைக் கோட்பாட்டாளர்' அல்லது 'செயல் வகையாளர்' எனப்படுவோர் ஆவர். அரசியல் நூலை செயல்வகை இயல்பிலே கற்கும் முறை இன்று உலகமெங்கிலும் வெகுவிரைவாகப் பரவி வருகிறது. செயல்வகை இயல்பு என்பது ஐக்கிய அமெரிக்க நாட்டினின்றும் (Behaviouralism என்ற ஆங்கிலச் சொல் இங்கு செயல்வகை இயல்பு என்று மொழி பெயர்க்கப்படுகிறது.) தோன்றியுள்ள ஓர் முறை ஆகும். இதன் படி, சமுதாயம் என்பது செயல் அறிவு வகையிலே, அல்லது அளவை முறையிலே (Quantitative analysis) ஆய்வு செய்து கற்பதற்கு உரியது என்று கூறப்படுகிறது. செயல்வகை முறை என்பது, 'அறிவியல் முறையிலும், செய்திகளை அறியும் வகையிலும் படிந்து நின்று, சில குறிப்பிட்ட சூழ்நிலைகளிலே (மக்களின் அரசியல்) எதிர்காலச் செயலை முன்னதாகவே எடுத்துக் கூறுவதற்கும் முயலுகிறது,' இவ்வகையிலே, அரசியல் நூலானது, ஓர் அறிவியல் நூல் என்ற சொல்லுக்கு உரிய முழுப்பொருளில் இருப்பதாகக் கருதப்படுகிறது. அரசியல் கல்வியானது சாதாரண மனிதருடைய அரசியலோடு தொடர்புடையதாக அமைந்திருத்தல் வேண்டுமே தவிர, பெரும் அறிவாளிகளுடைய கருத்துக்களோடும், நோக்கங்களோடும் தொடர்புடையதாக இருத்தல் கூடாது என்றும் கருதப்படுகிறது. இத்தகைய போக்கை ஒட்டி, அரசியல் நூலானது உளவியல், சமூக இயல் ஆகியவற்றின் முறைகளுக்கு மிகுதியான முக்கியத்துவம் கொடுக்கிறது. செயல் வகை இயல்பிலான இத்தகைய போக்கு மிகவும் அறிவியலான போக்கு ஆகும். 'செயல்வகை இயல்பானது புள்ளி விவரங்களை மிகுதியும் கையாண்டு, முறை இயலுக்கும் (Methodology என்ற ஆங்கிலச் சொல்லுக்கு 'முறை இயல்' என்ற தமிழ்ச்சொல் இங்கு மொழி பெயர்ப்பாகக் கொள்ளப்படுகிறது.) முக்கியத்துவம் கொடுக்கிறது என்றும், இதுவே செயல்வகை இயல்பின் முக்கிய தன்மை என்றும் பல அரசியலாசிரியர்கள் கூறுகின்றனர்.'[1] செயல்வகைக் கோட்பாட்டாளர், சமுதாயத்தில் தனிமனிதனின் செயல்களைத் தூண்டும் காரணங்களை ஆய்வு செய்ய முனைகிறார். அரசியல் நிறுவனங்களைப்பற்றி, அவை எவ்வாறு காணப்படுகின்றனவோ, அவ்வகையில் அவற்றை ஆராயந்து கற்பதற்குப் பதிலாக செயல்வகைக் கோட்பாட்டாளர், மனிதனும், நிறுவனங்களும் ஏன் குறிப்பிட்ட வகையில் இயங்குகின்றனர் என்ற பிரச்சினையைத்தான் தனது ஆராய்வுக்கு எடுத்துக் கொள்ளுகிறார். அரசியல் நூலைக் கற்பதில் இத்தகைய செயல்வகை முறையானது இப்போது யாவராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

[1] எஸ். எல். வாஸ்பீ: அரசியல் நூல் பகுதியும், அதன் அளவுகளும், பக். 45

செயல்வகை இயல்பு முறையானது, மூன்றுவது உலகப் பிரிவு நாடுகளின் அரசியல் அமைப்புக்களைப் பற்றி ஆராய்வதற்கு மிக்க பொருத்தமான முறையாகும். ஐரோப்பிய அரசியல் நிறுவனங்களையும்; கருத்துக்களையும் ஆதாரமாக வைத்துக்கொண்டு, வளர்ந்து வரும் நாடுகளின் அரசியலமைப்புக்களை ஆராய்ந்தால், சரியான கருத்துக்களை அளிக்கமாட்டா; எனவேதான் செயல் வகை இயல்பு முறையானது தேவைப்படுகிறது. செயல் வகை இயல்பு முறை அரசாங்கங்களின் ஒப்புமை பற்றிய படிப்பின் பயன்களையும் அளிக்கக்கூடியது. அரசியலமைப்பிலுள்ள மாறுதல்களை, சமுதாய அமைப்பின் மாறுதல்களை வைத்துக் கற்பது பொருத்தமென்று இப்போது ஒப்புக்கொள்ளப்படுகிறது. இத்தகைய கற்கும் முறை இதுவரை கையாளப்பட்டுவந்த வழக்கமான முறையில் இடம் பெறவில்லை. வழக்கமான முறை மாறுதலுக்கு உட்படாமல் ஒரு நிலையான முறை ஆகும்; ஆனால் இக்காலத்திய இந்த செயல் வகை இயல்பு முறையோ மாறுதலுக்கேற்ப அமைந்துள்ள ஒன்று ஆகும்.

அரசியல் நூல் மாணவர்கள் அரசியலைக் கற்பதற்குரிய எல்லா முறைகளையும் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். எந்த ஒரு முறையிலும் முழுமையான உண்மை இருப்பதாகக் கொள்ள இயலாது; ஆகையால் ஒரு முறையை முற்றிலும் மறுத்துவிட்டு வேருென்றை மட்டிலும் ஏற்றுக்கொள்ள இயலாது.

'அரசியல் கல்வியைப் பழுதறக் கற்பது சமுதாயத்துக்கும். தனிமனிதருக்கும் மிக் இன்றியமையாததாகும்.'[1] தொழில்திறன் வளர்ந்துள்ள இக்காலத்தில் மனிதன் தனது அயலவர்களோடு நல்லிணக்கமாக வாழக் கற்றுக் கொள்ளுதல் மிக முக்கியமானது. சமுதாயத்தில் பிரச்சினைகள் தோன்றும் பொழுதெல்லாம் அவற்றுக்குத் தீர்வு காணுதல் வேண்டும். அரசியல் நிறுவனங்களையும், அரசைப்பற்றியும் சரியாக அறிந்துகொண்டால்தான் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் காண இயலும். அரசின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் பற்றிய ஆராய்வு அரசியல் நூலின் மூலமாகவே தான் பெற இயலும்

அரசியலைப் பற்றியும், அரசியல் சக்திகளைப் பற்றியும் ஒவ்வொருவரும் சரிவர அறிந்து கொள்ளுதல் இன்றியமையாததாகும். சரியான அறிவுபெற்ற குடி ஆள்தான் ஏனையோரை விடச் சிறந்த குடிஆள் ஆவார். அரசாங்கத்தின் நடவடிக்கைகள் எல்லாம் ஒவ்வொரு மனிதரையும் அவருடைய வாழ்நாள்

[1] தில்லன், வெய்டன், ஸ்டுவர்ட் : அரசியல் நூலுக்கு அறிமுகம், பக். 3

முழுவதும் நேரடியாகவோ மறைமுகமாகவோ பாதிக்கின்றன. இத்தகைய சூழ்நிலைகளிலே அரசியலறிவு என்பது ஒவ்வொரு வருக்கும் இருக்கவேண்டியது இன்றியமையாததாகும். அப்பொழுதுதான் அவரால் அரசு, அரசாங்கம் ஆகியவற்றின் பிரச்சினைகளை முழுவதும் அறிந்து கொள்ளுதல் இயலும்.

அரசியல் நூல் நாம் குறிப்படும் தொடர் அளவில் மிகப்பரந்த கல்வித் துறையினை உள்ளடக்கியது. வழக்கமாகக் கற்கப்பட்டு வந்த அரசியல் நூலிலே அடங்கியிருந்த பல்வேறு செய்திகளெல்லாம் இப்பொழுது தனியான வல்லுநர் கல்விப் பயிற்சிக்கு உரியவை ஆகிவிட்டன. அரசியல் வாழ்வில் தொடர்புள்ள உள்ளூர் செய்திகள், தேசியச் செய்திகள், அனைத்துலகச் செய்திகள் ஆகியவையெல்லாம் இப்போது அரசியல் நூலிலே அடங்கியுள்ளன. தனி அறிவியல்களை ஒட்டியனவாகக் கருதப் படுகின்ற ஏனைய கலைகளைப்போலவே, அரசியல் நூலும் ஓர் அறிவியலின் தன்மையைப் பெற்றுள்ளது. இப்பாடத்துக்கு ஓர் அறிமுகம் செய்யும் நூலாக இந்நூல், இதுகாறும் முன்னுள்ளோர் பின் பற்றிய படிப்பு முறையையே பின்பற்றி எழுதப்பட்டுள்ளது. அதாவது, மிகக் கவர்ச்சியான கலையாகிய அரசியல் நூலை மாணவர்களுக்கு அறிமுகம் செய்யும் பொருட்டு வழக்கமான படிப்பு முறையே இதில் கையாளப்படுகிறது.

மேற்கோள் நூல்கள்

(1) புளும், வில்லியம். டி: அரசியல் அமைப்பின் கோட்பாடுகள்

(2) தால், ராபர்ட். ஏ: தற்கால ஆராய்வு

(3) ஐரிஷ், மேரியன். டி (பதிப்பு): அரசியல் நூல்—பயிற்சியின் முன்னேற்றம்

கேள்விகள்

1. அரசியலைக் கற்பதில் இக்காலத்திய முறை, பண்டைக் கால கிரேக்கருடைய கற்கும் முறையினின்றும் எவ்வாறு வேறுபடுகிறது?

2. இக்காலத்திய அரசியல் நூல் பயிற்சி முறையை விவரிக்க.

இயல் 2

அரசியல் நூலின் இலக்கணமும் இயல்பும் அளவும்

'அரசியல்' என்ற சொல், நகரம் என்று பொருள்படும் 'போலிஸ்' (Polis) என்று கிரேக்கச் சொல்லிலிருந்து தோன்றியதாகும். கிரேக்கர்களுக்கு அவர்களுடைய நகரமே, நாடு அல்லது அரசு ஆக இருந்தது. நகரரசைப் பற்றிய பாடமே 'அரசியல்' எனப்பட்டது. இக்காலத்திலே ஹெரால்ட் ஜே. லாஸ்க்கி,[1] ஆர்.ஹெச். சால்ட்டோ[2] முதலிய சிந்தனையாளர்கள், தாம் கற்கப் புகும் பாடத்தை அரசியல் என்ற பெயரிலேயே குறிப்பிடத் தலைப்பட்டனர். இந்தப் பாடமானது அரசினையும், அரசாங்கத்தையும் பற்றிக் கூறுகிறது.

அரசையும், அரசாங்கத்தையும் பற்றிய இந்த அறிவியல் நூலுக்குப் பொருத்தமான பெயர் என்ன என்பது யாவருக்கும் ஈடுபாட்டை உண்டாக்கும் ஒரு கேள்வி ஆகும் ; இது இக்காலத்தில் பலருடைய கவனத்தையும் ஈர்த்துள்ளது. ஜெல்லிநெக் என்ற ஆசிரியரின் கூற்றுப்படி, 'அரசியல் நூலைப்போல, ஒரு நல்ல பெயர் கொடுக்கப்படவேண்டிய தேவை, எந்த அறிவியல் நூலுக்கும் ஏற்பட்டதில்லை.' அரிஸ்டாட்டில் அரசினைப் பற்றிய தனது கட்டுரைக்கு 'அரசியல்' என்ற பெயர் வைத்தார். ஜெல்லிநெக். சிட்ஜ்விக் போன்ற இக்கால ஆசிரியர்கள், அரசைப் பற்றிய அறிவியல் (Political Science) என்ற தொடருக்குப்பதிலாக அரசியல் (Politics) என்ற பெயரைக் கொடுக்கின்றனர். அரசியல் சொல்லை அதனுடைய விரிந்த பொருளில் சர் பிரடரிக் போலாக் என்ற ஆசிரியர் கையாண்டு, அதனைக் கோட்பாட்டு அரசியல் (Theoretical Polities) என்றும், செயல்முறை அரசியல் (Practical or Applied Politics) என்றும் பாகுபடுத்திக் கூறுகிறார். இவற்றுள்

[1] லாஸ்க்கி தமது சிறந்த நூலுக்கு 'ஓர் அரசியல் இலக்கணம்' என்ற தலைப்பை வழங்கினார். அவரெழுதிய வேறொரு நூலின் தலைப்பு, 'அரசியலுக்கு ஓர் அறிமுகம்' என்பதாகும்.

[2] ஆர். ஹெச். சால்ட்டோ எழுதிய நூலின் தலைப்பு, 'அரசியல் நூலுக்கு ஓர் அறிமுகம்' என்பதாகும்.

கோட்பாட்டு அரசியல் என்பது அரசின் இயல்பு, தோற்றம், நோக்கம், அது இருக்கவேண்டிய காரணம் அல்லது நியாயம் முதலிய பிரச்சினைகளைப் பற்றிக் கூறுகிறது; இவ்வகையில் அது அரசின் கோட்பாடு அல்லது அரசியல் கோட்பாடு என்று கூறப் படுகிறது. செயல்முறை அரசியல் என்பது, அரசாங்கம் நடை முறையில் இயங்குவதைப் பற்றியும், அரசியலின் கோட்பாடு களும், விதிகளும் செயல்படுத்தப்படுதலைப் பற்றியும் கூறுகிறது. சர் பிரடரிக் போலாக் கீழ்க்காணும் பாகுபாட்டை வரைந்தார்.[1]

	கோட்பாட்டு அரசியல்	செயல்முறை அரசியல்
A.	அரசினைப் பற்றிய கோட்பாடு (அரசாங்கத்தின் தோற்றமும்; வகைகளின் பாகுபாடும், இறைமையின் தோற்றமும் வகையும்.	அரசு நடைமுறையில் இருக்கின்ற அரசாங்க வடிவங்கள்.
B.	அரசாங்கத்தைப் பற்றிய கோட்பாடு. (நிறுவனங்களின் வடிவங்கள்.)	அரசாங்கம் (அரசியலமைப்புச்சட்டமும், வழக்கமும், பாராளுமன்ற அமைப்புக்கள் முதலியவை.)
C.	சட்டம் இயற்றுதல் பற்றிய கோட்பாடு (சட்டத்தின் நோக்கங்கள், சட்டத்தைப் பற்றிய தத்துவம் முதலியவை).	சட்டங்களும் சட்டம் இயற்றுதலும் (சட்டம் இயற்றும் விதிமுறை, நீதிமன்றம் முதலியவை.)
D.	அரசினை ஒரு செயற்கை ஆளாக உருவகப்படுத்தும் கோட்பாடு (மற்ற அரசுகளோடு உறவு, அனைத்து நாடுகள் சட்டம்)	ஆளாக உருவகப்படுத்தப்பட்ட அரசு (தூதியல், அமைதி, போர், உடன்படிக்கைகள், அனைத்து நாடுகள் ஒப்பந்தங்கள் முதலியவை).

மேற்கூறிய பாகுபாடு அரசின் எல்லாச் செயல்களையும் தன்னுள் அடக்கியுள்ளது. அரசினைப் பற்றிய முறையான அல்லது ஒழுங்குப்படுத்தப்பட்ட படிப்பே அரசியல் நூல் எனப்பட்டது; அரசியல் என்ற சொல் அன்றாட அரசாங்க அல்லது பொது விவகாரங்களைக் குறிப்பிடுதற்காகக் கையாளப்படுகிறது.

[1] எப். போலாக்: அரசியல் விஞ்ஞான வரலாற்றுக்கு அறிமுகம்.

அரசியல் நூலும் அரசியல் தத்துவமும்

அரசியல் தத்துவம் என்பது அரசியல் நூலைவிடக் காலத்தால் முற்பட்டது ; எவ்வாறெனில் அதுவே அரசியல் நூலுக்கு ஆதாரம் அமைத்துக் கொடுத்தது ; இதனால் இரண்டுக்கும் வேறுபாடு இல்லை என்பது பொருள் அன்று. அரசு எவ்வாறு, அரசின் தோற்றத்துக்கு முற்பட்ட காலத்தில் மனித சமுதாயத்தின் நிலை என்ன, அரசிற்கு என்னென்ன நோக்கங்கள் இருத்தல்வேண்டும், குடிமை, கடமை, உரிமை பற்றிய கேள்விகள், இறைமை அதிகாரத்தைப் பற்றிய கருத்து ஆகிய இவையெல்லாம் அரசியல் தத்துவத்தோடுதான் மிகவும் தொடர்புடைய பிரச்சினைகள் ஆகும். அரசியல் நூலின் அளவு, அரசியல் தத்துவத்தினுடையதைவிட மிகவும் பரந்தது. அரசியல் நூலிலே அரசு, அரசாங்கம் ஆகியவற்றைப் பற்றிய கோட்பாடும், நடைமுறையும் அடங்கியுள்ளன ; ஆனால் அரசியல் தத்துவமே, கோட்பாட்டைப் பற்றி மட்டிலுமே கூறுகிறது. ஈ. ஆசீர்வாதம் என்ற பேராசிரியர் கூறுவதுபோல், ' இரண்டுக்கும் வேறுபாடுகள் இருந்தாலும், அரசியல் தத்துவமானது, தெளிவில்லாமலும், கற்பனைப் போக்கிலும் அமைந்து விடாமல் இருக்கவேண்டுமானால், அது அரசியல் நூலினின்றும் கிடைக்கக்கூடிய செய்திகளைக் கையாளுதல் வேண்டும். அரசியல் கோட்பாடும், நடைமுறையிலுள்ள அரசியல் சூழ்நிலைகளும் ஒன்றை ஒன்று பாதிக்கக்கூடிய வகையில் செயல்படுகின்றன.'[1]

மேற்கூறிய விளக்கங்களிலிருந்து, கோட்பாடுகளையும் நடைமுறைகளையும், அரசியல் நூல் என்ற தொடர் தன்னுள் அடக்கியுள்ளதாகையால் அரசையும் அரசாங்கத்தையும் பற்றிய இப் படிப்புக்கு ' அரசியல் நூல் ' அல்லது ' அரசியல் விஞ்ஞானம் ' என்ற பெயரே மிகப் பொருத்தமான ஒன்று என்று தெரிகிறது.

இதற்கு அடுத்தாற்போல் நாம் அரசியல் நூலுக்கு இலக்கணம் கூறி, அதன் எல்லை, பொருள் முதலியவற்றை அறிதல் வேண்டும். அரசியல் நூலின் இலக்கணத்தைப் பற்றி, ஆசிரியர்களுக்கும், அரசியல் சிந்தனையாளர்களுக்கு ஒருமித்த கருத்துட் ஏற்படவில்லை. ஜெர்மானிய தத்துவ ஆசிரியராகிய பிளண்ட்ச்லி என்பவர் அரசியல் நூலுக்கு 'அரசினைப் பற்றிய அறிவியல்' என்று இலக்கணம் வகுக்கிறார். அவருடைய கருத்தின்படி அந்நூல் அரசு, அதன் இயல்பு, அதன் பல்வேறு வடிவங்கள், அதனுடைய வளர்ச்சி ஆகியவை பற்றிக் கூறுகிறது. பேராசிரியர்

[1] ஈ. ஆசீர்வாதம் : அரசியல் கோட்பாடு

கார்னர், அரசியல் விஞ்ஞானம் என்பது 'தொடக்கத்திலும் சரி, முடிவிலும் சரி அரசினைப் பற்றியேதான் கூறுகிறது.'[1] என்று குறிப்பிடுகிறார். பேராசிரியர் கெட்டல் என்பவரும், அரசின் அமைப்பு, இயல்பு ஆகியவை பற்றியும், அரசாங்கத்தின் அமைப்பு பற்றியும், சட்டங்களை இயற்றுதல், செயல்படுத்துதல், மற்ற அரசுகளோடு தொடர்புகள் வைத்துக்கொள்ளுதல், ஆகிய அரசினுடைய செயல்களைப் பற்றியும் குறிப்பிடும் அறிவியல் நூல்தான் அரசியல் என்று இலக்கணம் வகுக்கிறார்.[2] ஸ்டீபன் லீகாக் என்ற பேராசிரியருடைய கருத்து, 'அரசியலாகிய அறிவியல் அரசாங்கத்தைப் பற்றி மட்டிலுமே குறிப்பிடுகிறது' என்பதாகும்.[3] பால் ஜேனட், 'அரசியலாகிய அறிவியல் அரசினுடைய ஆதாரங்களையும், அரசாங்கத்தைப் பற்றிய விதிகளையும் கூறுகிறது', என்று தெரிவிக்கிறார்.

மேற்கூறப்பட்ட இலக்கணங்களிலிருந்து, அரசியலென்னும் அறிவியல் நூலின் உட்பொருளைப் பற்றிக் கருத்து வேறுபாடு ஆசிரியர்களிடையே இருக்கிறதென்று தெளிவாகிறது. சில ஆசிரியர்கள் அரசியல் நூலின் எல்லையை அரசினைப் பற்றிய அளவுக்கு மட்டுமே வரையறை செய்கின்றனர். அவர்கள் அரசியல் நூலின் எல்லையிலிருந்து அரசாங்கத்தைப் பற்றிய படிப்பை நீக்கி விடுகின்றனர்; இதற்குக் காரணம், அரசினைப் பற்றிய படிப்பு அரசாங்கத்தைப் பற்றிய படிப்பையும் தன்னுள் அடக்கியது என்பதே ஆகும். ஸ்டீபன் லீகாக் போன்ற பிற ஆசிரியர்களோ, அரசியல் நூல் அரசாங்கத்தைப் பற்றிய படிப்பு மட்டுமே ஆகும் என்று உறுதியாகக் கூறுகின்றனர். அவர்கள் வகுக்கும் இலக்கணத்திலே அரசு என்ற சொல்லே காணப்படவில்லை. ஆனால் இக்கால அரசியல் ஆசிரியர்கள் இத்தகைய இரு தீவிரமான கொள்கைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. புகழ்மிக்க ஆசிரியர்களான லாஸ்க்கி, கெட்டல், கில்கிறைஸ்ட் போன்றோர் இதைப் பற்றி யதார்த்தமான கருத்தைக் கூறுகின்றனர்; அவர்களுடைய கருத்தின்படி, அரசியலென்னும் அறிவியல் நூல், அரசு, அரசாங்கம் ஆகிய இரண்டையும் பற்றிக் கூறுவதே ஆகும். அரசு என்பது கருத்தினளவாக இருக்கக்கூடியது. அது அரசாங்கத்தின் மூலமாகத்தான் யாவராலும் உணரப்படுகிறது. அரசினுடைய நோக்கமானது, அரசாங்கத்தின் மூலமாக, அரசாங்கத்தினால், வெளிப்படுத்தப்பட்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்படுகிறது.

[1] கார்னர்: அரசியல் அறிவியலும், அரசாங்கமும்.

[2] கெட்டல்: அரசியலாகிய அறிவியல்.

[3] ஸ்டீபன் லீகாக்: அரசியலாகிய அறிவியலின் கூறுகள்.

அரசினுடைய விருப்பமானது எப்பொழுதும் அரசாங்கத்தினுல் தான்செயல்படுத்தப்படுகின்றது. லாஸ்க்கி கூறுவது போல, 'ஒவ்வொரு அரசும் அரசாங்கம், குடிமக்கள் என்கிற இரு பிரிவுகளும் அடங்கிய ஒரு பிரதேச அல்லது நாட்டுச் சமுதாயம் ஆகும்'; இதில் அரசாங்கம் என்பது அரசுக்கு ஆதாரமாக உள்ள சட்டங்களைச்செயல்படுத்துகிற மக்கள் அடங்கிய ஒரு குழு ஆகும்.

விரிவாகக் கூறுமிடத்து அரசியல் நூலை மூன்று பிரிவுகளாகப் பகுத்துக் கூறலாம்: 1. அரசினைப் பற்றிக் கூறும் அரசியல் நூலின் எல்லை; 2. மனித உரிமைகளைப் பற்றிக் கூறும் அரசியல் நூலின் எல்லை; 3. அரசாங்கத்தைப் பற்றிக் கூறும் அரசியல் நூலின் எல்லை.

1. அரசினைப் பற்றிக் கூறும் அரசியல் நூலின் எல்லை

அரசியல் நூல் அரசினைப் பற்றி அதனுடைய மூன்று பகுதிகளில் குறிப்பிடுகிறது.

(a) **அரசினுடைய இப்போதைய வடிவம்:** அரசு என்பது, மக்கள் சேர்ந்த கூட்டங்களுளெல்லாம் மிகவும் உயர்தரமான மக்கள் கூட்டம் ஆகும். அரசியல் நூலிலே நாம் அரசினுடைய தற்கால வடிவத்தையும், அதனுடைய நோக்கங்களையும், தனது நோக்கங்களை நிறைவேற்றுதற்காக அது கையாளும் வழிகளையும் பற்றிக் கற்கிறோம்; அதனோடு நாம் அரசின் பல்வேறு வடிவங்களையும், அவற்றுக்கிடையேயான தொடர்புகளையும், தனி ஆளுக்கும் அரசுக்கும் இடையேயான தொடர்பைப் பற்றியும் படிக்கிறோம். இவ்வாறு அரசியல் நூலைப் படித்தலை, 'அரசியலைப் பற்றிய ஆராய்ச்சிப் படிப்பு' என்று கெட்டல் குறிப்பிடுகிறார்.

(b) **வரலாற்றில் காணப்படும் அரசின் வடிவம்:** இப்போது நாம் காணுகிற அரசின் வடிவமானது, அது வரலாற்றிலே அடைந்துள்ள வளர்ச்சியின் பயனாகும். கடந்த காலத்தைப் பற்றி ஏதும் அறியாதவர் இக்கால நிலையை முழுவதும் அறியமாட்டார். அரசியல் நூலானது, அரசின் தோற்றத்தைப் பற்றி ஓர் வரலாற்று வகையிலான ஆய்வு செய்கின்றது; மேலும் அது அரசியல் நிறுவனங்களின் வளர்ச்சி, கடந்த காலத்திய கருத்துக்கள், கோட்பாடுகள் ஆகியவை பற்றியும் வரலாற்று வகையில் ஓர் ஆய்வு செய்கிறது.

(c) **அரசு இருக்கவேண்டிய இலட்சிய நிலை:** அரசின் கடந்த கால வடிவம், இக்கால வடிவம் ஆகியவற்றைப் பற்றிப் படித்தால்

மட்டுமே அரசியல் நூலின் முழு எல்லையையும் பற்றி அறிந்ததாகக் கொள்ளுதல் இயலாது. அந்நூற்படிப்பு, எதிர் காலத்தில் அரசின் வடிவம் எத்தகையது, அதாவது எதிர் காலத்தில் அரசு எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பதைப் பற்றிய படிப்பாகவும் அமைகிறது. அரசு என்பது எப்போதும் மாருமல் நிலேயாக இருக்கக் கூடிய ஒன்று அன்று; அது எப்போதும் மாறுதலுக்கு உட்பட்டுள்ள ஒன்று ஆகும்; அது ஒவ்வொரு நாளும் வளர்கிறது. எனவே, அரசியல் என்னும் அறிவியல் நூலின் எல்லேயிலே, அரசினுடைய எதிர்கால வளர்ச்சியையும், அதனுடைய இலட்சிய வடிவத்தையும் பற்றி நாம் கற்கிறேம். எடுத்துக்காட்டாக இக்காலத்தில் இருக்கும் இந்திய அரசியலமைப்பிலே, அரசின் கோட்பாட்டினுக்குகந்த இயக்க விதிகளேப் பற்றிக் கூறும் இயல் ஒன்றும் அடங்கியுள்ளது. இவ்வழிகளின் நோக்கமாவது, அரசின் எதிர்காலச் செயல்களுக்கு ஓர் வழிகாட்டியாக இருப்பதே ஆகும்; இவை இறுதியில் அரசின் வளர்ச்சிக்குத் துணே செய்கின்றன; அதன் விளேவாக அவை அரசியல் நூலினுடைய தொடர்ச்சியான வளர்ச்சிக்குத் துணே செய்கின்றன.

இத்தகைய காரணங்களினுல்தான், கெட்டல் என்ற பேராசிரியர், 'அரசியலென்னும் அறிவியல் அரசு எவ்வாறு கடந்த காலத்தில் இருந்ததென்பதைப் பற்றிய ஓர் வரலாற்று ஆராய்ச்சியாகவும், இக்காலத்தில் அரசு எவ்வாறு இருக்கிறது என்பதைப் பற்றிய ஓர் பாகுபாட்டு ஆய்வாகவும், எவ்வாறு அரசு இருத்தல் வேண்டுமென்பதைப் பற்றிய அரசியல்—ஒழுக்க இயல் சார்பான ஆய்வாகவும் இருக்கிறது,' என்று கூறுகிருர்.[1]

2. மனித உரிமைகள் பற்றிக் குறிப்பிடும் அரசியல் நூலின் அளவு

ஓர் அரசு என்பது, குடிமக்கள் அடங்கியுள்ளது. குடிமக்கள் என்போர் தமக்கென உரிமைகளேப் பெற்றிருத்தல்வேண்டும்; இவ்வுரிமைகள் அரசினுல் பாதுகாக்கப்படுதலும் வேண்டும். கடந்த காலத்தில் குடிமக்களுடைய உரிமைகளும், கடமைகளும் யாவை, இக்காலத்தில் அவை என்னென்ன, எவ்வகையில் அவை சீர்திருத்தி அமைக்கப்படலாம் என இக் கேள்விகளேயெல்லாம் பற்றிய படிப்பு எல்லேயில் அடங்கியுள்ளன. குறிப்பிட்ட இந்தப் பகுதி அரசியல் நூலின் படிப்பிலே ஒரு முக்கியமான பகுதி ஆகும்.

[1] ஆர். ஜி. கெட்டல் : அரசியல் அறிவியலுக்கு அறிமுகம்.

3. அரசாங்கத்தைப் பற்றிக் கூறும் அரசியல் நூலின் எல்லை

அரசு என்பதை அதனுடைய செயலாலான அரசாங்த்தின் மூலமாக நாம் காண இயலும்; அரசாங்கம் என்பது அரசாங்கத்தினுடைய பிரிக்க இயலாத ஒரு கூறு ஆகும். ஆகையால் அரசாங்கத்தைப் பற்றிய படிப்பும், அரசியல் நூலின் எல்லையினுள்ளே சேர்க்கப்பட்டுள்ளது. அதில் ஒரு சிலவற்றை ஈங்குக் குறிப்பிடுவோமானால், அரசாங்கத்தின் வடிவங்கள், அரசாங்கத்தின் பல்வேறு உறுப்புக்கள், அவற்றின் அமைப்பு, அதிகாரங்கள், அலுவல்கள், தேர்தல்களின் அமைப்புக்கள், சிறுபான்மையோர் உரிமைகள், அரசியல் கட்சிகள், உள்ளூர் அரசாங்கம், பொது மக்கள் கருத்து, சுதந்திரமான நீதித்துறையின் சிறப்பு, தேசியம், அனைத்து நாடுகள் பற்றிய உணர்வு ஆகியவையெல்லாம் அரசியல் நூலின் எல்லையில் அடங்கும்.

அரசியல் நூலின் எல்லை, உண்மையில் உலகத்தைப்போலவும், மனித இனத்தைப் போலவும் பரந்து விரிந்த ஒன்று ஆகும். அது மனிதருடைய அரசியல், பொருளாதார, சமுதாயச் செயல் வகைகளைப் படிப்பதோடுகூட, அரசின் நிலையான வடிவத்தையும், மாறுதலுக்குட்படும் வடிவத்தையும் பற்றிக் கூறுகிறது.

—

அரசியல் நூல் ஓர் அறிவியல் நூல் ஆகுமா?

அரசியல் நூலை ஓர் அறிவியல் நூலாகக் கொள்ளலாமா, கூடாதா என்ற கேள்வி அடிக்கடி வாதத்துக்கு உள்ளான ஒன்று ஆகும். இதற்குப் பல அரசியலாசிரியர்கள் கூறும் விடை மற்றவர்களுக்கு ஏற்புடையதல்ல; ஆகையால் அது வாதத்துக்குரிய ஒன்றாகவே இருக்கிறது. பண்டைய கிரீசில் புகழ்மிக்க அரசியல் சிந்தனையாளராகிய அரிஸ்டாட்டில், அரசியல் நூலை மிகச்சிறந்த தலையாய அறிவியல் நூலாகக் கருதினர். பிரைஸ் பிரபு அதனை முன்னேறிவரும் ஓர் அறிவியல் நூல் என்று குறிப்பிட்டார். போடின், ஹாப்ஸ், பிரைஸ், மான்ட்டஸ்க்யு, மற்றும் பலர் அரசியலை ஓர் அறிவியலாகக் கருதலாம் என்று கருதுகின்றனர். பர்க், காம்ட்டே, மெயிட்லண்ட், மற்றும் சிலசிந்தனையாளர் இதனை மறுத்து, பருப்பொருள், இயற்கைப்பொருள்கள் பற்றிய அறிவியல்களைப்போல அரசியலை ஓர் அறிவியலாக மதிப்பிடுவதற்கு தகுதி இல்லை என்று கூறுகின்றனர்.

பொதுவாக அறிவியல் என்ற கல்விப் பிரிவு, உயிரியல் பற்றிய அறிவியல்கள், பருப்பொருள்கள் பற்றிய அறிவியல்கள், சமுதாய அறிவியல்கள் என மூன்ருகப் பாகுபாடு செய்யப்படுகிறது. சமுதாய அறிவியல்கள் சமுதாயத்தில் உள்ள மனிதனைப்பற்றிக் குறிப்பிடுகின்றன. மனிதன் அரசியல் சமுதாயத்தில் ஓர் உறுப்பினர் ஆகையால், அம்மனிதனைப் பற்றி அரசியல் நூல் கூறுவதாலும் அரசியல் நூல் ஓர் சமுதாய அறிவியல் நூல் ஆகும். சில ஆசிரியர்கள், அது ஓர் கலை என்று கூறுகின்றனர். ஆகையால் அறிவியல் என்ருல் என்ன கலை என்பதைப் பற்றி நாம் இப்போது காணுதல் வேண்டும்.

அரசியல் நூல், உயிர்களின் அறிவியல்களைப் போலவும், பருப்பொருள் அறிவியலைப் போலவும் ஓர் துல்லியமான அளவுடைய அறிவியல் நூல் ஆகாது. பௌதிக இயலும், வேதியலும் தமது ஆய்வுக்குரிய பொருள்களைத் துல்லியமாக ஆய்வதைப் போல, அரசியல் நூலின் ஆய்வுக்குரிய பொருளை (மனிதரை) அது ஆராய இயலாது. அறிவியல், அறிவற்ற பொருள்களைப் பற்றிக் கூறுகிறது. ஆனல் அரசியலோ, மனிதனையும், சமுதாயத்தையும், மனிதனுல் ஏற்படுத்தப்பட்ட அரசாங்கம் போன்ற நிறுவனங்களையும் பற்றிக் கூறுகிறது. நாம் அறிவற்ற பொருளைப் பற்றி எவ்வாறு ஆராய்கிருேமோ, அவ்வாருன வழியிலேயே மனிதனைப் பற்றிய பிரச்சினைகளை நிறுவனப் பகுதிகளின் வாயிலாகஆராய்வது மிகவும் கடினமாகும். சமுதாய நிகழ்ச்சிகள் எப்போதும் மாறுதலுக்கு உட்பட்டவையாகவும். அவற்றை மனிதர் கட்டுப்படுத்தி வைப்பதென்பது இயலாததாகவும் இருக்கின்றன. மனிதர்களைச் செயல் படத்தூண்டும் நோக்கங்களும், அச் செயல்களின் விளைவுகளும் சிக்கல் நிறைந்தும், மாறுதலுக்கு உட்பட்டும் இருப்பதால், அவற்றில் எது ஒன்றையும் துல்லியமாகத் தீர்மானித்ததற்கோ, எதனையும் முன்னதாகவும் துணிந்து கூறுவதற்கோ இயலாது.

தற்கால அறிவியலின் நோக்கம், செய்திகளை வகைப்படுத்துதலும், அவ்வகைப்படுத்தப்பட்ட ஆதாரத்தின்மீது, பொருத்தமான, யாவராலும் உண்மையென ஒப்புக் கொள்ளபடக் கூடிய முழுமையான விதிகளை வகுத்தலும் ஆகும். இதற்கு ஓர் எடுத்துக் காட்டு, புவிஈர்ப்பு ஆற்றலானது பொருள்களைத் தரையில் இழுத்துக் கொள்ளுமாறு செய்கிறது என்ற விதி ஆகும். இதே போல, இரு பங்கு நீர்வளியும், ஒரு பங்கு உயிர்வளியும் சேர்ந்து நீர் ஆகிறது என்ற வேருெரு எடுத்துக் காட்டையும் கூற இயலும், ஆயினும், அவைகளைக்கொண்டு நாம் பொருத்தமான, யாவராலும் உண்மையென்று ஒப்புக்கொள்ளப்படத்தக்க முழு விதிகளை வகுக்க

இயலாது. இதிலிருந்து, அரசியலை ஓர் அறிவியலாகக் கருதுதல் இயலாது என்று பொதுவாகக் கூறலாம்.

அறிவியல் என்பதற்கு உரிய இலக்கணத்திலே அரசியலை நாம் ஓர் அறிவியலாக ஒப்புக்கொண்டாலும், ஒப்புக்கொள்ளா விட்டாலும், நமது வாழ்வினைச் சீராக்குதற்கு உதவியாக அரசியல் நூலைக் கற்பதற்கு உரிய மூன்று வழிகளைப் பற்றி யாவரும் ஒருமித்த கருத்தைக் கூறலாம். முதலாவதாக வரலாற்று வகையினைப்பற்றி வரலாற்ருசிரியர்களும் அரசியல் ஆசிரியர்களும் எடுத்துக்காட்டி, அதன் மூலமாக மனிதன் வரலாற்றிலிருந்தும், அரசியல் வளர்ச்சிகளினின்றும் யாவரும் பயனுள்ள செய்திகளை அறிய உதவுதல் கூடும். இரண்டாவதாக, அரசியல் நூலில் பயிற்சி ஏற்படுவதால் தேசிய எண்ணங்களையும், குழுக்களின் போக்குகளையும் உருவாக்குகின்ற அரசியல் சக்திகளைப் பற்றிய அறிவு நமக்கு ஏற்படுகிறது. இறுதியாக, சாதாரணக் குடி ஆளுக்கு தனது காலத்திய தேசிய அனைத்துலக பிரச்சினைகளைப் பற்றித் தெளிவான அறிவை அரசியல் நூல் படிப்பு தோற்றுவிக்கா விட்டாலும் அத்தகைய படிப்பு, அவற்றைப் பற்றி அவன் என்ன எண்ணுகிருன் என்பதை அவன் அறிவதற்கு உதவுகிறது. 'பாசிஸ்ட்', 'செம்மை நிற அரசியல்', 'குடியாட்சி', 'சர்வாதிகாரம்', 'சமத்துவமின்மை' ஆகிய சொற்களுக்கு மற்றவர்கள் என்ன பொருள் கூறுகின்றனரென்று சாதாரணக் குடிஆள் எப்போதும் தெரிந்து கொள்ளாமலிருந்தாலும்கூட, அவர் அரசியல் படிப்பின் மூலமாக மேற்கூறிய சொற்களுக்கு உரிய பொருள் என்ன என்று அறிந்து கொள்ளுதல் இயலும். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையிலே, எந்த அளவில் கூடுதலாகவோ, குறைவாகவோ அரசியல் நடவடிக்கையானது நன்மையைத் தர இயலும் என்றும் அவரால் (அரசியலறிவைக் கொண்டு) அறிந்துகொள்ள இயலும். திடீரென அற்புதங்கள் நிகழ்தலின் மூலமாக எதுவும் ஏற்படவில்லை என்பதை அவர் அறிவார்; மேலும் மனித செயல் வகையின் ஆற்றலைப்பற்றி நடைமுறைக்கு மீறிய எல்லையில் அவர் சிந்தித்துத் தமது நம்பிக்கைகளை அல்லது எதிர்காலத் திட்டங்களை அமைக்கவும் மாட்டார். வேறு வகையாகக் கூறிஞல், அரசியல் நூலறிவு உடையவர் அறிவும், நிதானமும் உடைய ஓர் குடி ஆளாக ஆவார்.

மேற்கோள் நூல்கள்

(1) ஈ. ஆசீர்வாதம் : அரசியல் கோட்பாடு.

(2) ஏ. அப்பாதுரை : அரசியலின் உட்பொருள்.

(3) ஏ. சி. கபூர் : அரசியல் நூலின் கோட்பாடுகள்.

(4) ஆர். வி. கெட்டல் : அரசியல் நூலுக்கு அறிமுகம்.

(5) ஆர். என். கில்கிறைஸ்ட் : அறிவியல் நூலின் கோட்பாடுகள்.

கேள்விகள்

1. அரசியல் என்னும் அறிவியல் என்ற பெயருக்குக் காரணம் காட்டுக.

2. அரசியல் நூலின் எல்லை என்ன ?

3. அரசியல் நூலின் உட்பொருள்களைச் சுருக்கிக் கூறுக.

இயல் 3

அரசியல் விஞ்ஞானத்துக்கும் ஏனைய சமுதாய அறிவியல்களுக்கும் உள்ள தொடர்பு

அரசியல் என்னும் அறிவியல் நூல், சமுதாய அறிவியல்கள் என்று கூறப்படும் மரத்தின் கிளைகளுள் ஒன்று ஆகும். மனிதன், தன்னை ஆளுதற்காக அரசாங்கத்தையும், அரசையும் ஏற்படுத்தும் முயற்சிகளையும், தனது சமுதாய வாழ்வின் இறுதிநிலையைக் கட்டுப்பாடு செய்துகொள்ளுவதற்காகச் செய்யும் முயற்சிகளையும் புற்றி அரசியல் நூல் கூறுகிறது. அது அரசு, மற்ற அரசியல் நிறுவனங்கள் ஆகியவற்றின் கருத்தளவிலமைந்த தன்மையையும் பற்றிக் கூறுகிறது. சமுதாய அறிவியல்களுள், பொருளியல், சமூக இயல், மனித இன இயல், வரலாறு, அரசியல், உளவியல் முதலியவை அடங்கும். ஆராய்வுக்குரிய எந்த ஒரு பாடத்தையும் நாம் பழுதற அறிந்து கொள்ளுதற்கு, அதற்கும் மற்ற அறிவியல் களுக்கும் உள்ள தொடர்பினை அறிந்து கொள்ளுதலும், 'அந்தப் பாடம் மற்றவற்றிலிருந்து, என்னென்ன காரணக் கூறுகளைப் பின் பற்றுதல் கூடும் என்றும், எதிராக அது மற்றவைகளுக்கு என்னென்ன கூறுகளை அளித்தல் கூடும் என்றும் அறிந்து கொள்ளுதலும்' மிகவும் பயன்தரும் என்று ஆசிரியர் சிட்ஜ்விக் கூறுகிறார். ஒவ்வொன்றும் மற்றவைகளைச் சார்ந்தும், மற்றவை களோடு தொடர்புகொண்டும் அமைந்திருக்கிறது. ஒவ்வொன்றும் மற்றவற்றின் சாதனைகளுக்கு முக்கியமாக உதவுகிறது. அரசியல் அறிவியலுக்கும் மற்ற ஒவ்வொரு சமுதாய அறிவியல் நூலுக்கும் உள்ள தொடர்பை நாம் இங்கு காண்போம்.

அரசியல் நூலும் வரலாறும்

அரசியல் நூலும் வரலாறும் மிக நெருக்கமான தொடர்பு உடையவை. இத்தகைய தொடர்பை சர். ஜான் சீலி என்ற ஆசிரியர் தமது சிறந்த ஈரடித் தொடரில் கூறுகிறார்; அது, 'அரசியலென்னும் அறிவியல் இல்லாத வரலாறு கனி ஈயாத

(அதாவது பயனற்ற) மரம் போலும்; வரலாறு இல்லாத அரசியல் நூல் வேரற்ற மரம் போலும் ஆகும்.'[1] வரலாறு கடந்த காலத்திய நிகழ்ச்சிகளையும், இயக்கங்களையும் பற்றிய பதிவேடு ஆகும். சில வரலாற்றுச் செய்திகள் அரசியல் நூலின் அடித் தளத்தின் பாகமாக அமைகின்றன. இந்த இரு பாடங்களுக்கும் இடையே இவ்வளவு ஆழமான தொடர்பு இருத்தற்குக் காரணம், அரசும், அதனுடைய நிறுவனங்களும் வரலாற்றிலே படிப்படியாக வளர்ந்து வந்துள்ள ஒரு நிலைதான். அரசியல் பாடத்தின் தோற் றத்தையும், படிப்படியாக ஏற்பட்ட அதன் வளர்ச்சியையும் நாம் அறிந்து கொள்ளாவிடின், அரசியல் நூலை முழுவதும் அறிந்து கொள்ள இயலாது; அரசியல் நூலைப்பற்றிய அறிவையும் வரலாற் றிலிருந்தே பெற இயலும். ஆகவே, இவ்வாறு வரலாறு அரசியல் நூலுக்கு ஆதாரமாக அமைகிறது. வரலாற்றுச் செய்தி களிலிருந்து பெறப்படும் முடிவுகள் அரசியல் நூலின் எல்லைக்குள் சேர்க்கப்படுகின்றன. வரலாற்று நிகழ்ச்சிகளின் அரசியல் முக்கி யத்துவத்தைப் பற்றி அறியாமல், வெறும் வரலாற்றுச் செய்திகளை அறிதலால் பயன் ஏதும் இல்லை. சீலி 'வரலாற்றினுடைய சுதந் திரத் தன்மையைப் பெருத அரசியல் கீழ்த்தரமானதாகிறது; அதேபோல அரசியலோடு தனக்கு உள்ள தொடர்பை வரலாறு இழந்துவிடும்போது, வரலாறு ஒரு வெறுமையான இலக்கியமாக மாறிப்போகிறது,' என்று பொருத்தமாகக்கூறினர். தற்காலத்திய அரசியல் நடவடிக்கைகளைப் படிப்படியாக வளர்த்து, ஓர் இலட்சிய அரசியல் சமுதாயத்தை அமைப்பதற்கு வரலாறு தரும் குறிப்புக்கள் உதவுகின்றன என்பதில்தான் வரலாற்றின் உண்மை யான மதிப்பு அடங்கி இருக்கிறது. யாவரும் அறிந்த ஓர் எடுத்துக்காட்டாக, ஆங்கிலவரலாற்றில் (1485ஆம் ஆண்டிற்கும் 1603ஆம்ஆண்டிற்கும் இடைப்பட்ட) டியூடர்ஆட்சிக்காலத்தைச் சுட்டிக்காட்டலாம்; இக்காலத்தின் வரலாற்றிலிருந்து, அரசியல் நூல் மாணவருக்கு, மக்களுடைய ஆதரவின் மீது எதேச்சாதிகார முடியாட்சி தோன்றுதற்கான காரணங்களை அறிவதற்கு வேண்டிய குறிப்புக்கள் கிடைக்கின்றன. இதேபோல இந்திய வரலாற்றில் முகலாயர்களுடைய காலப்பகுதியும் (1526—1761) அரசியல் நூலுக்கு மிக்க உதவி செய்கிறது. நன்ருக இணைக்கப்பட்ட உறுதியான அரசு தோன்றுவதற்கு உதவி செய்கின்ற கூறுகளை ஆராய்தற்கு வேண்டிய குறிப்புக்களை மேற்கூறிய வரலாற்றுப் பகுதி தருகிறது. என்ருலும் வரலாறு எல்லாமே அரசியல் நூலைக் கற்பதற்கு உதவியாக அமையவில்லை. போர் நிகழ்ச்சிகள், ஆண்டுகள், அரச குடும்பங்களின் எழுச்சிகளும் வீழ்ச்சிகளும்

[1] ஜே. ஆர். சீலி : அரசியல் நூலுக்கு அறிமுகம்.

ஆகிய இவையெல்லாம் அரசியல் முக்கியத்துவம் இல்லாதவை ஆகும். எடுத்துக்காட்டாக அரசியல் கற்பவர் கலைகள், கட்டிடக் கலை, இலக்கியம், வழக்கங்கள் முதலியவற்றின் வரலாற்றினை அறிவதிலே நாட்டம் கொள்ளமாட்டார்.

அரசியலும், வரலாறும் இரண்டு வேறுவகையான பாடங்கள் ஆகும்; ஆயினும் அவை ஒன்றுக்கொன்று உதவி செய்யும். ஒன்று கூற விட்டு விட்டதை மற்றது நிரப்பியும், சிறப்புச் செய் கின்றன. வரலாற்றின் பரிணாம வளர்ச்சியின் பயனே அரசியல் நூல். வரலாற்றின் அரசியல் முக்கியத்துவத்தை உணராத வரையிலும், வெறும் வரலாற்றுப் படிப்பு முழுமை பெறுமல் இருக் கிறது. எனினும் எல்லா வரலாற்றுச் செய்திகளும் அரசியல் நூலினை அறிந்து கொள்ளுதற்கு உதவி செய்வதில்லை.

அரசியல் நூலும் பொருளாதாரமும்

அரசியல் நூல் பொருளாதாரத்தோடும் நெருங்கிய தொடர் புடையது. இந்தத் தொடர்பு மிகவும் ஆழமான ஒன்று ஆகை யால், பொருளாதாரமானது அரசியல் நூலின் ஓர் கிளையாக மதிக்கப்பட்டு, 'அரசியல் பொருளாதாரம்' என்றழைக்கப்பட்டது. அரிஸ்ட்டாட்டில் நமது நூலாகிய 'அரசிய'லில் பொருளாதாரப் பிரச்சினைப் பற்றி பிரிவாகக் கூறியுள்ளார். செலிக்மன் என்ற ஆசிரியர் தமது நூலாகிய 'பொருளாதாரக் கோட்பாடுகள்' என்பதில் 'அரசாங்கத்தின் வடிவங்களும் செயல்களும் உற்பத்தி. விநியோகம் ஆகிய நிலைகளால் மிகவும் பாதிக்கப்படுகின்றன; எனவே பொருளாதாரச் செயல்கள் காரணமாகவும், அரசியல் நிலைகள் விளைவுகளாகவும் அமைகின்றன' என்று எழுதுகிறார்.[1]

பொருளாதாரத்தில் நாம் (பொருள்) உற்பத்தி, நுகர்வு, விநியோகம், மாற்று முதலியவைகளைப் பற்றிக் கற்கிறோம். இவ் வகையில் அதனுடைய பொருள் அரசியல் நூலினுடையதின்றும் மாறுபடுகின்றது. ஆயினும் எல்லா தற்கால அரசுகளும் மேற் கூறிய பகுதிகளைப் பற்றியே சட்டங்களை வகுக்கின்றன. மார்க்சின் கருத்துப்படி, சமுதாயத்தின் பரிணாம வளர்ச்சியானது எப்போதும் மாறுதலுக்கு உள்ளாகி இருக்கிற மனிதனுடைய பொருளாதார நிலைகளைச் சார்ந்து இருக்கிறது.' மார்க்சீய தத்துவம் முழுவதும். 'கூடுதல் மதிப்பு' (SurplusValue) என்ற கோட்பாட்டை ஆதாரமாக உடையது; இக் கோட்பாடு ஓர் பொருளாதார விதி ஆகும்.

[1] பேராசிரியர் செலிக்மன்: பொருளாதார விதிகள் (அல்லது கோட்பாடுகள்)

மார்க்சிசம், சிண்டிகலிசம், சோஷியலிசம் முதலிய பல்வேறு அரசியற் கோட்பாடுகளும் பொருளாதாரத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. இக்கால அரசு இயல்பிலே 'நல அரசு' என்று இருக்கிறது; இவ்வியல்பும் பொருளாதார வளர்ச்சியுடனேயே பெருமளவில் தொடர்புடையது. பொருளாதார சுதந்திரம் இல்லாத அரசியல் சுதந்திரத்துக்குச் சிறிதும் மதிப்பு இல்லை. இந்த இரண்டு பாடங்களும் ஒன்றோடொன்று தொடர்போடு இயங்குகின்றன. பல்வேறு பொருளாதார பிரச்சினைகளும் அரசியல் நிறுவனங்கள் மூலமாகவே வருதல் வேண்டும் ஒவ்வொரு அரசின், பெரிய பிரச்சினைகளும் பொருளாதார இயல்பில் அமைந்துள்ளன.

இந்தத் தலைப்புக்கு ஓர் முடிவுரையாக திரு. எஸ். ஜி. பார்வே என்பவருடைய உரையின் ஒரு பகுதியைக் குறிப்பிடலாம் 'சுருங்கக் கூறின் ஒரு நல்ல அரசாங்கம் என்பது பகுத்தறிவு உணர்வோடு பொருட் பெருக்கத்துக்குத் திட்டம் வகுக்கிறது; குறிப்பிடத்தக்க பொருளாதார சாதனைகளை வைத்தே அதனுடைய தகுதி மதிப்பிடப்படுகிறது; அதாவது, கடினமான நடைமுறைப் பிரச்சினைகளிலே அரசின் ஆட்சித்துறைச் செயல்களையும், அது (நிறைவேற்றும்) உணவு உற்பத்தியையும், அது உணவை நியாயமான விலையில் விநியோகிப்பதையும், அது வேலைவாய்ப்புகளைப் பெருக்குதலையும், அது தக்க காலத்தில் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுதலையும், வளர்ச்சித் திட்டங்களில் முதலிடம் பெறத் தக்கதை அது சீர்தூக்கிப் பார்த்துத் தேர்ந்தெடுத்தலையும்—ஆகிய இத்தனை செயல்களையும் வைத்துத்தான் நல்ல அரசாங்கத்தின் தகுதி மதிப்பிடப்படுகிறது.[1]

அரசியல் பாடமும் சமூக இயலும்

சமூக இயல் என்னும் பாடம் எல்லா சமுதாய அறிவியல்களுக்கும் மிக்க அடிப்படையாகஅமைந்துள்ளது. அது சமுதாய வாழ்விலுள்ள செய்திகளைப்பற்றிக் கூறுகின்ற ஒரு பொதுவான சமுதாய அறிவியல் நூல்ஆகும். அரசியல் பாடமும் ஒரு சமுதாய அறிவியல் நூல்தான். எனவே இது சமுதாய இயலோடு நெருக்கமான தொடர்பு உடையது. அரசியல் நூலும், சமூக இயலும் ஒன்றோடொன்று நெருக்கமான தொடர்புடையவை; 'அரசியல் நூல் சமூக இயலில் பதிந்துள்ளது: அரசியல்நூல்சமூக இயலினின்றும் பிரிந்து

[1] எஸ். ஜி. பார்வே : மகாராஷ்டிரா அரசாங்க அமைச்சர் புது டில்லியில் இந்திய ஆட்சி இயல் கழகத்தில் 1964, செப்டம்பர் 24ல் ஆற்றிய உரை. 1964, செப்டம்பர் 24-ல் புது டில்லியிலிருந்து வெளியான 'சண்டே ஸ்டாண்டர்ட்' செய்தித்தாள் அறிக்கை.

வேருகக் காணப்படுகிறதென்ருல், அதற்குக்காரணம் (சமூக இயல் நூலின்) பொருள் அளவு மிகவும் விரிந்து இருப்பதால் வல்லுநரின் ஆய்வு தேவைப்படுகிறது என்பதைத் தவிர, அரசியலைச் சமூக இயலினின்றும் வேறுபடுத்திக் காட்டக்கூடிய நன்கு வரையறை செய்யப்பட்ட எல்லைகள் இருக்கின்றன என்ற காரணம் இல்லை.'[1] சமுதாயத்தில் மனிதனின் செயல்களைப் பற்றி ஆய்வதில் சமூக இயலும் அரசியல் நூலும் ஒன்றுக்கொன்று உதவி செய்கின்றன. அரசினுடைய அமைப்பையும் அலுவல்களையும் பற்றி அரசியல் நூல் கூறுதலால், இவற்றைப் பொறுத்தவரை சமூக இயல், அரசியல் நூலுக்குக் கடமைப்பட்டுள்ளது. இதற்கு மாருக இறைமை அதிகாரத்தின் தோற்றம், சமுதாயத்தைக் கட்டுப் பாட்டிற்குள் கொண்டுவரும் வழிகள் ஆகியவைகளைப் பற்றிய அறிவை சமூக இயலிடமிருந்து அரசியல் பெறுகிறது. 'சமூக இயலின் தொடக்க விதிகளைக் கல்லாதவர்களுக்கு அரசின் கோட்பாட்டைப் போதித்தல், பொருள் அசைவைப் பற்றிய நியூட்டோனியன் விதியைப் பற்றி அறியாதவருக்கு வான நூலையோ அல்லது வெப்ப இயலைக் கூறும் பௌதிகத்தையோ போதித்தலை ஒக்கும்' என்று பேராசிரியர் கிட்டிங்க்ஸ் என்பவர் கூறுகிருர்.[2] ஒரு அரசியல் நூல்வல்லுநர், சமூக இயலறிந்தவ ராகவும், சமூக இயலறிவாளர் ஓர் அரசியலறிவாளராகவும் இருத்தல் வேண்டும். மணமுறை என்பது மனிதனின் சமுதாய வாழ்வில் ஓர் கூருக இருப்பதால், திருமணம் என்பது சமூக இயல் படிப்பின் எல்லையில் வருகின்றது. ஆனல் இந்து மணமுறைச் சட்டம் போன்ற ஒரு மணமுறைச்சட்டமானது இயற்றப்படுமாயின் அது உடனே அரசியல் நூலின் எல்லையினுள் வந்துவிடுகிறது.

இந்த இரு அறிவியல்களும் நெருக்கமான தொடர்புடையவை ஆயினும், இரண்டிற்கும் இடையே சில வேறுபாடுகள் இருக் கின்றன. அரசியல் நூலின் எல்லையானது சமுதாயத்தைப் பற்றிய ஆராய்வை ஒட்டி அமையவில்லை; ஆயினும் (இரண்டிற்கும் இடையே) வரையறை செய்யும் கோட்டினை வரைதல் இயலும்.'[3] சமூக இயல் சமுதாயத்தின் எல்லாப் பகுதிகளையும் பற்றிக் கூறுகிறது; ஆனல் அரசியல் நூலோ அரசியல் சமுதாயத்தைப் பற்றி மட்டுமே குறிப்பிடுகிறது. சமூக இயலை விட அரசியல் நூல் வல்லுநர் முறை வளர்ச்சி பெற்றுள்ளது (Specialised), அரசியல் நூல் மனிதரின் அரசியல் அமைப்பினுடைய கடந்தகால,

[1] ஜே. டபிள்யூ. கார்னர் : அரசியல் அறிவியலுக்கு அறிமுகம்.

[2] கிட்டிங்க்ஸ் : சமூக இயல் விதிகள்.

[3] கிட்டிங்க்ஸ் : சமூக இயலின் விதிகள்.

இக்கால, எதிர்கால அமைப்பை உருவாக்குதலைக் கூறும் நோக்கத்தைக் கொண்டுள்ளது; ஆனால் சமூக இயல் இதுவரை இருந்து வந்த அல்லது இப்போது இருக்கின்ற பல்வேறு சமுதாய நிறுவனங்களைப்பற்றிக் கூறுகிறது.

அரசியல் நூலும் நில இயலும்

அரசியல் நூலுக்கும் நில இயலுக்கும் இடையேயும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. நில அமைப்பு, காலநிலை, பொருள் உற்பத்தி, மக்கள் தொகை முதலியவைகளை அடக்கிய நிலப் பரப்பைப் பற்றிய அறிவியல் நூலே நில இயல் ஆகும். நில இயல் சூழ்நிலைகள் வேளாண்மை, தொழில்நிலைமைகளைப் பாதிக்கின்றன; இந்த நிலைமைகள் அரசியல் நிலைமைகளைப் பாதிக்கின்றன. நிலவியலின் துணை இல்லாமல் அரசியலறிவோ, செயல் திற அறிவோ முழுவதும் செயல்பட இயலாதென்று அரிஸ்டாட்டில் ஓர் கருத்தைக் கூறுகிறார். ரூஸ்ஸோ காலநிலையும் அரசாங்க வகையும் தொடர்புடையவை என்று காட்டுகிறார். அவருடைய காலத்திலே வெப்பமான காலநிலை சர்வாதிகார ஆட்சி வகை தோன்றுதற்கும், குளிரான காலநிலை காட்டுமிராண்டித்தனம் தோன்றுதற்கும். மிதமான காலநிலை நல்ல ஆட்சி தோன்றுதற்கும் ஏற்றவை ஆகும். நில அமைப்பின் சூழ்நிலைகள் அரசாங்க வகைகளையும் மக்களின் சுதந்திரத்தையும் பாதிக்கின்றன என்று மான்ட்டஸ்க்யுவும் வலியுறுத்துகிறார். இத்தகைய போக்கினை தாமஸ் பக்கிள் என்பவர் மிகைப்படுத்திக் கூறி, எல்லா அரசியல் செயல் இயலும் காலநிலைக் காரணங்களால்தான் ஆக்கப்படுகின்றன என்றும் கூறுகிறார். ஒரு தனியான நூற்பிரிவைக் குறிப்பிடுவதற்கு நில அரசியல் (Geo-Politics) என்ற பெயர் கூறப்படுகிறது; அந்நூலின் எல்லையாவது அரசியலுக்கான நிலவியல் விளக்கம் ஆகும். இங்கிலாந்தின் நில இயல் அமைப்பு, அந்நாட்டின் மிகப்பெரிய கடல் ஆதிக்கம் வளர்வதற்குக் காரணமாக இருந்தது. ஜெர்மனி உள் நாட்டிலிருந்த நிலையே இருபெரும் போர்களுக்குக் காரணமாக இருந்தது. 'ஒரு நாட்டின் அரசாங்கத்துக்குத் தனிப்பட்ட ஒரு இயல்பை ஏற்படுத்தும் அளவுக்கு அந்நாட்டின் அரசியல் நிறுவனங்களை, நாட்டின் நில அமைப்புக்களும் வழிவழியாக வந்த நிறுவனங்களும் பாதிக்கின்றன,' என்று பிரைஸ் பிரபு பொருத்தமாகக் குறிப்பிட்டார். ஆனால் அரசியல் நிலைகளை உருவாக்குதலில் நில இயல் அமைப்புக்கள் மட்டுமே முக்கியத்துவம் உடையவை அல்ல என்று நாம் நினைவில் கொள்ளுதல் வேண்டும். எனினும், அரசியல் நூலைப் பாதிக்குமளவுக்கு நில இயலின் செல்வாக்கு இந்நாளில் தேய்ந்துவருகிறது; இதற்குக் காரணம்

நில இயல் சூழ்நிலைகளை மீறுமளவுக்கு அறிவியல் சாதனைகள் தோன்றியுள்ளதே ஆகும்.

அரசியல் நூலும் உள இயலும்

மனிதனுடைய சூழ்நிலையோடு தொடர்புடைய மனித செயல் வகையைப்பற்றிக் கூறும் அறிவியல்தான் உள இயல் ஆகும். அரசியல் நூலுக்கும் உள இயலுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது அரசினைப் பற்றியும் அதனுடைய நிறுவனங்களைப் பற்றியும் அறிவைப் பெறுதற்கு ஏற்ற சுருக்கமான வழி உளவியல் நூல்தான் என்று அரிஸ்ட்டாட்டிலைப் போல இக்கால சிந்தனையாளர்களும் கருதுகின்றனர். நாட்டின் சட்டங்கள் வெற்றியாகச் செயல்படுதல் வேண்டுமாயின் அவை நாட்டு மக்களின் உளப் பாங்கை ஆதாரமாகக் கொண்டிருத்தல் வேண்டும்; இல்லாவிடில் ஓர் புரட்சி தோன்றுதற்குரிய வாய்ப்பு இருக்கும். 'மனிதர் செயல் என்ற சிக்கல்களை நீக்குதற்கு உளவியல் குறிப்புகளைக் கையாளுதல் என்பது இப்போதைய நாகரிகமாக வந்துவிட்டது. நம் முன்னோர்கள் உயிர் வாழ்க்கை என்ற போக்கில் சிந்தித்தனர் என்றால், நாம் எல்லோரும் உள இயல் வகையில் சிந்திக்கிறோம்,' என்று பார்க்கர் என்ற ஆசிரியர் கூறுகிறார்.[1] கார்னர் இந்த இரு அறிவியல்களுக்கும் இடையேயுள்ள தொடர்பைப் பின்வரும் சொற்களில் குறிப்பிட்டு, 'தனது அதிகாரத்துக்குக் கட்டுப்பட்ட மக்களின் ஒழுக்க உணர்வுகளையும் மனக்கருத்துக்களையும் வெளிப் படுத்தி, எதிரொலிக்கும் அரசாங்கத்தால் மட்டிலுமே உறுதியாகவும், புகழோடும் இருத்தல் இயலும்' என்று கூறினார்.[2] இதற்கு எல்லா அரசியல் பிரச்சினைகளும் உளவியல் என்ற ஆதாரத்தில் அமைந்திருக்கின்றன என்பது பொருள் அன்று. ஆராயக்கூடிய மனித மனத்தோடு தொடர்புடைய மனச் செயல்களைப் பற்றியே உளவியல் கூறுகிறது. ஆனால் அரசியல் நூல், சமுதாயத்தில் மனிதனுக்கு அவனிடத்தில் உணர்ச்சி காரணமாகத் தோன்றும் தொடர்புகளைப் பற்றிக் கூறுகிறது.

அரசியல் நூலும் மானிட இன இயலும்

மானிட இயல் என்பது மனிதனின் மரபுகள், வழக்கங்கள், சமுதாய உறவுகள், இன இயல்புகள், உருவ இயல்பு ஆகியவைகளை எல்லாம் பற்றிக் கூறுகிறது. அது அரசும், சமுதாயமும்

[1] ஈ. பார்க்கர்: அரசியல் நூல் பயிற்சியும், அந்நூல் வழிவந்த மற்ற நூல்களுக்கும் உள்ள தொடர்பும்.

[2] ஜே. டபிள்யூ. கார்னர்: அரசியல் நூலுக்கு அறிமுகம்.

அமைவதற்கு முற்பட்ட காலத்திலிருந்த மனித இயல்பையும் கூறுகிறது. மனிதன், அவனுடைய நிறுவனங்கள் ஆகியவற்றின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் அறிந்து கொள்ளுவதற்கு மானிட இயல் நூல் பெருமளவு உதவி செய்கிறது. மானிட இயல் பாடமானது மிகவும் சரிவரக் கையாளப்படுதல் வேண்டும்; அதில் இனம் போன்ற விஷயங்களுக்கு அளவிறந்த முக்கியத்துவம் அளித்தல் கூடாது. அரசியலில் இனவெறுப்பு என்பது பாதக மான விளைவையே தரும்; எடுத்துக்காட்டாக ஆப்பிரிக்காவைக் கூறலாம்.

அரசியல் நூலும் ஒழுக்க இயலும்

ஒழுக்க இயல் என்பது சரியான, தவறான நடத்தைகளைப் பற்றிக் கூறும் ஓர் அறிவியல் நூல் ஆகும். 'ஒழுக்கக் கருத்துக் களின் தோற்றமானது அரசுன் தோற்றத்தோடு நெருக்கமான தொடர்பு உடையது.' என்று கெட்டல் என்றஆசிரியர் கூறுகிறார்.[1] பண்டைய மனித சமுதாயத்திலே ஒழுக்கக் கருத்துக்கள் அரசியல் கருத்துக்களினின்றும் பிரிக்கப்படாமல் இருந்தன; வழக்கமே சட்டமாக இருந்து வந்தது. பிற்காலத்தில் வழக்கமானது தனி மனிதர் ஒழுக்க விதிகள் எனவும், சட்டம் எனவும் பிரிக்கப்பட்டது. ஒழுக்கக் கருத்துக்கள யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு, பிறரைக் கட்டுப்படுத்தும் ஆற்றலும் பெறுகிறபோது அவை சட்டங்களாக மாற்றப்படுகின்றன அரசியல் செயலை ஒழுக்கக் கருத்துக்கள் வெகுவாகப் பாதிக்கின்றன. ஒவ்வொருவரும் ஓர் அரசில் வாழ்தல் வேண்டும். ஆகையால் நடவடிக்கைகளை சரியானவை என்றும், தவறானவை என்றும் மதிப்பிடும் கருத்துக்களும், ஒழுக்க இயலான நோக்கமும் அரசோடு சம்பந்தப்பட்டே இருக்கவேண்டும். அரசியல் நோக்கம், ஒழுக்க நோக்கத்தினின்றும் பிரிக்கப்படுதல் கூடாது.'[2] இதிலிருந்து அரசியல் நூலுக்கும் ஒழுக்க இயலுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை நாம் அறியலாம்.

அரசியல் நூலும் சட்டமும்

சட்டம், அரசியல் நூலுக்குப் பொருத்தமான ஒன்று. சட்ட இயல் ஆசிரியர்களும் அரசியல் நூலாசிரியர்களும், ஒருவர் மற்றவருடைய கல்வித் துறையில் ஈடுபாடு கொள்ளுகின்றனர். அரசாங்கத்தின் முக்கியமான அலுவலானது சட்டத்தை இயற்று

[1] ஆர். ஜி. கெட்டல் : அரசியல் நூல், பக்கம் 14

[2] ஆர். என். கில்கிறைஸ்ட் : அரசியல் நூலின் விதிகள், பக்கம் 13

தலும் அதனைச் செயல்படுத்துதலும் ஆகும். சட்டம் அரசாங்கத்தினுல் தோற்றுவிக்கப்பட்ட ஒன்று ஆகும். பண்டைய கிரேக்கருடைய காலத்திலிருந்து தற்காலம் வரையிலும், பல அரசியல் தத்துவ ஆசிரியர்களுடைய கருத்தில் மையமாக இருந்துவந்துள்ள பிரச்சினை சட்டத்தைப்பற்றியதே ஆகும். சட்டத்தை இயற்றுதல் அதனைச் செயல்படுத்தும் பொருட்டு கட்டுப்பாட்டுஅதிகாரத்தைக் கையாளுதல் ஆகியவற்றைப் பல ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்துள்ளனர். சட்டத்தின் வடிவங்களை ஆராய்வதில் இக்காலத்தில் மிக்க கவனம் செலுத்தப்படாவிட்டாலும், சட்ட நூலுக்கும்அரசியல் நூலுக்கும் உள்ள பொருத்தத்தை எவரும் குறைத்து மதிப்பிட இயலாது.

மேற்கோள் நூல்கள்

(1) ஏ. அப்பாதுரை : அரசியலின் உட்பொருள்.

(2) ஈ. ஆசீர்வாதம் : அரசியல் கோட்பாடு.

(3) ஏ. சி. கபூர் : அரசியல் அறிவியலின் விதிகள்.

(4) ஜே. டபுள்யு. கார்னர் : அரசியல் நூலுக்கு முன்னுரை.

(5) ஆர். என். கில்கிறைஸ்ட் : அரசியல் அறிவியலின் விதிகள்.

(6) எம். பிக்கிள்ஸ் டாரதி : அரசியலுக்கு அறிமுகம்.

கேள்விகள்

1. அரசியல் என்னும் அறிவியல் நூலுக்கும் மற்ற சமூக அறிவியல் நூல்களுக்கும் இடையே உள்ள தொடர்பை விளக்குக.

2. அரசியல் நூலுக்கும், வரலாறு, பொருளாதாரம் ஆகியவற்றுக்கும் இடையே உள்ள தொடர்பை ஆராய்க.

இயல் 4

அரசு என்பதைப் பற்றிய கோட்பாடு

எல்லாச் சமுதாய அமைப்புக்களும் மனித இனத்தின் தேவைகளை நிறைவு செய்தற்காகவே தோன்றி வளர்ந்து வந்துள்ளன. சில காலங்களில் இச் சமுதாய அமைப்புகளெல்லாம் எவருடைய உள்ளார்ந்த தூண்டுதலும் இல்லாமலேயே வளர்ந்து வந்துள்ளன. இந்த நிலை நீடித்து நிற்கவில்லை. எப்போது மனிதன் மாறுதல்களையும், முன்னேற்றத்தையும் விரும்பித் திட்டம் செய்யத் தொடங்கினுனே, அப்போதே அவனுடைய சமுதாய நிறுவனங்கள் உருவம் பெற்றன; நிலைபேறு உடையவையாகவும் ஆயின. சமுதாய நிறுவனங்கள் எவ்லாவற்றுள்ளும், அரசு என்பதே மிக்க வலிமையுடையதாகவும், எங்கும் பரவியதாகவும் இருக்கிறது. அரசைப் பற்றியும், அதனுடைய அலுவல்களின் சரியான எல்லை எது என்பதைப் பற்றியும் ஆராய்ச்சி செய்ததன் விளைவாக அரசியல் சிந்தனை தோன்றிற்று. கரடு முரடான எண்ணங்கள் மறைந்து, காரணவகையிலமைந்த கோட்பாடுகள் தோன்றின; இவை 'சில சமயங்களில் முன்னேற்றம் உடையன வாகவும், சில சமயங்களில் பின் தங்கிய நிலையிலும்' இருந்தன. இந்த கோட்பாடுகள் நடைமுறையிலுள்ள அரசியல் வழிகளை ஒட்டியும் இருந்தன. 'ஆராய்வு முறைகளும், தருக்க வகையான ஆய்வும் பெருகவே, அரசியலின் எல்லையைப் பற்றிய ஊகங்களும் விரிவடையலாயின; அரசின் புறவடிவமாகிய அமைப்பும், செயலும் வளர்ச்சி அடைந்தன; இதனைத் தொடர்ந்து அரசின் அக வடிவத்தைப் பற்றியும், அதாவது அரசின் கோட்பாடு பற்றியும் அறிவாற்றல்களிலும், மரபுகளிலும், இலக்கியத்திலும் கருத்துக்கள் வளரலாயின.'[1]

ஒரு குறிப்பிட்ட காலத்திலுள்ள அரசியல் கோட்பாட்டிற்கும், அப்பொழுது நடைமுறையிலிருக்கும் அரசியல் நிலைமைகளுக்கும் இடையே தொடர்பு இருக்கிறது. பல்வேறு அரசியல் கோட்பாடு களும், செயலில் இருந்துவரும் அதிகாரியைக் கண்டித்து மறுத் துரைப்பதற்கோ, அல்லது அது சரியே என்று விளக்கம் கூறுவதற்கோ தோன்றியுள்ளன. அரசியல் தத்துவ ஆசிரியர்

[1] ஆர். ஜி. கெட்டல் : அரசியல் என்னும் அறிவியல், பக் 99–100

களும் ஓர் இலட்சிய அரசினைப் பற்றிய கற்பனையான கருத்துக்களை வரைந்துள்ளனர். இத்தகைய கற்பனைகளும், அந்தந்தக் காலத்திலிருந்த அரசியல் இலட்சியங்களாலேயே (அல்லது குறிக்கோள்களினாலேயே) உருவாக்கப்பட்டிருக்கின்றன. 'அரசியல் கோட்பாடுகள் எல்லாம் (அவ்வக் காலத்தில்) வெளியில் இருந்து வந்த அரசியல் நிலைகளின் விளைவாகத் தோன்றியவையே.' அரசியல் வளர்ச்சிக்கு ஆதாரமாக அமைந்துள்ள குறிக்கோள்களைப் பற்றிய எண்ணங்களையும் விளக்கங்களையும் எதிரொலிப்பவைகளாகவே மேற்படி அரசியல் கோட்பாடுகள் அமைந்துள்ளன. அரசியல் வளர்ச்சியும் அரசியல் கோட்பாடுகளினால் உருவாக்கப்பட்டிருக்கிறது. அவையும், மக்கள் தமது அரசியல் நிறுவனங்களை மாற்றி அமைக்குமாறு அவர்களைத் தூண்டுகின்றன. எனவே 'அரசியல் கோட்பாடுகள் காரணமாகவும், காரியமாகவும் அமைந்துள்ளன.'

அரசியல் சிந்தனை, அரசியல் நிறுவனங்களோடு மட்டுமல்லாமல் வேறு துறைகளைப் பற்றிய சிந்தனைகளோடும் தொடர்புடையது. பொதுவாக அறிவு வளர்ச்சி, அரசியல் சிந்தனையின் இயல்பையும் வெகுவாகப் பாதிக்கிறது. ஒரு குறிப்பிட்ட காலத்திலுள்ள அரசியல் விதிகளை அறிந்து கொள்ளுதற்கும், மதிப்பிடுதற்கும், அரசியல் நிறுவனங்கள் நடைமுறையில் அடைந்துள்ள வளர்ச்சியை ஆராய்தலும், மற்றத் துறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை ஆய்வு செய்தலும் இன்றியமையாததாகும். அரசின் வளர்ச்சியைப் பற்றி இரு கூறுகள் அல்லது பகுதிகள் இருக்கின்றன. 'ஒரு கூறு அல்லது பகுதி, அரசுகள் தமது அரசாங்கங்களின் மூலமாகப் பருப்பொருளாக வளர்ந்து வந்துள்ள புறநிலையையும், அவை சட்டங்களைச் செயல்படுத்துதலையும், அவை ஏனைய நாடுகளோடு கொண்டுள்ள தொடர்புகளையும் பற்றியது ஆகும்; மற்றக்கூறு அல்லது பகுதி, கருத்தியலான ஒன்றாகக் கருதப்பட்டுள்ள அரசினைப் பற்றிய கருத்து வளர்ச்சியைக் கூறுவது ஆகும்.'[1] அரசியல் கோட்பாட்டிலும் தொடர்ச்சியான வளர்ச்சி காணப்படுகிறது. ஒவ்வொரு காலத்திலிருந்தும் அடுத்த காலத்துக்கு அரசியல் விதிகள் அல்லது கோட்பாடுகள் அளிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு அரசும், தனது அனுபவத்தைக் கொண்டு முற்காலக் கருத்துக்களை மாற்றி அமைத்துக் கொள்ளுகிறது; மாற்றி அமைக்கப்பட்ட கோட்பாடுகள், பின் வரக்கூடிய அரசுகளைப் பாதிக்கின்றன.

அரசியல் சிந்தனையானது, தன் இயல்பிலே முழுமையான கருத்து அன்று; அது முடிவான தீர்வுகளைக் கூறுதலும் இல்லை.

[1] ஆர். ஜி. கெட்டல்: அரசியல் என்னும் அறிவியல், பக். 101

பிரச்சினைகளைப்பற்றி ஒருமித்த அரசியல் சிந்தனையும் கிடையாது. அரசியல் பிரச்சினைகளும், அரசியல் கட்சிகளும், அரசாங்கத்தை இயக்கும் சக்திகளும் பல்வேறு வகைப்பட்ட கருத்தின் விளைவே ஆகும்.

நடைமுறையில் இருந்துவரும் அரசியல் நிறுவனங்களையும், வழிகளையும் அரசியல் சிந்தனையானது ஆதரிக்கவோ, மறுத்துரைக்கவோ செய்கிறது. இதை ஆதாரமாகக் கொண்டு அரசியல் சிந்தனையை பழைமை இயல்பினதென்றும், மாறுதலை விரும்பும் இயல்பினதென்றும் நாம் பாகுபாடு செய்யலாம். மக்கள் தாம் வாழும் அரசியல் அமைப்பை விளக்கவும், சரியென்று காட்டவும், நடைமுறை நிலையை நீடித்து வைக்கவும் முயலும் போது, பழைமைவகை சார்ந்த அரசியல் கருத்து தோன்றுகிறது. வழக்கமாக பழைமைப் போக்கிலான கோட்பாடுகளை ஆட்சியி லிருக்கும் வகுப்பாரும், நடைமுறை ஆட்சியினால் பயனடையக் கூடியவரும் தோற்றுவிக்கவோ, ஆதரிக்கவோ செய்கின்றனர். பழைமைக் கோட்பாடு சட்டம், ஒழுங்கு ஆகியவை பற்றிய மக்கள் மனநிலையை எதிரொலிப்பதாகவும், குழப்பத்தையும், கலகத்தையும் வெறுக்கும் மனநிலையைக் காட்டுவதாகவும் இருக் கிறது. தெய்வீக அரசுரிமைக் கோட்பாடு பழைமைக் கோட் பாட்டிற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். பழைமைக் கோட் பாடுகளை ஆதரிப்பவர் மாறுதல்களை அச்சத்துடனும், கவலை யுடனும் நோக்குகின்றனர். பழைமைக் கோட்பாடுகள் நடை முறை நிலைகளுக்கு ஒத்துவராமற்போகும்போது, அவை பிற் போக்கு இயல்பினதாக ஆகின்றன.

இதற்கு மாறாக மாறுதலை விரும்பும் கோட்பாடுகள் நடை முறை நிலையினை எதிர்ப்பவைகளாகத் தோன்றியுள்ளன. அவை நடைமுறையிலுள்ள நிறுவனங்களிலும், வழிவகைகளிலும் மாறு தல்களை விரும்புகின்றன. மாறுதல் கோட்பாடுகள் தத்துவ இயல்பினதாகவோ அல்லது பருப்பொருள் இலட்சியங்களாகவோ இருத்தல்கூடும். முற்கூறப்பட்டவை கற்பனைக் கோட்பாடுக ளாகும். பிற்கூறப்பட்டவை ஆக்க வழியில் சீரமைப்பு ஏற்படுதலை விரும்புகின்றன. மாறுதல் கோட்பாடு, அமைப்பிலுள்ள ஒரு முறையை மாற்றவிரும்பலாம் அல்லது அரசாங்கச் செயல்களில் சிறு மாறுதல்களை உண்டாக்க முயலலாம், அல்லது அரசியல் அமைப்பில் பெருமளவு மாறுதல்களை ஏற்படுத்த முயலலாம், அல்லது ஒரு புதிய அரசியல் முறையைத் தோற்றுவிக்க விரும் பலாம். மாறுதல் கோட்படுகளை ஆதரிப்போருள் சிலர் சட்ட முறைகளின் வாயிலாக மாறுதல்கள் ஏற்படுவதை விரும்பு கின்றனர்; மற்றும் சிலர் புரட்சிகரமான முறைகளை ஆதரிக்

கின்றனர். மாறுதல் கோட்பாடுகளை ஆதரிப்பவர் ஆட்சியில் இல்லாதவர்களே ஆவர். அவர்கள் நடைமுறை அமைப்பினுல் மன நிறைவு அடையாதவர்களாகையினுல், மாறுதலின் மூலமாக அவர்கள் தமது நிலையைச் சீர்படுத்த விரும்புகின்றனர். மாறுதல் கோட்பாடுகள் தோன்றவும், பரவவும் வேண்டுமானுல், பெருமளவில் அரசியல் அறிவும் சிந்தனைச் சுதந்திரமும் ஆய்வுச் சுதந்திரமும் இருத்தல் இன்றியமையாதது. மாறுதல் கோட்பாடுகளை ஆட்சியிலிருப்போர் அச்சத்துடன் நோக்குகின்றனர். மாறுதல் கோட்பாடு ஒப்புக்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்ட பின்னர், அது பழைமைக் கோட்பாடாக மாறும் இயல்பை அடைகிறது.

பழைமைக் கோட்பாடுகள் பொது அமைதியையும் நிலைபேற்றையும் தருவதால் அவைகளுக்கு சிறப்பு இருக்கிறது. தேவைப்படுகிற சீர்திருத்தத்தை அவை தடுப்பதோ, தாமதிக்கவோ செய்கின்றன என்பது மட்டுமே அவற்றிலுள்ள குறைபாடு ஆகும். மாறுதல் கோட்பாடுகள் தேக்கம் இன்மையை உண்டாக்கி, அரசியல் முன்னேற்றத்தைத் தூண்டுகின்றன. ஆனுல் அவை குழப்பத்தையும் கலகத்தையும் உண்டாக்கவும் செய்கின்றன.

அரசியல் கோட்பாட்டின் ஆதாரங்கள்

கடந்த கால அரசியல் கோட்பாட்டிற்கான செய்திகளை பல்வேறு ஆதாரங்களிலிருந்து சேகரிக்க இயலும். தங்கள் காலத்திய அரசியல் கருத்துக்கு முறையான வடிவம் கொடுத்த சிறந்த அரசியல் சிந்தனையாளர்களுடைய நூல்களெல்லாம் நிறையச் செய்திகளைத்தரும் சுரங்கம் போன்று அமைகின்றன. இவ்வாதாரத்தினின்றும் வரக்கூடிய செய்திகளை உண்மையென முழுவதும் நாம் நம்பி அவற்றை ஏற்றுக்கொள்ள இயலாது; ஏனென்ருல், அரசியல் தத்துவ ஆசிரியர்கள் நடைமுறை அரசியல் வாழ்விலே தொடர்பு கொள்ளாமல் ஒதுங்கி வாழ்பவர்கள்; அவர்கள் கடந்த காலக் கோட்பாடுகளை ஏற்றுக் கொண்டவர்களாகவும் இருத்தல் கூடும், அல்லது அவர்களுக்கெனத் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களும் இருத்தல் கூடும்.

நடைமுறையிலுள்ள அமைப்பு வடிவத்துக்கும், அரசியல் செயல்களுக்கும் அடிப்படையாகப் பல அரசியல் கோட்பாடுகள் அமைந்துள்ளன. கோட்பாட்டிற்கும் நடைமுறைக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை நாம் எளிதில் கண்டுகொள்ளலாம். அரசியல் வாழ்விலே தோன்றிய தலைவர்களுடைய நூல்களும் உரைகளும், அரசினைப் பற்றிய கோட்பாட்டிற்கு வேண்டிய

செய்திகளைப் பெருமளவில் தருகின்றன. அரசுகளைப் பற்றிய அரசாங்கப் பதிவேடுகளும் அரசியல் கோட்பாட்டிற்கு ஓர் ஆதாரமாக இருக்கின்றன. இவ்வகை ஆதாரத்தில், எழுதப்பட்ட அரசியலமைப்புக்கள், சட்டங்கள், ஆணைகள், நீதிமன்றங்களின் தீர்ப்புக்கள், பட்டயங்கள், ஆட்சித்துறை அறிக்கைகள், உடன்படிக்கைகள், தூதியல் கடிதப் போக்குவரத்துக்கள் முதலியவை அடங்கும். அரசியல் கோட்பாட்டுக்கு அவை ஓர் முக்கிய வழிகாட்டியாக இருக்கின்றன.

முற்காலங்களில் அரசியல் சிந்தனை என்பது மக்களுள் ஒரு சிலரிடத்தில் மட்டுமே காணப்பட்டது. சாதாரண மக்கள் இதனைப் பற்றி அறியாமலும், அதில் ஈடுபாடு கொள்ளாமலும் இருந்தனர், அல்லது ஒடுக்கப்பட்டுப்போயிருந்தனர்.[1] இன்றுள்ள நிலையில், பொதுமக்கள் கருத்து அரசியல் கோட்பாட்டை உருவாக்குதலில் பெரும்பங்கு கொள்ளுகிறது. அது அரசாங்கத்தின்மீது தனது கருத்து ஆதிக்கத்தைச் செலுத்துகிறது. பொதுமக்கள் கருத்தை உருவாக்குதற்கும், அதனை வெளிப்படுத்துவதற்கும் வழிகள் இருக்கின்றன. ஆகையால் விளம்பர முறைகளும் பிரச்சார முறைகளும் அரசியல் கோட்பாட்டிற்குரிய முக்கிய ஆதாரங்களாக அமைந்துவிட்டன. ஓர் இலக்கியமும், அதனுடைய காலத்திய அரசியல் கருத்தைப் பற்றிய சரியான செய்தியை அளிக்க உதவுகிறது.

அரசியல் கோட்பாட்டிலுள்ள பிரச்சினைகள்

பல்வேறு காலங்களில் பல்வேறு பிரச்சினைகளை அரசியல் கோட்பாடு வலியுறுத்தி வந்துள்ளது. கிரேக்க சிந்தனையாளர்கள் அரசியலின் ஒழுக்க ஆதாரத்தை ஆய்தலில் ஈடுபாடு கொண்டு, நீதி என்பதைப் பற்றியும் அரசாங்க வடிவத்தைப் பற்றியும் கவனம் செலுத்தினர். இடைக்காலத்திலே, அரசியல் கோட்பாடு இறை இயலோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. அரசியல் அமைப்பைப் பற்றிய முடியாட்சிக் கோட்பாட்டுக்கும், குடியாட்சிக் கோட்பாட்டுக்கும் இடையே இருந்த முரண்பாடே பதினேழாவது, பதினெட்டாவது நூற்றாண்டுகளில் ஆய்வு செய்யப்பட்ட கேள்வி ஆகும். இன்று, அரசியல் நலன்களுக்கும் பொருளாதார நலன்களுக்கும் இடையே உள்ள தொடர்பைப் பற்றிய கேள்விதான் முன்னணியில் நிற்கிறது.

[1] எச். ஓ. டெய்லர்: வரலாற்றிலே மனச் சுதந்திரம்.

அரசின் தோற்றத்தைப் பற்றிய கேள்வியில் அரசியல் கோட்பாட்டாளர் கவனம் செலுத்துகின்றனர். அறிவு வளராத காலத்திலே, கடவுளின் அதிகாரத்தினுல் தோற்றுவிக்கப்பட்ட ஓர் அமைப்பாக அரசு கருதப்பட்டது. மனிதனின் 'அரசியல் தன்மை'யினின்றும் தோன்றிய ஒன்று என ஒருசிலர் கருத, வேறு சிலர், அதனை ஓர் உடன்படிக்கை அல்லது ஒப்பந்தத்தின் மூலம் மனிதனுல் தோற்றுவிக்கப்பட்டதாகக் கருதினர். மெலியோரை வலியோருடைய கட்டுப்பாட்டுக்குள் வருமாறு வன்முறை கையாளப்பட்டதால்தான் அரசு தோன்றிற்று என்றும் சிலர் கருதினர். ஆயினும் இக்காலப் பரிணும வளர்ச்சிக் கோட்பாடானது, அரசு படிப்படியாக வளர்ந்து தோன்றியுள்ளது என்றும், ஒழுங்கும் பாதுகாப்பும் இருத்தல் வேண்டுமென்ற மனிதனுடைய தேவையை நிறைவு செய்தற்காக வளர்ந்து வந்த ஒன்று என்றும் கூறுகிறது.

அரசின் அளவைப் பற்றிய கருத்துக்களில் மாறுபாடுகள் இருக்கின்றன. நகரமே அரசுக்குரிய சிறந்த அளவாக கிரேக்கரால் கருதப்பட்டது. பேரரசு அளவே ரோமானியர்களுடைய கருத்தில் சிறந்த இடம் பெற்றிருந்தது. இக்காலத்தில் தேசிய அரசே இலட்சியமாகக் கொள்ளபடுகிறது. அண்மைக் காலத்தில் உலகக் கூட்டாட்சி அமைப்பு பற்றிய கேள்வி மக்களின் சிந்தனையைக் கவரத் தொடங்கியுள்ளது.

அரசின் இயல்பும், அதனுடைய அதிகாரத்தின் ஆதாரமும், அறிவு வகையிலான நியாயமும் சிந்தனையாளர்களால் ஆராயப்படுகின்றன. அரசற்ற நிலைவாதி, அரசு இருப்பதற்குரிய நியாயம் எதனையும் காணவில்லை. சிலர் அதனை இறைவரால் ஏற்படுத்தப்பட்ட ஒன்ருகக் கருதுகின்றனர். சிலர் அரசினுல் பயன் கிடைப்பதனுல், அது இருப்பதற்கான நியாயம் கூறுகின்றனர். அவர்கள் அரசு அதிகமான மக்களுக்குப் பெருமளவு இன்பம் கிடைக்குமாறு செய்வதால், அதன் ஆணைகளுக்கு யாவரும் கீழ்ப்படிதல் வேண்டுமென்று கூறுகின்றனர். அரசின் அதிகாரமானது ஆளப்படுவரின் ஒப்புதலின் பேரில்தான் அமைந்துள்ளதென்று சிலர் கருதுகின்றனர். சிலர் அரசை ஒரு சட்ட வடிவமான ஆளாக உருவகம் செய்கின்றனர். மனிதரின் ஆட்பண்புகள் முழுமையான வளர்ச்சி பெறுவதற்கு அரசு இன்றியமையாதது என்று சில அறிஞர்கள் கூறுகின்றனர்.

அரசியல் கோட்பாட்டில் நெடுங்காலமாக சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது 'இறைமை' என்ற கருத்து ஆகும். அரசிய

லமைப்புக்குட்பட்ட முடியாட்சிகள் தோன்றிய காலத்திலே இந்தக் கருத்து தோன்றிற்று. இந்தக் கருத்தைப் பற்றிக் கோட்பாடுகள் வரையப்பட்டன. இந்தக் கருத்து பல மாறுதல்களுக்கு உள்ளாகி இருக்கிறது. சட்டத்தைப் பற்றிய கருத்தும் பல்வேறு மாறுதல்களை அடைந்துள்ளது. முதலில் சட்டம் என்பது வழக்கத்தின் வடிவமாகத் தோன்றியது; இப்போதுஅது அரசினுடைய விருப்பமாகவே கருதப்பட்டு வருகிறது.

அரசியல் கோட்பாட்டில் முடிவில்லாத சர்ச்சைக்குஆதாரமாக இருப்பது அரசாங்க வடிவத்தை அல்லது வகையைப் பற்றிய கேள்வியே ஆகும். அரசாங்க அதிகாரத்தை வைக்கும் இடத்தைப் பற்றி நிறைய விவாதங்கள் தோன்றியுள்ளன. அது ஓர் ஆளிடத்தில் இருத்தல் வேணடுமா, அல்லது ஒரு சிலரிடத்தில் இருத்தல் வேண்டுமா, அல்லது பரவலாக வ்ழங்கப்படுதல் வேண்டுமா? கிரேக்கர்கள் உயர்குடிப்பிறப்பாளர் ஆட்சியை ஆதரித்தனர். ரோமானியப் பேரரசு தோன்றிய காலத்தில் ரோமானியர் முடியாட்சியைஆதரித்தனர். இன்று குடியாட்சிக்குப் பொதுவான ஆதரவு இருக்கிறது. ஒருவகை ஆட்சியானது அடுத்து வேறொரு வகை ஆட்சியானது அடுத்து வேறொரு வகை ஆட்சிக்கு இடம் அளித்து, இவ்வகையாகஆட்சிவகை வட்டம் ஒன்றை ஏற்படுத்துதற்கும் முயற்சிகள் செய்கின்றனர். புரட்சிக்கான காரணங்களைத் தெளிவாகஆராயவும், அவற்றின் இயல்பைஆராயவும் முயற்சிகள் செய்யப்பட்டன. பிரதிநிதித்துவக் கோட்பாடும் பல மாறுதல்களுக்கு உள்ளாகி இருக்கிறது. வகுப்பு வகையிலான பிரதிநிதித்துவத்துக்குப் பதிலாக பிரதேச மக்கள் குழுக்களுக்குப் பிரதிநிதித்துவம் என்பது கையாளப்படுகிறது.

அரசின் செயல்களுக்கு உரிய எல்லையைப் பற்றியும் பல சர்ச்சைகள் இருந்து வந்துள்ளன. தனியார் உரிமைக் கோட்பாடு அரசின் அதிகாரத்தையும், ஆற்றலையும் கட்டுப்படுத்தி, தனி ஆளுக்கு மிகக்கூடுதலான அளவில் செயல்படும் உரிமையை வழங்க முயலுகிறது. தனியார் உரிமைக் கோட்பாட்டிற்கு நேர் மாருக, பொதுவுடைமை அல்லது சமவுடைமைக் கோட்பாடு இருக்கிறது. இக்கோட்பாடு, அரசின்செயல் மிகப்பரந்த அளவுக்கு விரிவடைதல் வேண்டுமென்றும், தனி ஆள் விரிவான அரசாங்கக் கட்டுப்பாட்டிற்குள்ளும், ஒழுங்குக்குட்பட்டும் இருத்தல் வேண்டுமென்றும் கூறுகிறது. அவ்வப்போது நாடுகளுக்கு இடையே உள்ள உறவுகளைப்பற்றியும் அறிஞர்கள் கவனம் செலுத்தி வந்துள்ளனர்.

அரசின் இயல்பைப் பற்றிய கோட்பாடுகள்

அரசியல் கோட்பாட்டைப்பற்றி எழுதிய ஆசிரியர்கள் அரசின் இயல்பைப் பற்றியும் மிக்க கவனம் செலுத்தியிருக்கின்றனர். அரசின் தன்மையைப் பற்றி மாறுபட்ட கருத்துக்கள் இருப்பதால், அதைப் பற்றி முரணான முடிபுகளும் தோன்றியுள்ளன. அரசு என்றால் என்ன என்பது பற்றிக் கீழ்வரும் சில கோட்பாடுகள் விளக்குகின்றன :

1. சட்ட வகையிலான கோட்பாடு

இக் கோட்பாட்டைக் கூறுபவர்கள் சட்ட நூலாசிரியர்கள்; இது அரசை சட்டக் கருத்திலே உள்ள ஓர் கூறு அல்லது பொருள் என்று கூறுகிறது. சட்டத்தைத் தோற்றுவித்து, செயல்படுத்தி, சட்ட உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டுத் தோன்றியுள்ள ஓர் சட்டவடிவமான ஆள் என்று இக்கோட்பாடு அரசைக் கருதுகிறது. இது அரசுக்கு இயற்கையிலுள்ள மனிதர்களின் பண்புகளை ஏற்றிச் சொல்லுகிறது. 'ஒரு சில சட்ட ஆசிரியர்கள் அரசினைப் பற்றிய இந்தக் கருத்துக்கு, அதனை உண்மையில் ஓர் ஆளாகக் கருதும் அளவுக்குத் தீவிரமாக விளக்கம்கூற, பெரும்பாலான சட்ட ஆசிரியர்கள் அரசை நீதி வழங்குதற்குரிய ஆள் உருவகமாகவே கருதுகின்றனர்.'[1]

2. உடல் உவமைக் கோட்பாடு

இந்தக் கோட்பாடு, அரசை, பயிர்வகைகளைப் போலவும், விலங்கினங்களைப் போலவும் இருக்கிற ஓர் உயிர்ப் பொருளாகக் கருதுகிறது. இக் கோட்பாட்டின்படி, அரசு, வளர்ச்சி, அழிவுச் சட்டங்களுக்கு உட்பட்ட ஒன்றே ஆகும். தனி ஆட்களெல்லாம் இவ்வுயிர்ப் பொருளிலுள்ள உயிரணுக்களாகக் கருதப்படுகின்றனர். இந்தக் கோட்பாட்டின் சிறப்பு, இது அரசின் ஒன்றுபட்ட தன்மையை வலியுறுத்துவதே ஆகும். உயிர்ப்பொருள்களுக்கும், அரசுக்கும் இடையே கூறப்படும் உவமையை முழுவதும் உண்மை என்று ஒப்புக்கொள்ள இயலாது. அரசின் இயல்பைப் பற்றிய ஒரு சரியான விளக்கமாக இந்தக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ள இயலாது.

3. ஒப்பந்தக் கோட்பாடு

ஒப்பந்தக் கோட்பாடு, அரசின் தோற்றத்தைப் பற்றி மட்டுமல்லாமல், அரசின் இயல்பைப் பற்றியும் விளக்கவந்த ஒரு கோட்

[1] டபிள்யு. டபிள்யு. வில்லோபி : பொதுச் சட்டத்தின் ஆதாரக் கருத்துக்கள், இயல் 4

பாடு ஆகும். இந்தக் கோட்பாடு கிரேக்க தத்துவத்தினின்றும் தோன்றிற்று. சோபிஸ்டுகள் எனப்படும் அறிவாளர்கள், அரசு ஓர் ஒப்பந்தத்தின் விளைவாகத் தோன்றிற்று என்றும், அது ஒவ்வொருவரும் தன்னை அழிதற்கு ஓர் தடையாக இருக்கிற தென்றும் கருதினர். மனிதருடைய தன் விருப்ப ஒப்பந்தத்தின் மீதே அரசு அமைந்திருக்கிறது என்ற கருத்தை முதலில் கூறிய வர்கள் எப்பிக்யூரியன் பிரிவைச் சேர்ந்த அறிஞர்களே ஆவர். ரோமானிய சட்ட அமைப்பும் ஒப்பந்தக் கோட்பாட்டுக்கு வேண்டிய செய்திகளை அளித்தது.

ஒப்பந்தக் கோட்பாட்டில் எழுந்த ஒரு மாறுதல், அரசில் ஆளுவோருடைய அதிகாரம் என்ன என்பதைப் பற்றியது ஆகும். ரோமானியச் சட்ட அறிஞர்கள், ஆளுவோருடைய அதிகாரம், குடிமக்களோடு அவர்களுக்கு உள்ள ஓர் முதல் ஒப்பந் தத்தையே சார்ந்துள்ளது என்று கருதினர். பைபிளிலுள்ள பழைய ஏற்பாட்டுப் பகுதியில், இறைவருடைய முன்னிலையில் டேவிட் அரசருக்கும் இஸ்ரேலின் முதியோர் களுக்கும் இடையே செய்யப்பட்ட ஓர் ஒப்பந்தம் குறிப்பிடப் படுகிறது.[1] நிலமானிய அமைப்பிலே ஆளுவோர்களுக்கும் ஆளப்படுவோர்களுக்கும் இடையே செய்யப்பட்ட ஒப்பந்தத் துக்குப் பல எடுத்துக்காட்டுக்கள் காணப்படுகின்றன. பதினைந் தாம் நூற்றாண்டிலே, குழுமுறை இயக்கமானது சமுதாய ஒப்பந்தம், மக்கள் உடன்பாடு முதலிய கருத்துக்களை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவர முயன்றது.[2] பதினேழாவது, பதினெட்டாவது நூற்றாண்டுகளிலே சமுதாய ஒப்பந்தக் கோட் பாடானது, மக்களின் இறைமை, தனியார் சுதந்திரம், புரட்சி செய்யும் உரிமை முதியவைகளுக்கு ஆதரவாகக் கையாளப் பட்டது. இந்தக் கருத்துக்கள் தாமஸ் ஹாப்ஸ்,[3] ஜான் லாக்,[4] ஜீன் ஜாக் ரூஸ்ஸோ[5] ஆகிய சிந்தனையாளர்களின் நூல்களில் இடம் பெற்றன.

4. இலட்சிய வகைக் கோட்பாடு

இது ஓர் தத்துவ இயல்புடைய கோட்பாடு ஆகும். இது கிரேக்க ஆசிரியர்களான பிளேட்டோ, அரிஸ்ட்டாட்டில் முதலி யோர் வகுத்த கோட்பாடுகளிலிருந்து தோன்றியதாகும். அரசு

[1] 2 சாமுவேல் V, 3.

[2] ஏனியஸ் சில்வியஸ், கூவஸின் நிக்கலாஸ், மற்றும் சிலருடைய நூல்களில்

[3] லெவியாதன் (1651).

[4] அரசாங்கத்தைப் பற்றிய இரு கட்டுரைகள் (1690).

[5] சமுதாய ஒப்பந்தம், 1762.

என்ற அமைப்பில்தான் தனிமனிதர் ஒவ்வொருவரும் ஒரு நல் வாழ்க்கையை வாழ்தல் இயலும் என்றும், வாழ்வின் மிக உயரிய, தலையாய குறிக்கோள்களை எல்லாம் அரசில்தான் நிறைவேற்ற இயலும் என்றும் இக்கோட்பாடு கூறுகிறது. இந்த விதியிலிருந்து அரசை மிகமிக மேன்மைப்படுத்தும் ஓர் தத்துவம் ஜெர்மனியில் வரையப்பட்டது.[1] இக்கோட்பாடு அரசை ஓர் முழுமையான, வரம்பறற ஆற்றலுடையதாகக் கருதிற்று. அரசே ஓர் முடிந்த முடிபாகவும் கருதப்பட்டது. அரசு எந்தத் தவற்றையும் செய்யாது என்றும், அதனுடைய ஆணைகள் எதிர்ப்பு ஏதும் இன்றி ஏற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும் என்றும் இக்கோட்பாடு கூறுகிறது. அரசினுடைய தேவைகளும், அதனுடைய நலன்களும், தனி ஆட்களுடைய தேவைகளையும், நலன்களையும் விட உயர்வானவை. அரசின் அதிகாரத்துக்கு எதிரான புரட்சி அல்லது கலகம் எதற்கும் நியாயம் காட்ட இயலாது. அரசைப் பற்றிய இலட்சியக் கோட்பாடு அரசுக்கு ஓர் அற்புதமான ஒளி வட்டத்தைக் கொடுக்கிறது.

இலட்சியக் கோட்பாட்டுக்கு வரம்புகடந்து, தீவிர நிலையில் விளக்கம் கூறினுல், அது பேரிடரைத் தோற்றுவிக்கும். அரசை முழுவல்லமை உடையதாகக் கொள்ள இயலாது.

அரசியல் கோட்பாட்டின் சிறப்பு

திறமிக்க சிந்தனையாளர்களுடைய கோட்பாடுகள் மிக்க சிறப்பு உடையவை; அவை மனித இனத்துக்குப் பெரும்பணி செய்கின்றன. அரசியல் கோட்பாடு வரலாற்றை நன்முறையில் விளக்குதற்கும் முக்கியமான அரசியல் இயக்கங்களுக்கு ஆதாரமாக இருக்கும் நோக்கங்களை விளக்குவதற்கும் உதவுகிறது. அரசியல் கோட்பாடு, அறிவாற்றலின் மிக உயரிய ஒரு சாதனையாகக் காட்சி அளிக்கிறது.

மேற்கோள் நூல்கள்

(1) பார்க்கர், எர்னஸ்ட் : ஸ்பென்சர் காலமுதல் இக்காலம் வரையிலான இங்கிலாந்தில் அரசியல் சிந்தனை.

(2) ஜே. கே. பிளன்ட்ச்லி : அரசைப் பற்றிய கோட்பாடு.

(3) எப். டபிள்யு. கோக்கர் : அரசியல் தத்துவ ஆய்வுகள்.

[1] ஹெகல் : அரசு, வரலாறு என்பவை பற்றிய தத்துவம். (மோரிஸின் மொழி பெயர்ப்பு)

(4) டபிள்யு. ஏ. டன்னிங்க் : அரசியல் கோட்பாடுகளின் வரலாறு.

(5) ஜே. டபிள்யு. கார்னர் : அரசியல் விஞ்ஞானமும் அரசாங்கமும்.

(6) ஆர். ஜி. கெட்டல் : அரசியல் சிந்தனையைப் பற்றிய வரலாறு.

(7) எப். போலாக் : அரசியலென்னும்அறிவியலைப் பற்றிய வரலாறு.

(8) ஜி. எச். சபைன் : அரசியல் கோட்பாட்டின் வரலாறு.

கேள்விகள்

1. அரசியல் கோட்பாட்டின் தன்மையை விளக்குக.
2. அரசியலைப் பற்றிய பழைமைக் கோட்பாட்டுக்கும், மாறுதல் கோட்பாட்டுக்கும் இடையிலுள்ள வேறுபாட்டைக் கூறுக.
3. அரசியல் கோட்பாட்டிற்குரிய ஆதாரங்கள் யாவை?
4. அரசியல் இயல்பைப் பற்றிக் கூறும் கோட்பாடுகளை விளக்குக.

இயல் 5

நாடு: இலக்கணம், இயல்பு, அலுவல்கள்

அரசு : இலக்கணம், இயல்பு, அலுவல்கள், கூறுகள். அரசும் சமுதாயமும்; அரசும் அரசாங்கமும்; அரசு, தேசம், தேசிய இனம், தேசியம் முதலியனவும்; அனைத்துலக தேசியம்—அலுவல்கள் — காவல், பொருளாதாரத் தொழில்கள் — ஒழுங்கு முறை -- நலன்.

அரசு : இலக்கணம்

அரசியல் நூல் அரசினைப் பற்றிய ஓர் முறையான படிப்பு ஆகும். அரசு என்ற சொல்லுக்கு இலக்கணம் வகுப்பது சிறிது கடினமே ஆகும்; நாம் மற்றவரோடு உரையாடும்போது அரசு என்பதற்குக் கூறும் பொருள், அரசியல் நூலில் இதே சொல்லுக்கு இருக்கும் பொருள் அன்று. அரசு என்பது, 'ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் ஒரு சுதந்திர அரசாங்கத்தின் கீழே அரசியல் வகையாக அமைக்கப்பட்ட ஒரு மக்கள் சமுதாயமே' அரசு ஆகும் என்று இலக்கணம் வகுத்துக் கூறலாம்.[1] இந்த இலக்கணத்தை நாம் ஆராய்வோமானால் அரசுக்கு சில முக்கியமான கூறுகள் இருக்கின்றன என்று தெரியவரும். அவையாவன : 1. மக்கள் தொகை, 2. நிலப்பகுதி, 3. அரசாங்கம், 4. இறைமை அல்லது தலையான அதிகாரம்.

மக்கள் தொகை : அரசுக்கு இருக்கவேண்டிய முதல் முக்கிய தேவை மக்கள் தொகை. மக்கள் இல்லாமல் எந்த அரசையும் அமைத்தல் இயலாது. அரசின் நில எல்லையினுள் பெரும்பாலும் நிலையாகவாழ்கின்ற மக்களே, அவ்வரசின் குடிமக்களாகக் கருதப் பட இயலும். சாதாரணமாக ஒரு நாட்டின் மக்கள் தொகை யிலே, அந் நாட்டுக் குடிமக்கள் என்றும், அயல் நாட்டவர் என்றும் இரு பிரிவினர் இருக்கின்றனர். இவருள் குடி மக்கள் என்பவர் அவ்வரசுக்குக் கட்டுப்பட்டு வாழும் மக்களாவர். அவர் களுக்குப் பல்வேறு உரிமைகளைப் பெறுதற்கு இயலும்; அயல்

[1] ஆர். ஜி. கெட்டல் : அரசியல் நூல், பக். 21

நாட்டவர், நாட்டிலே தற்காலிகமாக வாழ்பவரே யாவர். அவர்கள் மற்ற நாடுகளின் குடிமக்களாக இருப்பர். ஒரு நாட்டின் குடி ஆளுக்கு இருக்கிற எல்லா உரிமைகளையும் ஒரு அயல் நாட்டவரால் அனுபவித்தல் இயலாது.

ஓர் அரசியல் வாழும் மக்களின் எண்ணிக்கையை வரையறுத்தல் இயலாது; சில அரசியல் தத்துவ ஆசிரியர்கள் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள மக்கள் இருத்தல்தான் இலட்சியம் ஆகுமென்று கூறுகின்றனர். எடுத்துக்காட்டாக, பண்டைய கிரேக்க தத்துவ ஆசிரியராகிய பிளேட்டோ ஒரு அரசின் மக்கள் தொகை 5040 சுதந்திரக் குடியாட்களுக்குமேல் போகாமல் இருத்தல் வேண்டுமென்று கூறுகிறார். ஆனால் இது நடைமுறைக்கு ஒத்துவராது. இக்காலத்தில் ஒரு சில ஆயிரம் மக்களேயுடைய அரசுகளும் இருக்கின்றன, இலட்சக்கணக்கான மக்களையுடைய அரசுகளும் இருக்கின்றன. ஒரு அரசினுடைய மக்கள் தொகையானது அளவுக்கு மீறிப் பெரிதாக இருத்தல் கூடாதென்பதை நாம் நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

நிலப் பகுதி: அரசின் இரண்டாவது முக்கிய கூறு நிலப்பகுதி அல்லது பரப்பளவு ஆகும். 'அரசு என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தோடேயேதான் தொடர்புபடுத்தப்படுகிறது.'[1] மக்கள் தொகையைப் போலவே, நிலப்பகுதியைப் பொறுத்த வரையிலும் அரசின் நிலப்பரப்பை வரையறுக்க இயலாது. கடந்த காலத்தில் மிகப்பரந்த நிலத்தை ஆட்சி செய்தல் என்பது ஒரு பிரச்சினையாக இருந்தது; ஆனால் இப்பொழுது தற்காலத் தொழில் இயலின் மூலமாக இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிட்டது. தற்காலத்தில் வாட்டிக்கன் நகரம் (109 ஏக்கர்கள்) போன்ற மிகச் சிறிய அரசுகளும் இருக்கின்றன; சோவியத் யூனியன் போன்ற (8.336,510 சதுர மைல்கள்) மிகப்பெரிய அரசுகளும் இருக்கின்றன.

ஒரு அரசின் பரப்பை வரையறை செய்வதில் தன்னிறைவு இருத்தல் வேண்டுமென்பதை முக்கிய நிலையாகக் கூற இயலாது. தற்கால அரசை ஓர் தன்னிறைவு உடைய அரசு என்று கூற இயலாது. ஓர் அரசில் நிலப்பரப்பிலே அதன் நிலமும், நீரும், காற்றும் அடங்கியுள்ளன. தனது எல்லைகளுக்குள் இருக்கின்ற எல்லாப் பொருள்களின்மீதும் அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. அதற்குக் கடற்கரை இருக்குமானால், அது கடலின்மீது ஒரு குறிப்பிட்ட அளவுக்குத் தன் கட்டுப்பாட்டைக் கையாள இயலும்.

[1] டில்லன் முதலியோர்: அரசியல் விஞ்ஞானத்துக்கு அறிமுகம், பக். 24

அரசுகளின் நிலப்பரப்புக்கள் ஒன்றோடொன்று தொடர்புடையனவாகவோ, அல்லது, தனித்துத் தொடர்பில்லாமலோ இருக்கலாம். பாதுகாப்புக்கு உரிய வழிகளாக இயற்கை அரண்கள் அமைந்திருத்தல் முக்கியமென்ற கருத்து இக்காலத்துக்குப் பொருந்தாது.

அரசாங்கம்: அரசினுடைய மூன்றாவது கூறு அரசாங்கம் ஆகும். 'அரசினுடைய ஓர் இயந்திரம் அல்லது அமைப்பே அரசாங்கம் ஆகும்.'[1] அரசாங்கம் இல்லாவிடில், நாட்டின் உள்ளே குழப்பமே தோன்றும். மக்களுடைய விவகாரங்களை ஒழுங்கு படுத்துதற்கு அரசாங்கம் தேவைப்படுகிறது. அது மக்களுக்குப் பணிகளையும் செய்கிறது. எல்லா அரசுகளிலும் அரசாங்கங்கள் இருந்தபோதிலும், எல்லா அரசாங்கங்களும் ஒன்றுபோல் அமைந்திருக்கவில்லை. ஒரே அரசாங்கத்தின் உள்ளேயே, பல்வேறு உட்பிரிவுகளும் அல்லது குழுக்களும் இருக்கின்றன.

இறைமை: இறைமை என்பது உயர்தர அதிகாரத்தை அல்லது தலைமையான நிலைமையைக் குறிப்பிடுகிறது. 'உள் துறையில் தலைமை அதிகாரமும், வெளித்துறையில் சுதந்திரமும் பெற்றிருத்தலே,' இறைமை ஆகும். அரசும் ஒரு வகையான மனிதக் குழுவேயானாலும், அதனை மற்றக் குழுக்களினின்றும் வேறுபடுத்திக் காட்டுவது அதனுடைய இறைமை அதிகாரம் ஆகும். அரசுக்கு இறைமை அதிகாரம் இருப்பதால்தான், அது சட்டங்களின் வாயிலாக வெளிப்படுத்தப்படுகிறது.

அரசின் இறைமை என்பது உள்துறை இறைமை என்றும், வெளித்துறை இறைமை என்றும் இரண்டு வகைப்படும்: உள் துறை இறைமை என்பதற்கு, அரசு தனது எல்லைகளுக்குள் தலைமையான அதிகாரத்தையுடையது என்றுபொருள். வெளிப்புற இறைமை என்பதில் அரசினுடைய சுதந்திரநிலை கூறப்படுகிறது.

அரசும் சமுதாயமும்

சமுதாயம், அரசு என்ற சொற்கள் ஒரே பொருளைக் குறிப்பிடுதற்காகவே கையாளப்படுகின்றன. ஆனால் ஒன்றிலிருந்து மற்றொன்று வேறானது. அரசு என்பது ஓர் அரசியல் நிறுவனம் ஆகும்; சமுதாயம் அத்தகையது அன்று. ஆகையால் அரசு சமுதாயத்தோடு ஒன்றுபட்டது அன்று. சமுதாயத்தின் நோக்கமும், அரசின் நோக்கமும் ஒன்றே ஆமென்று எர்னெஸ்ட் பார்க்கர் என்ற ஆசிரியர் கூறுகிறார்.[1] கிரேக்க சிந்தனையாளர்கள் அரசை

[1] ஸ்பென்சர் காலம் முதல் இக்காலம் வரையிலுள்ள அரசியல் சிந்தனை, பக். 67

சமுதாயத்தினின்றும் வேறுபடுத்திக் காட்டவில்லை. ஆனால் இன்று அவ்வாறு அன்று. 'பல மனிதர் தத்தம் தேவைகளை நிறைவு செய்துகொள்ளும் பொருட்டுக் கூட்டாக வாழும் கூட்டத்தையே நான் சமுதாயம் என்று குறிப்பிடுகிறேன்,' என்று லாஸ்க்கி என்ற பேராசிரியர் குறிப்பிடுகிறார்.[1] சமுதாயம் என்பது சமுதாய அமைப்போடு தொடர்புடையது. ஆனால் அரசு என்பதோ அரசியல் அமைப்போடு தொடர்புடையது. 'சமுதாய அமைப்பையும், அரசியலமைப்பையும் ஒன்றாக இணைத்தல்,' அரசையோ அல்லது சமுதாயத்தையோ பழுதற அறிந்துகொள்ள இயலாதவாறு தடுக்கின்ற ஒரு பெருங்குழப்பத்தைத் தோற்றுவிக்கின்ற பெருந் தவறே ஆகும்,' என்று மாக் ஐவர் என்ற ஆசிரியர் கூறுகிறார்.[2]

ஜி. டி. எச். கோல் என்னும் ஆசிரியர், 'சமுதாயத்தினுள், பல வகையாக அமைந்து இருக்கிற ஒரு கழகமான நிறுவனமே கூட்டம் அல்லது சமூகம் எனப்படும்' என்று கூறுகிறார்.[3] குடும்பம், திருச்சபை, கழகம், அரசியல் கட்சி ஆகியவை எல்லாம் ஒன்றுசேர்ந்த இணைப்பே சமுதாயம் ஆகும். அது பல்வேறு நோக்கங்களுக்காக இருக்கிறது. அரசு என்பது ஒரு சமுதாய அமைப்பு ஆகாது. சமுதாயத்தின் குறிக்கோள்களோடு ஒப்பிடும்போது, அரசினுடைய நோக்கங்கள் வரம்புக்கு உட்பட்டவையே. இன்னொரு குறிப்பிடத் தக்க இயல்பு என்னவெனில், அரசுக்கு இறைமை அதிகாரம் இருக்கிறது, சமுதாயத்துக்கு அவ்வதிகாரம் கிடையாது என்பதே. நமது அயல்நாட்டு உறவுகளெல்லாம் அரசினாலேயே கட்டுப்படுத்தப்படுகின்றன. வேறு பல நோக்கங்களோடும் சமுதாயம் தொடர்பு உடையது. சமுதாயம் என்பது அரசு தோன்றுதற்கு முற்பட்ட காலத்திலேயே இருந்துவந்தது என்பதும், அரசைவிட சமுதாயம் அளவில் பெரியது என்பதும் உண்மையே ஆகும். அரசினுடைய முக்கியமான கூறுகளுள் ஒன்று நிலப்பகுதி. ஆனால் சமுதாயத்துக்கு ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியினுள் இருப்பது என்ற வரம்பு கிடையாது. அரசுக்கு, அரசாங்கம் என்ற ஒரு அமைப்பு தேவைப்படுகிறது. இந்த அமைப்பு அரசுக்கு மிகவும் இன்றியமையாத ஒன்று ஆகும். இறுதியாக சமுதாயத்தினுள், அரசு உட்பட எல்லாம் அடங்கும்.

அரசும் அரசாங்கமும்

அரசு, அரசாங்கம் என்ற சொற்கள் ஒன்று உணர்த்தும் பொருளுக்கு மற்றது கையாளப்படும் வகையில் தவறாகக்

[1] லாஸ்க்கி : கோட்பாட்டிலும், நடைமுறையிலும் அரசு, பக். 20
[2] மாக் ஐவர் : தற்கால அரசு.
[3] ஜி. டி. எச். கோல் : சமுதாயக் கோட்பாடு.

கையாளப்படுகின்றன. இந்தநிலை சில அரசியல் சிந்தனையாளர்களிடத்திலும் காணப்படுகின்றது. ஜி.டி.எச். கோல் என்பவர், "ஒரு சமுதாயத்தில் அரசியல் இருப்பதுதான் அரசு," என்று கூறுகிறார்.[1] ஆனால் அரசு அரசாங்கத்தினின்றும் வேறானது என்பது யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட செய்தி ஆகும். 'எந்த இயந்திரத்தின் மூலமாக அரசினுடைய நோக்கம் வகுக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்றதோ, அதையே, அரசினுடைய அந்த அமைப்பையே அரசாங்கம் என்ற சொல் உணர்த்துகிறது.'[2] அரசாங்கம் என்பது அரசினுடைய ஒரு செயலாள்தான்; அது கட்டுப்படுத்தும் அதிகாரம், கீழ்ப்படிதல் என்ற அடிப்படைக் கருத்திலேயே ஆதாரமாக அமைந்திருக்கிறது. அது அதிகாரத்தையும், அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டிருத்தலையும் உணர்த்துகிறது.

'மக்களுடைய அல்லது அரசினுடைய ஒட்டுமொத்தமான விருப்பத்துக்கு வடிவம் கொடுத்து, வெளிப்படுத்தி, நிறைவேற்றி வைக்கின்ற செயலாள் அல்லது இயந்திரம்தான் அரசாங்கம் ஆகும்,'[3] என்று கார்னர் என்னும் ஆசிரியர் கூறுகிறார். அரசாங்கம் என்பது அரசினுடைய பல கூறுகளில் ஒன்றுதான். அரசுக்கும் அரசாங்கத்துக்கும் இடையேயுள்ள சிறப்பான வேறுபாடு எது என்றால், முற்கூறப்பட்டதற்கு இறைமை அதிகாரம் உண்டு. பிற்கூறப்பட்டதற்கு அது கிடையாது என்பதாம். அரசாங்கம் மாறலாம், அடிக்கடி மாறலாம்; ஆனால் அரசு நிலையானது. எல்லா அரசுகளும், முக்கியமான இயல்புகளைப் பொறுத்தவரை ஒரே மாதிரியாக இருக்கின்றன; ஆனால் அரசாங்கம் அவ்வாறு இல்லை. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நிலப்பரப்பில் வரம்பு கிடையாது. ஆனால் ஒரு குறிப்பிட்ட அரசுக்கு ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பு உண்டு. அரசு என்பது கருத்தளவில் இருக்கிற ஒரு பொருள் ஆகும். ஆனால் அரசாங்கம் என்பது பருப்பொருளாக அமைந்துள்ள ஒரு நிறுவனம் ஆகும். ஓர் அரசிலே வாழும் எல்லா மக்களும் அவ்வரசின் உறுப்பினர்களே ஆவர். ஆனால் அவர்களெல்லாரும் அரசாங்கத்தின் உறுப்பினர்கள் ஆகமாட்டார்.

அரசும் தேசமும்

அரசு, தேசம் (Nation) என்ற இரு சொற்களும் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை. அரசு (State) என்றசொல் 'ஸ்டேட்டஸ்' (நிலை) என்ற சொல்லிலிருந்து தோன்றுகிறது. தேசம் என்பது

1 ஜி. டி. எச். கோல் : சுய ஆட்சியும் தொழிலும், பக். 119
2 டபிள்யு. டபிள்யு. வில்லோபி : அரசின் இயல்பு, பக். 8
3 கார்னர் : அரசியலென்னும் அறிவியலும் அரசாங்கமும், பக். 93

ஆங்கிலத்தில் பிறப்பு அல்லது இனம் என்பதை உணர்த்தும் 'நேஷியோ' (Natio) என்ற இலத்தீன் சொல்லிலிருந்து தோன்றியதாகும். தேசம் (Nation) என்ற சொல்லுக்கு விரிவான பொருள் இருக்கிறது. அதில் அரசு என்பதும் தேசிய இனம் என்பதும் அடங்கியுள்ளன. 'அரசின் ஆதாரமாக தேசம் என்பது இருக்கிறது,' என்று பேராசிரியர் க்ரீன் என்பவர் கூறுகிறுர்.

தேசம் : தேசம் என்ற சொல் 'நேஷியோ' என்ற இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து தோன்றியது; இதற்கு ஆங்கிலத்தில் பிறப்பு அல்லது இனம் என்ற பொருள் இருக்கிறது: 'தேசம் என்பது ஒரு பொதுவான இனத்திலிருந்து தோன்றிய மக்களைக் குறிப்பிடுவதாகும்,' என்று பிரைஸ் பிரபு கூறுகிறுர். கிளார்ட்டன் என்றஆசிரியருடையகருத்தின்படி, 'ஒரு பொதுவானமொழியைப் பேசி, பொதுவான வரலாற்று மரபுகளைப் பின்பற்றுகிற மக்கள் கூட்டம் எதுவும் தேசம் (நேஷன்)' என்று கூறப்படும்.[1] 'நிலத் தொடர்பு உடைய ஒருபகுதியில் வாழும் ஓரினத்தைச் சேர்ந்த மக்களே தேசம் ஆவர்,' என்று பர்கஸ் என்பவர் தேசத்துக்கு இலக்கணம் கூறுகிறுர்.[2] 'ஒரு பொது மொழியும், இலக்கியமும், ஓர் பொதுவான வழக்கமும், சரி; தவறு என்பவை பற்றிப் பொதுவான உணர்வும் உடைய ஒரு மக்கட் கூட்டத்தையே இன ஒற்றுமை உணர்வு உடையது' என்று கூறுவர். 'ஒரு சுதந்திர மான அரசியல் சமுதாயமாகவோ, அல்லது சுதந்திரம் அடைதல் வேண்டும் என்ற விருப்பத்தோடேயோ அமைப்புடன் இருக்கின்ற ஒரு மக்கள் தொகுதியே அல்லது தேசிய இனமே, தேசம் எனப் படும்' என்று பிரைஸ் பிரபு கூறுகிறுர்,[3] ஆர். என். கில்கிறைஸட் என்ற ஆசிரியருடைய கருத்திலே; 'தேசிய இனமும், அரசும் சேர்ந்த ஒன்று என்ற பொருளை தேசம் என்பது காட்டுகிறது.[4]

அரசு என்பது ஒரு பருப்பொருளான அமைப்பு ஆகும்; தேசம் கருத்தினளவிலான ஒரு பொருள் ஆகும். மேலே கூறியவாறு அரசு என்பதில் நான்கு கூறுகள் அடங்கியுள்ளன. இவ்வகையில் பார்க்கும்போது தேசம் என்பது அரசு என்பதைவிட விரிந்த பொருளையுடையது. தேசம்என்பது மக்களுடைய இனப்பண்புகளோடு தொடர்பு உடையது. ஆனுல் ஓர் அரசில் பல வேறுபட்ட இன மக்கட்குழுக்களை நாம் காணலாம். தேசிய உணர்ச்சிகள்

[1] பிரைஸ் பிரபு : தென் அமெரிக்கா, பக். 424
[2] பர்கஸ் : அரசியல் அறிவியலும், அரசியலமைப்புச் சட்டமும், வால்யூம்1, பக். 1
[3] பிரைஸ் : தென்னுப்பிரிக்காவைப்பற்றிய எண்ணங்கள், பக். 33
[4] ஆர். என். கில்கிறைஸ்ட்: அரசியல் விஞ்ஞானத்தின் விதிகள், பக். 25-26

தேசத்துக்கு மிகவும் இன்றியமையாமல் வேண்டப்படுகின்றன. இவ்வுணர்ச்சிகள் ஓர் அரசுக்குத் தேவைப்படுவது இல்லை.

மேலே கூறப்பட்ட இலக்கணங்களிலிருந்து, ஒரு தேசம் என்பது பின்வருவனவற்றைக் குறிப்பிடுகிறதென்று நாம் அறிகிறோம்: ஒரே இனத்தைச் சேர்ந்து, ஒரு குறிப்பிட்ட நிலத்தில் வாழ்ந்து, ஒரே மொழியினைப் பேசி, ஒரே சமயநெறியைக் கைக் கொண்டு, ஒரே வரலாறும், மரபும் உடைய ஒரு மக்கட் கூட்டமே தேசம் ஆகும்.

தேசிய இனம் (Nationality)

தேசிய இனம் என்ற சொல்லும் பொதுவான பிறப்பு அல்லது இனம் என்ற பொருளை உணர்த்துகிறது. ஆனால் அண்மைக் காலத்தில் இப்பொருளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. 'ஒரு அரசுக்குப் பற்றுறுதி அல்லது விசுவாசத்தோடு இருத்தல்வேண்டும் என்ற கட்டுப்பாட்டில் இருப்பவருடைய நிலைக்குத்தான் தேசிய இனம்' என்ற பெயர் இக்காலத்தில் கூறப்படுகிறது. ஜே. எஸ். மில் என்னும் ஆசிரியர், 'ஒரு குறிப்பிட்ட மக்கட் பிரிவினர் தமக்குள் பொதுவான பரிவு உணர்ச்சிகளின் மூலமாக இணைக்கப்பட்டு, அவர்களுக்கு மற்றக் கூட்டங்களுடன் அத்தகைய பரிவு உணர்ச்சி இல்லையாயின், அவர்கள் ஒரு தேசிய இனம் ஆவார்' என்று கூறுகிறார்.[1]

தேசிய இனம் என்பதை ஒருஆன்மிக உணர்வாகக்கருதலாம். இந்த உணர்வு மக்களிடையே ஒற்றுமையை உண்டாக்குகிறது. இனம், வாழும் இடம், வரலாறு, பண்பாடு, மொழி, சமய நெறி, கருத்துக்கள், அரசியல் நிறுவனங்கள் ஆகியவை எல்லாம் தேசிய இனத்தின் உறுப்புக்களே ஆகும். இந்தக் கூறுகளெல்லாம் தேசிய இனம் என்ற உணர்வைத் தோற்றுவிக்கின்றன.

தேசிய இனம் என்பதும் தேசியம் என்பதும் பொதுவாகக் குழப்பமான பொருளில் கையாளப்படுகின்றன. தேசியம் (Nationalism) என்ற சொல் தேசிய இன உணர்வைக் குறிப்பிடுதற்காகப் பல தடவைகளில் கையாளப்படுகிறது. ஆனால் உண்மையில், தேசிய இனங்கள் அரசியல் கூறுகளாக மாறுதல் பெறும் முறையையே தேசியம் என்ற சொல் உணர்த்துகிறது.

அனைத்துலகத் தேசியம் (Internationalism)

அனைத்துலகத் தேசியம் என்பது தேசியத்தினின்றும் வேறானது. அனைத்துலகத் தேசியத்தோடுஒப்பிடுகையில் தேசியம்

[1] ஜே. எஸ். மில்: பிரதிநிதித்துவ அரசாங்கம், இயல் 16.

என்பது குறுகிய பொருளை உணர்த்துவதாகும். அனைத்துலகத் தேசியம் என்பது ஒரு சகோதர உணர்வை குறிப்பிடுகிறது. அது அமைதியான ஒத்துழைப்பு, அமைதியான உடன்வாழ்வு ஆகியவைகளைத் தோற்றுவிக்கும் பொருட்டுக் கையாளப்படுகிறது. 'உனது, எனது என்ற கருத்துக்கள் குறுகிய மனப்பான்மை உடைய மக்களிடத்தே காணப்படுகிறது; பரந்த மனப்பான்மை உடைய மக்கள் உலகம் முழுவதையும் தமது குடும்பமாகக் கருதுகின்றனர்,' என்று பஞ்ச தந்திரம் கூறுகிறது.

இன்றைய உலகத்தில் ஒன்றை ஒன்று சார்ந்திருத்தல் என்ற பண்பாட்டை உடையது. எந்த ஒரு அரசும், மற்றவற்றினின்றும் முழுவதும் தனியாகப் பிரிந்து இருத்தல் இயலாது. ஒதுங்கி வாழ்தல் என்பது இக்காலத்துக்குப் பொருத்தம் உடையதுஅன்று. ஒற்றுமைக்கும், நல்லிணக்கத்துக்கும் தடைகளாக சாதி, சமயம், நிறம், வாழும் நிலம் முதலியவற்றின் மீதான வேறுபாடுகள் கொள்ளப்படுவதில்லை. இக்கால மக்கள், வேறெந்த பிணைப்புக்களையும் விட, பொருளாதாரப் பிணைப்புகளின் மூலமாகவே ஒன்றுபடுத்தப்பட்டுள்ளனர். 'உலகம் என்பது ஒன்று, பிரிக்க இயலாதது' என்று பேராசிரியர் லாஸ்க்கி கூறுகிறார்.

அரசின் அலுவல்கள்

'அரசின் அலுவலானது, ஓர் காவலருடைய அலுவல் மட்டும் அன்று, அதாவது தீங்கு செய்வோரைச் சிறைப்படுத்தலும், ஒப்பந்தங்களை இரக்கமின்றிச் செயல்படுத்துதலும் மட்டும் அரசினுடைய அலுவல் அன்று, மக்களுடைய அறிவு, ஒழுக்க இயல்புகளிலே இருக்கக்கூடிய சிறந்த ஆற்றல்களைப் பயன்படுத்துதற்குரிய சம வாய்ப்புக்களை யாவரும் பெறும்படி செய்தலும் அரசின் அலுவல் ஆகும்,' என்று டி. எச். கிரீன் என்ற ஆசிரியர் குறிப்பிடுகிறார். 'மனித செயல்வகை தீவிர நிலைக்குச் செல்லாமல் ஒரு நிதானத்துக்குள் அல்லது கட்டுப்பாட்டிற்குள் வைப்பதற்கு வழி வகுப்பது தான் அரசு ஆகும். மனிதன் தனது வாழ்க்கையைக் கட்டுப்படுத்தி ஒழுங்கு செய்துகொள்ளுவதற்கு ஏற்ற விதிகளை அரசு செய்கிறது,' என்று லாஸ்க்கி என்ற ஆசிரியர் கூறுகிறார்.[1]

அரசினுடைய அலுவல்களை அல்லது நோக்கங்களைப் பற்றிப் பல கருத்துக்கள் இருக்கின்றன. அரசற்ற நிலைக் கொள்கையாளரைப் போல சிலர் (Anarchists), அரசை ஒரு தேவையற்ற தீங்காகக் கருதுகின்றனர். அரிஸ்டாட்டிலினுடைய கருத்து

[1] லாஸ்க்கி: அரசியலுக்கு ஓர் அறிமுகம், பக். 15

இதற்கு நேர்மாறானது ஆகும். நல்வாழ்வினை அளிக்கும் பொருட்டே அரசு என்பது தோன்றி, அதற்காகவே அது தொடர்ந்து இருந்து வருகிறது என்று அவர் கூறுகிறார். மனிதருடைய நலமே அரசினுடைய குறிக்கோள் என்று ஜான்லாக் என்பவர் கருதுகிறார், மக்களுடைய நலனே அரசின் நோக்கம் என்று பிளன்ட்ச்லியும் மற்றும் சிலரும் கூறுகின்றனர்.

ஓர் காவலருடைய அலுவல்களை மட்டும்தான் அரசு செய்தல் வேண்டும் என்ற ஓர் கருத்தும் இருக்கிறது. இது தனியார் உரிமைக் கோட்பாட்டாளருடைய கருத்து ஆகும். அவர்களுடைய கருத்துப்படி அரசு மூன்று அலுவல்களை மட்டுமே செய்தல் வேண்டும். ஒன்று, அது மக்களை அயல்நாட்டுத் தாக்குதலினின்றும் காப்பாற்றவேண்டும். இரண்டு, அது தனது எல்லைகளுக்குள் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்தல் வேண்டும். மூன்று, அது சட்டவகையான ஒப்பந்தங்களை நிறைவேற்றுதல் வேண்டும். இவ்வகையில் பார்க்கும்போது, அரசின் அலுவல்கள் தெளிவாக வரம்பு செய்யப்பட்டிருக்கின்றன. தனி ஆட்களுடைய நலனில் அரசு தலையிடுதல் கூடாது என்பது தனியார் உரிமைக் கோட்பாட்டாளருடைய கருத்து ஆகும்.

ஆனால் இன்று நல அரசு என்ற கோட்பாடு முக்கியத்துவம், சிறப்பும் பெற்று வருகிறது. நல அரசுக் கோட்பாட்டில் காவலர் அலுவல், பொருளாதார அலுவல், ஒழுங்கு செய்யும் அலுவல், நலனுக்குகந்த அலுவல் ஆகியவை எல்லாம் அடங்கியுள்ளன. அது தனியார் உரிமைக் கோட்பாடும், பொதுவுடைமைக் கோட்பாடும் இணைந்த ஒன்று ஆகும். தற்கால அரசு சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்துதல், பாதுகாப்பு, நீதி முதலியவைகளுக்குப் பொறுப்பு ஏற்றுக்கொண்டுள்ளது; அது சமுதாயக் கேடுகளாகிய அறியாமை, வறுமை, நோய் முதலியவற்றை ஒழிக்கும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டுள்ளது. தற்கால அரசு வாணிபம் முதலிய துறைகளில் ஈடுபட்டுள்ளதையும் நாம் காண்கிறோம். விதிக்கப்படும் வரிகளும், கட்டுப்பாடுகளும் பொது நலனுக்குகந்தவையாகக் கொள்ளப்படுகின்றன. குடும்ப வாழ்க்கையும் அரசினுடைய அதிகார எல்லையினுள் வருகிறது. இதிலிருந்து, அரசின் அலுவல்கள் பெருமளவுக்குப் பெருகியுள்ளன என்பது தெளிவு.

மேற்கோள் நூல்கள்

(1) பார்க்கர், எர்னஸ்ட் : அரசைப் பற்றிய சிந்தனைகள்.

(2) எச்.ஜே. லாஸ்க்கி : அரசியலின் ஓர் இலக்கணம்.

(3) ஏ. டி. லிண்ட்சே: தற்காலக் குடியாட்சி அரசு.

(4) ஆர். எம். மாக் ஐவர்: அரசாங்கம் என்ற சிலந்திவலை, இக்கால அரசு.

கேள்விகள்

1. அரசினுடைய இயல்புகள் யாவை?

2. அரசுக்கு இறைமை வேண்டும் என்ற பொருத்தத்தை விளக்குக.

3. அரசு, சமுதாயம், அரசாங்கம், தேசிய இனம் என்ற சொற்களை விளக்குக.

4. ஓர் அரசின் நலத்துறை அலுவல்கள் யாவை?

இயல் 6

அரசின் தோற்றம்

அரசின் தோற்றம் — பல கோட்பாடுகள் — தெய்வீக அரசுரிமைக் கோட்பாடு — வல்லந்தக் கோட்பாடு—தந்தை வழி, தாய் வழிக் கோட்பாடுகள்—சமுதாய ஒப்பந்தக் கோட்பாடு — வரலாற்றுக் கோட்பாடு அல்லது பரிணமக் கோட்பாடு.

ஒவ்வொன்றுக்கும் தொடக்கம் உண்டு. இந்த விதி அரசுக்கும் பொருந்தும். ஆயினும் அரசின் தோற்றம் என்பது புரியாத மறை பொருளாகப் புதைந்துள்ளது. எப்பொழுது அரசு தோன்றிற்று என்று சான்று காட்டுதற்கான செய்தி ஏதும் இல்லை. அரசின் தோற்றத்தை விளக்குவதற்காகப் பல கோட்பாடுகள் தோன்றியுள்ளன; அவைகளுள் ஒவ்வொன்றும் மற்றவற்றிலிருந்து வேறுபட்டிருக்கிறது. தெய்வீகத் தோற்றக் கோட்பாடு, தாய்வழி, தந்தைவழிக் கோட்பாடுகள், சமுதாய ஒப்பந்தக் கோட்பாடு, வரலாற்று அல்லது பரிணமக் கோட்பாடு ஆகியவை அரசின் தோற்றத்தை விளக்குவதற்காகத் தோன்றிய கோட்பாடுகள் ஆகும்.

1. தெய்வீகத் தோற்றக் கோட்பாடு

இந்தக் கோட்பாடு, அரசு இறைவனால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு தெய்வீக நிறுவனமாகும் என்று கூறுகிறது. இறைவன் அரசை தாமே நேரடியாகவோ, தமது பிரதிநிதியாகிய அரசரின் மூலமாகவோ ஆளுகிறார். அரசருக்குக் கீழ்படிந்து நடப்பது மக்களுடைய கடமை. அரசனுக்குக் கீழ்ப்படியாமை, இறைவனுக்குக் கீழ்ப்படியாமையே ஆகும். அரசருடைய செயல்களை எவரும் மறுத்துரைத்தல் கூடாது. அரசரைத் தட்டிக் கேட்பதற்கு இறைவரைத் தவிர வேறெந்த அதிகாரியும் இல்லை. அரசரையும், அவருடைய அதிகாரத்தையும் எதிர்த்தல் குற்றம் அல்லது பாவம் ஆகும். முதலாம் ஜேம்ஸ் அரசர், "அரசர்கள் எனப்படுவோர் இந்நிலவுலகில் உயிருடனுள்ள கடவுளின் சிலைகளே ஆவர்" என்று குறிப்பிட்டார். இந்தக் கோட்பாடே மிகவும் பழமையானது. இதற்கு ஆதரவாளர்கள் இந்தியா, கிரீஸ், ரோம் முதலிய நாடுகளில் இருந்தனர். பழங்காலத்தில் யூதர்களும்,

கிறிஸ்தவர்களும் இக்கோட்பாட்டில் நம்பிக்கை வைத்திருந்தனர். இக்கோட்பாட்டை ஆதரித்தவருள் முன்னணியில் இருந்தவர் இங்கிலாந்தின் அரசராகிய முதலாம் ஜேம்ஸ் ஆவார்.

அரசர்களுடைய முழுமையான, வரம்பற்ற அதிகாரங்களை நியாயமானவை எனக் காட்டுவதற்காக இந்தக் கோட்பாடு பெரும்பாலும் கையாளப்பட்டது. இது, இடைக்காலத்தில் கிறிஸ்தவத் திருச்சபையின் தலைமையான அதிகாரத்தை யாவரும் ஆதரித்தற்காகவும் கையாளப்பட்டது. இந்தக் கோட்பாட்டிற்கு வரலாற்று வகையிலான சான்று ஏதும் கிடையாது.

2. வல்லந்தக் கோட்பாடு

மெலியோர் மீது வலியவர் தமது வலிமையை அல்லது ஆற்றலைக் கையாண்டதின் விளைவாக அரசு தோன்றிற்று என்பதே இந்தக் கோட்பாடு தரும் விளக்கம் ஆகும். 'வரலாற்று வகையாகப் பார்க்கும்போது இக்காலத்திய எல்லா அரசியற் சமுதாயங்களுமே வெற்றியான போர்முறைகளின் விளைவாகவே தோன்றியுள்ளன என்பதைச் சான்றுடன் காட்டுதலில் இடர்பாடு ஏதும் இல்லை' என்று ஜெங்க்ஸ் என்ற ஆசிரியர் கூறுகிறார்.[1] இந்தத் தொடரில் உள்ள கருத்து, 'போரின் மூலமாகவே அரசன் தோன்றினான்,' என்பதாகும். இதே கருத்தை ஆசிரியர் ஹ்யூம் என்பவரும் கூறுகிறார். ஓப்பன் ஹீம், ஜெங்க்ஸ், பெர்ன் ஹார்டி, டிரியட்ஸ்க் முதலியோர் வல்லந்தக் கோட்பாட்டின் ஆதரவாளர்கள் ஆவர். பல அரசர்களும் இக்கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

அரசின் தோற்றத்துக்குக் காரணமான பல கூறுகளுள்ளே, வலிமையும் அல்லது ஆற்றலும் ஒரு கூறாக இருந்திருத்தல்கூடும் என்பது உண்மையே. ஆனால் அரசினைத் தோற்றுவித்த ஒரே கூறு வல்லந்தம்தான் என்று கூறுவதை ஒப்புக்கொள்ள இயலாது. மேலும் அரசின் விரிவான வளர்ச்சிக்கும் வல்லந்தம் என்ற கூறு ஒன்றுதான் காரணமாகும் என்று கூறுதலும் தவறே ஆகும். வல்லந்தத்தைத் தவிர, அரசின் வளர்ச்சிக்கு உதவிசெய்த வேறு கூறுகளும் இருக்கின்றன. இதேபோலவே, அரசுக்கு வல்லந்தம் ஒன்றுதான் ஆதாரமாக அமைந்திருக்கவில்லை. அரசு என்பது வல்லந்தத்தினால் காப்பாற்றப்படவும் இல்லை. 'தக்க, அல்லது தகுதியான ஒன்றுதான் நீடித்து வாழும்' என்பது இந்நாளில் நியாயமானது அன்று.

[1] ஜெங்க்ஸ்: அரசியலின் வரலாறு, பக். 71.

3. தந்தைவழி, தாய்வழிக் கோட்பாடுகள்

அரசு என்பது தந்தைவழிக் குடும்பத்தினின்றும், அதாவது தந்தையைத் தலைவனாக உடைய குடும்பத்தினின்றும் தோன்றிற்று என்று தந்தைவழிக் கோட்பாடு விளக்குகிறது. தந்தைவழிக் குடும்பம் ஒரு வகுப்பாக விரிந்து வளர்ந்தது. வகுப்பு என்பது உறவுக்குழுவாக (tribe) ஆகி, உறவுக்குழு ஓர் அரசாக விரிவடைந்தது. உறவு முறையே அல்லது இரத்தத் தொடர்பே குடும்பத்தைக் குடும்பத் தொகுதியுடனும் (clan) குடும்பத் தொகுதியை உறவுக்குழுவுடனும் இணைத்தது. லீகாக், 'முதலில் ஓர் வீட்டுக்குடி, பின்னர் ஓர் தந்தைவழிக் குடும்பம், பின்னர் ஓர் உறவுக்குழு அல்லது உறவின் மூலமாகத் தோன்றிய மக்கள், இறுதியில் தேசிய இனம் — இவ்வாறு இந்த அடிப்படையில் சமுதாய வரிசைகள் தோன்றுகின்றன' என்று கூறுகிறார். அரிஸ்ட்டாட்டிலும் இதில் நம்பிக்கை உடையவரே. அவர் அரசு என்பது குடும்பத்தின் ஓர் விரிவான வளர்ச்சியே என்று கூறினார்.[1]

சர் ஹென்றி மெயின் என்பவரே இக்கோட்பாட்டின் சிறந்த ஆதரவாளர் ஆவார். 'அடிப்படையான குழு குடும்பம் ஆகும். இதிலுள்ளவர்கள் தலைமையான ஆண்வாரிசுக்குக்கட்டுப்பட்டவர்கள். குடும்பங்களின் தொகுதியே வீடுகள் அல்லது ஜென்ஸ் ஆக அமைகின்றது. வீடுகளின் தொகுதியே உறவுக்குழு என அமைகிறது. உறவுக் குழுக்களின் தொகுதியே அரசாக அமைகிறது' என்று மெயின் கூறுகிறார். இக்கோட்பாட்டுக்கு ஆதாரமாக மெயின் யூதர்களின் சமய நூல்களிலிருந்தும், கிரீஸ், ரோம், இந்தியா முதலிய நாடுகளிலிருந்தும் எடுத்துக்காட்டுகளைக் கூறினார்.

தாய்வழிக் கோட்பாட்டிற்குச் சிறந்த ஆதாரவாளர்கள் மக்லனன், மார்கன், ஜெங்க்ஸ் முதலியோர் ஆவர். தந்தை வழிக் குடும்பமே முதன்முதலில் இருந்தது என்ற கருத்தை இவ்வாசிரியர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. முதலில் இருந்த சமுதாயத்தில் யாவருக்கும் உரிய ஓர் ஆண் தலைவர் இருந்தார் என்பதை இவர்கள் மறுக்கின்றனர். அவர்களுடைய கருத்தின்படி உறவு முறை என்பது தாயின் மூலமாகவேதான் கூறுதல் இயலும். சமுதாயத்திலுள்ள கூறு, ஓர் கூட்டம் (horde) அல்லது அடையாளம் உடைய கூட்டம் (totem) ஆகும். ஓர் கணவனுக்கு ஓர் மனைவி என்ற முறையோ, ஓர் கணவனுக்குப் பல மனைவியர் என்ற முறையோ பண்டைய சமுதாயத்தில் பின்பற்றப்படவில்லை.

[1] அரிஸ்ட்டாட்டில் : அரசியல், பக். 1, 2

அதில் ஓர் மனைவிக்குப் பல கணவர் முறைதான் இருந்தது. அத்தகைய அமைப்பில் குடும்பம் என்ற கூறு இருக்கவில்லை; அதற்கு மாறாக 'கூட்டம்' அல்லது 'தொகுதி' (pack) என்பதுதான் இருந்தது. அந்தச் சமுதாயத்திலே உறவுமுறை பெண்ணின் வழியாகத்தான் நிறுவப்பட்டது. மேலும், இதில் மக்கள் தொகுதி என்பது, 'ஓர் இயற்கையான, வழிவழியான முறையில், ஒரே வழியில் அமைந்த கூறாக இருந்தது; இதை ஒரே வழியிலமைந்த கூறு என்றழைப்பதற்குக் காரணம், இந்த அமைப்பில் எல்லாக் குழந்தைகளும் தம் தாயின் வகுப்பைத்தான் சேர்ந்தவர்களாக இருந்தனர்; அவர்களுக்குத் தம் தந்தையின் வகுப்போடு எந்தத் தொடர்பும் இல்லை.'[1] தாய்வழிச் சமுதாயத்தில் சில குறிப்பிடத்தக்க இயல்புகள் இருந்தன. மண உறவுகளெல்லாம் அதில் நிலையாக இல்லாமல் சில காலத்துக்கு மட்டுமே இருந்தன. பெண்ணே அதிகாரத்தைக் கையாண்டனள்; பெண்களே உடைமைக்கும் அதிகாரத்துக்கும் தாய் உரிமை உடையவராயினர். ஜே. ஜே. பெக்கோபென் என்பவர், 'உண்மையில் பெண்களே அரசியல் சிறப்பான தலைமையான பங்கு எடுத்துச் செயலாற்றினர்'[2] என்று கூறுகிறார். தாய்வழி அதிகாரம் நிலைத்திருக்க இயலாத நிலைதோன்றியபொழுது, ஆண்கள் தந்தைவழி ஆட்சியைக் கொண்டுவந்தனர். சர் ஹென்றி மெயினின் கருத்துப்படி, தாய் வழிக்கோட்பாடானது, 'சிறிய குழுவை (அதாவது குடும்பத்தை) பெரியகுழுவிலிருந்து (அதாவது உறவுடைய சமுதாயத்திலிருந்து) வருவிக்கிறது; பெரிய குழுவை சிறிய குழுவிலிருந்து வருவிக்கவில்லை.'[3] வேறுவகையாகக் கூறினால், மிகப்பழமையான, தொடக்கத்திலிருந்த குழு, உறவுக் குழு (tribe) என்பதுதான், அதுவே பல குடும்பத் தொகுதிகளாகவும், ஒவ்வொரு குடும்பத் தொகுதியும் ஆண்களின் அதிகாரத்துக்கு உட்பட்ட குடும்பங்களாகவும் (அல்லது வீடுகளாகவும்) பிரிகிறது. இவற்றின் விரிவான வடிவமே அரசு என்பதாகத் தோன்றுகிறது.

இந்த இரு கோட்பாடுகளுமே பொருத்தமாக அரசின் தோற்றத்தை விளக்கவில்லை. தாய்வழி, தந்தைவழி அமைப்புக்கள் சில பண்டைக்கால சமுதாயங்களில் பரவியிருத்தல் கூடும். ஆனால் அரசின் தோற்றமானது மேற்படி அமைப்புக்களின் மூலமாகத் தான் நடைபெற்றது என்று அநுமானித்தல் தவறு ஆகும். இந்தக் கோட்பாடுகளே எல்லா இடங்களிலும் பழக்கத்தில் இருந்தன என்று தீர்மானிப்பதற்கு சரியான சான்று எதுவும் இல்லை.

[1] டன்னிங்: வால்யூம் IV, அண்மைக் காலங்கள், பக். 435
[2] மேற்கூறிய ஆதாரம்.
[3] மெயின் : பண்டைக்காலச் சட்டமும், வழக்கமும், பக். 220

4. சமுதாய ஒப்பந்தக் கோட்பாடு

அரசின் தோற்றத்தை விளக்குவதற்காக எழுந்த முக்கிய கோட்பாடுகளுள் சமுதாய ஒப்பந்தக் கோட்பாடு ஒன்று ஆகும். இந்தக் கோட்பாடு தெய்வீகத் தோற்றக் கோட்பாட்டுக்கு எதிர்ப்பாகத் தோன்றியது. அது பதினெட்டாம் நூற்றுண்டில் மிக்க மதிப்பைப் பெற்றது.

சமுதாய ஒப்பந்தக்கோட்பாடு, மனிதரின் தொடக்க நிலையை 'இயற்கை நிலை' (state of nature) என்பதாகப் படம் பிடித்துக் காட்டிற்று. இயற்கை நிலைச் சூழல்களிலிருந்து மனிதர் தப்பும் பொருட்டு, ஒரு சமுதாய ஒப்பந்தத்தைச் செய்தனர். ஒரு சில ஆசிரியர்களுடைய கருத்திலே சமுதாய ஒப்பந்தம் என்பது சமுதாயம் அமைவதற்கு முன்னரே செய்யப்பட்டது; வேறு சிலருடைய கருத்திலே அது அரசு தோன்றுதற்கு முற்பட்ட காலத்தில் செய்யப்பட்டது. ஆனல் இக்கோட்பாட்டை எழுதிய எல்லா ஆசிரியர்களும், அரசாங்கம் ஏற்படுத்தப்படுதற்கு முற்பட்ட காலத்தில்தான் இயற்கை நிலை இருந்தது என்ற ஒரு கருத்தில் உடன்பாடு கொள்ளுகின்றனர். இயற்கை நிலை என்பதில் ஒழுங்காக அமைக்கப்பட்ட வாழ்க்கைஎன்பது கிடையாது. அதில் ஒவ்வொருவரும் தத்தம் விருப்பத்தின் வழியே வாழ்ந்தனர். மனிதரைக் கட்டுப்படுத்தும் பொருட்டு மனிதரால் இயற்றப்பட்ட சட்டங்கள் எதுவும் தோன்றவில்லை. இயற்கை நிலையில் வாழ்ந்த மனிதருக்குத் தெரிந்த ஒரே சட்டம் இயற்கையின் சட்டம் என்பது தான். இந்தச் சட்டத்தை விளக்குதற்கோ அல்லது அதன்படி நீதிமன்றத்தில் நீதிவழங்குதற்கோ எவரும் இல்லை. ஆகையால் மக்கள் நிலையில்லாத சூழ்நிலைகளில் வாழ்ந்தனர். இத்தகைய வாழ்விலிருந்து தாம் தப்பித்துச் செல்லுதல் வேண்டுமென்று மக்கள் உணர்ந்தபோது, அவர்கள் தமக்குள் ஓர் பொதுவான ஒப்பந்தத்தின் மூலமாக அல்லது உடன்படிக்கையின் மூலமாகத் தப்பித்துக் கொண்டனர். இத்தகைய ஒப்பந்தத்தின் விளைவாக ஒரு சிவில் சமுதாயம் தோற்றுவிக்கப்பட்டது. சிவில் சமுதாயத்தின் தோற்றமானது அரசின் தோற்றத்துக்கு முற்பட்டே நிகழ்ந்தது.

இதைப் பற்றி எழுதிய ஆசிரியர்களுள், சமுதாய ஒப்பந்தக் கோட்பாட்டுக்குத் தருக்கவகையானவிளக்கம்எழுதிய அறிவியல் நோக்கு உடைய ஆசிரியர் ரிச்சர்ட் ஹூக்கர் என்பவர் ஆவார்.[1]

தாமஸ் ஹாப்ஸ் 1588—1679) : தாமஸ் ஹாப்ஸ் என்பவர் 1651ஆம் ஆண்டு வெளியான 'லெவியாதன்' என்னும் தமது

[1] ரிச்சர்ட் ஹூக்கர்: திருச்சபை அரசியலின் சட்டங்கள்.

நூலில் சமுதாய ஒப்பந்தக் கோட்பாட்டுக்கு விளக்கம் தந்தார். இடர்பாடுகள் நிறைந்த காலமாகிய பியூரிட்டன்களின் புரட்சிக் காலத்தில் ஹாப்ஸ் வாழ்ந்தார்; அப்போதைய இடர்பாடான நிகழ்ச்சிகளைக் கண்டு அவர் மனக்கவலை அடைந்தார். ஹாப்ஸ் ஒரு வலுவான முடியாட்சி ஆதரவாளர்; இவ்வகையில் அவர் தமது கருத்துக்களைத் தமது நூலில் எழுதி வெளியிட்டார். அவர் வரம்பற்ற அல்லது எதேச்சாதிகார முடியாட்சியை ஆதரித்தற்காகச் சமுதாய ஒப்பந்தக் கோட்பாட்டைக் கையாண்டார்.

ஹாப்ஸின் கருத்துப்படி, இயற்கைநிலை என்பது மனிதனின் வாழ்விலே சமுதாய அமைப்பு தோன்றுதற்கு முற்பட்ட காலத்திய நிலையே ஆகும். இயற்கை நிலையிலே மனிதவாழ்க்கை. 'தனிமை நிறைந்தும், வறுமையோடும், வெறுக்கத்தக்கதாகவும், விலங்கியலான முரட்டுத்தன்மை பொருந்தியும், குறுகியதாயும், இருந்தது.'[1] இத்தகைய வாழ்விலிருந்து தப்பித்துக் கொள்ளும் பொருட்டு மக்கள் ஒருவருக்கொருவர் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர். அவ்வொப்பந்தம் பின்வருமாறு அமைந்திருந்தது. ஒவ்வொரு மனிதரும் மற்ற மனிதனிடத்தில், 'என்னைப்போலவே நீவிர் உம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் உமது உரிமையை இந்த ஆளிடத்திலோ, அல்லது இந்த ஆட்கள் கூட்டத்திடமோ ஒப்படைத்து, எல்லாச் செயல்களையும் ஆற்றுதற்கு அதிகாரம் வழங்கும் பட்சத்தில், நான் இந்த ஆளிடத்தில் அல்லது இந்த மக்கள் கூட்டத்தில், என்னை ஆளுதற்கு எனக்கு இருக்கும் உரிமையை ஒப்படைத்துச் செயல்படும் அதிகாரத்தை வழங்குகிறேன்' என்று கூறினர்.[2] இத்தகைய ஒப்பந்தத்தின் விளைவாக, மக்கள் தங்களுடையஅதிகாரங்களை எல்லாம் தமது அரசரிடத்தில் ஒப்படைத்தனர். இந்த ஒப்பந்தத்தில் அரசருக்கு யாதொரு தொடர்பும் கிடையாது. இவ்வகையாக அரசர் ஓர் எதேச்சாதிகாரியாக ஆயினர். இறைமை அதிகாரி அல்லது அரசர் ஒப்பந்தத்தினுல் தோன்றினர். ஒரு தடவை இவ்வொப்பந்தம் செய்யப்பட்ட பின்னர், இதனை அழித்தற்கு யாதொரு வழியும் இல்லை. தற்காப்பு உரிமை என்பதை மட்டிலுமே மக்கள் தம்மிடம் வைத்துக் கொண்டனர். இந்த ஒன்றுதான் ஆளுபவருடைய அதிகாரத்துக்கு உள்ள வரம்பு ஆகும்.

ஹாப்ஸினுல் விளக்கப்பட்டுள்ள சமுதாய ஒப்பந்தக் கோட்பாடானது மிகக்கடுமையான கண்டனத்துக்கு உள்ளாகிஇருக்கிறது. இயற்கைநிலை என்ற ஒன்று இருந்ததாகக் கூறும் ஹாப்ஸினுடைய

[1] ஹாப்ஸ் : லெவியாதன், பகுதி 1 இயல் 13, பக், 64, 65

[2] மேற்கூறிய ஆதாரம்: பக். 89

கருத்துக்கு ஆதரவாக வரலாற்றுச் சான்று இல்லை. மனிதன் இயல்பிலே, ஒரு சமுதாய உயிர் ஆவான்; அவன் ஹாப்ஸ் கூறுவதுபோல், சச்சரவு செய்பவனுகவோ, தன்னலமுடையவனுகவோ இல்லை. ஹாப்ஸ் வரம்பற்ற அதிகாரத்தை ஆதரிக்கிருர். பேராசிரியர் வில்லோபி, 'அரசு, அரசாங்கம் என்ற இரு கருத்துக்களுக்கு இடையே வேறுபடுத்திக் காணுதற்கு முற்றிலும் தவறிய ஒரு நிலையே ஹாப்ஸில் உள்ள முக்கிய குற்றம் ஆகும்' என்று கூறுகிருர்.[1] அரசின் தோற்றத்தை விளக்கும் ஓர் கோட்பாடு என்ற வகையில், ஹாப்ஸின் சமுதாய ஒப்பந்தக் கோட்பாடு தனது குறிக்கோளை எய்தவில்லை.

ஜான் லாக் (1632—1704) : ஜான் லாக் வரையறுக்கப்பட்ட முடியாட்சியின் அல்லது அரசியலமைப்புக்கு உட்பட்ட முடியாட்சியின் ஆதரவாளர் ஆவார். அவருடைய சமுதாய ஒப்பந்தக் கோட்பாடு, 1688ஆம் ஆண்டின் புகழ்மிக்க புரட்சியை நியாயமானது எனக் காட்டுதற்காக வரையப்பட்டது, அது அவருடைய சிவில் அரசாங்கத்தைப் பற்றிய 'இரு கட்டுரைகள்' என்ற நூலில் வெளிவந்தது.

லாக்கின் கருத்துப்படி இயற்கை நிலையானது சமத்துவமும் சுதந்திரமும் நிறைந்த ஒன்று ஆகும். மனிதர் இயற்கையின் சட்டத்துக்கு உட்பட்டவர். மக்கள் இயற்கையின் சட்டத்துக்குக் கீழ்ப்படிந்தனர். ஆனல் இச்சட்டங்களைச் செயல்படுத்துதற்கு அரசாங்கமோ, அல்லது அதை ஒத்த நிறுவனங்களோ இல்லை. அமைதியான சூழ்நிலைகள் 'இழிந்த மனிதருடைய முறைகேடுகளாலும். தீச்செயல்களாலும்' அடிக்கடி நிலைகுலையலாயிற்று. நிறுவப்பட்ட சட்டம் எதுவும் இல்லாத ஒரு நிலையே இச்சீரழிவுக்குக் காரணமாயிற்று; ஓரஞ்சாராத ஓர் நீதிபதி இல்லாமையும், ஒரு திறமான நிர்வாக அதிகாரி இல்லாமையும் இந்நிலைக்குக் காரணமாக இருந்தன. இயற்கை நிலையில் வாழ்க்கையானது, 'அச்சங்களும், தொடர்ச்சியான துன்பங்களும், நிறைந்து இருந்தது. இத்தகைய வாழ்விலிருந்து விடுதலை அடையும் பொருட்டு, மக்கள் ஓர் ஒப்பந்தத்தைச் செய்து அரசைத் தோற்றுவித்தனர்.

இரண்டு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டதாக ஜான் லாக் கூறுகிருர். முதலாவது ஒப்பந்தம் சமுதாய ஒப்பந்தம்; இரண்டாவது அரசாங்க ஒப்பந்தம் ஆகும். முதலாவது ஒப்பந்தத்தின் விளைவாக சிவில் சமுதாயம் அல்லது அரசு தோற்றுவிக்கப்பட்டது; இரண்டாவது ஒப்பந்தத்தின் விளைவாக ஓர் அரசாங்கம் தோன்றுகிறது;

[1] வில்லோபி : அரசின் இயல்பு, பக். 73

அரசாங்க ஒப்பந்தம் சமுதாய ஒப்பந்தத்துக்குக் கீழ்ப்பட்டதே. ஓர் அரசாங்கத்தை மக்கள் தோற்றுவிக்கும்போது அவர்கள் தம்முடைய எல்லா உரிமைகளையும் ஒப்படைத்து விடவில்லை. மக்களுடைய ஒப்புதலின் பேரில்தான் அரசாங்கம் என்பது தோற்றுவிக்கப்பட்டது. அரசாங்கம் மக்களுடைய உயிரைப் பாதுகாக்கத் தவறினால் அதனை நீக்குதற்கு உரிய உரிமையை மக்கள் தம்மிடமே நிறுத்திவைத்துக்கொண்டனர்.

லாக்கினால் தோற்றுவிக்கப்படும் இயற்கை நிலைக்கு ஆதரவாகவும் வரலாற்றுச் சான்று எதுவும் இல்லை. மக்களுடைய உடன்பாடு அல்லது இசைவு ஒன்றே அரசைத் தோற்றுவித்தது என்று கூறுதலும் தவறாகும். 'புரட்சி என்பது எவ்வளவுதான் விரும்பத்தக்கதாக இருந்தாலும், அது சட்டப்படியாக அமைந்தது ஆகாது என்பதை லாக் காணத்தவறினார்.'[1] இறைமை அதிகாரம் பகுக்கப்படக் கூடியது என்றும் லாக் கூறுகிறார். உண்மை அவ்வாறு அன்று.

ஜீன் ஜாக் ரூஸ்ஸோ (*1712—1778*) : புகழ்மிக்க பிரஞ்சுத் தத்துவ சிந்தனையாளராகிய ரூஸ்ஸோ தமது சமுதாய ஒப்பந்தக் கோட்பாட்டை 1762ஆம் ஆண்டில் வெளியான 'சமுதாய ஒப்பந்தம்' என்ற தமது நூலில் எடுத்து விளக்கினார். ரூஸ்ஸோ பிரான்சில் காணப்பட்ட நிலைமைகளைக் கண்டு மிகவும் கவலை அடைந்தார். 'மனிதன் சுதந்திரத்தோடு பிறக்கிறான்; அவன் எவ்விடத்தும் அடிமைத் தளையிலேயே இருக்கிறான்,' என்று ரூஸ்ஸோ கூறினார்.[2] சமுதாயத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளை ரூஸ்ஸோ ஒப்புக்கொள்ளவில்லை. அவர் விடுத்த அழைப்பு, 'யாவரும் இயற்கைக்குத் திரும்புவீர்களாக' என்பதே.

ரூஸ்ஸோ கூறும் இயற்கை நிலை கவிதைக்குரிய இன்பம் நிறைந்த ஒன்று. அப்போது மனிதன் ஓர் 'பெருந்தன்மையான, காட்டுமிராண்டி' ஆக இருந்தான்; 'தொடக்க காலத்திலிருந்த மனிதன் எனது, உனது என்ற கருத்து சிறிதும் அற்றவனாக இருந்தான்; நீதி என்பதைப் பற்றி சரியான கருத்தும் இல்லை............ தீய பண்புகளும் இல்லை; நற்பண்புகளும் இல்லை' (ரூஸ்ஸோ). வேளாண்மைத் தொழில் ஏற்கப்பட்டதும், கவிதைக்குரிய இன்பம் பெறுதற்கு திட்டம் தோன்றிற்று. மனிதன் எனது, உனது என்ற வகையில் எண்ணத் தொடங்கினான். செல்வமும் வறுமையும் தோன்றின; சமத்துவமற்ற நிலையைத் தோற்றுவிக்கும் மற்ற

[1] ஆர். என். கில்கிறைஸ்ட் : அரசியல் நூலின் கோட்பாடுகள், பக். 61

[2] ரூஸ்ஸோ : சமுதாய ஒப்பந்தம், இயல் 1, பக். 100

ஆதாரங்களும் தோன்றின. ரூஸ்ஸோவின் கருத்துப்படி மக்கள் தொகையில் ஏற்பட்ட பெருக்கமும், அறிவு வளர்ச்சியும் அவல நிலையைத் தோற்றுவித்தன. இந்த நிலையிலிருந்து விடுதலை பெறுதற்காகவே, மனிதர் ஒரு ஒப்பந்தத்தின் மூலமாக ஒரு சிவில் சமுதாயத்தை (அல்லது அரசைத்) தோற்றுவித்தனர். இந்த ஒப்பந்தமானது சமுதாய ஒப்பந்தமாகவும், அதே சமயத்தில் அரசாங்க ஒப்பந்தமாகவும் இருந்தது. ஒவ்வொரு தனி ஆளும், தன்னையும், தனது அதிகாரம் முழுவதையும் பொதுவாக, பொது நலன் விருப்பம் (general will) என்பதினுடைய தலைமையான இயக்க அதிகாரத்தின்கீழ் வைத்தார். ஒவ்வொருவரும் மற்றவர்களைச் சார்ந்திருக்கலாயினர். பொது நலன் விருப்பம் என்பதற்கு, 'சமுதாயத்தினுடைய மிகச் சிறந்த நலன்களை விரும்புகின்ற எல்லா குடிமக்களுடைய மிகச் சிறப்பான விருப்பங்கள் சேர்ந்த கலவையே' என்று இலக்கணம் கூறப்பட்டது. அது மாற்றப்படத் தக்கதோ, பிரிக்கப்படத் தக்கதோ அன்று. அது இறைமை உடையது.

ரூஸ்ஸோ கூறும் பொதுநலன் விருப்பம் என்பது தெளிவற்ற ஒரு கருத்து ஆகும். மேலும் பொதுநலன் விருப்பத்தையோ அல்லது இயற்கை நிலையையோ ஆதரித்தற்கு ஒரு வரலாற்றுச் சான்றும் கிடையாது. பொதுநலன் விருப்பத்தைத் தெளிவாக உறுதிபடுத்துதல் என்பதும் செயலுக்கு வரக்கூடிய ஒன்று அன்று. ரூஸ்ஸோவின் கோட்பாடு கடுமையான மறுப்புக்கு உள்ளான போதிலும், அதனுல் சில நன்மைகள் இருக்கின்றன. ரூஸ்ஸோவினுல் விளக்கம் கொடுக்கப்பட்டது யாதெனில், உண்மையில் அது மக்கள் இறைமையே ஆகும். குடியாட்சிக் கருத்து என்ற வித்தை அவரே ஊன்றியவராவார்.

ஹாப்ஸ், லாக், ரூஸ்ஸோ ஆகிய மூவரையும் ஒப்பிடுதல்: ஹாப்ஸின் கருத்துக்களும், லாக்கின் கருத்துக்களும் ரூஸ்ஸோவின் கருத்துக்களை ஓரளவு உருவாக்கியுள்ளன. லாக் பின்பற்றிய வழிவகைகளை, ரூஸ்ஸோ தமது கோட்பாட்டை விளக்க தொடங்கும்போது பின்பற்றினுர்; இறுதியிலே அவர் ஹாப்ஸின் வழிமுறைகளைப் பின்பற்றினுர். மனிதன் இயற்கை நிலையில் இன்பமாக இருந்தனன் என்ற கருத்தில் ரூஸ்ஸோவும், லாக்கும் ஒற்றுமையுடன் காணப்படுகின்றனர். உயிர், உரிமை, உடைமை முதலியவைகளைப் பாதுகாத்தலே சமுதாய ஒப்பந்தத்தின் நோக்கமாகும் என்று ரூஸ்ஸோவும், லாக்கும் கருதுகின்றனர். தனி ஆட்கள் தமது உரிமைகளைச் சமுதாயத்திடம் ஒப்படைத்தனர் என்று இவ்விரு தத்துவ ஆசிரியர்களும் கூறுகையில் அவர்களுக்கிடையே ஒற்றுமை இருத்தலைக் காண்கிறேம்.

இதேபோல் ஹாப்ஸும், ரூஸ்ஸோவும் ஒரேமாதிரியான கருத்துக்களைக் கூறுதலையும் நாம் காண்கிறோம். இவ்விருவருடைய கருத்தின்படி, இயற்கை நிலையிலே மனிதன் ஓர் சுதந்திர ஆளாக இருந்தனன். குழப்பமான நிலையே அரசைத் தோற்றுவிக்க வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்திற்று என்றும் இருவரும் கூறினர். மேலும் இருவர் கருத்தின்படி, மக்கள் தமது உரிமைகள் எல்லாவற்றையுமே ஒப்படைத்து விடுகின்றனர். ஹாப்ஸின் கருத்தின்படி, மக்கள் தமது உரிமைகளை அரசரிடம் ஒப்படைக்கின்றனர்; ரூஸ்ஸோவின் கருத்துபடி, பொதுநல விருப்பத்திடம் மக்கள் தமது உரிமைகளை ஒப்படைக்கின்றனர்.

சமுதாய ஒப்பந்தக் கருத்தை மதிப்பிடுதல்: ஹாப்ஸ், லாக், ரூஸ்ஸோ ஆகியோரால் விளக்கப்பட்ட சமுதாய ஒப்பந்தக்கோட்பாடு அரசின் தோற்றத்தை விளக்கவில்லை. இந்தக் கோட்பாட்டை ஆதரித்ததற்கு சான்று ஏதும் இல்லை. இம்மூன்று தத்துவ ஆசிரியர்களுடைய கருத்துக்களுக்கும் சான்றுகளாகச் செய்திகள் கிடைக்கவில்லை. அரசியல் தத்துவத்துக்கு ஹாப்ஸினால் அளிக்கப்பட்ட கருத்து யாதெனில் அது எதேச்சதிகாரம் என்பதே ஆகும். லாக், வரம்பு படுத்தப்பட்ட அரசாங்கம் என்ற கருத்துக்கு வடிவம் கொடுத்தார். மக்கள் இறைமை என்ற கருத்தை ரூஸ்ஸோ யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு செய்தார்.

5. வரலாற்றுக் கோட்பாடு அல்லது பரிணாமக் கோட்பாடு

இக்கோட்பாடு அறிவியலான ஒரு கோட்பாடு ஆகும். இக்கோட்பாட்டின்படி அரசு என்பது வரலாற்றிலே நெடுங்காலமாக வளர்ச்சியடைந்து வந்ததின் விளைவு ஆகும். அது ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திலே தோன்றிய ஒன்று அன்று. அது படிப்படியாக, பரிணாம முறையில் வளர்ச்சி அடைந்தது. 'அரசு என்பது இறைவனால் உண்டாக்கப்பட்ட ஒரு பொருளும் அன்று, உயர்தரமான வல்லத முறையினால் தோற்றுவிக்கப்பட்டதும் அன்று, அல்லது ஒரு புரட்சியின் மூலமாகவோ. அல்லது வழக்கத்தின் மூலமாகவோ தோன்றியதும் அன்று; அல்லது குடும்பத்தின் விரிவான வளர்ச்சியும் அன்று; அரசு என்பது இயந்திரத்தால் உண்டாக்கப்பட்ட ஒரு செயற்கையான பொருளும் அன்று; ஆனால் அது இயற்கையிலேயே வளர்ந்து வந்துள்ள ஒரு நிறுவனம், அல்லது வரலாற்று வகையிலான பரிணாம வளர்ச்சி ஆகும்,' என்று பேராசிரியர் கார்னர் கூறுகிறார்.[1] அரசின் பரிணாம வளர்ச்சிக்குப் பல கூறுகள் துணை செய்தன. அக்கூறுகள் உறவு

[1] பேராசிரியர் கார்னர்: அரசியல் அறிவியலும், அரசாங்கமும்.

முறை சமய நெறி, போர், குடி பெயர்தல், பொருளாதாரச் செயல்கள், அரசியல் உணர்வு முதலியவையே ஆம்.

உறவுமுறை என்பது இரத்தத் தொடர்பு என்று பொருள்படும். 'இரத்தத்தொடர்பு சமுதாயத்தில் தவிர்க்க இயலாத ஒரு பிணைப்பு ஆகும்' என்று ஆர். என். கில்கிறைஸ்ட் கூறுகிறார்.[1] இரத்தத் தொடர்பு குடும்பத்தில் தோன்றுகிறது; இத் தொடர்பு குடும்பத் தொகுதிகளுக்கும் உறவுக் குழுக்களுக்கும் பரவுகிறது; இக் கூறுகள் இவ்வகையிலே குடும்பத்தின் விரிவுகளே ஆகும். உறவுக் குழுக்கள் இணைவதிலிருந்தே அரசு தோன்றுகிறது.

பண்டையக் காலச் சமுதாயத்திலே சமய நெறிமுறையானது ஒற்றுமையை ஏற்படுத்தவல்ல ஒரு பிணைப்பாக இருந்தது. சமய நெறியை பொறுத்த அளவிலே மனிதருடைய நெஞ்சங்களிலே அச்ச உணர்வு இருந்தது. ஒரே கடவுளர்களை வணங்கும் மக்களிடையே ஒற்றுமை உணர்வு ஏற்பட்டது. சமயச் செயல் முறைகளும், விவகாரங்களும், நம்பிக்கைகளும் மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதை நாம் இன்றும் காண்கிறோம். பண்டைக் காலத்தில் பல இன மக்களை சமயநெறி ஒன்றாக இணைத்தது; ஒற்றுமை உணர்வு அரசின் தோற்றத்துக்கு இன்றியமையாததாகும்.

போர் என்பதும் அரசின் பரிணாம வளர்ச்சிக்கு உதவி செய்த மற்றொரு கூறு ஆகும். பல சமயங்களில் போர் மக்களிடையே ஒற்றுமையை உண்டாக்கிற்று. அரசின் நிலப்பரப்பை விரிவாக்குதலிலும் போர் துணை செய்தது.

மக்கள் குடிபெயர்தலும் அரசின் தோற்றத்துக்கு வழி செய்தது. இதற்கு எடுத்துக்காட்டாக ஐக்கிய அமெரிக்க நாடுகளைக் கூறலாம்; மற்றும் சில எடுத்துகாட்டுக்கள் பல ஐரோப்பிய நாடுகள்; இவற்றின் மக்கள் தொடக்கத்தில் பல்வேறு நாடுகளையும் சமயநெறிகளையும் சேர்ந்திருந்தனர்.

பொருளாதாரச் செயல்கள், அரசின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் உதவி செய்தன. "தொழிலிலும், செல்வத்திலும் உள்ள வேறுபாடுகள் சமுதாய வகுப்புகளை அல்லது சாதிகளைத் தோற்றுவித்தன; பொருளாதார சுரண்டலுக்காக, ஒரு வகுப்பார் மற்ற வகுப்பார் மீது கட்டுப்பாட்டு அதிகாரம் செலுத்துதல் என்பதும் அரசாங்கத்தின் தோற்றத்தை ஏற்படுத்திய ஒரு முக்கியமான கூறு

[1] ஆர். என். கில்கிறைஸ்ட் : அரசியல் விஞ்ஞானத்தின் விதிகள், பக், 80

ஆகும்.'' இது ஆர். ஜி. கெட்டல் என்பவருடைய கருத்து ஆகும்.[1]

அரசு அமைக்கப்படுதற்கு அரசியல் உணர்வு என்பதும் ஓர் ஆதாரமாக அமைந்தது. அரசியல் உணர்வு என்பது அரசியலைப் பற்றி மக்கள் கொண்டுள்ள அறிவைக் குறிப்பிடுகிறது. வாழ்வை ஒழுங்குபடுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும் அரசு இன்றியமையாத தாயிற்று. இத்தேவையை மனிதன் உணர்ந்ததும், அவன் விரைந்து அரசை நிறுவலாயினன். 'அரசு அமைவதற்கு உதவி செய்த உறவுமுறை, சமயநெறி முதலிய மற்ற கூறுகளுக்கும் ஆதாரமாக, தலைமையான கூருக, அரசியல் உணர்வு இருக்கிறது,' என்று கில்கிறைஸ்ட் என்ற ஆசிரியர் கூறுகிருர்.[2]

மேற்கூறியவற்ருல், அரசின் தோற்றமானது ஒரு குறிப்பிட்ட கூறு துணைசெய்ய நிகழ்ந்தது என்று கூற இயலாது என்பது தெளிவு; முற்கூறப்பட்ட எல்லா கூறுகளும் பல்வேறு காலங்களில் தோன்றி, இயங்கி, அரசு தோன்றுதற்கு உதவி செய்தன.

முடிபு : அரசின் தோற்றத்தை விளக்குதற்காகத் தோன்றிய கோட்பாடுகளுள், பரிணும வளர்ச்சிக் கோட்பாடே மிகவும் ஏற்புடைத்தாக இருக்கிறது. பல்வேறு கால்ங்களிலே தோன்றி ஒன்ருக இயங்கிய பல கூறுகள் துணைசெய்த காரணத்தால் அரசு எந்தக் காலத்தில் தோன்றிற்று என்று எந்த ஒரு கோட்பாட்டினுலும் திட்ட வட்டமாகக் குறிப்பிட்டுக் கூற இயலவில்லை என்பதையும் இங்கு நாம் கவனித்தல் வேண்டும்.

மேற்கோள் நூல்கள்

(1) டபிள்யு.ஏ. டபின்னிங்க் : அரசியல் கோட்பாடுகளின் வரலாறு.

(2) டபிள்யு. எபன்ஸ்டீன் : இக்கால அரசியல் கருத்து.

(3) ஈ. ஏ. ஹோபெல் : முற்கால மனிதருடைய சட்டம்.

(4) ஜி. டிண்டர்: அரசியல் சிந்தனை; எப்போதும் இருக்கும் அரசியல் பிரச்சனைகள்.

[1] ஆர். ஜி. கெட்டல்: அரசியல் விஞ்ஞானம், பக். 56
[2] ஆர். என். கில்கிறைஸ்ட்: அரசியல் விஞ்ஞானத்தின் கூறுகள், பக். 88

கேள்விகள்

1. சமுதாயம் அரசைவிட காலத்தால் முந்தியதா ?

2. தெய்வீக அரசு உரிமைக் கோட்பாட்டின் முக்கியத்துவத்தை விவரிக்கவும்.

3. சமுதாய ஒப்பந்தக் கோட்பாட்டின் பயன் என்ன ?

4. பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு ஏற்புடைய கோட்பாடாகக் கொள்ளப்படுகிறது.—ஏன் ?

இயல் 7

இறைமை
(Sovereignty)

'இறைமை' என்பதனைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லான 'Sovereignty' உயர்ந்த எனும் பொருள் கொண்ட லத்தீன் சொல்லான 'Superanus' என்பதிலிருந்து வந்ததாகும். இறைமை, உயர்ந்த அதிகாரம் அல்லது ஆணையுரிமை என்பதனைக் குறிக்கிறது. உள்நாட்டிலும், வெளிநாடுகளுடன் கொள்ளும் உறவுகளிலும் அரசின் உயர்ந்த நிலையை அது குறிக்கிறது. இறைமை என்பது அரசின் கூறுகளில் தலையானது. இக்கூறு அரசை மற்ற அமைப்புகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. இறைமை இல்லாத ஓர் அரசை நம்மால் உண்மையில் நினைத்துப் பார்க்க இயலாது. கட்டளையிடவும், தனது அதிகாரத்துக்கு அடங்கி நடத்தலை நடைமுறைபடுத்தவும் முடிவான அதிகாரத்தை அரசு பெற்றுள்ளது. அரசின் அதிகாரத்துக்கு சட்டப்படியான வரம்பு எதுவும் இருக்கமுடியாது. ஆகவே இறைமை என்பது ஓர் சட்டப்படியான பொருள்; அதைப் பெற்றுள்ள அரசு சட்டப்படி உயர்வானது.

இறைமையின் இரு தன்மைகள்

உள் இறைமை மற்றும் வெளி இறைமை என இறைமையில் இரு தன்மைகள் உள்ளன. உள் இறைமை நாட்டில் உள்ள எல்லா மக்கள் மற்றும் கழகங்கள் மீதான அரசின் அதிகாரத்தைக் குறிக்கும். அரசுக்கு உத்தரவிட எந்த ஒரு தனிநபருக்கும் அதிகாரமில்லை; ஆனால் அரசு அவனுக்கு இடும் ஒவ்வொரு உத்தரவுக்கும் அவன் கீழ்ப்படிய வேண்டும்.

வெளி இறைமை (External Sovereignty) என்பது ஓர் அரசு. மற்ற அரசுகளின் தலையீடு இன்றி சுதந்திரமாக இருப்பது ஆகும். 'சில ஆசிரியர்கள் வெளி இறைமை எனும் சொல்லினை, ஓர் அரசு மற்ற வெளி அரசுகளின் கட்டுப்பாடு, அல்லது அடக்குமுறை இன்றி சுதந்திரமாக இருக்கும் நிலைக்கு, அதாவது தனிப்பட்ட வெளியார் அல்லது அரசுகள் விருப்புக்கு விடுபட்ட அரசின்

உயர்ந்த நிலைக்கு சமமாக கூறுகின்றனர்,' என ஜே. என். கார்னர் கூறுகிறார்.[1]

உதாரணமாக, இன்று இந்திய அரசு எல்லா உள்நாட்டு விவகாரங்களிலும் உயர்ந்த அதிகாரத்தைப் பெற்றுள்ளது. அரசுக்குள் இருக்கும் எந்த நபரிடமிருந்தும் அது உத்தரவுகளைப் பெறுவதில்லை; அல்லது எந்த வெளி அரசாங்கத்தின் கட்டளைகளுக்கும் பணிவதில்லை, உலகில் உள்ள எந்த ஒரு வெளி அரசாங்கமும் இந்தியாவின் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு விவகாரங்கள் தொடர்பாக இந்திய அரசாங்கத்துக்கு கட்டளைகளை அனுப்பமுடியாது. ஆனால் அவைகள் இந்திய அரசாங்கத்துக்கு நண்பரது ஆலோசனையைக் கொடுக்கமுடியும்.

இறைமையின் வரலாறு

பண்டைய காலம், இடைநிலைக் காலம் மற்றும் தற்காலத்தில் இறைமை பற்றிய எண்ணம் வளர்ந்த விதம் பற்றி நாம் சுருக்கமாக ஆராய்வோம்,

1. பண்டைய காலத்தில்

தன்னுடைய 'அரசியல்' (Politics) எனும் நூலில், ஒவ்வொரு அரசிலும் ஓர் உயர்ந்த அதிகாரம் இருக்கவேண்டியதன் அவசியத்தைக் கூறிய அரிஸ்டாட்டில் (Aristotle) காலத்திலிருந்தே இறைமையைப் பற்றிய எண்ணம் இருந்துவந்தது. அரிஸ்டாட்டில் கூற்றுப்படி இந்த அதிகாரமானது ஒருவரிடமோ, சிலரிடமோ அல்லது பலரிடமோ இருக்கலாம். பண்டைய கிரேக்க நாட்டில் அரசு என்பது ஓர் உயர்ந்த அதிகாரமுடைய தனித்தன்மை அமைப்பாகும். கிரேக்கர்கள் அரசுடன் வாழ்நாள் முழுவதுக்குமான ஓர் கூட்டு ஒப்பந்தம் செய்துகொண்டு, தங்களை அரசுக்கு முற்றிலும் கட்டுப்பட்ட நிலைக்கு வைத்துக்கொண்டனர். ரோமானிய சட்டங்களில் இறைமையைப் பற்றிய குறிப்புகள் ஆரம்ப காலத்தில் தெளிவற்று இருந்தன.

2. இடைநிலைக் காலத்தில்

இடைநிலைக் காலமானது இறைமை பற்றிய தெளிவான கொள்கையொன்று வளருவதற்கான தகுந்த சாதகமான நிலையை உருவாக்கவில்லை. படைமானிய அரசின் வளர்ச்சி மற்றும் போப்பாண்டவர்களுக்கும், புனித ரோமானியப் பேரரசர்களுக்குமிடை

[1] ஜே. என். கார்னர் : அரசியல் அறிவியலும் அரசாங்கமும், பக். 156

யிலான முடிவடையாத போராட்டமும் இறைமை பற்றிய கருத்துகள் வளர பிரதான இடையூறுகளாக இருந்தன. இடைநிலைக் கால ஐரோப்பாவில் இறைமை அல்லது உயர்ந்த அதிகாரம் எங்கு இருந்தது என்பதைக் கூறுவது மிகவும் கடினமாக இருந்தது,

இடைநிலைக்கால ஐரோப்பாவில் அரசர்கள் அவர்களது பண்ணைகளில் இறைமையுடையவர்களாக இருந்த காரணத்தால், உயர்ந்த அதிகாரத்தின் இருப்பிடம் பற்றி ஓர் குழப்பநிலை இருந்தது. ஆதலின், அரசனது மேலாண்மையைப் பற்றி ஒருவர் பேசமுடியுமேயொழிய, இறைமையைப் பற்றி பேசமுடியாது.

பன்னிரெண்டாம் நூற்றுண்டில் தாமஸ் அகுனுஸ் (Thomas Aquinas) மக்கள் இறைமையைப் பற்றி சில கருத்துகளை அளித்தார். போப்பாண்டவரது அதிகாரம் இறைவனிடமிருந்து நேரடியாகக் கிடைத்தது எனவும். ஆனுல் பேரரசரது அதிகாரம் மக்களது சம்மதத்தின் வாயிலாகவும், கிருத்துவக் கோயிலின் ஒத்துழைப்பின் வாயிலாகவும் பெறப்பட்டது என்ற கருத்தை அவர் கொண்டிருந்தார். இக் கருத்தானது பாதுஷாவின் மார்சிங்லியோ (Marsigliou of Padua) மற்றும் ஒக்கம் எனுமிடத்தின் வில்லியம் (William of Ookam) ஆகிய எழுத்தாளர்களால் விரிவு படுத்தப்பட்டது. மொத்தமாக, இடைநிலைக் காலமானது இறைமையைப் பற்றிய ஓர் தெளிவான கொள்கையின் வளர்ச்சியைக் காணவில்லை.

3. தற்காலத்தில் இறைமையின் வளர்ச்சி

தற்காலத்தில் தேசீய அரசு எழுந்தது. அத்துடன் இறைமை பற்றிய கொள்கையும் வளர்ந்தது. பதினுரும் நூற்றுண்டில் முதன் முறையாக ஜீன் போடின் (Jean Bodin), என்ற பிரான்சு நாட்டு சிந்தனையாளர் இறைமை பற்றிய ஓர் சரியான கருத்தை வெளியிட்டார். பின் அக்கருத்தானது ஹாப்ஸ் (Hobbes), லாக் (Locke) ரூஸ்ஸோ (Rousseau), ஹெகல் (Hegel), பென்தாம் (Bentham) மற்றும் ஆஸ்டின் (Austin) ஆகியோரால் விரிவுபடுத்தப்பட்டது.

ஜீன் போடின் (1530—1596) : ஜீன் போடின் 1576-ல் வெளியான தனது 'Dela Republique' எனும் நூலில் இறைமை கொள்கைக்கு விளக்கவுரை கொடுத்தார். இறைமை பற்றிய கொள்கையை அவர் தெளிவாக விளக்கினுர். இறைமையின் முதன்மையான பணி சட்டங்கள் செய்வது ஆகும் என்பது அவர் கருத்து. ஆனுல் இறைமையாளன் சட்டங்களுக்கு அப்பாற்பட்டவனல்ல ; 'இறைவன், இயற்கை மற்றும் நாடுகளின் சட்டங்கள்' அதாவது தார்மீகக் கொள்கைகளுக்கு அடங்கியவனுக அவன்

கருதப்படுகிறன். போடினது கருத்துகள்பதினேழு, பதினெட்டாம் நூற்ருண்டுகளில் முழுமையான அரசாட்சிகளுக்கு ஒரு கோட்பாடு அடிப்படையினை அளித்தன.

தாமஸ் ஹாப்ஸ் (*1588—1679*): ஹாப்ஸ் ஒரு ஆங்கிலேய சிந்தனையாளர்; ஹாப்ஸின் இறைமை முழுமையானது ; வரம்புக்கு உட்படாதது ; இறைமை மாற்றப்பட முடியாதது ; பிரிக்கப்பட முடியாதது ; மற்றும் தண்டிக்கப்பட 'முடியாதது. ஹாப்ஸின் கருத்துப்படி இறைமை என்பது ஒரு முறை அல்லது மற்ற முறைகளில் ஓர் தனிமையான, கட்டுப்பாடில்லாத ஒருமுக விருப்பாகும். உண்மையிலேயே ஹாப்ஸ் கட்டுப்படுத்தப்படாத, கட்டுப்படுத்த முடியாத ஒரு லெவியாதனை (Leviathan) உருவாக்கினர் என ஜே. எஸ். ரவுசெக் என்பவரும் மற்றவர்களும் தமது நூலில் குறிப்பிடுகின்றனர்.[1] சுருக்கமாகக் கூறின் ஹாப்ஸ் முழுமையான இறைமை (Absolute Sovereignty) பற்றிய கொள்கையை ஆதரித்தார்.

ஜான் லாக் (*1632—1704*): லாக் இறைமை எனும் சொல்லினை பயன்படுத்தலைத் தவிர்த்து, 'உயர்ந்த அதிகாரம்' (Supreme Power) என்னும் சொல்லை குறிப்பிடுகிருர், லாக் வரையறுக்கப்பட்ட இறைமையை (Limited Sovereignty) ஆதரிக்கிருர். புரட்சி செய்யும் உரிமையை அவர் அங்கீகரிக்கிருர். அரசாங்கம் கலைக்கப்படலாம்; ஆனல் சமுதாயம் உறுதியாக நிலைத்து நிற்கும் என்பதே லாக் கொள்கையின் மையக் கருத்தாகும். அரசுக்கும், அரசாங்கத்துக்கும் இடையிலான வேறுபாட்டை அவர் தெளிவாகக்கூறுகிருர். அவரது கூற்றுப்படி, உயர்ந்த அதிகாரமானது அரசாங்கத்தினிடமுள்ளது. ஆனல் அரசாங்கத்துக்கு பின்பலமாகவும், அதற்கு மேலானதாகவும் மக்களது அதிகாரம் மொத்தமாக உள்ளது.

இவ்வாறு, அரசாங்கத்திடமொன்று, மக்களிடமொன்ருக இரு உயர்ந்த அதிகாரங்கள் உள்ளன. இந்த இரு உயர்ந்த அதிகாரங்களுக்கிடையிலான வேறுபாடு, 19-ம் நூற்ருண்டில் அரசியல் இறைமை, சட்ட இறைமை பற்றிய கொள்கைகள் வளர வழிகோலியது.

ஜீன் ஜாகூ ரூஸோ (*1712—1778*): தற்கால இறைமைக் கொள்கையை ஆரம்பித்து வைத்தவர் ரூஸோவாகும். இறைமை முழுமையானது ; கட்டுப்படுத்தப்படாதது என்ற போடின் மற்றும்

[1] ஜே. எஸ். ரவுசெக்: அரசியல் விஞ்ஞானத்திற்கு ஓர் அறிமுக உரை, பக். 51

ஹாப்ஸின் கருத்தை இவர் ஏற்றுக்கொள்கிறார். ஆனால் இவர் இறைமை மன்னரிடமில்லாது எல்லா மக்களது பொதுவிருப்பில் (General Will) உள்ளதாகக் கூறுகிறார். ஒரு விதத்தில் அவர் ஹாப்ஸின் முழுமையான இறைமையை லாக்கின் அரசியல் இறைமையுடன் இணைக்கிறார். ரூஸோவின் இறைமையாளன் (Sovereign) சமுதாயத்தின் பொது விருப்பாகும். இவ்வாறு அவர் மக்கள் விருப்பத்தில் நம்பிக்கை கொண்டுள்ளார்.

ஹெகல் (*1770—1831*) : ஜெர்மானிய அரசியல் தத்துவ ஞானி ஹெகல் அரசின் தங்குதடையற்ற ஆட்சி முறைக்கு ஆதரவாக இருந்தவர். அரசுதான் எல்லா உரிமைகளையும் உண்டாக்குகிறது; அரசுக்கு எதிராக எந்த ஒரு உரிமையும் இருக்க முடியாது என்பது அவர் கருத்து; ஒவ்வொரு நபரும் அரசு இடும் கட்டளைக்கு முழு மனதாக கீழ்ப்படிதல் வேண்டும்; மற்றும் அரசு கேட்கும் எந்த தியாகத்தையும் செய்யவேண்டும். இவ்வாறு, அரசின் பலிபீடத்தில் அவர் தனி மனிதனை தியாகம் செய்கிறார்.

ஜெர்மி பென்தாம் (*1748—1832*) : ரூஸோவுக்குப் பின்னர், சட்டப்படியான இறைமை (Legal Sovereignty) இங்கிலாந்தில் பென்தாமினால் முறைப்படியாக கலைமுறையில் தீட்டிக் காட்டப்பட்டது. அவரது கூற்றுப்படி, இறைமை சட்டத்தினால் கட்டுப்படுத்தப்படாதது; ஆனால் அது தார்மீக கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டது. அதிகப்படியான மக்களின் அதிகப்படியான மகிழ்ச்சியை வளப்படுத்தத் தேவையான சட்டங்களை அவரது இறைமையாளன் செய்வான் என பென்தாம் எதிர்பார்க்கிறார்.

ஜான் ஆஸ்டின் (*1790—1859*) : பகுப்பாராய்ச்சி முறையைப் பின்பற்றும் சட்ட அறிஞரான ஜான் ஆஸ்டின் இறைமைக் கருத்தை சட்ட அடிப்படையில் அணுகுகின்றார். அவரது இறைமை பற்றிய கொள்கை சட்டப்படியான இறைமைக் கொள்கை அல்லது ஒருமித்த (Monistic) இறைமைக் கொள்கை எனப்படும். இறைமை பற்றிய ஹாப்ஸின் கருத்துகளும், பென்தாமின் கருத்துகளும் ஜான் ஆஸ்டினது இறைமைக் கொள்கையில் உச்சகட்டத்தை அடைகின்றன. ஆஸ்டினது இறைமைக் கொள்கையில் சட்டம் மையக் கருத்தாகும். அவரது கூற்றுப்படி, ஒவ்வொரு அரசிலும் உயர்ந்த அதிகாரத்தைப் பெற்ற ஓர் வரையறுக்கப்பட்ட அமைப்பு இருக்க வேண்டும். அவரது கூற்றுப்படி, 'சட்டம் என்பது அரசியல் ரீதியில் உயர்ந்தவர் அல்லது இறைமையாளர், அரசியல் ரீதியாக அடங்கிய மனிதர்களுக்காக உருவாக்கும் மொத்த சட்டங்களாகும்.

இறைமையின் இயற்பண்புகள்

இறைமையின் பண்புக் கூறுகளில் முக்கியமானதொன்று அதனது இயற் பண்புகள் அல்லது குணநலன்களாகும். கீழ்க் கண்டவைகளை இறைமையின் இயற்பண்புகளாக கணக்கிட்டுக் கூறலாம்.

1. நிலையான தன்மை (Permanence)

அரசு எவ்வளவு காலம் நீடித்திருக்குமோ அவ்வளவு காலம் இறைமையும் இருக்கும். அரசின் இறைமை நிலையானது; அரசாங்கம் மாறலாம்; அரசாங்கம் முழுமையும் சீர்திருத்தப் படலாம். ஆனால் அரசாங்கத்தில் ஏற்பட்ட மாற்றம் இறைமை யைப் பாதிக்காது. அரசு அழியும்போது மட்டும்தான் இறைமை அழிக்கப்பட முடியும்.

2. பிரத்தியேகமானது (Exclusiveness)

இறைமை ஆதிகாரம் அரசுக்கு மட்டும் பிரத்தியேகமானது. அரசுடன் போட்டியிட வேறு எந்த அதிகாரமும் இல்லை. ஓர் அரசில் வாழும் எல்லா மக்களும் அடங்கி நடக்கக்கூடிய ஆணை களை பிறப்பிக்கக் கூடிய இறைமை அதிகாரம் ஓர் அரசில் ஒன்று தான் இருக்கமுடியும். அரசுக்குள் இரண்டு அல்லது அதிகமான அதிகாரங்கள் அரசுடன் போட்டியிட்டால் அது அரசுக்குள் அரசுகள் இருப்பதைக் குறிக்கும். இது ஒருமித்த இறைமை கொள்கையின் பொருளுக்கும், அர்த்தத்திற்கும் முற்றிலும் அபத்த மானதும், இருக்கமுடியாததுமாகும்.

3. எல்லாவற்றையும் உள்ளடக்கியது, மற்றும் சர்வ வியாபகமானது (All–Comprehensiveness and Universality)

இறைமை அனைத்தையும் உள்ளடக்கியது, மற்றும் சர்வ வியாபகமானது. இறைமை அதன் பூகோள வரம்புக்குட்பட்ட எல்லா கூட்டங்களையும் மக்களையும் தழுவக்கூடியது. எந்த ஒரு கழகமோ, அமைப்போ அல்லது வியாபார நிறுவனமோ எவ்வளவு பணம் அல்லது அதிகாரம் படைத்ததாக இருப்பினும் அரசின் கட்டளைகளை எதிர்க்கவோ அல்லது மீறவோ முடியாது. அரசு எதையும் தவிர்ப்பதில்லை அல்லது எவருக்கும் தவிர்த்தலுக்கான நிலையை வழங்குவதில்லை.

4. முழுமையானது (Absoluteness)

இது இறைமையின் இயற் பண்புகளில் மிக முக்கியமான தொன்றாகும். சட்டநோக்கில் அரசின் இறைமை முழுமையானதும்

மற்றும் வரம்பற்றதுமாகும். எந்த உட்புற அல்லது வெளிப்புற சட்டக் கட்டுப்பாடுகளுக்கும் இறைமை உட்பட்டதல்ல.

5. மாற்றப்பட முடியாதது (Inalienability)

அரசின் சாரமே இறைமையாகும். இறைமையின்றி அரசு வாழமுடியாது ஓர் அரசு தனது இறைமையை அதனை அழிக்காமல் கொடுத்துவிடமுடியாது. ஆகவே இறைமையை கொடுத்தல் என்பது தற்கொலை செய்துகொள்வதாகும். 'தன்னை அழித்துக்கொள்ளாமல், எந்த அளவிற்கு ஓர் மரம் தான் வளரும் உரிமையை விட்டுவிட முடியுமோ அல்லது ஓர் மனிதன் தன் வாழ்வையும், தனித்தன்மையையும் விட்டுவிட முடியுமோ அதற்கு மேலாக இறைமையை மாற்ற முடியாது' என லிபெர் (Leiber) கூறுகிறார்.[1]

6. பிரிக்கப்பட முடியாதது (Indivisibility)

இறைமையை பிரிக்கவும் முடியாது; அதாவது அதனை பிரிக்க இயலாது. இறைமையைப் பிரிப்பது அதனை அழிப்பதாகும். இறைமையைப் பயன்படுத்தும் அதிகாரத்தை அரசாங்கத்தின் பல்வேறு உறுப்புகளுக்கிடையில் பங்கிடலாம்; ஆனால் இறைமையையே அல்ல. பிரிக்கப்பட்ட இறைமை என்பது இறைமையின் பொருளுக்கே முரண்பாடானது.

இறைமையின் வகைகள்

அரசியல் விஞ்ஞானிகள் இறைமையின் பல வகைகள் பற்றி பேசுகிறார்கள். இறைமையின் மிக முக்கிய வகைகள் பற்றி கீழே காண்போம்:

A. சட்டப்படியான இறைமை (Legal Sovereignty)

இது சட்ட வல்லுனரின் இறைமை பற்றிய கருத்தாகும். கண்டிப்பாக சட்டத்தின் அடிப்படையில் செல்லுபடியாகும் இறைமை சட்டப்படியான இறைமையாகும். சட்டப்படியான இறைமையாளனின் அதிகாரம் வரம்பற்றது. சட்டப்படியான இறைமையாளன் சட்டங்களை செய்ய முடியும். சட்டப்படியான இறைமையாளன் சட்டத்தால் அங்கீகரிக்கப்படுகிறார். சட்ட ரீதியில் முடிவான ஆணைகளைப் பிறப்பிக்க சட்ட உரிமையைப் பெற்றுள்ளார். சட்ட இறைமையாளன் பிறப்பிக்கும் சட்டங்களை மட்டுமே நீதிமன்றங்கள் அங்கீகரித்து பயன்படுத்துகின்றன.

[1] லிபெர்: அரசியல் ஒழுக்கம், தொகுதி 1, பக். 219

அனைவருக்கும் தெரிந்த ஓர் உயர்ந்த அதிகாரியாதலின், அவரது ஆணைகளை எவரும் மீறமுடியாது. அப்படிப்பட்ட சட்டமொன்றை மீறுதல் தண்டனைக்குள்ளானதாகும். சட்டப்படியான இறைமை திட்டவட்டமானது, மற்றும் உறுதியானது. அதனுடைய அதிகாரம் முழுமையானது, மற்றும் பிரிக்கப்படவும், மாற்றப் படவும் முடியாதது.

B. மக்கள் இறைமை (Popular Sovereignty)

மக்கள் இறைமைக் கருத்து தற்கால மக்களாட்சி அரசுகளின் அடிப்படையாகும். மக்கள் இறைமை பற்றிய எண்ணம் அரசர் களின் தெய்வீக உரிமைகளுக்கு எதிரானதாக தோன்றியது. அரசர்களின் கொடுங்கோன்மைப் போக்கினை மக்கள் விரும்பாமல் எதிர்த்தனர். அது முதற்கொண்டு மக்கள் இறைமைக் கோட்பாடு எழுந்தது. நமது கவனத்தை மக்கள் இறைமைக் கோட்பாட்டின் பால் ஈர்த்த முதல் அரசியல் தத்துவ ஞானி ஜான் லாக் (John Lock) ஆவார். பிரான்ஸ் நாட்டு அரசியல் தத்துவ ஞானி ஜீன் ஜேகூ ரூஸோ (Jean Jacques Rosseau) இக்கோட்பாட்டிற்கு ஓர் நிச்சயமான வடிவத்தை அளித்தார். சாதாரணமாக, மக்கள் இறைமை என்பது அரசின் அதிகாரம் இறுதியாக மக்கள் கையில் இருப்பதைக் குறிப்பதாக நாம் பொருள் கொள்கிறோம். மக்க ளாட்சியின் அடிப்படையாகவும், கோட்பாட்டுச் சொல்லாகவும் மக்கள் இறைமை திகழ்கிறது. உயர்ந்த அதிகாரம் எங்கு உண் மையில் வைக்கப்பட்டுள்ளது எனக் கூறுவது மிகவும் கடினம். நூறுயிரக்கணக்கான ஒழுங்கு முறைக்கு உட்படாத மக்களிடம் அது உள்ளதா? வாக்காளர்களிடம் மட்டுமே இறைமை உள்ளது என்பது இதற்கு பதிலாகும். ஆனால் இக்கருத்து திறனாய்வுக்கு உட்பட்டது. மக்கள் தொகை அனைத்துக்கும் வாக்குரிமை அளிக்கப்படவில்லை என்பதை நாம் ஆராயும்போது அறிகிறோம். மக்களில் ஒரு பகுதியினருக்கு மட்டுமே வாக்குரிமை அளிக்கப்பட் டுள்ளது. அரசின் விருப்பத்தினை வெளியிடும் பிரதிநிதிகளை அவர்கள் தேர்ந்தெடுக்கின்றனர். பிறகு இந்தப் பிரதிநிதிகள் கட்சி அமைப்பின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளனர். ஆக, முடிவாக ஆராயும்போது வாக்காளர்களோ அல்லது அவர்களின் பிரதிநிதி களோ அதிகாரத்தைப் பயன்படுத்துவதில்லை; ஆனால் பெரும் பான்மைக் கட்சியின் தலைவர்களே அதிகாரத்தை பயன்படுத்து கிறார்கள். ஆக, மக்கள் இறைமை என்பதை வாக்காளர்களின் இறைமைக்குச் சமமாகக் கருதமுடியாது. இக்கோட்பாடு பெரிதும் தெளிவற்றும், நிச்சயமற்றும் உள்ளது. இருப்பினும், தற்கால மக்களாட்சியில் அரசாங்கத்தின் கொள்கையை கட்டுப்படுத்தும் மக்களின் அதிகாரம் நியாயமான பலத்துடன் உள்ளது. மக்கள்

கட்டுப்பாட்டுக்கான வழிமுறைகள் மக்களாட்சி அரசில் உருவாக்கப்பட்டுள்ளன.

உண்மையான மற்றும் உரிமையின்படியான இறைமை (De facto and De jure Sovereignty)

உண்மையான இறைமை மற்றும் உரிமைப்படியான இறைமை ஆகியவைகளுக்கிடையில் ஓர் வேறுபாடு செய்யப்படுகிறது. உரிமைப்படியான இறைமை, சட்டங்களில் அஸ்திவாரத்தைப் பெற்ற சட்டப்படியான இறைமையாகும். மக்களின் மதிப்பையும், கீழ்ப்படிதலையும் பெற்ற, நடைமுறையில் உள்ள இறைமையே உண்மையான இறைமையாகும். உரிமைப்படியான இறைமை சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டது; மற்றும் அது ஆளும் உரிமையை சட்டத்தின்படி பெற்றுள்ளது. உண்மையான இறைமை ஓர் சட்டப்படியான இறைமை அல்ல. ஆனால் அது தான் நடைமுறையில் அதிகாரத்தைப் பெற்று, கீழ்ப்படிதலை செயற்படும்படி செய்கிற நடைமுறையில் உள்ள இறைமை ஆகும். உண்மையான இறைமையாளன் மக்களை தனக்கு அடங்கி நடக்கவும், விசுவாசம் உடையவர்களாக இருக்கவும் கட்டாயப் படுத்தும் நிலையில் இருக்கிற காரணத்தால் அதிகாரத்தில் இருக்கிறார். சட்டத்தைத் தவிர்த்து, உடல் மீதான வலுவந்த தாக்கு அல்லது ஆன்மீக நெறி தாக்கு அல்லது வேறு ஏதாவது அடிப் படையின் மீதுதான் உண்மையான இறைமை உள்ளது. வரலாறு உண்மையான இறைமையைப் பயன்படுத்தலுக்கு பல உதாரணங் களை அளிக்கிறது. நீண்ட பாராளுமன்றத்தைக் கலைத்தபிறகு, ஆலிவர் கிராம்வெல் (Oliver Cromwell) ஓர் உண்மையான இறைமையாளனாக ஆனான். செயலாண்மை அதிகாரம் பெற்றிருந்த ஐவர் குழுவை (Directory) கலைத்து, தானே அரசின் அதிகாரத்தை எடுத்துக் கொண்ட பிறகு நெப்போலியன் (Napo-lean) உண்மையான இறைமையாளனாக ஆனான். ரஷ்யபோல்ஷிவிக் புரட்சிக்குப் பின் பொதுவுடைமை ஆட்சியானது, அது இங்கிலாந்தால் 1924 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்படும் வரை உண்மையான இறைமையின் அந்தஸ்தை மட்டுமே பெற்றிருந்தது. இவ்விதம் தனது விருப்பம் செல்லுபடியாக வைக்கும் திறனைப் பெற்ற அரசில் அதிக பலமுடைய சக்தியே உண்மையான இறைமை ஆகும். ஆனால் உண்மையான இறைமைக்கும், உரிமையின்படியான இறைமைக்கு மிடையில் பிணக்கு ஏற்படக்கூடிய அபாயம் எப்போதும் உண்டு.

'தனிப்பட்ட சட்டத்தின்கீழ், நீள் வடிக்காற்றுரிமை காரணமாக உண்மையான உரிமை சட்டப்படியான சொந்தத்துக்கான

உரிமைக்கு வழி வகுப்பது போல, மக்களின் உடன்படுதல் காரணமாகவோ அல்லது அரசை சீர்திருத்தி அமைப்பதன் காரணமாகவோ தனது அதிகாரத்தை நிலைநிறுத்துவதில் வெற்றிகாணும் இறைமையாளன் காலப்போக்கில் சட்டப்படியான இறைமையாளனாக ஆகிறான்,' என கார்னர் (Garner) கூறுகிறார். இரஷ்யாவில் பொதுவுடைமை அரசாங்கம் காலப்போக்கில் நிலையான தன்மையைப் பெற்றும், மக்களை தனது அதிகாரத்துக்குப் பழக்கப்படுத்தியும் உரிமையின்படியான அரசாங்கமாகவும் மாறியது. இவை அனைத்துக்கும் காரணம் யாதெனில் வலிமையின் மீது மட்டும் அமைந்த அதிகாரத்தைவிட சட்டத்தின் அடிப்படையின் மீதான அதிகாரம் மக்களால் விரும்பி அடங்கி நடக்கப்படுகிறது.

ஜான் ஆஸ்டினைப் போன்ற பகுப்பாராய்ச்சி முறை சட்ட வல்லுனர்கள் உண்மையான மற்றும் உரிமையின்படியான இறைமைகளுக்கிடையிலான வேறுபாட்டுக்கு எதிர்ப்பாளர்கள் ஆவர். ஆஸ்டினுக்கு இறைமை என்பது உரிமையின்படியான தொன்றே. ஓர் அரசாங்கம் உண்மையானதாகவோ அல்லது உரிமையின்படியானதாகவோ இருக்கமுடியும்; ஆனால் இறைமை அவ்வாறல்ல என்ற கருத்தை அவர் கொண்டுள்ளார். ஏனெனில், இறைமை உரிமையின்படி இருக்கவேண்டும் என்பதும், ஓர் சட்டப்படியான அந்தஸ்தைப் பெற்றிருக்கவேண்டும் என்பதும் அரசியல் நிலையான தன்மைக்கும் சூழ்நிலைக்கும் அவசியமானதாகும்.

ஆஸ்டினது இறைமைக் கோட்பாடு
(Austin's Theory of Sovereignty)

பிரபலமான ஆங்கிலேய சட்ட வல்லுனர் ஜான் ஆஸ்டின், பகுப்பாராய்ச்சிமுறை சட்ட வல்லுனர்களின் மிக முக்கியமான பிரதிநிதி ஆவார். அவரது இறைமை பற்றிய கருத்து அரசியல் விஞ்ஞானத்துக்கு அவரது முக்கிய பங்குபணியாகும். அவரது கருத்துகள் பெரும்பாலும் ஹாப்ஸ், பென்தாம் ஆகியோரது கருத்துகளின் அடிப்படையில் உள்ளவை. இறைமைக்கோட்பாடு ஜான் ஆஸ்டினிடமிருந்து விஞ்ஞான ரீதியிலான விளக்கவுரையைப் பெற்றது. முற்றிலுமொரு சட்ட அணுகுமுறையை அவர் பின்பற்றினார். இறைமையின் நிலையை அவர் சுருக்கமாக விளக்கி 'சட்டம்' என்பதன் பொருள் விளக்கத்தை அளிக்கிறார். 1832ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அவரது 'Province of Jurisprudence Determined' எனும் நூலில் அவர் அவரது இறைமைக் கோட்பாட்டை வெளியிட்டார்.

'இறைமை' எனும் சொல்லுக்கு ஆஸ்டின் கீழ்க்கண்ட சொற்களில் பொருள் விளக்கம் கொடுத்துள்ளார்:

'ஓர் உறுதியான மேம்பட்ட நிலையுடைய மனிதன், அவனைப் போன்ற ஓர் மேம்பட்ட நிலையுடையவனுக்கு கீழ்ப்படிதலை பழக்கமாகக் கொண்டிராமல், ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் பெரும் பகுதியினிடமிருந்து பழக்கமான கீழ்ப்படிதலை பெறும் நிலையில் இருப்பின் அந்த உறுதியான மேம்பட்ட நிலையுடையவனே அச் சமுதாயத்தின் இறைமையாளனாவான். அந்த மேம்பட்ட நிலையுடையவனை உள்ளடக்கிய சமுதாயம், அரசியல் மற்றும் சுதந்திரமான சமுதாயமும் ஆகும்.'[1]

ஆஸ்டினது கோட்பாட்டின் கருத்து

1. இறைமையாளன் ஓர் உறுதியான மேம்பட்ட நிலையுடைய மனிதனாக இருக்கவேண்டும் என ஜான் ஆஸ்டின் கூறுகிறார்.

2. இறைமை தெளிவான முறையில் இடம்பெறச் செய்திருக்கவேண்டும்.

3. இறைமையாளன் தன்னைப்போன்ற மேம்பட்ட நிலையுடைய ஒருவனுக்கு கீழ்ப்படியும் பழக்கத்தைக் கொண்டிருக்கக் கூடாது. ஒவ்வொரு அரசும் ஓர் இறைமையாளனைப் பெற்றுள்ளது. இறைமையாளர்கள் ஒருவருக்கொருவர் அடங்கி நடப்பவர் அல்லர்.

4. சமுதாயத்தின் பெரும் பகுதியினரிடமிருந்து கிழ்ப்படியும் பழக்கத்தை இறைமையாளன் பெறவேண்டும். பெரும்பகுதி என்பதற்கு சமுதாயத்தின் மிததியான பகுதி என அவர் பொருள் கொள்கிறார். ஒரு சமுதாயத்தின் பெரும்பகுதியினரால் கீழ்ப்படிந்து நடக்கப்பெறும் ஓர் உறுதியான மேம்பட்ட நிலையுடைய மனிதன் ஆஸ்டினால் அரசியல் மற்றும் சுதந்திரமான இறைமையாளனாகக் கருதப்படுகிறார்.

5. இறைமை முழுமையானது, பிரிக்கப்பட முடியாதது, மற்றும் கட்டுப்பாடுகள் எதுவும் இல்லாதது.

ஆஸ்டின் கொள்கையின் மீதான திறனாய்வு

ஆஸ்டினது கோட்பாட்டின் கருத்துகள் தீவிரமான திறனாய்வுக்கு உட்பட்டவை. சர் ஹென்றி மெயின் (Sir Henry Maine),

[1] ஜான் ஆஸ்டின் : சட்ட இயல், தொகுதி 1, பக். 226

கிளார்க் (Clark), மற்றும் சிட்ஜ்விக் (Sidgwick) ஆகியோர் ஆஸ்டினது கோட்பாட்டின் பிரதான திறனுய்வாளர்கள் ஆஸ்டினது கோட்பாடு வரலாற்று அல்லது நடந்த உண்மைகளினுல் ஆதரிக்கப்படவில்லை என அவர்கள் கூறுகின்றனர்.

1. உறுதியான மேம்பட்ட நிலையுடைய மனிதனிடம் இறைமை இல்லை

சர் ஹென்றி மெயின் அவரது 'Early History of Institutions' எனும் நூலில் வரலாற்றில் இறைமை உறுதியுடையதாக இருக்க வில்லை எனக் கூறுகிருர்.[1] அவர் கொடுங்கோலன் ரஞ்சித் சிங்கின் (1801--1839) உதாரணத்தைக் கொடுக்கிருர். ரஞ்சித் சிங் பஞ்சாபில் சீக்கியர்களுடைய அரசனுக விளங்கியவன். அவன் ஓர் உண்மையான கொடுங்கோலன். ஆனுல் அவன் சீக்கிய சமுதாயத்தின் பழக்கங்கள், சம்பிரதாயங்கள் மற்றும் நம்பிக்கைக்கு எதிராக செயல்பட்டதில்லை.

2. மிகவும் சட்டரீதியானது மற்றும் கருத்தியலானது

ஆஸ்டினது இறைமைக் கோட்பாடு கருத்தியலானது மற்றும் சட்டரீதியானது. மற்றும் அது இறைமையின் தத்துவ ரீதியான தன்மையை கவனத்தில் கொள்ளவில்லை.

3. இறைமை முழுமையானது அல்ல

மக்கள் இறைமை தற்கால மக்களாட்சிகளின் அடிப்படையாக உள்ளது. ஆஸ்டினது இறைமையாளன் முழுமையான மன்னராட்சிகளுக்கு ஏற்றவன். முன்னேற்றத்துக்கும் வளமைக்கும் உகந்த ஓர் ஒழுங்குமுறைமைக்குட்பட்ட வாழ்வுவேண்டும் என்ற மனிதர்களது ஆசையின் விளைவுதான் தற்கால அரசு. இறைமை சட்டப்படி கட்டுப்பாடில்லாததாக இருக்கலாம். ஆனுல் அரசியல் மற்றும் வரலாற்று ரீதியான கட்டுப்பாடுகள் எப்போதும் உண்டு. இங்கிலாந்துப் பாராளுமன்றத்தின் அதிகாரங்கள்கூட உள்ளிருந்ததும், வெளியிலிருந்தும் கட்டுப்படுத்தப்படுகின்றன. ஆஸ்டினது கோட்பாடு ரூஸோவின் இறைமை தத்துவத்துக்கு ஒரு முழு முரண்பாடாக உள்ளது என கார்னர் (Garner) கருதுகிருர். ரூஸோ இறைமையை பொது விருப்பத்துக்குச் சமமாகக் கருதுகிருர்.

4. எல்லா சட்டங்களும் இறைமையாளனின் கட்டளையல்ல

ஆஸ்டினுக்கு சட்டமென்பது இறைமையாளனின் கட்டளையைத் தவிர வேறல்ல. ஆஸ்டினது கோட்பாட்டில் மரபுவழி

[1] சர் ஹென்றி மெயின்: நிறுவனங்களின் பண்டைய வரலாறு, பக். 352

சட்டத்திற்கு இடம் கிடையாது. சம்பிரதாயங்கள், மரபு வழிகள் மற்றும் பழக்கங்கள் தொடர்பான விவகாரங்கள் ஆஸ்டினது கோட்பாட்டில் சில இடர்பாடுகளை உண்டாக்குகின்றன. எல்லா சட்டங்களும் இறைமையாளனிடமிருந்துதோன்றுவதாக ஆஸ்டின் கூறுகிறார். எல்லா சட்டங்களும் இறைமையாளனிடமிருந்து தோன்றுகின்றன என்ற ஆஸ்டினது கூற்றினை ஏற்றுக் கொள்வது சாத்தியமல்ல. ஆக்க முறை சட்டத்தை பொருத்த வரைதான் ஆஸ்டினது இறைமையாளன் மேம்பாடு உடையவன். அவரது இறைமை தார்மீகத் துறையை உள்ளடக்கியதாக இல்லை.

5. இறைமை இருக்குமிடம்

தற்காலத்தில் கூட்டாச்சி அரசுகள் தோன்றிய காலம் முதல் அடிக்கடி கேட்கப்படும் வினா, இறைமை எங்குள்ளது என்பதுதான் இது கூட்டாட்சி முறைகளில் இறைமை இருக்குமிடம் பற்றியது. இவ்வினாவிற்கு ஓர் சுருக்கமான, திருப்திகரமான விடையளிப்பது உண்மையிலேயே கடினமானது. இறைமை பிரிக்கப்பட இயலாதது மற்றும் ஒருமித்தது என வாதிடப்படுகிறது. இக்கருத்தின்படி, இறைமை அரசின் இறைமையாளனிடம் இருக்கவேண்டும். உதாரணமாக, ஒரு அரசராட்சியில்அது அரசனிடம் உள்ளது. ஓர் உயர்குடியாட்சியில் அல்லது சிறுபான்மையினர் ஆட்சியில் அதிகாரத்தை உடைய ஒரு சிலரிடமே இறைமை உள்ளது. ஆனால், ஒரு மக்களாட்சி அரசில் இறைமை அதிகாரம் மக்களிடம் உள்ளது எனப் பொதுவாகக் கருதப்படுகிறது; அவ்வாறே அறிஞர்களும் கருதுகின்றனர். அரசியல் விஞ்ஞானத்தில் அது மக்கள் இறைமை அல்லது மக்களது இறைமை எனத் தெரியப்படுகிறது.

தற்கால அரசுகளில் பெரும்பான்மையானவை மக்களாட்சி அரசுகள் ஆகும். அவை பாராளுமன்ற முறை அல்லது தலைவர் அரசாங்க முறை அல்லது ஒருமுக அரசாங்க முறை அல்லது கூட்டாட்சி அரசுகளாகும். ஆனால், ஒவ்வொரு அரசும் அதனது அரசியலமைப்பு அல்லது அரசியல் முறை எவ்வாறு இருப்பினும் ஒரு எழுதப்பட்ட அரசியலமைப்பைப் பெற்றிருக்கும்; இந்த அரசியலமைப்பு ஒரு அரசியலமைப்பு நிர்ணயசபையால் எழுதப்பட்டும், ஒப்புதல் அளிக்கப்பட்டும் இருக்கலாம். அல்லது அது ஏதோ ஒரு குழு அல்லது அமைப்பினால் மற்ற சில அரசுகளுக்கு கொடுக்கப்பட்டு இருக்கலாம். இந்த வகைக்கு உதாரணம் இங்கிலாந்திடமிருந்து சுதந்திரம் பெற்ற கனடா மற்றும் ஆஸ்திரேலியா ஆகும். எப்படியிருப்பினும், இந்த அரசுகளில் உள்ள அரசியலமைப்புகள் உயர்ந்தவை மற்றும் இறைமையுடையவை எனக் கூறப்படுகிறது.

ஆகவே இறைமையைப் பெற்றிருப்பது அரசியலமைப்பா அல்லது மக்களா என்ற வினு எழுகின்றது. எவ்வாறு இருப்பினும், இறைமையானது மக்களிடம் இருப்பதாகக் கருதலாம். இந்த மக்கள் இறைமை அதிகாரத்தை அரசிடமும், அரசு வாயிலாக அரசியலமைப்பிடமும் ஒப்படைக்கிறுர்கள்.

இது தொடர்பான மற்ருெரு வினு ஓர் மக்களாட்சியையுடைய கூட்டாட்சி அரசில் இறைமையின் இருப்பிடம் பற்றியது. இறைமையைப் பெற்றிருப்பது கூட்டாட்சி அரசாங்கமா அல்லது மாநில அரசாங்கங்களா என்பதனை நிச்சயமாகக் கூறுவது சற்று கடினமானது. மாநிலங்களால் உருவாக்கப்பட்டதுதான் கூட்டாட்சி அரசாங்கம் என்பது நிலையாகும். அதன்படி மாநிலங்களே உண்மையிலேயே இறைமை அதிகாரத்தைப் பெற்றிருந்தன. ஆனுல், அவைகளின் இறைமை அதிகாரத்தின் ஏதோ ஒரு பகுதியை கூட்டாட்சி அமைப்பிடம் அவை கொடுக்கின்றன. இக்கருத்தின் அடிப்படையில் நோக்கக் காணின், கூட்டாட்சி அமைப்பும், மாநிலங்களும் அவைகளுக்கான செயல்முறை வரம்புக்குள் இறைமையுடையவை எனத் தெரிகிறது. இங்கு இறைமை பிரிக்கப்பட்டிருப்பதையோ அல்லது பங்கிடப்பட்டு இருப்பதையோ ஒருவர் காணமுடியாது. அரசாங்கத்தின் தன்மை அல்லது வகை எப்படியிருப்பினும் மக்கள் மட்டுமே இறைமை அதிகாரத்தைப் பெற்றுள்ளனர் என்பதே இறைமை பற்றிய எல்லா கூற்றுகளின் உண்மையாகும்.

6. சட்டப்படியான மற்றும் அரசியல் இறைமையாளன்

ஆஸ்டின் சட்டபடியான இறைமைக்கும், அரசியல் இறைமைக்கும் இடையிலான வேறுபாட்டை புறக்கணிக்கிறுர். அவர் ஒரே ஒரு இறைமையாளனைப்பற்றி பேசுகிறுர். ஆனுல் உண்மையான நடைமுறையில் சட்டப்படியான மற்றும் அரசியல் எனும் இரு இறைமைகள் உள்ளன. மக்கள் அல்லது வாக்காளர்கள் அரசியல் இறைமையாளர் ஆவர். அரசியல் இறைமையாளரது விருப்பு, சட்ட இறைமையாளரால் சட்டங்களாக மாற்றப்படுகிறது. ஆஸ்டின் ஆளுபவருக்கும் ஆளப்படுபவருக்கும் இடையில் ஒரு வேறுபாட்டை செய்கிறுர்.

இந்த எல்லாக் குறைபாடுகளுடன் ஆஸ்டினது கோட்பாட்டை, மொத்தத்தில் இறைமையின் சட்டத் தன்மைக்குத் தரப்பட்ட தெளிவான, தர்க்க ரீதியான விளக்கமாக ஏற்றுக் கொள்ளலாம்.

பன்மை இறைமைக் கோட்பாடு
(Pluralistic Theory of Sovereignty)

பன்மைவாதம் என்பது அரசியல் விஞ்ஞானத்தில் ஒப்பிடுதலாகப் பார்க்கும்போது ஓர் தற்காலச் சொல். பன்மை இறைமைக் கோட்பாடு, முழுமையான இறைமைக் கொள்கையின் எதிர் விளைவாகும். ஆஸ்டினால் அளித்து, ஆதரிக்கப்பட்ட ஒருமித்த இறைமைக் கோட்பாட்டை எதிர்ப்பவர்கள் பன்மைவாதிகள். பன்மை இறைமைக் கோட்பாடு அரசையும், மற்ற அமைப்புகளையும் ஒன்றுக்கொன்று சமமாக வைக்கிறது. பன்மைக்கொள்கையின் மையக் கருத்து ஜெர்மன் சட்ட வல்லுனர் வான் கயர்க் (Von Gierke 1844-1921)கின் படைப்புகளில் காணப்படுகின்றது. பழக்கமான கோட்பாடின் மீதான தாக்குதலுக்கு மூன்று காரணங்கள் பொருப்பானவை. முதலாவதாக, அரசினுடைய பணிகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது. இரண்டாவதாக, சர்வ தேச ஒத்துழைப்பு ஓர் அவசியமாக ஆகிவிட்டது. மற்றும் அது எங்கும் வற்புறுத்தப்படுகிறது. மூன்ருவதாக, தனி நபர்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்ய பல்வேறு குழுக்களும் அமைப்புகளும் உள்ளன.

அவர்களுக்கு இறைமை முழுமையானதுமல்ல; பிரிக்கப்பட முடியாததுமல்ல. அரசு சமுதாயத்தின் பணியாளனாக இருக்க வேண்டுமேதவிர, முதலாளியாக இருக்கக்கூடாது.

அரசு சட்டங்களை இயற்றும் பணியில் ஒரு முக்கியமான பங்கினைப் பெற்றுள்ளதே தவிர, முழுமையான பங்கினைப் பெற்றிருக்கவில்லை எனும் கருத்தினை வான் கயர்க் கொண்டிருந்தார். பல்வேறு அமைப்புகளுக்கிடையே ஒருங்கிணைத்தலையும், ஒத்துப் போகவைத்தலையும் உருவாகச்செய்ய அரசு அவசியமானது என அவர் கருதுகிருர். சி. டி. எச். கோல் (C. D. H. Cole) அரசின் சட்டமியற்றும் அதிகாரங்கள் பல, பாராளுமன்றங்களுக்கிடையில் பிரித்துக் கொடுக்கப்படவேண்டும் என வாதிடுகிருர். இறைமை இருப்பதை கோல்மறுக்கிருர். எர்னஸ்டு பார்க்கர்(Earnest Barker) அரசை குழுக்களில் ஒரு குழு என கருதுகிருர். தொழிலாளர் சங்கங்கள் போன்ற முக்கியமான பொருளாதார அமைப்புகளின் வளர்ச்சி காரணமாக, அரசு சமுதாய வாழ்வின் எல்லா அதிகாரங்களையும் பெற்ற கருவியாக இனியும் பாவனைசெய்ய இயலாது என கிராப் (Krabb) கருதுகிருர். பண்மை வாதம் சட்டகோணத்திலிருந்து கிராப்பினுல் அணுகப்படுகிறது. அரசியல் இறைமையிலிருந்து சட்டத்தைப் பிரிப்பது அவரது முயற்சியாகும். அவரது

சட்டம் அரசிலிருந்து சுதந்திரமானது, அரசுக்கு மேம்பட்டது. சட்டத்தினுடைய இறைமையை மட்டும் அவர் அங்கீகரிக்கிறார்.

ஹெரால்டு ஜே. லாஸ்கி (Herald J. Laski) அரசுக்கு முழுமையான இறைமைக்கான எவ்வித உரிமையை மறுத்து, குழுக்களின் முழு சுயாட்சியை அங்கீகரிக்கும் ஒரு முறைக்காக வாதாடுகிறார். இறைமையின் முழுமைத் தன்மையை அவர் சாடுகிறார். லாக்கின் இறைமை மீதான கருத்துகளை கோகலே (Gokhale) கீழ்க்கண்ட வாறு சுருக்கி அளித்துள்ளார்:

(a) இறைமை ஒருமித்தது அல்ல ; ஆனால் பன்மையானது.

(b) இறைமை முழுமையானது அல்ல ; ஆனால் அரசியலமைப்பின்படியானது, மற்றும் பொறுப்புடையது.

(c) அரசு ஒரு மேம்பாட்டு நிலையைக் கோர முடியாது.

(d) பல்வேறு குழுக்களில் அரசு ஒன்று ; சமத்துவமான குழுக்களில் அரசு முதன்மையானது மட்டுமே.

(e) குழுக்கள் முழுமையான சுயாட்சி பெற்றவையாக இருக்கவேண்டும்.

(f) அதிகாரம் ஒருமுகமாக இருக்கமுடியாது ; சமுதாயமே பல்முக அமைப்பாக இருப்பதுபோல அதிகாரமும் பல்முக அமைப்பாக இருக்கவேண்டும்.

(g) குழுக்களிடையில் ஒருங்கிணைப்பு அதிகாரியாக மட்டுமே அரசு செயலாற்றமுடியும்,

திறனாய்வு

பன்மை வாதம் திறனாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. முதலாவதாக பன்மை வாதக் கொள்கை ஓர் உள் முரண்பாட்டால் பாதிக்கப்படுகிறது. கொள்கையின்படி, பன்மை வாதிகள் அரசின் அதிகாரங்களைக் குறைக்கின்றனர். ஆனால் உண்மையான நடை முறையில் அரசுக்கு மிக அதிகமான அதிகாரங்களைவிட்டுத் தர அவர்கள் விரும்புகின்றனர். குழுக்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தும் பணியினை அரசு மேற்கொள்ள வேண்டும் என்பதை பார்க்கரும் (Barker), லாஸ்கியும் (Laski) ஏற்றுக்கொள்கின்றனர். அரசியல் சார்பில்லா சமூகக் குழுக்கள் அரசினது தனிப்பட்ட சேவையின்றி வாழுவோ மற்றும் அவைகளின் இலக்குகளை அடையவோ முடியாது என கோக்கர் (Coker) கூறும்போது அவர் சரியான கூற்றினையே மொழிகிறார்.

இரண்டாவதாக பன்மைவாதத்தின் தருக்கரீதியான விளைவு ஆட்சிவேண்டாக் கொள்கை அல்லது அரசு இல்லாமல்போதல் ஆகும். அரசு இன்றி ஒழுங்குமுறை இருக்கமுடியாது. இறைமையின்றி அரசு இருக்கமுடியாது.

மூன்ருவதாக, பன்மைவாதிகள் பலவேறு குருக்களின் முரண்பாடான இலக்குகளை எவ்வாறு சமரசப்படுத்துவர் என்பதைப் பற்றி எவ்வித நடத்தையும் தரவில்லை. 'பன்மைவாதம் அதன் தருக்க ரீதியான இலக்குக்கு எடுத்துச் செல்லப்படுமாயின், மேம்பாட்டுக்கு போட்டியிடும் குழப்பமான குழுக்கள் அல்லது அமைப்புகள் ஒழுங்கு முறையையும், முன்னேற்றத்துக்கான சூழ்நிலையையும் மாற்றி சமுதாயத்தை பிரித்துவிடும்,' என கில்கிறைஸ்ட் (Gilchrist) கூறுகிருர்.[1]

நான்காவதாக, பன்மைவாதிகள் குழுக்களுக்கு அதிக அதிகாரங்களைக் கேட்கும்போது, அவர்களது எண்ணங்களை எவ்வாறு செயல்படுத்துவது என்பதைத் தெளிவாக விளக்கிச் சொல்லவில்லை. குமாரி பாலெட்(Miss Follet) என்ற பன்மைவாதி, 'அரசு ஒரு ஒருமைப்படுத்தும் சாதனம்' எனக் கூறுகிருர். 'எனது குடியுரிமை, தொழில் குழுவில் எனது உறுப்பினர் நிலையைவிடப் பெரியது. ஒரு உண்மையான அரசு தன்னுள் உள்ள எல்லா நலன்களையும் குவிக்கவேண்டும்'.[2] பன்மைவாதிகள், அமைப்புகள் அரசிடமிருந்து முழு அளவில் சுதந்திரம் பெற்றிருப்பதை விரும்பவில்லை. ஆனல் அதே சமயம் அரசுக்கு இறைமை அந்தஸ்து கொடுப்பதற்கும் மறுக்கிருர்கள் என்பது வியப்புக்குரியது.

இறைமை பற்றிய செல்லுபடியாகக் கூடிய தத்துவம் என் பன்மைவாதத்தை ஏற்றுக்கொள்வது கடினம். இருபது அல்லது முப்பது ஆண்டுகளுக்கு முன் பெற்றிருந்த வலிமையை பன்மைவாதம் இன்று இழந்துவிட்டது. பன்மைவாதிகள் பலர் அரசின் மேம்பாட்டை ஒரு விதம் அல்லது வேறு விதத்தில் ஆதரிக்கின்றனர். லாஸ்கி கீழ்க்கண்டவாறு அறிவிக்கின்ருர், 'ஒவ்வொரு அரசிலும் கட்டுப்பாடில்லா அதிகாரத்தை சட்டப்படிப் பெற்ற ஒரு அமைப்பு இருப்பதை எவரும் மறுக்கமுடியாது.' குழுக்கள் எவ்வித உரிமைகளைக் கோரினுலும் அல்லது பெற்ருலும், அரசு, இன்னும் ஓர் அவசியமான சீராக்கும் சக்தியாக உள்ளது,' என்று எர்னஸ்டு பார்க்கரின் (Earnest Barker) கருத்தை இங்கு குறிப்பிடுவது

[1] இ. ஆசீர்வாதத்தின் 'அரசியல் கோட்பாடுகள்' என்ற நூலில் எடுத்தாளப்பட்டுள்ள 'பாலெட்'டின் வாக்கு. பக். 288

[2] மேற்கூறிய ஆதாரம்.

சரியானது. சீராக்கும் பிரச்சனைகளில் சிக்கலான, கடினமான வற்றை கவனிக்கும் பணி அரசின்மீது திணிக்கப்படுமாதலின், குழுக்கள் புதுப்பணிகளைப்பெறும் நிலைக்கு விதியின்பால் தள்ளப் படும்போது அரசும், ஒரு வேளை குழுக்களைவிட அதிகமான பணி களைப் பெறும்.[1]

மேற்கோள் நூல்கள்

(1) இ. ஆசீர்வாதம்: அரசியல் கோட்பாடு.

(2) ஆர். என். கில்கிறைஸ்ட்: அரசியல் விஞ்ஞானத்தின் கூறுகள்.

(3) இ. பார்க்கர்: சமூக அரசியல் கொள்கை விளக்கத்தின் கூறுகள்.

(4) எச். ஜே. லாஸ்கி: அரசியலுக்கு ஓர் இலக்கணம்.

(5) ஆர். ஜி. கெட்டல்: அரசியல் விஞ்ஞானம்.

(6) ஏ. அப்பாதுரை: அரசியல் நூலின் உட்பொருள்.

(7) வி. டி. மகாஜன்: அரசியல் விஞ்ஞானத்தின் கூறுகள்.

(8) ஏ. சி. கப்பூர்: அரசியல் நூல் கோட்பாடுகள்.

கேள்விகள்

1. இறைமையின் இருவித தன்மைகள் யாவை ?
2. இறைமையின் வரலாற்றைச் சுருக்கமாக விவரிக்கவும்.
3. இறைமையின் இயற்பண்புகள் யாவை ?
4. உண்மையான மற்றும் உரிமையின்படியான இறைமை களுக்கிடையிலான வேறுபாட்டைக் காட்டுக.
5. ஆஸ்டினது இறைமைக் கோட்பாடு யாது ?
6. இறைமைக் கொள்கையின் மீது பன்மை வாதிகளின் தாக்குதலை விவரிக்கவும்.

[1] எர்னஸ்டு பார்க்கர்: இங்கிலாந்தில் அரசியல் எண்ணங்கள், பக். 183

இயல் 8

சுதந்திரமும் சமத்துவமும்
(Liberty and Equality)

சுதந்திரம் (Liberty)

பொருள் மற்றும் வரையறை

'சுதந்திரம்' என்ற தமிழ்ச்சொல்லின் நேரடி ஆங்கிலச் சொல்லான 'லிபர்டி' (Liberty) என்கின்றச் சொல் 'லிபர்' (Liber) என்ற இலத்தீன் சொல்லிலிருந்துப் பெறப்பட்டதாகும். ஆனால் அரசியல் விஞ்ஞானத்தில், பல சிந்தனையாளர்களுக்கு அது ஒரே பொருளைக் குறிக்கவில்லை. ஆர். என். கில்கிறைஸ்ட் (R. N. Gilchrist)டின் கருத்துப்படி, 'சுதந்திரம் என்பதற்கு ஒவ்வொருவரும் ஒரு குழப்பமான கருத்தைக் கொண்டிருக்கிறார் கள் அல்லது ஏதோ ஒரு கருத்தைக் கொண்டுள்ளனர் அல்லது அதற்காக விழைகின்றனர். ஆனால் அச்சொல்லை பயன்படுத்தும் பத்து பேரில் இருவர்கூட அவர்கள் என்ன சொல்கிறார்கள் என் பதை தெரிவிப்பதில்லை. அவ்வாறு செய்தாலும் அவர்கள்ஒருவருக் கொருவர் இச் சொல்லை வரையறை செய்வதில் ஒத்துப்போவ தில்லை.'[1] தாமஸ் ஹாப்ஸின் (Thomas Hobbes) கருத்துப்படி. தடைகளும், எதிர்ப்புகளும் இல்லாததே சுதந்திரம் ஆகும். நியாயத்தின் அடிப்படையில் எழுவதே சுதந்திரமாகும் என்று ஸ்பினோசா (Spinoza)கூறுகிறார். மாண்டெஸ்க்யூவின்(Montesque) கருத்துப்படி, 'நாம் செய்ய நினைக்கும் செயலை மேற்கொள்ளும் உரிமையே சுதந்திரமாகும்' இலக்கியலாளர்களின் (idealists) கருத்துப்படி மன ஒழுக்கத்தைப் பின்பற்றுவதற்கான உரிமையே சுதந்திரமாகும். இக்கருத்தை கான்ட் (Kant) என்கிற அரசியல் அறிஞர் ஒழுக்க முறையில் மேற்போக்கிடமளிக்காத உச்சமுடி வான உளச்சான்றின் கட்டளை (Categorical imperative) எனக் குறிப்பிடுகிறார். ரூஸோவும் (Rousseau), கிரீனும் (Green) பொது விருப்பம் என அழைக்கிறார்கள். 'சுதந்திரம் என்பது தங்களது சிறப்பான நிலையை அடைய வாய்ப்புகளை நல்கிடும் சூழ்நிலையை

[1] ஆர்: என். கில்கிறைஸ்ட்: அரசியல் விஞ்ஞானத்தின் கூறுகள், பக். 119

ஆர்வத்துடன் பராமரித்தல் ஆகும்' என ஹெரால்ட் ஜே. லாஸ்கி கூறுகிறார்.[1] மனிதர்கள் அவர்களது சிறப்பான நிலையில் இருக்க சமூதாயத்தில் உரிமைகளை அனுபவிக்கவேண்டும். உரிமைகள் இன்றி சுதந்திரம் இருக்கமுடியாது. ஏனெனில் உரிமைகள் இன்றி மனிதர்கள் தனி மனிதரது சிறப்பியல்புக்குத் தொடர்பில்லா சட்டங்களுக்கு அடக்கமாக உள்ளனர்.[2]

இரு வேறுபட்ட கருத்துக்கள்

சுதந்திரத்தின் பொருள் பற்றிய மேற்கூறிய பல அரசியல் அறிஞர்களின் கருத்துக்களிலிருந்து சுதந்திரம்பற்றிய இருவேறான கருத்துக்களை நாம் உணரலாம். அவையாவன, எதிர்மறை கருத்து, நேர்மறை கருத்து.

எதிர்மறை கருத்திலிருந்து சுதந்திரத்தை அணுகினால், எவ்வித தடையுமில்லாமல் எந்தச் செயலையும் மேற்கொள்வதற்கான உரிமையே சுதந்திரம் எனப் பொருள்படுகிறது. இக்கருத்து குறுகலான கருத்தாகும். ஏனெனில், தடைகளற்ற சுதந்திரமென்று பார்க்கும்போது சமுதாயத்தில் சுதந்திரம் சாத்தியமல்ல. சமூகத்தில் வாழ்கின்ற ஒவ்வொருவனும் இதுபோன்ற தடையற்ற சுதந்திரத்தைக் கொண்டிருப்பார்களேயானால் அச்சமுதாயத்தில் ஒழுங்குமுறையின்றி குழப்பம்தான் நிலவும். 'சரியான வாழ்க்கை முறையின் வளர்ச்சிக்கு உகந்த சட்டங்களை வரலாற்று அனுபவம் நமக்கு உருவாக்கித் தந்துள்ளது. அவைகளுக்குக் கீழ்ப்படிதலை கட்டாயப்படுத்துவது சுதந்திரத்தின் மீதான நியாயமான கட்டுப்பாடே,' என லாஸ்கி கூறுகிறார்.[3] ஒவ்வொருவரது உரிமையும் மற்றவர்களது உரிமையினுடன் உறவுடையவை. மேலும் அது கட்டுப்படுத்தும் தன்மையுடையதாகவும் இருக்கவேண்டும். ஆகவே சுதந்திரம் என்பதனை வரையறுக்கப்படாத தனிநபரின் வரம்புக் குட்படாத உரிமைகள் என்று பொருள் கொள்ளாமல், குறிப்பிட்ட திறமைகளை வளர்க்க வரையறுக்கப்பட்ட தனிநபரின் வரம்புக்குட்பட்ட, உறுதியான உரிமைகள் எனப்பொருள்,' என லாஸ்கி கூறுகிறார்.[4] சுதந்திரமும், கட்டுப்பாடுகளும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையல்ல; ஆனால் இணைந்து முழுமையாக்க வல்லது.

[1] ஹெரால்ட் ஜே. லாஸ்கி: அரசியலின் இலக்கணம், பக். 142

[2] மேற்கூறிய ஆதாரம்.

[3] ஹெரால்ட் ஜே. லாஸ்கி: அரசியலின் இலக்கணம், பக். 142

[4] பார்க்கர்: அரசியல் விஞ்ஞான கூறுகளும் அரசியல் கோட்பாடுகளும், பக். 95

சுதந்திரம் ஆக்கமுறையை உள்ளடங்கியது. சட்டங்கள் யாவும் வரலாற்று அனுபவத்தால் மக்களுடைய நல்வாழ்விற்காகவும், வசதிக்காகவும் ஏற்பட்ட விதிகளாகும். இவ்விதிகளுக்கு கட்டுப்படுவதால் மக்கள் தங்களுடைய சுதந்திரத்தினை இழப்பதில்லை. இந்த அர்த்தத்தில் பார்க்கும்போது சுதந்திரம் ஆக்கமுறையை உள்ளடங்கியதாக உள்ளது.

சுதந்திரத்தின் வகைகள்

அரசியல் சிந்தனையாளர்கள் பலவகையான சுதந்திரங்களைக் குறிப்பிட்டுள்ளனர். மாக்ஐவரின் (MacIver) வகைப்பாடு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.[1]

சுதந்திரம்

இயற்கை சுதந்திரம்	சிவில் சுதந்திரம்	அரசியல் சுதந்திரம்	பொருளாதார சுதந்திரம்	தேசிய சுதந்திரம்

1. இயற்கை சுதந்திரம் (Natural Liberty)

ஒருவன் தன்னுடைய விருப்பங்களை நிறைவேற்றுவதற்கான வரம்பற்ற உரிமையே இயற்கை சுதந்திரமாகும். இயற்கை சுதந்திரமானது சமுதாயம் அல்லது அரசு தோன்றுவதற்கு முன்பான காலத்தில் நிலவியது எனக் கூறலாம். தற்காலத்தில் ரூஸோ, ஜான் லாக் மற்றும் மற்றோரின் எழுத்துப் படைப்புகளால் இயற்கை சட்டம் அதனது செல்வாக்கை பிரயோகித்தது. சமுதாயமும் அரசும் தோன்றியதாலும், பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதாலும் இயற்கை சுதந்திரம் முடிவடைய நேர்ந்தது.

2. சிவில் சுதந்திரம் (Civil Liberty)

நியாயமற்ற மற்றும் சட்டப்படியல்லாத கட்டுப்பாடுகள் இல்லாததே சிவில் சுதந்திரம் ஆகும். இது ஆக்க ரீதியானதும், எதிர்மறையானதுமாகும். இது கட்டுப்பாடுகள் இல்லாத நிலையை மட்டுமின்றி, மனிதன் வளர்ச்சியடைவதற்கான வாய்ப்புகளையும் குறிக்கிறது. மெய் சுதந்திரம், அறிவுச் சுகந்திரம் மற்றும் செயல்முறை சுதந்திரம் ஆகிய சுதந்திரங்களை சிவில் சுதந்திரம் உள்ளடக்கியது. எவ்வகையான சுதந்திரத்துக்கும் சிவில் சுதந்திரமே அடிப்படை எனச் சரியாகக் கருதலாம். பார்க்கரின் (Barker) கருத்துப்படி சிவில் சுதந்திரம் வெவ்வேறு வகையில் கூறப்பட்ட

[1] ஆர். எம். மாக்ஐவர்: தற்கால நாடு.

மூன்று விதிகளில் உள்ளது. மெய் சுதந்திரம் என்பது காயங்களிலிருந்தும், உயிருக்கான ஆபத்திலிருந்தும் சுதந்திரம் மற்றும் உடல்நலன், விரும்பியபடி நடமாடுதலையும் குறிக்கும்; அறிவுச் சுதந்திரம் எனப்படுவது ஒருவன் தன்னுடைய எண்ணத்தையும், நம்பிக்கையையும் எடுத்தியம்புவது ஆகும்; செயல்முறை சுதந்திரம் எனப்படுவது ஒருவன் தான் நினைப்பதை மற்றவர்கள் தொடர்போடு செய்து முடித்தலாகும். ஒரு அரசுக்குள் உள்ள மக்களுக்கும், கழகங்களுக்கும் சிவில் சுதந்திரம் மிக முக்கியமானதாகும். அமெரிக்க ஐக்கிய நாட்டிலும், இங்கிலாந்திலும் மக்கள் சிவில் சுதந்திரத்துக்கும், தனிமனித சுதந்திரத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றனர். ஜே. எஸ். மில் (J. S. Mill) சுதந்திரத்தையும், தனி மனித சுதந்திரத்தையும் முழுமையாக ஆதரித்தார். சுதந்திரம் பற்றிய அவரது 'On Liberty' என்ற தலைப்புடைய கட்டுரை மிகச் சிறந்ததொன்ருகக் கருதப்படுகிறது. ஒருவன் பெரும்பான்மை பிரிவினைச் சேர்ந்தவனுயினும் அல்லது சிறுபான்மை பிரிவினைச் சேர்ந்தவனுயினும் அவனுக்கு முழுமையான சுதந்திரம் கொடுக்கப்படவேண்டும்; அவன் சகித்துக் கொள்ளப்படவேண்டும் என மில் கருதுகிருர். சிவில் அல்லது தனிப்பட்ட சுதந்திரம் கீழ்க்கண்டவைகளைக் குறிக்கிறது:

(a) பேச்சுரிமை

(b) ஓரிடத்திலிருந்து மற்ருெரு இடத்திற்கு செல்லும் உரிமை

(c) சொத்துரிமை

(d) சுதந்திரமாக வாழ்வதற்கு உரிமை

(e) கலாச்சார உரிமை

3 அரசியல் சுதந்திரம் (Political Liberty)

கில்கிறைஸ்டின் கருத்துப்படி, அரசியல் சுதந்திரம் என்பதும் மக்களாட்சி என்பதும் ஒரே பொருளை தரக்கூடிய சொற்களாகும். லியோகாக் (Leacock) அரசியல் சுதந்திரத்தை அரசியலமைப்பு சுதந்திரம் எனக் கூறுகிருர். அரசினுடைய பணிகளில் தீவிரமான பங்கு பெறுதலே அரசியல் சுதந்திரம் எனப்படும் என லாஸ்கி அரசியல் சுதந்திரத்தை வரையறுக்கிருர். அரசியல் சுதந்திரம் ஆக்கமுறை தன்மையைக் கொண்டது. அரசியல் சுதந்திரம் அரசு தனது குடிமக்களுக்கு அளித்துள்ள அரசியல் உரிமைகளை உள்ளடக்கியது. ஓட்டளிக்கும் உரிமை, தேர்தலில்போட்டியிடும் உரிமை, பொதுப் பதவியினை அடைய உரிமை மற்றும் புகார் மனு

எழுதும் உரிமை ஆகியவை அரசியல் உரிமைகளாகும். அமெரிக்க ஐக்கிய நாடுகள், இங்கிலாந்து, இந்தியா ஆகிய நாடுகளில் வாழும் மக்கள் முழுமையான அரசியல் சுதந்திரத்தை அனுபவிக்கிறார்கள். அரசியல் சுதந்திரம் அரசியலமைப்பினாலும், சட்டத்தாலும் அங்கீகரிக்கப்படவேண்டும். கல்விமுறை பரவியுள்ளதாலும், அரசியல் கட்சிகளின் அமைப்பினாலும், பத்திரிகை சுதந்திரத்தினாலும் அரசியல் சுதந்திரத்தின் எல்லை அதிகரிக்கிறது. அரசியல் சுதந்திரம் பின்வரும் உரிமைகளைக் கொண்டுள்ளது :

(a) வாக்களிக்கும் உரிமை

(b) தேர்ந்தெடுக்கப்படும் உரிமை

(c) பொதுப்பதவியினை வகிக்கும் உரிமை

(d) அரசாங்கத்தை திறனாய்வு செய்யும் உரிமை

4. பொருளாதாரச் சுதந்திரம் (Economical Liberty)

தற்காலத்தில் பொருளாதாரச் சுதந்திரம் இல்லையெனில் மற்ற எவ்வித சுதந்திரமும் பயனற்றது என அதிகமாகக் கருதப்படுகிறது. வயிற்றுப் பசியோடு இருப்பவர்களுக்கு சிவில் சுதந்திரத்திற்கும். அரசியல் சுதந்திரத்திற்கும் எவ்வித பொருளும் கிடையாது. போதுமான பொருளாதாரப் பாதுகாப்பு ஒருவனுக்கு இல்லையென்றால், அவன் அரசின் எந்த செயல்களிலும் பங்குபெற மாட்டான். மேலும் தன்னுடைய சிவில் சுதந்திரத்தினை மற்றவர்களுடைய தலையீட்டிலிருந்து பாதுகாத்து உறுதியாக்கிக் கொள்ள மாட்டான். பொருளாதாரச் சுதந்திரம் இல்லையெனில், அரசியல் சுதந்திரம் யாதொரு பொருளும் இல்லாமல் செயலற்றதாகிவிடும். மக்களாட்சி உண்மையானதாகவும், அர்த்தமுள்ளதாகவும் இருக்க வேண்டுமெனில் குடிமக்கள் அனைவரும் பொருளாதாரச் சுதந்திரம் பெற்றிருக்க வெண்டும், மக்களாட்சி பொருளாதாரத் துறையில் நுழைந்து எல்லோருக்கும் வேலை வாய்ப்பினையும், குறைந்தபட்ச ஊதியத்தினையும் உறுதிசெய்யவேண்டும். பொருளாதாரச் சுதந்திரம் பின்வரும் உரிமைகளைக் கொண்டுள்ளது :

(a) வேலை செய்யும் உரிமை

(b) போதுமான அளவு ஊதியம்

(c) ஓய்வு எடுத்துக்கொள்ளும் உரிமை

(d) உடல் நலமின்மையையும், வேலையின்மையையும் எதிர்த்துப் பயன்பெறும் உரிமை

(e) சுரண்டலுக்கெதிரான உரிமை

5. தேசிய சுதந்திரம் (National Liberty)

சிவில், அரசியல் மற்றும் பொருளாதாரச் சுதந்திரங்களுக்கு அடிப்படையாக தேசிய சுதந்திரம் இருப்பதால், இச் சுதந்திரம் மிக முக்கியமான சுதந்திரமாகக் கருதப்படுகிறது. ஒரு தேசத்தில் வாழும் எல்லா மக்களும் அத் தேசத்தைச் சார்ந்த நபர்கள் என்ற முறையில் சுதந்திரம் பெற்றிருப்பதால், அதுவே தேச சுதந்திர மாகும். ஆகவே தேச சுதந்திரம் என்பது தேசிய விடுதலையாகும். அயல்நாடுகளின் கட்டுப்பாடில்லாமல், மக்கள் இறைமையைப் பெற்றுள்ள நாடே தேச சுதந்திரம் பெற்ற நாடாகும்.

சுதந்திரத்திற்கு பாதுகாப்புகள்

உலகத்தில் வாழும் எல்லா மக்களும் தங்களுடைய உரிமைகள் மீது பெரும் அக்கறை கொண்டுள்ளார்கள். உரிமைகளும் சுதந் திரமும் ஒருவன் தன்னுடைய ஆளுமையினை வளர்த்துக் கொள்வ தற்கான வாய்ப்புகளை நல்குகின்றன. சுதந்திரத்தின் மூலம்தான் ஒருவன் தன்னுடைய ஆளுமையினை அடைந்து, அரசினுடைய நல்வாழ்வுக்கு உதவமுடியும். ஆகவே, மக்கள் யாவரும் தங்க ளுடைய சுதந்திரத்தை பலவகையான அபாயங்களிலிருந்து பாது காத்துக் கொள்ள விரும்புகின்றனர். கீழ்க்காணும் நிலைமைகள் இருந்தால்தான் சுதந்திரம் பாதுகாக்கப்படும் :

(a) சிறப்புரிமை இல்லாமை

சிறப்புரிமை எனப்படுவது உரிமையின் நேர் எதிர் கருத்தாகும். மக்களிடையே ஒரு குறிப்பிட்ட சாராருக்கு மட்டும் சிறப்புரிமை கொடுக்கப்பட்டால், சிறப்புரிமை இல்லா மக்கள் தங்களுடைய ஆளுமையினை எடுத்துக் கூறுகின்ற திறமையினை வளர்த்துக் கொள்ளமுடியாது.

(b) சட்டத்தின் ஆட்சி (Rule of Law)

சட்டத்தின் ஆட்சி, சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கொள்கையினை நல்குகிறது. இது சுதந்திரத்துக்கு ஓர் நிச்சயமான பாதுகாப்பு எனக் கருதப்படுகிறது. எந்த அளவுக்கு சட்டத்தின் ஆட்சி நிலவுகிறதோ, அந்த அளவுக்கு சுதந்திரமானது பாது காக்கப்படும்.

(c) அடிப்படை உரிமைகளின் பட்டியல் (List of Fundamental Rights)

அரசியலமைப்பினால் உறுதியளிக்கப்பட்ட அடிப்படை உரிமை களின் பட்டியல் தனி மனிதனின் சுதந்திரத்தைப் பாதுகாக்கும்

கேடயமாகும், இக்கேடயம், தனி மனிதனின் சுதந்திரத்தின் மீது அரசாங்கம் ஊடுருவாமல் பாதுகாக்கிறது.

(d) அதிகாரப் பிரிவினை (Separation of Powers)

அதிகாரப் பிரிவினை தத்துவத்தின் சிற்பியான மாண்டெஸ்க்யூ (Montesque)வின் கருத்துப்படி, அரசாங்கத்தின் மூன்று பிரிவுகளாகிய ஆட்சித்துறை, சட்டமியற்றும் துறை மற்றும் நீதித்துறை ஆகியவற்றின் அதிகாரங்கள் ஒரே நபரிடம் இருந்தால், குடிமக்களது சுதந்திரம் இருக்கமுடியாது. ஆகவே அவர் இம்மூன்று அதிகாரங்களும் பிரிக்கப்படவேண்டும் எனக் கருதுகிறார்.

(e) மக்களாட்சி (Democracy)

எல்லா வகையான அரசாங்கங்களிலும் மக்களாட்சி மட்டுமே சுதந்திரத்துக்கு சாதகமானது. சுதந்திரமே மக்களாட்சியின் சாரம் ஆகும். சுதந்திரமும், சமத்துவமும் மக்களாட்சியின் கோட்பாட்டுச் சொற்கள் ஆகும்.

(f) நிலையான எச்சரிக்கை (Eternal Vigilance)

மக்கள் எப்போதும் எச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும். சுதந்திரத்தை விட விலைமதிப்பில்லாதது எதுவும் இல்லை என மக்கள் தங்கள் இதயத்தில் உணரவேண்டும். ஒருவன் எச்சரிக்கையுடன் இல்லையென்றால், தனது சுதந்திரத்தை அவன் இழக்க நேரிடும். ப்யரன் (Byron) என்ற அறிஞரின் கருத்தின்படி, 'நிலையான எச்சரிக்கையே சுதந்திரத்தின் விலையாகும்.' ஒருவன் தன்னுடைய உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளப் போரிட தயாராக இருக்கவேண்டும். ஒரு சில அடக்கப் பேச்சின்போது பெரிக்ல்ஸ் (Pericles) ஏதென்ஸ் மக்களிடம் 'தைரியமே சுதந்திரத்தின் இரகசியம்' எனக் குறிப்பிட்டார். மக்கள் சிரத்தையின்றி, ஆழ்துயிலில் இருப்பின் சுதந்திரம் பறிபோய்விடும்

(g) பொதுமக்களின் அபிப்பிராயமும், சுதந்திரமான பத்திரிகைகளும் (Public Opinion and Free Press)

சிறந்த பொதுமக்களின் அபிப்பிராயமும், சுதந்திரமான பத்திரிகைகளும் சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் பெரும் பணியாற்ற முடியும். பத்திரிகைகளும் மற்ற அமைப்புகளும் பொதுமக்கள் அபிப்பிராயத்தை உருவாக்குகின்றன. தற்காலத்தில் அரசியல் கட்சிகள் இன்றியமையாதவையாக உள்ளன. அதிகமான மக்களின் ஆதரவுள்ள வலிமையான அரசியல் கட்சி மக்களின் சுதந்திரத்துக்கு ஊறு விளைவிக்கும் அரசாங்கத்தினை தூக்கி எறியும் வலிமையினைப் பெற்றுள்ளது.

சமத்துவம் (Equality)

சமத்துவத்தின் பொருள்

சுதந்திரம் போன்று, சமத்துவமும் மக்களாட்சியின் சிறந்த அம்சமாகும். அரசியல் விஞ்ஞானத்தில் சமத்துவம் தவிர வரைமுறை செய்ய மிகக் கடினமான கருத்து வேறு ஏதும் இல்லை. ஜி. சார்டோரி (G. Sartori) யின் கருத்துப்படி. 'சமத்துவம் பல கருத்துகளையும் உட்கருத்துகளையும் கொண்டிருப்பதால், இதனை நாம் பல கோணங்களிலிருந்து ஆராய்ந்த பிறகு நாம் இதனை முற்றிலும் உணரமுடியாத நிலையில் இருப்பதாகவே உணர்கிறோம்'.[1]

பொதுவாக, ஒரே மாதிரியாக நடத்தப்படும் விதத்தினையும், பயன்பெறுதலையும் குறிப்பதற்கு சமத்துவம் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. மனிதர்கள் பல்வேறுபட்ட விருப்பத்தினையும், திறமையினையும், தேவையையும் கொண்டிருப்பதால்தான் சமத்துவத்திற்கு ஒரே மாதிரியாக நடத்தும் விதம் என்று பொருள் கொள்வதற்கில்லை. அது பயன்பெறுதலிலும் ஒரே மாதிரியான நிலையைக் குறிப்பதில்லை. எப்படியாயினும், ஒருவன் மற்றவர்களுடைய உரிமைகளில் தலையிடும் அளவிற்கு, பயன் அளித்தலில் உள்ள வேறுபாடுகள் குறிப்பிடத்தக்க அளவில் இருக்கக்கூடாது.

இரண்டாவதாக, சமத்துவம் என்பது சிறப்புரிமைகள் இல்லாமையே; ஒவ்வொருவனும் தனது பங்கினைப்பெற்று, தனது சிறப்பான நிலையை அடையக்கூடிய நிலையில் இருக்கவேண்டும். உரிமைகள் பொதுவாக அனைவராலும் அனுபவிக்கப்படவேண்டும். 'உரிமைகளின் உருவில் உறுதிசெய்து எனக்களிக்கப்பட்டுள்ள நிலைமைகள் அதே அளவில் பிறருக்கும் அளிக்கப்படவேண்டும்; மற்றவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகள் எனக்கும் அளிக்கப்படவேண்டும் என்பதே சமத்துவக் கொள்கையின் பொருள்,' என பார்க்கர் (Barker) குறிப்பிடுகிறார்.[2] எந்த ஒரு மனிதனையோ அல்லது அமைப்பையோ அதிகார பீடத்தை அடையவிடாமல் தவிர்ப்பது அவர்களுக்குச் சுதந்திரத்தை மறுப்பதாகும்.

மூன்றாவதாக, சமத்துவத்தின் ஆக்கமுறை கருத்தின்படி சமத்துவம்அனைவருக்கும் போதுமான வாய்ப்புகளை நல்குவதாகும். போதுமான வாய்ப்புகளுக்கான ஏற்பாடு என்பது சமத்துவமான

[1] ஜி. சார்டோரி: குடியாட்சி கொள்கை, பக் 326

[2] பார்க்கர்: அரசியல் விஞ்ஞான கூறுகளும் அரசியல் கோட்பாடுகளும்.

வாய்ப்புகளுக்கான ஏற்பாடு அல்ல. எல்லா மக்களும் தங்களுடைய இயல்புகளை வளர்த்துக் கொள்வதற்கான முழு அளவிலான சம வாய்ப்புகளை பிறப்பு, தகுதி மற்றும் சாதிவேறுபாடன்றி எல்லோருக்கும் அரசு வழங்கவேண்டும். 'ஒரு சிலருடைய குறிப்பிட்ட கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு, எல்லா மக்களுடைய அவசர கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும்,' என லாஸ்கி கூறுகிறார்.

இப்படியாக சுதந்திரம் போன்று சமத்துவமும் ஆக்க முறை, எதிர்மறை கருத்துக்களைக் கொண்டுள்ளது. எதிர்மறை கருத்தின்படி, சமத்துவம் என்பது சாதி, நிறம் மற்றும் மதம் ஆகிய அடிப்படையில் எவ்வித வேறுபாடும் இல்லா நிலையாகும். ஆக்க முறை கருத்தின்படி சமத்துவம் என்பது எல்லோருக்கும் தங்களது இய்ல்புகளை வளர்த்துக்கொள்வதற்கு போதுமான வாய்ப்புகளை நல்குவதாகும்.

சமத்துவத்தின் வகைகள் (Kinds of Equality)

கீழே கொடுக்கப்பட்டுள்ளபடி பல்வேறு விதமான சமத்துவங்கள் உள்ளன :

1. சிவில் சமத்துவம் (Civil Equality)

சட்டத்தின் முன் சமம் என்பதே சிவில் சமத்துவத்தின் பொருள். சிவில் உரிமைகள் பற்றிய விஷயங்களில் மனிதனுக்கும், மனிதனுக்குமிடையே வேறுபாடு இருக்கக்கூடாது. செல்வந்தர்களும் ஏழைகளும் ஒரே மாதிரியான நீதிமன்றங்களில் விசாரிக்கப்படவேண்டும்.

2. அரசியல் சமத்துவம் (Political Equality)

இது மக்களாட்சியின் அடிப்படை ஆகும். ஒவ்வொருவரும் அதிகாரத்தை அடையும் வழியை அடைய உரிமைப் பெற்றிருப்பதை இது குறிக்கும். அனைவருக்கும் சமமாக அரசியல் உரிமைகள் என்பதனை இது குறிக்கும். மக்களாட்சி அரசில் மட்டுமே அரசியல் உரிமைகள் இருக்கின்றன.

3. சமூக சமத்துவம் (Social Equality)

எவரும் சிறப்புரிமைக்கு உரிமை படைத்தவர் அல்லர் என்பதே இதன் பொருள். சமமான அந்தஸ்தே சமூக சமத்துவத்தின் அடிப்படை. சமூக சமத்துவம் இன்றி, வேறு எந்த கோணத்திலிருந்தும் சமத்துவக் கருத்தை நிலைநிறுத்தமுடியாது. இந்திய அரசியலமைப்பின்படி, இந்தியக் குடிமக்கள் அனைவரும்

சமூக சமத்துவத்தை அனுபவிக்கிறார்கள். மதம், சாதி, பால் அடிப்படையில் எவருக்கும் எதிரிடையாக எவ்வித வேறுபாடும் இருக்கக் கூடாது.

4. பொருளாதார சமத்துவம் (Economic Equality)

பொருளாதார சமத்துவம் என்பது பொருளாதார அதிகாரத்தில் சமத்துவமாகும். உண்மையான பொருளாதார சமத்துவமின்றி இருப்பின் அரசியல் சமத்துவம் உண்மையானதாக இருக்க முடியாது. எந்த அரசிலும் பொருளாதார சமத்துவத்துக்கு முக்கியமான இடமொன்று கொடுக்கப்படவேண்டும். கீழ்க்கண்ட சொற்களில் பொருளாதார சமத்துவத்தின் மிக அதிகமான முக்கியத்துவம் பற்றி எச்.ஜே. லாஸ்கி கூறுகிறார். உண்மையான பொருளாதார சுதந்திரம் இன்றி அரசியல் சமத்துவம் உண்மையானதாக இராது. பொருளாதார சமத்துவமில்லா அரசியல் அதிகாரம் பொருளாதார அதிகாரத்துக்கு பணியாளாகத்தான் இருந்தாகவேண்டும்.'[1] எப்படியாயினும், பொருளாதார சமத்துவம் என்பது செல்வத்தை சமமாக பங்கிடுதலைக் குறிப்பதில்லை; நிறைவு பெறும் ஒரு நிலையில் சமத்துவத்தை அது குறிக்கிறது.

5. இயற்கை சமத்துவம் (Natural Equality)

இயற்கை சமத்துவமென்பதற்கு முழுமையான சமத்துவம் என்பது பொருளல்ல. மனிதர்களால் ஏற்படுத்தப்பட்டசமத்துவமின்மை இல்லாமையே இயற்கை சமத்துவமாகும். இயற்கை சமத்துவமின்மையின் அடிப்படையில் சட்டம் சமத்துவமின்மையை உண்டாக்கக் கூடாது.

பலவகையான சமத்துவங்கள் ஒன்றையொன்று சார்ந்துள்ளவை. ஒருவகை சமத்துவம் இல்லாவிடினும் சுதந்திரத்தை உருவாக்கும் மற்றொரு சமத்துவத்தைப் பொய்யாக்கிவிடும். எப்படியாயினும், நடைமுறையில் எவ்விடத்திலும் எல்லா சமத்துவங்களும் ஒரே நேரத்தில் இருப்பதில்லை.

சுதந்திரமும் சமத்துவமும் (Liberty and Equality)

சுதந்திரமும் சமத்துவமும் மனித ஆளுமையின் இன்றியமையாத இரு குணங்களாகும். சுதந்திரத்துக்கும், சமத்துவத்துக்கும் இடையிலான உறவுகள் பற்றி இருவிதமான கருத்துகள் அரசியல் அறிஞர்களிடையே உள்ளன. ஒன்று, அவை பகைமையானவை என்பதும், மற்றது அவை இணைந்து முழுமையாக்கவல்லது என்பதும் ஆகும்.

[1] எச். ஜே. லாஸ்கி: அரசியல் இலக்கணம்.

1. சுதந்திரமும் சமத்துவமும் ஒன்றுக்கொன்று பகைமையானவை

இக்கருத்தை டி டாக்குவெல்லி (De Tocqueville)யும், ஆக்டன் பிரபுவும் (Lord Acton) பங்கிட்டுக் கொள்கின்றனர். 'சமத்துவத்துக்கான தீவிர உணர்ச்சி சுதந்திரத்திற்கான நம்பிக்கையை பயனற்றதாக ஆக்கிவிட்டது,' என ஆக்டன் பிரபு கூறுகிறார். சுதந்திரத்தையும், சமத்துவத்தையும் நாம் சொற்களின் வாசகப்படி புரிந்து கொண்டால் இது உண்மையாகும். சுதந்திரம் அழிக்கப்பட்டால்தான் ஒரேவிதமான சமத்துவம் சாத்தியமாகும். ஆனால் அவ்வித சமத்துவம் அடிமைத் தளத்தில் ஒவ்வொருவரும் சமமாக உள்ள அடிமை சமத்துவம் ஆகும். சுதந்திரம் என்பது கட்டுப்பாடற்ற சுதந்திரம் என்றால், சமத்துவம் இருக்க இயலாது. ஏனெனில் வலிமையே உரிமையாகி விடுகிறது. ஆகவே, சமத்துவமும் சுதந்திரமும் தவறாக பொருள் கொள்ளப்பெறின், ஒன்றுக்கொன்று பகைமையானவைப் போலத் தோன்றும்.

2. சமத்துவமும் சுதந்திரமும் இணைந்து முழுமையாக்க வல்லது

இக்கருத்தை ரூஸோ, மேக்ஐவர், டானி ஆகியோர் பகிர்ந்து கொள்கின்றனர். 'சுதந்திரத்துக்கு எதிராக இல்லாத அதிகமான அளவு சமத்துவம் அவசியமானது,' என்று டானி (Towny) கூறுகிறார்; சுதந்திரமும், சமத்துவமும் அதனது உண்மையான பொருளுடன் புரிந்துகொள்ளப்பட்டால், அவையிரண்டும் ஒன்றுடன் ஒன்று இணைந்து முழுமையாக்க வல்லன என அறியலாம். உண்மையில் அவை பிரிக்கப்பட இயலாதவை. சமத்துவம் இல்லாத நிலையில், சுதந்திரம் ஒரு கேலிக்கூத்தாக இருக்கும்.

பல நடப்புகளின் சமத்துவம் சுதந்திரத்துக்கு அவசியமானதாக உள்ளது. உதாரணமாக, சிவில் சுதந்திரத்தை அனுபவிக்க சட்டத்தின் முன் சமத்துவம், பொருளாதார சமத்துவம் மற்றும் சமூக சமத்துவம் மிக அவசியமானவையாகும் இதைப்போன்றே, அரசியல் சுதந்திரத்தை அனுபவிக்க பொருளாதார சமத்துவமும், சமூக சமத்துவமும் அவசியமானது. இவ்வாறு, சமத்துவமும் சுதந்திரமும் இணைந்து முழுமையாக்கவல்லது; ஒன்றுக்கொன்று பொருத்தமுடையாது. இவையிரண்டும் ஒன்றினை ஒன்றுச் சார்ந்துள்ளது. சுதந்திரம் சமத்துவத்தை உயர்த்துகிறது; சமத்துவம் சுதந்திரத்தை வளர்க்கிறது. அவைகள் உரிமைகள் மற்றும் கடமைகள் போன்று ஒரே நாணயத்தின் முன்பக்கம் மற்றும் பின்பக்கங்களாகும்.

சுதந்திரம் சமத்துவத்திற்கு முன்பானதா அல்லது சமத்துவம் சுதந்திரத்துக்கு முன்பானதா என்பது பற்றி விவாதம்

'சமத்துவத்திற்கான தீவிர உணர்ச்சி சுதந்திரத்துக்கான நம்பிக்கையை வீணடித்துவிட்டது' என்றுர் ஆக்டன் பிரபு; டி டாக்குவெல்லியும், ஆக்டன் பிரபுவும் சுதந்திரமும், சமத்துவமும் ஒன்றோடொன்று பகைமையுணர்ச்சி உள்ளவை என்ற கருத்தைக் கொண்டுள்ளனர். தடைகளற்ற சுதந்திரத்தை சுதந்திரத்துக்கு சமமாகக் கருதக்கூடாது. அவ்வாருன ஓர் நிலே பலருக்கு தீமை யையும், சிலருக்கு செல்வத்தையும்அதிகாரத்தையும் கொடுக்கும். செல்வத்தில் அதிகமான சமத்துவமின்மை அதிஷ்டம் இல்லாத பலரது சுதந்திரத்தை குறைத்து பறித்துவிடும். பெரும் செல்வம் படைத்தவர்கள் அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தி சமத்துவ மின்மையை நிரந்தரமாக்கி விடுவார்கள். சமத்துவமின்மை சுதந்திரத்தைப்பாதிக்கும். சுதந்திரம் போதுமானதாக இல்லாத நிலேயில், கருத்துக்களே வெளியிடும் உரிமையும், சுய மேம்பாட்டு உரிமையும் கனிசமான அளவு பாதிக்கப்படும். ஆகவே, சமத் துவத்தினே சுதந்திரத்தின் அடிப்படையாகக் கருதுதல்வேண்டும்.

சுதந்திரம் பொருளுள்ளதாக இருக்கவேண்டுமானுல் அங்கு சமத்துவம் இருக்கவேண்டும். சட்டத்தின்முன் அனேவரும் சமம் என்று இருந்தால்தான் அங்கு சிவில் சுதந்திரம் இருக்கமுடியும். அரசியல் சுதந்திரமும் சமத்துவத்தினே வலியுறுத்துகிறது. எந்த ஒரு சமுதாயத்தில் நியாயமான விகிதாச்சாரமற்ற செல்வப்பங்கீடு உள்ளதோ, அச்சமுதாயத்தில் சிவில் சுதந்திரமோ, அரசியல் சுதந்திரமோ இருக்காது. சுதந்திரம் என்பதற்கு மனித ஆத்மாவை மேம்படுத்தும் சக்தி என்னும் பொருள் கொள்வோ மானுல், சமமானவர்களுள்ள சமுதாயத்தைத் தவிர வேறெங்கும் அரிதாகத்தான் அது இருக்கும். எங்கெல்லாம் பணக்காரன், ஏழை, படித்தவன், படிக்காதவன் என்று இருக்கிருர்களோ, அங் கெல்லாம் எஜமானர்களும், வேலேக்காரர்களும் இருப்பார்கள். மேற்கூறிய வாதத்தின் பயனுக, சமத்துவம் சுதந்திரத்துக்கு முந்தயப்பட்டது என முடிவெடுக்கப்படலாம்.

மேற்கோள் நூல்கள்

(1) ஜே. கே. ப்ளன்ஷ்லீ: நாட்டின் கோட்பாடுகள்.

(2) ஜி. இ. ஜி. கேட்லின்: அரசியல் விஞ்ஞானத்தைப் பற்றிய உரை.

(3) எச். ஜே. லாஸ்கி: தற்கால நாட்டில் சுதந்திரம்.

(4) ஜே. ஆர். சீலே: அரசியல் விஞ்ஞானத்திற்கு ஓர் அறிமுக உரை.

(5) எச். சிட்ஜ்விக்: அரசியல் மூலப் பொருள்கள்.

கேள்விகள்

1. சுதந்திரத்தின் வகைகள் யாவை?

2. சுதந்திரத்தைப் பாதுகாக்கும் ஏற்பாடுகளை அட்டவணைப் படுத்துக.

3. சுதந்திரத்துக்கும் சமத்துவத்துக்கும் இடையிலான தொடர்புகளை ஆராய்க.

இயல் 9

உரிமைகளும் கடமைகளும்

(Rights and Duties)

உரிமைகளும், கடமைகளும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. ஒவ்வொரு உரிமையும் ஒரு ஒத்த கடமையைப் பெற்றுள்ளது, 'கடமைகள் உள்ள உலகில் மட்டும்தான் உரிமைகள் குறிப்பிடத்தக்கவை.'[1] ஒவ்வொரு உரிமையும் சமுதாயத்தால் அங்கீகரிக்கப்படவேண்டும். ஓர் உரிமைக்கான சமுதாய அங்கீகாரம் தார்மீக அடிப்படையைப் பெற்றிருக்கவேண்டும். ஒவ்வொரு உரிமையும் ஒரு பொதுநலனைப் பெற்றிருக்க வேண்டும். ஒரு உரிமை ஒரு சுயநலமான பாத்தியதை அல்ல. எல்லா தற்கால மக்களாட்சி சமுதாயங்களும் உரிமைகளுக்கு ஓர் முக்கியமான இடத்தைக் கொடுத்துள்ளன. உரிமைகள் உண்மையிலேயே தனி நபர்களால் அனுபவிக்கப்படும் சுதந்திரங்கள் ஆகும். 'ஒவ்வொரு மனிதனும் தான் விரும்பியதைச் செய்வதற்கான உரிமையை, அதே செயலைச் செய்வதற்கான பிறர் பெற்றுள்ள சமமான உரிமையில் குறைந்த தலையீட்டுடன் பெற்றிருப்பதன் விளைவு அனைவரும் பெற்றுள்ள நடைமுறை சாத்தியமான அதிக பட்ச சுதந்திரமாகும்.'[2] சுதந்திரம் ஆக்க ரீதியான மற்றும் எதிர் மறையான இரு பக்கங்களைக் கொண்டுள்ளது. கட்டுப்பாடின்றி செயல்படும் உரிமையும் பிறர் தலையீடு இன்றி செயல்படும் உரிமையும் உரிமைகளை அனுபவிக்க அவசியமானவை. உரிமைகளை அனுபவிக்கவும், பத்திரமாக பாதுகாக்கவும்தேவையான சூழ்நிலைகளைப் பாதுகாக்க ஓர் மேம்பாடான அதிகாரம் தேவைப்படுகிறது. அதுவே அரசு ஆகும். அரசு தான் பெற்றுள்ள இறைமையின் காரணத்தால் உரிமைகளையும், கடமைகளையும் நடைமுறைப் படுத்த தேவையான சூழ்நிலைகளை உருவாக்கி, பராமரித்து வருகிறது. ஆதலின், அரசு இன்று உரிமைகளின் ஒரே தோன்றுமிடமாகக் கருதப்படலாம். அரசு தனி நபர்களின் உரிமைகளை, அவசியமானது எனக் கருதும்போது. குறைக்கவோ அல்லது முற்றிலும் நீக்கிவிடவோ முடியும். உதாரணமாக,

[1] என். வைல்டு: நாட்டின் ஒழுக்க அடிப்படை, பக். 119

[2] ஆர்.ஜி. கெட்டல்: அரசியல் விஞ்ஞானம், பக். 150

தனது சட்டங்களை மீறியதற்காகவோ அல்லது போர் போன்ற தேசிய பணிக்காகவோ, அரசு ஓர் தனி நபரின் வாழ்வை முடித்து விட முடியும்; அதைப் போன்றே, சொத்துக்களுக்கான உரிமையை முழுமையாக அனுபவித்தல் பல்வேறு கட்டுப்பாடு களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. மேலும் உரிமைகளை அனுபவித் தலில், பலவித கட்டுப்பாடுகள் அரசால் விதிக்கப்படுகின்றன. 'மக்கள் தொகை அதிகரித்தலாலும் மற்றும் சமுதாயம் மிகவும் சிக்கல் நிறைந்ததாக மாறுவதாலும் மனிதனுக்கும், மனிதனுக்கு மிடையிலான உறவுகள் தொடர்ந்து எச்சரிக்கையுடன் பாதுகாக் கப்படவேண்டும்; மற்றும் ஒவ்வொருவரது சுதந்திரமும் எல்லோரது நன்மைகளுக்காக அதிகமாகக் கட்டுப்படுத்தப்படு கிறது'.[1]

சட்டப்படியான உரிமைகளின் ஒரே தோன்றுமிடம் அரசு ஆகும். உரிமைகள், அரசின் இறைமையின் காரணமாகத்தான் இருக்கின்றன. அரசின் சட்டங்கள் தனி நபர் உரிமைகளுக்கு உத்திரவாதமளிப்பவர்களாகவும், பாதுகாவலர்களாகவும் பணி யாற்றுகின்றன. உரிமைகளைப் பராமரிக்க ஓரளவு கட்டுப்பாடுகள் முழுமையாக அவசியமானவை. இல்லாவிடின் அதன் விளைவு அராஜகமாக இருக்கும்.

பல்வேறு உரிமைகளின் உள் அடக்கத்தை பகுத்தாராய ஆரம்பிப்பதற்கு முன் 'சுதந்திரம்' என்ற சொல்லின் தன்மையை சுருக்கமாக பிரித்து பகுத்தாராய்வது சரியானது ஆகும். இச் சொல் பல்வேறு தன்மைகளில் பயன்படுத்தப்படுகிறது. சுதந் திரத்தின் நான்கு வகைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

1. இயற்கை சுதந்திரம் (Natural Liberty)

இது தெளிவற்றது. ஒருவர் தான் விரும்பியவாறு நடந்து கொள்ளும் சுதந்திரத்தை இது குறிப்பதாக எடுத்துக்கொள்ள லாம். 'ஒவ்வொருவரும் சுதந்திரத்தைப் பற்றி ஓர் தெளிவற்ற எண்ணத்தையும், அதைப் பெற ஓர் ஆசையையும் பெற் றுள்ளனர்.' ஆனால் அதனை விவரிப்பது சற்று கடினமானது.

2. தேசிய சுதந்திரம் (National Liberty)

இச்சொல் சுதந்திரத்தைக் குறிப்பதாக அடிக்கடி எடுத்துக் கொள்ளப்படுகிறது. இக்கருத்தின் அடிப்படையில் சுதந்திரம் எனும் சொல் சுய நிர்ணயக் கொள்கையைக் குறிப்பதாக சொல்லப்படலாம். வெளி இறைமையை அனுபவிக்கும் ஓர் அரசு, தேசிய சுதந்திரத்தைப் பெற்றுள்ளதாகக் கருதப்படலாம்.

[1] ஆர். ஜி. கெட்டல்: அரசியல் விஞ்ஞானம், பக். 150-151

3. அரசியல் சுதந்திரம் (Political Liberty)

சுதந்திரம் மக்களாட்சியின் மாற்றுச் சொல்லாகக் கருதப் படுகிறது. அரசியல் சுதந்திரம் என்பது மக்களின் அரசியல் உரிமை களாக கருதப்படுகின்றன. அவர்களது அரசாங்கத்தில் மக்களின் பெரும்பங்கு பரவலாக இருப்பின், நிறைய மக்கள் அரசியல் சுதந்திரத்தைப் பெற்றுள்ளதாக நாம் கருதலாம். 'ஒவ்வொரு அரசிலும் இறைமை இருக்குமிடத்தையும், அரசாங்கத்தின் அமைப்பையும் பொறுத்தே அரசியல் உரிமை அமைகிறது'.[1]

4. சிவில் சுதந்திரம் (Civil Liberty)

அரசு தனது மக்களுக்காக உருவாக்கி, பாதுகாக்கும் உரிமை களையும் சலுகைகளையும் சிவில் உரிமைகள் என அழைக்கிறோம். எங்கெல்லாம் சிவில் உரிமை உள்ளதோ, அங்கெல்லாம் சட்டத் தின் வரையறைகளுக்கு உட்பட்டு தனிமனிதன் செயலாற்றும் உரிமையை குறிப்பிடத்தக்க அளவில் பெற அனுமதிக்கப் படுகிறான். சிவில் உரிமைகள் தனி நபர்களாலும், அரசாங்கத் தாலும் பாதிக்கப்படலாம். சிவில் உரிமையை செயல்படுத்தும் போது பாரபட்சம் இருப்பது இல்லை.

விவாதிக்கப்பட்ட நான்கு உரிமைகளில், இயற்கை மற்றும் தேசிய உரிமைகள் தார்மீக உரிமைகள்; அரசியல் மற்றும் சிவில் உரிமைகள் சட்டப்படியான உரிமைகள். உரிமைகள் உத்தரவாத மளிக்கப்பட்டு, பாதுகாக்கப்படவில்லையாயின் புரட்சியே அதன் விளைவாக இருக்கும். அரசியல் மற்றும் சிவில் உரிமைகள் அரசினால் உண்டாக்கப்பட்டு, உத்தரவாதமளிக்கப்படுவதால் சட்டப்படியான உரிமைகளாக உள்ளன.

அரசியல் உரிமைகள் (Political Rights)

அரசின் இறைமையதிகாரத்தில் பங்கு கொள்ளும் நபர்கள் அனைவரும் அரசியல் உரிமைகளைப் பெற்றுள்ளனர். வாக்குரிமை யைப் பயன்படுத்துதலையும், பொதுப் பதவிகளை வகிப்பதையும் அரசியல் உரிமைகளை அனுபவிப்பதாகக் கருதலாம். இவ்வுரிமை களுக்கான ஏற்பாடு அரசால் தனது அடிப்படை சட்டமான அரசியலமைப்பில் செய்யப்பட்டுள்ளது. பெரும்பாலான அரசு களில் இவ்வுரிமைகளை பயன்படுத்துதல் மக்களின் விருப்பத்துக்கு விடப்பட்டுள்ளது. ஒரு சில அரசுகளில் வாக்களித்தல் கட்டாய மாக ஆக்கப்பட்டுள்ளது.

[1] ஆர். ஜி. கெட்டல்: அரசியல் விஞ்ஞானம், பக். 152

ஒரு மக்களாட்சி அரசில் அரசியல் உரிமைகள் பரவலாக வியாபித்திருக்கும். வேறு சொற்களில், அரசியல் உரிமைகள் எத்தனை மக்களால் முடியுமோ அத்தனை மக்களால் பங்கிட்டுக் கொள்ளப்படும். அரசியல் உரிமைகளைப் பெற்றுள்ள மக்கள் அரசாங்கத்தின் நடப்புகளில் நேரடியாகப் பங்கு கொண்டால், அந்த அரசாங்கம் நேரடி மக்களாட்சி (Direct Democracy) என அழைக்கப்படும். சிறிய அரசுகளில் மட்டுமே இவ்வகை சாத்திய மானது. ஒரு சில இன்றைய அரசுகளில் நேரடி மக்களாட்சியின் கருவிகளான சட்டத்தொடக்கம் (Intiative) மற்றும் குடியொப்பம் (Referendum) ஆகியவைகள் உபயோகத்தில் உள்ளன.

ஒரு அரசில் எல்லா நபர்களுக்கும் வேறுபாடு இன்றி அரசியல் உரிமைகள் கொடுக்கப்படுவதில்லை. அரசியல் உரிமைகள் கொடுக் கப்படும் அளவும் அரசுக்கு அரசு வேறுபடுகிறது. அரசாங்கம் அமைப்பதையும், அது நற்பயனை விளைவிக்கும் விதம் செயல் படுவதை எளிதாக்கவும் ஒரு சில நபர்கள் அரசியல் உரிமைகளை அனுபவிக்க அனுமதிக்கப்படுவதில்லை. அரசு சிறுபான்மை யினரின் பிரச்சினைகளையும் கவனத்தில் கொள்ளவேண்டும். பெரும்பான்மை மக்கள் சிறுபான்மையினரை கொடுங்கோன் மைக்கு உட்படுத்தக்கூடிய வாய்ப்புகள் அங்கு இருக்கக்கூடாது. அரசியல் உரிமைகளை புத்திசாலித்தனமாக பயன்படுத்தக் கூடிய வர்களுக்கு மட்டுமே அவைகள் கிடைக்கும்படி செய்யவேண்டும்.

சிவில் உரிமைகள் (Civil Rights)

சிவில் உரிமைகள் உண்மையில் சட்டப்படியான பாதுகாப்பு கள் ஆகும். சிவில் உரிமைகளின் அளவும் மற்றும் அவைகள் பாதுகாக்கப்படும் விதமும் மாறுபடுகின்றன. சிவில் உரிமைகளில் முக்கியமான அல்லது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு சில கீழே தரப்பட்டுள்ளன:

1. உயிர்வாழும் உரிமை (Right to Life)

மற்ற எல்லா உரிமைகளுக்கும் அடிப்படையானது இவ்வுரிமை. ஓர் உயிரில்லாமல் பிணம் எந்தவிதமான உரிமைகளையோ அல்லது சுதந்திரங்களையோ விரும்பிக் கோருவதில்லை. தனிநபர்களின் பாதுகாப்புக்கான ஏற்பாடுகள் எல்லா அரசுகளாலும் செய்யப் பட்டுள்ளன. முந்தைய சமுதாயங்களில் கொலை செய்யப்பட்ட நபரின் உற்றார் மற்றும் உறவினர் கொலைக்காக வஞ்சம் தீர்த்துக் கொள்வர். இன்று ஒரு கொலையாளி அரசிடமிருந்து மிகக் கடுமையான தண்டனையைப் பெறுகிறான். அரசு மனித வாழ்வுக்கு

முக்கியத்துவம் அளிப்பதால் தற்கொலை முயற்சிக்காகக் கூட தண்டனைத் தரப்படுகிறது. உயிர்வாழும் உரிமை, தற்காப்புக்கான உரிமை மற்றும் ஒருவனது உயிரைப் பாதுகாத்துக் கொள்ள வலிமையைப் பயன்படுத்தும் உரிமை ஆகியவற்றை உள்ளடக்கியது. போர்க்காலங்களில் ஒருவன் இறப்பதற்கு அரசு காரணமாக இருக்கலாம். ஒருவன் தனது உயிரை போரிடும்போது இழந்தால், அதை உயிர்வாழும் உரிமையை வேண்டுமென்றே பறித்தல் எனக் கருதக்கூடாது.

2. தனிப்பட்ட சுதந்திரத்துக்கான உரிமை (Right to Personal Freedom)

தனது திறமையைப் பயன்படுத்திக்கொள்ளும் உரிமையையும் மற்றும் வாழ்க்கையின் பொதுவான தன்மையை நிர்ணயம் செய்து கொள்ளும் உரிமையையும் இது குறிக்கும். இந்த உரிமை அடிமைகளுக்கு மறுக்கப்படும் உண்மையின் காரணமாகதான் அடிமைத்தனம் கண்டிக்கப்படுகிறது. தனி நபர்களின் அல்லது அரசாங்கத்தின் நியாயமற்ற கட்டுப்பாடுகள் வாழ்வின் நற்பயன்களை முழுமையாக அனுபவிக்க ஏற்றவை அல்ல. ஆதலின், தற்கால அரசு இந்த உரிமையினைப் பாதுகாக்க ஏற்பாடுகளைச் செய்துள்ளது. மேல்நிலை நீதித்துறை பிறப்பிக்கக்கூடிய ஆணைகள் தனிப்பட்ட சுதந்திரத்துக்கான உரிமையைப் பாதுகாக்கவே உள்ளது ஆகும்.

3. சொத்துரிமை (Right to Property)

மனிதன் சமுதாயத்தில் இருக்க சொத்து அவசியம் ஆகும். சொந்த உரிமைக்கான உரிமை எல்லா மனிதர்களுடைய இதயங்களிலும் ஆழமாக ஊன்றியுள்ளது. சொத்துரிமை பற்றி கொள்ளப்பட்ட பொருள் மாறி உள்ளது. இது சொத்துரிமை பற்றிய எண்ணங்களின் மாற்றத்தின் காரணமாக ஏற்பட்டது ஆகும். இன்று சொத்து பற்றிய பிரச்சினை உயிருள்ள ஒன்றாக உள்ளது. இன்றைய கருத்து வேறுபாடு சொத்தின் பொது மற்றும் தனிப்பட்ட உடைமையுரிமை பற்றியதாகும். சொத்தின் மீதான கட்டுப்பாடு பற்றிய பிரச்சினையும் இன்று உள்ளது. அரசானது தனிப்பட்டவர் சொத்துகளை திருட்டுகளிலிருந்தும் மற்றும் பிறர் அத்துமீறி கைப்பற்றுவதிலிருந்தும் காக்க பல பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்தாலும், எல்லா அரசுகளிலும் சொத்துரிமை முழுமையானதல்ல.

4. ஒப்பந்தம் செய்துகொள்ளும் உரிமை (Right of Contract)

சட்டப்படியான உடன்படிக்கைகள் அல்லது ஒப்பந்தங்களை நடைமுறைபடுத்துவதில் நல்ல நம்பிக்கை மற்றும் நேர்மை

இருக்கவேண்டும். ஒரு நல்ல சமுதாயத்தின் அவசியமான அடிப்படைகளாக அவை உள்ளன. உடன்படிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்களிலிருந்து ஏற்படும் உரிமைகளையும் கடமைகளையும் பாதுகாப்பது அரசின் கடமையாகும். ஆனால் அரசு பொது நன்மைக்கு உகந்த ஒப்பந்தங்களை அனுமதிப்பதில் மட்டும்தான் சிரத்தை எடுத்துக்கொள்கிறது.

5. சுதந்திரமான எண்ணங்களுக்கான மற்றும் அதனை வெளிப்படுத்தும் உரிமை (Right of Free Opinion and Expression)

எண்ணங்களுக்கான சுதந்திரம் மற்றும் அவைகளை வெளியிடும் உரிமை ஓரளவு கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு அனுமதிக்கப்படுகிறது. வன்முறையையோ அல்லது புரட்சியையோ தூண்டிவிட முயற்சிகள் மேற்கொள்ளப்படக் கூடாது. தனி நபர்களின் புகழ் கறைபடுத்தப்படக்கூடாது. போர்க்காலங்களில் எண்ணங்களை வெளிப்படுத்தும் உரிமை வெகுவாக கட்டுப்படுத்தப்படும். இது நாட்டினுடைய ஒற்றுமையையும், முழுமொத்தக் கட்டுப்பாட்டுணர்வையும் பராமரிக்கச் செய்யப்படுகிறது.

6. சுதந்திரமான மனசாட்சிக்கான உரிமை (Right of Freedom of Conscience)

எல்லா மதச்சார்பற்ற அரசுகளும் மதம் தொடர்பான சுதந்திரத்தை தனது குடிமக்களுக்கும், தனது எல்லைக்குள் வாழ்பவர்களுக்கும் வழங்குகின்றன. ஆனால் இந்த உரிமையை பொது நீதியும், ஒழுங்கு முறையும் பாதிக்காவண்ணம் பயன்படுத்த வேண்டும். பல்வேறு நம்பிக்கைகளையுடைய மக்களின் மனதைப் புண்படுத்தும் வகையிலும் இது பயன்படுத்தப்படக்கூடாது.

7. கழகம் அல்லது சங்கம் ஏற்படுத்தும் உரிமை (Right of Association)

தற்கால அரசியல் பல்வேறு வகையான தனி நபர்களின் கழகங்கள் அல்லது சங்கங்கள் உள்ளன. ஒரு சில தற்காலிகமானவை; மற்றவை நிலையானவை. ஒரு சில தேசிய அளவில் உள்ளவை; ஒரு சில சர்வதேச அளவில் உள்ளவை. ஒரு சில ஒருவகை குறிப்பிட்ட காரியங்களுக்காக ஏற்படுத்தப்பட்டவை; ஒரு சில பொதுவான இலக்குகளை உடையவை. தற்கால அரசானது கழகங்கள் அமைப்பதை சமுதாயத்தின் அமைதி மற்றும் ஒழுங்கு, பொது நீதி மற்றும் ஒழுங்குமுறை பாதிக்கப்படாதவரை அனுமதிக்கிறது. அரசு கழகங்களை தடை செய்யவும், ஒழுங்குபடுத்தவும் முடியும்.

8. குடும்ப வாழ்வுக்கான உரிமை (Right of Family Life)

குடும்பம் சமுதாயத்தின் அடிப்படை அமைப்பு ஆகும். அரசு திருமணம் மற்றும் விவாக ரத்து ஆகியவைகளை ஒழுங்குபடுத்தவும், குடும்பத்தில் உள்ள பல்வேறு உறுப்பினர்களுக்கிடையிலான உறவு முறைகளை ஒழுங்குபடுத்தவும் நடவடிக்கைகளை எடுக்கிறது. அதே சமயத்தில், குடும்பம் தனது உறவு முறைகளை ஒழுங்கு படுத்திக் கொள்ளத் தேவையான சுதந்திரத்தை அரசு அனுமதிக்கிறது.

9. சட்டத்தின் முன் சமத்துவத்திற்கான உரிமை (Right of Equality before the Law)

தற்கால அரசு நீதி வழங்க எவ்வித தனி சலுகைகளையும், பிரிவுகளையும் சமுதாயத்தில் அங்கீகரிப்பதில்லை. சட்டம் இன்று அனைவருக்கும் சமமாக பிரயோகிக்கப்படக் கூடியது. எல்லா மக்களுக்கும், தங்களது சிவில் சுதந்திரங்களைப் பாதுகாத்துக் கொள்ள சமமான சட்ட உரிமைகளும், சலுகைகளும் கொடுக்கப் பட்டுள்ளன.

சிவில் உரிமைகளுக்கான நிறைய ஏற்பாடுகள் இலக்குகளை அடைய முழுவதும் உதவாது. அவைகளின் பாதுகாப்பு மற்றும் நடை முறைப்படுத்தலுக்கான போதுமான பாதுகாப்பு ஏற்பாடு களும் இருக்கவேண்டும். தனி நபர்கள், கழகங்கள் மற்றும் அரசாங்கம் ஆகியவற்றின் அத்துமீறலுக்கெதிரான உரிமைகள் பாதுகாக்கப் படவேண்டும். அரசின் சட்டங்கள், காவலர் மற்றும் நீதிமன்றங்கள் சிவில் உரிமைகளுக்கு போதுமான பாதுகாப்பை யும், உத்தரவாதத்தையும் அளிக்கின்றன. அரசாங்கத்தின் தலையீட்டுக் கெதிராக சிவில் உரிமைகளுக்கு பாதுகாப்பு, அரசிய லமைப்பு அல்லது அரசின் அடிப்படை சட்டத்தால் அளிக்கப் படுகிறது.

மேற்கோள் நூல்கள்

(1) எர்னஸ்டு பார்க்கர் : அரசாங்கத்தைப் பற்றிய சிந்தனைகள்.

(2) எச். ஜே. லாஸ்கி : தற்கால நாட்டில் சுதந்திரம்

(3) பி. ரஸ்ஸல் : அதிகாரமும் தனிமனிதனும்.

கேள்விகள்

1. அரசியல் உரிமைகள் யாவை ? அரசில் வாழும் எல்லா மக்களுக்கும் அவை அளிக்கப்படுகின்றனவா ?

2. சிவில் உரிமைகளை விளக்குக.

இயல் 10

சட்டம் : தன்மை, மூலங்கள், வகைகள்

(Law : Nature, Sources and Kinds)

சட்டம் அரசினுடைய முக்கிய அம்சமாகும்
(Law is the Essence of the State)

சிறந்த மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான ஓர் அமைப்பே அரசு என்று தற்காலத்தில் கருதப்படுகிறது. தன்னுடைய பணிகளை அரசு சட்டம் என்றக் கருவியின் மூலமாக நிறைவேற்றுகிறது. அமைதியான முறையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு இச் சட்டம் என்கின்ற கருவி பெரிதும் பயன்படுகிறது. மேலும், சமுதாயத்தில் நீதியை நிலைநாட்டுவதற்கும் சட்டம் ஒரு கருவியாக உள்ளது. ஆகவே, சட்டம் அரசினுடைய முக்கிய அம்சமாக கருதப்படுகிறது. மாக்ஐவரினுடைய (MacIver) கருத்துப்படி, 'அரசு சட்டத்தினுடைய தந்தையும் தயைனுமாகும்'[1] சட்டம் அரசை நிர்வாகம் செய்கிறது. இச் சட்டத்தின் மூலமாக அரசு நிர்வாகம் செய்கிறது. மாக்ஐவரின் கூற்று படி, 'சட்டம் இல்லையென்றால் ஒழுங்கு இல்லை. ஒழுங்கு இல்லையென்றால், மக்கள் தாங்கள் என்னச் செய்கின்றோம், எங்குச் செல்கின்றோம் என்று அறியாமல், இறுதியில் மக்களே இருக்கமாட்டார்கள்.[2]

பொருளும் வரையறையும் (Meaning and Definition)

சட்டம் என்கின்ற தமிழ் சொல்லின் நேரடி ஆங்கிலச் சொல்லாகிய ' லா ' (Law) என்றச் சொல், ' லாக் ' என்கின்ற டியுடுனிக் (Teutonic) மொழிச் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். இச்சொல்லிற்கு நிலையானது அல்லது உறுதியானது என்றப் பொருளாகும். சட்டத்திற்குப் பல பொருள்கள் கூறப்படுகின்றன. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவைகள் சட்டத்தின் ஒருசில பொருள்களாகும் :

1. கால் பந்தாட்டத்தில் உள்ள விதிமுறைகள் போன்று இது ஒரு நடைமுறை விதிகளாகும்.

[1] தற்கால நாடு, பக். 272

[2] மேற்கூறிய ஆதாரம், பக். 250

2. இரண்டு நிகழ்ச்சிகளுக்கிடையே ஏற்படுகின்ற தற்காலிக உறவின் அறிக்கையாகும்.
(எ. கா.) புவிஈர்ப்பு விதி (Law of Gravitation).

3. சட்ட மன்றத்திஞல் இயற்றப்பட்ட சட்டங்களாகும்.
(எ. கா.) மதுவிலக்குச் சட்டம்.

சட்டத்திற்கு பலவகையான பொருள்கள் இருந்தாலும், நாம் தெரிந்து கொள்ளவேண்டியது அரசியல் விஞ்ஞானத்தில் சட்டத்தின் பொருளாகும். மூன்ருவதாக குறிப்பிட்டுள்ள சட்டத்தின் பொருளைத்தான் நாம் அரசியல் விஞ்ஞானத்தில் பயன்படுத்துகிரேம். அதாவது அரசு இடுகின்ற கட்டளையே சட்டமாகும். இக்கட்டளை அரசினுடைய அங்கீகாரத்தைப் (Sanction) பெற்றுள்ளது. இக் கட்டளை எதை செய்ய வேண்டும் எதைச் செய்யக் கூடாது என்றுக்கூறி மனிதர்களை வழிநடத்திச் செல்கிறது. இதற்கு பணிய மறுப்பவர்களை அரசினுடைய ஆணை உரிமை தண்டிக்கின்றது.

எல்லாச் சட்டங்களும் அரசினுலே இயற்றப்பட்டிருக்க வேண்டிய அவசியமில்லை; அரசு தோன்றுவதற்கு முன்பே சட்டங்கள் 'வழக்கங்கள்'(Customs) என்ற உருவத்தில் இருந்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். சட்டத்திற்கும் வழக்கத்திற்குமுள்ள வேறுபாடு என்ன வென்ருல், சட்டம் அரசினுல் செயல்படுத்தப்படுகிறது; ஆனுல் 'வழக்கங்கள்' அரசினுல் செயல்படுத்தப்படுவதில்லை. வழக்கங்கள் அரசினுல் அங்கீகரிக்கப்பட்டப் பின்பு சட்டங்களாக மாறுகின்றன.

அரசியல் அறிஞர்களும், சட்ட வல்லுநர்களும் சட்டம் என்பதனை பலவாருக வரையறுக்கின்ருர்கள். எடுத்துக்காட்டாக, டி. இ. ஆலண்ட் (T. E. Holland) சட்டம் என்பதனை 'இறைமைப் பெற்ற அரசியல் அதிகாரத்திஞல் செயல்படுத்தப்படும் மனிதனுடைய புற நடத்தையைப் பற்றிய பொதுவான விதியாகும்' என்று வரையறுக்கின்ருர்.[1] உட்ரோ வில்சனின் (Woodrow Wilson) கருத்துப்படி,' சட்டம் என்பது நிலையான எண்ணங்களையும் செயல்களையும் தீர்மானிப்பதற்காக அரசாங்கத்தின் ஆணை உரிமையால் செயல்படுத்தப்படும் அங்கீகாரம் பெற்ற ஒரே மாதிரியான விதிகளாகும். 'இறைமையாளனின் கட்டளையே சட்டமாகும்' என்று ஜான் ஆஸ்டின் (John Austin) வரையறுக்கின்ருர். பிளேட்டோவின் (Plato) கருத்துப்படி, 'காட்டுமிராண்டிகளாக இருந்த மனிதர்கள், தங்களுக்குள் போராடி சிறுகச்சிறுக பல காலங்களாக வளர்த்த நாகரிகமே சட்டமாகும்.'

[1] சட்ட இயலின் மூலப்பொருள்கள், பக். 40

மேற்கூறிய பல அறிஞர்களின் சட்டம் பற்றிய வரையறைகளை கூர்ந்து ஆராய்ந்தோமானால், சட்டத்தின் கீழ்க்காணும் சிறப்புகள் தெரியவரும் :

1. சட்டங்கள் மனிதனுடைய புறநடவடிக்கைகளோடு மட்டும் தான் தொடர்பு கொண்டுள்ளன.
2. சிவில் சமூகத்தில்தான் சட்டங்கள் இருக்கும்.
3. சட்டங்கள் அரசினால் அங்கீகரிக்கப்பட்டு, இயற்றப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.
4. சட்டங்கள் தங்களுடன் அரசியல் ஆணை உரிமை என்ற அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன யாரேனும் சட்டத்திற்கு பணியவில்லையென்றால் அரசினால் தண்டிக்கப்படுவார்கள்.
5. விதிகளின் தொகுப்பே சட்டங்களாகும்.

சட்டம் பற்றிய பல்வேறு கழகங்கள் (Different Schools of Law)

சட்டம் பல்வேறு கோணங்களிலிருந்து நோக்கப்படுவதால், சட்டம் பற்றிய பல கழகங்கள் உள்ளன. சட்டத்தின் மிக முக்கியமான கழகங்களாவன: பகுப்பாய்வுக் கழகம் (Analytical School), வரலாற்றுக் கழகம் (Historical School), சமூக இயல் கழகம் (Sociological School), ஒப்பீட்டுக் கழகம் (Comparative School).

1. பகுப்பாய்வுக் கழகம் (Analytical School)

போடின் (Bodin), ஆப்ஸ் (Hobbes), பென்தாம் (Bentham), ஆஸ்டின் (Austin) என்ற முக்கியமான அரசியல் அறிஞர்கள் இக்கழகத்தைச் சேர்ந்தவர்கள். இக்கழகம் சட்டங்களை அவற்றின் மூலங்களின் (Sources) அடிப்படையிலும், செயல்படுத்தப்படும் வகைகளின் அடிப்படையிலும் பாகுபடுத்துகிறது. இக்கழகத்தின் கருத்துப்படி சட்டத்திற்கு இரண்டு சிறப்புகள் உள்ளன. அவையாவன: (அ) இறைமையாளன் இடுகின்ற கட்டளையே சட்டமாகும். இவ்விறைமை ஒரே ஒரு நபரிடமோ அல்லது சில நபர்களைக் கொண்ட ஒருக் குழுவிடமோ இருக்கலாம். (ஆ) சட்டத்திற்குப் பின்னால் அடக்குமுறை சக்தியுண்டு. சுருங்கக் கூறினால், அடக்குமுறை சக்தியே சட்டத்தின் அம்சமாகும். சட்டத்திற்கு பணிய மறுப்பவர்களை இவ்வடக்குமுறைச் சக்திக்கொண்டு அரசு தண்டிக்கின்றது.

பகுப்பாய்வு கழகத்தின் கருத்துகள் பலரால் குறைத்துக்கூறப்படுகிறது. முதலாவதாக, பகுப்பாய்வு கழகத்தின் கருத்துகள் மிகவும் குறுகலாகவும் கடினமாகவும் உள்ளன. மாக்ஐவர் (MacIver), லாஸ்கி (Laski) என்கின்ற அறிஞர்களின் கருத்துப்படி சட்டம் ஓர் கட்டளையாக கருதப்படமுடியாது. மேலும் லாஸ்கியின் கருத்துப்படி, 'கட்டளையினை சட்டம் எனக் கொள்ளுதல் நாகரிகமற்றது'[1] இரண்டாவதாக, பகுப்பாய்வு கழகத்தின் கருத்துகள் பழக்க வழக்கங்கள் சம்பிரதாயங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த சட்டங்களை நிராகரிப்பதால், இக்கழகத்தின் சட்டம் பற்றிய கருத்துகள் போதுமானதாக இல்லை. மூன்றாவதாக, இப்பகுப்பாய்வு கழகம் பழமை நோக்கினைக் கொண்டுள்ளது. கெட்டலின் (Gettell) கருத்துப்படி, பகுப்பாய்வு கழகத்தின் சட்ட அறிஞர்கள் சட்டத்தினை நிலையான, மாறாத் தன்மையுடையதாக கருதினார்களேயொழிய வளரும் ஒன்றாககருதவில்லை. ஏனெனில் அவர்கள் வரலாற்று பரிணாமத்தில் (Historical Evolution) ஈடுபாடு கொண்டிருக்கவில்லை. இதனால், அவர்கள் போதுமான அளவிற்கு சட்டத்தின் மூலப் பொருள்களை ஆராயாமல் சட்டத்தின் தன்மைப்பற்றிய முடிவுக்கு வந்துள்ளனர்.[2]

2. வரலாற்றுக் கழகம் (Historical School)

பிரடெரிக் வான் சாவினி (Frederick Van Savigny), சர் என்ரி மெய்ன் (Sri Henry Maine), சர் பிரடெரிக் போலாக் (Sir Frederick Pollock), எப். டபள்யு. மெய்ட்லேண்டு (F. W. Maitland) ஆகிய அறிஞர்கள் இக்கழகத்தில் முக்கியமானவர்கள். இக்கழகத்தின் கருத்துப்படி, வரலாற்று சக்திகளினால் உருவாக்கப்பட்டதே சட்டமாகும். சட்டத்திற்கும் அது உருவாக்கப்பட்ட சூழ்நிலைகளுக்கும், கடந்த கால வரலாற்றுக்கும் உள்ள தொடர்புகளை கொண்டுதான் சட்டத்தினை தெளிவாக உணரமுடியும். சட்டம் அரசினால் வேண்டுமென்றே உருவாக்கப்பட்டதன்று அரசினுடைய பணி சட்டத்தை உருவாக்குவதன்று; மாறாக சட்டத்தை அங்கீகரித்துச் செயல்படுத்துவதாகும். வரலாற்று சட்டமே அரசினால் அங்கீகரிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. வரலாற்றுக் கழகத்தின் சட்டம் பற்றிய ஆய்வுகளும் பல குறைகளைக் கொண்டுள்ளன. முதலாவதாக, சட்டத்திற்கு அடிப்படையாக அமைகின்ற பல காரணிகளில் பழக்க வழக்கங்கள் தவிர்த்து சிலவற்றை இக் கழகம் ஏற்றுக்கொள்ளவில்லை. இரண்டாவதாக, பகுப்பாய்வுகழகம் போன்று இக் கழகமும் தன்னுடைய நோக்கில்

[1] அரசியலின் இலக்கணம். பக், 51-52

[2] அரசியல் விஞ்ஞானம், பக். 179

பழமை கொள்கைகளைக் கொண்டிருப்பதால் தற்கால சட்ட ஆக்கத்தில் மனித முயற்சிகளை சந்தேக கண் கொண்டு நோக்கு கின்றது.

3. தத்துவக் கழகம் (Philosophical School)

பேராசிரியர் ஜோசப் கோக்லர் (Prof. Joseph Kohler) என்கின்ற ஜெர்மன் நாட்டு அறிஞர் இக்கழகத்தில் முக்கிய மானவர். இக்கழகத்தின் கருத்துப்படி சமுகநீதி, நியாயம் ஆக்கிய வற்றின் அடிப்படையில் அமைக்கின்ற ஒழுக்கமே சட்டமாகும். இக்கழகத்தின் நோக்கம் ஒருச்சிறந்த சட்ட அமைப்பை ஏற்படுத்துவதாகும். இக்கழகத்தின் கருத்துப்படி சட்டத்தின் நோக்கம் மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து, மக்களுக்குச் சிறப்பான சமூக வாழ்க்கையினை அமைத்து தருதலாகும். ஆகவே, அரசினுடைய எல்லாச் செயல்களும் சட்டத்தின் ஒப்புதலை பெற் றுள்ளது. தத்துவக் கழகத்தின் கருத்துகள் உண்மையற்றதாகவும், செயல்படுத்த முடியாத அளவிற்கு உயர்வாகவும் உள்ளது. அரசு பின்பற்ற முடியாத அளவிற்கு தத்துவக் கழகத்தின் கருத்துகள் உயர்வாக உள்ளன.

4. சமூக இயல் கழகம் (Sociological School)

சட்டக் கல்வியில் இக்கழகம் சமீபத்தில் தோன்றியதாகும். ஆஸ்திரிய நாட்டு அறிஞர் கம்ப்லோவிஸ் (Cumplowiz), பிரான்சு நாட்டு அறிஞர் ட்யூக்யூட் (Duguit), ஹாலந்து நாட்டு அறிஞர் கிராபி (Krabbe), அமெரிக்க நாட்டு அறிஞர்கள் ராஸ்கோ பவுண்ட் (Roscoe Pound) மற்றும் நீதிபதி ஹால்ம்ஸ் (Justice Holmes) ஆகியோர் இப்பள்ளியின் முக்கியமானவர்கள். இவர்களுடைய கருத்துப்படி சமூக சக்திகளின் விளைவே சட்டமாகும்; சட்டங்கள் சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றவேண்டும். இறைமையைப் பெற்ற அரசுதான் சட்டங்களை உருவாக்குகிறது என்ற கருத்தினை இக்கழகம் முழுமையாக எதிர்க்கிறது. சட்டம் அரசுக்கு வெளி யேயும் செயல்படுகிறது; அரசின் அதிகாரத்தைவிட உயர்வானது என்பது இக்கழகத்தின் கருத்தாகும். ட்யூக்யூட் (Duguit)டின் கருத்துப்படி, சமூகத்தின் அங்கத்தினர்கள் என்ற முறையில் எல்லா மனிதர்களும் சில விதிகளையும் நடைமுறைகளையும் பின் பற்றுகின்றனர். இவைகளே சட்டங்கள் என்ற உருவத்தினைப் பெறுகின்றன. சட்டத்தினை மதித்து கீழ்ப்படிதல் எல்லோருடைய கடமையாகும். கிராபேயின் கருத்துப்படி சட்டம் அரசைக் காட்டிலும் உயர்ந்தது, சுதந்திரமானது. சட்டம் மனிதனுடைய உட்திண்மையுடன் தொடர்பு கொண்டுள்ளதாலும், ஒவ்வொரு வனும் தனது தீர்ப்பின் படி சட்டம் நியாயமானது, தேவை

யானது என உணர்வதாலும் மக்கள் அனைவரும் சட்டத்திற்கு கட்டுப்படுகின்றனர். இச்சமூக இயல் கழகத்தின் கருத்துகள் சிலகுறைகளை உடையது. முதலாவதாக, சட்டம் தன்னோடு அடக்குமுறை சக்தியினை கொண்டிருப்பதால், சட்டம் இறைமையாளனின் கட்டளையல்ல எனக் கூறுவது தவறாகும். இரண்டாவதாக, சட்டம் அரசிலிருந்து தனித்து சுதந்திரமாக இருக்கமுடியாது. மூன்றாவதாக, எல்லா சட்டங்களும் சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதன்று. இறுதியாக, பழக்க வழக்கங்கள் அரசுக்கு முன்பிருந்த நிலையில் இருந்திருக்கலாம்; ஆனால் சட்டம் அவ்வாறு அல்ல; சட்டத்துக்காக அமைக்கப்பட்டதே அரசாகும்.

5. ஒப்பீட்டுக் கழகம் (Comparative School)

இக்கழகம், தனது கருத்துகளுக்கு பிற சமூக இயல்களின் உதவியை நாடுகிறது. கடந்த கால சட்டங்களையும், நிகழ்கால சட்டங்களையும் ஒப்பிட்டு சட்டத்தின் இயல்பு பற்றி தெரிந்து கொள்ள இக்கழகத்தின் அறிஞர்கள் உயிரியல், ஒப்பீட்டு மொழி இயல், மானிடஇயல் மற்றும் இதர சமூக இயல்களிலிருந்து கருத்துகளை கையாள்கின்றனர். இக்கழகத்தின் கருத்துகள் செயல்முறை மதிப்பினைப் பெற்றுள்ளது.

இக்கழகங்களின் எந்த ஒரு கழகத்தின் கருத்தையும் போதுமானது எனக் கருதமுடியாது. ஆனால் அதே சமயம் ஒவ்வொரு பள்ளியின் கருத்துகளிலும் ஓரளவுக்கு உண்மையுள்ளது என்பதை மறுக்க இயலாது. ஆகவே, சட்டம் பற்றிய போதுமான விளக்கம் கிடைக்கவேண்டுமானால், எல்லா பள்ளிகளின் கருத்துகளில் உள்ள உண்மைகளை எடுத்துக்கொள்ளுதல் வேண்டும். அதாவது, இக் கழகங்களின் கருத்துகள் ஒன்றுக்கொன்று உதவியாகவும், முழுமையாக்க இணைவதாகவும் உள்ளன.

சட்டத்தின் மூலங்கள் (Sources of Law)

சட்ட ரீதியாகப் பார்த்தோமானால், சட்டங்களின் மூலமாக அரசு உள்ளது. ஆனால் வரலாற்றுக் கண்கொண்டு நோக்கினால், பல காரணிகள் சட்ட ஆக்கத்திற்கு உதவுகின்றன என்பது தெரியவரும். இக் காரணிகளே சட்டத்தின் மூலங்கள் என அழைக்கப்படுகின்றன. பேராசிரியர் ஆலண்டின் (Prof. Holland) கருத்துப்படி சட்டத்தின் மூலங்கள் ஆறு உள்ளன. அவையாவன: (1) மதம், (2) பழக்க வழக்கம், (3) நீதி மன்றங்களின் தீர்ப்பு, (4) அறிவியல் வியாக்கியானங்கள், (5) சமநீதி, (6) சட்டமியற்றுதல்.

1. மதம் (Religion)

அரசு, சட்டம் ஆகியவைகளின் வளர்ச்சியில் மதம் முக்கியமான பங்கினை வகித்துள்ளது. சட்டம் தெய்வீக தோற்றமாகும் என பழங்கால மனிதர்கள் நம்பினார்கள். பழங்காலத்தில் அரசர்கள் சட்டங்களை இயற்றினர். இதற்காக அவர்கள் மத அங்கீகாரத்தினைப் பெற்றிருந்தனர். எகிப்து, மெசபடோமியா, இந்தியா, கிரீஸ் மற்றும் ரோமாபுரி ஆகிய நாடுகளில் இயற்றப்பட்ட சட்டங்களுக்கு மதம் அளித்த அதிகாரமும், ஆதரவும் அனைவரும் அறிந்ததே. மனுவின் விதிகள், கௌதம புத்தரின் விதிகள் மற்றும் அபஸ்டம்பா (Apastamba)வின் விதிகள் யாவும் மதச் சார்புடையவையே; தற்காலத்திலும், மதக் கொள்கைகள் சட்டங்களுக்கு அடிப்படையாக உள்ளன. எடுத்துக்காட்டாக, இந்துச் சட்டம் மனுவின் விதிகள் அடிப்படையிலும், முகமதியர்களின் சட்டம் குரானின் அடிப்படையிலும், கிறித்துவ சட்டங்கள் கிறித்துவவேத நூலான பைபிளின் அடிப்படையிலும் அமைந்துள்ளன.

2. பழக்க வழக்கங்கள் (Customs)

சட்டத்தின் மற்றொரு மூலம் பழக்க வழக்கங்களாகும். பல்வேறு கழகங்களின் சட்டவல்லுநர்கள் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ பழக்க வழக்கங்களுக்கு முக்கியத்துவம் நல்கியுள்ளனர். பழக்க வழக்கங்கள் எவ்வாறு, எப்போது தோன்றின எனக் கூறுவது மிகவும் கடினம். பேராசிரியர் ஆலண்டின் (Prof. Holland) கருத்துப்படி ஒரு பழக்க வழக்கமென்பது, ஓர் வயலின் நடுவே ஏற்படுகின்ற நடை பாதையைப் போன்றதாகும். வசதிக்காக ஒரு செயல் தலைமுறை, தலைமுறையாக மேற்கொள்ளப்பட்டால், பின்னர் அதுவே வழக்கமாக மாறி விடுகிறது. சில தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே பழக்கங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. ஒரு சட்டம் இயற்றப்படும் போது பழமையான பழக்கவழக்கங்களுக்கு பொதுவாக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இங்கிலாந்திலுள்ள பொதுச் சட்டமானது பழக்க வழக்கங்களின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. இங்கிலாந்தில் நியாயமான பழக்க வழக்கங்களும், சட்டத்திற்கும் ஒழுக்க முறைகளுக்கும் எதிராக இல்லாத பழக்க வழக்கங்களும், மற்றும் சட்ட உறவுகளை பழக்க வழக்கங்களும், சட்டத்தின் முக்கியத்துவத்தையும், அங்கீகாரத்தையும் பெற்றுள்ளன.

3. நீதி மன்றங்களின் தீர்ப்புகள் (Adjudications)

நீதி மன்றங்களின் தீர்ப்புகள் சட்டத்தின் மற்றொரு மூல மாகும். மிகப் பண்டைய சமுதாயத்தில் பல்வேறு கும்பல்களுக் கிடையில் சண்டை, சச்சரவுகள் அடிக்கடி தோன்றின. இந்த சச்சரவுகளை தீர்க்க நீதிபதிகள் வாய் வாக்கு மூலம் தீர்ப்புகளை வழங்கினர். இத்தீர்ப்புகள் பின் வந்த வழக்குகளில் சுட்டிக் காட் டப்பட்டன. தற்காலத்திலும் ஓர் குறிப்பிட்ட வழக்கில் ஒரு நீதி பதியால் வழங்கப்பட்ட தீர்ப்பானது அதே மாதிரியான வழக்கு களில் சில முடிவுகளை எடுக்க அடிப்படையாக உள்ளது. இவ் வாறு நீதி மன்ற முன் மாதிரிகள் ஏற்படுத்தப்படுகின்றன. இது பொதுவாக நீதி மன்ற தீர்ப்பு அல்லது நீதிபதி இயற்றிய சட்டம் என அறியப்படுகிறது.

4. அறிவியல் வியாக்கியானம் (Scientific Commentary)

மிக முக்கியமான சட்ட மூலங்களில் இது ஒன்றாகும். நீதி சாஸ்திரம் (Nitisastra) எனும் நூலின் ஆசிரியர் யஜ்ன வால்கியா (Yajnavalkya), ஹேல் (Hale), கோக் (Coke), இங்கிலாந்தின் பிளாக்ஸ்டோன் (Blackstone) மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த கென்ட் (Kent) ஆகியோர் சட்டங்களை விளக்குவதிலும், அமலாக்குவதிலும் பெரும் பணியாற்றினர். 'கடந்த கால பழக்க வழக்கங்களையும் தீர்ப்புகளையும் மற்றும் சட்டங்களையும் சேகரித்து, ஒப்பிட்டு தருக்க முறையில் வரிசைபடுத்துவதன் வாயிலாக சட்டம் பற்றிய எழுத்தாளர்கள் எதிர்கால சட்டமியற்றலுக்குத் தேவையான அடிப்படைக் கொள்கைகளை ஏற்படுத்துகிறார்கள். இதன் வாயிலாக சட்டங்களுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் இடையிலான வெற்றிடத்தை நிரப்பியும், சட்டத்திலுள்ள குறை பாடுகளை எடுத்துக் கூறியும் சட்டமியற்ற துணைபுரிகிறார்கள்' என்று கெட்டல் (Gettell) என்ற அறிஞர் கூறுகிறார்.[1]

5. சம நீதி (Equity)

சமநீதி என்பது நியாயத்தையும் நீதியையும் குறிக்கும் சம நீதியின் தோற்றம் இங்கிலாந்து ஆகும். இங்கிலாந்தில் சமநீதி யின் ஆரம்ப காலத்தில், நீதிபதிகள் வழக்குகளில் வாதிகளின் கருத்துபடி நீதி வழங்கியிராவிட்டால் பாதிக்கப்பட்ட வாதிகள் அவ் வழக்கை இங்கிலாந்தின் அரசனிடமோ அல்லது அரசி யிடமோ எடுத்துச் சென்று முறையிடுவார்கள். அரசனோ அல்லது அரசியோ அவ் வழக்கினை ஆய்ந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு சாதகமான உத்திரவினைப் பிறப்பிப்பார்கள். நாளடைவில்

[1] அரசியல் விஞ்ஞானம், பக். 179

அரசனது அல்லது அரசியினுடைய பணிகள் அதிகரித்த காரணத் தால், இது போன்ற வழக்குகளை அரசனது 'மனசாட்சி காப் பாளர்கள் (Keepers of the Conscience) கவனித்து, ஆய்ந்து தீர்ப்பு கூறினார்கள். இதுவே நாளடைவில் சமநீதி என அழைக் கப்பட்டு இங்கிலாந்து நாட்டுச் சட்டத்தில் ஓர் அங்கமாக மாறி யது. நடைமுறையிலுள்ள சட்டம் நெகிழாத தன்மையுடையதாக இருக்கும்போது, நீதி மன்றங்களின் நீதிபதிகள் இச் சமநீதியினை மனதில் கொண்டு நீதி வழங்குகிறார்கள். சமநீதி, சட்டத்திலுள்ள பாரபட்சத்தினையும், குறைபாடுகளையும், மற்றும் வேற்றுமை களையும் களைகிறது. 'நடைமுறையிலுள்ள ஆக்கமுறை சட்ட மானது, உலகின் புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாறாமல் இருக்கும் போது சட்டத்தின் ஓர் மூலமாக சமநீதி தோன்றுகிறது. நியா யத்தையும், சமத்துவத்தையும் இலக்குகளாகக் கொண்டு சமநீதி புதிய சட்டங்களை உருவாக்கவும், பழைய சட்டங்களை மாற்றவும் ஓர் அதிகார மற்ற வழியாக உள்ளது', என்று கில்கிறைஸ்டு கூறு கிறார்.

6. சட்டமியற்றுதல் (Legislation)

தற்காலத்தில் சட்டமியற்றுதல் சட்டத்தின் மிக முக்கியமான மூலமாக உள்ளது. மேலும் சட்ட ஆக்கத்திற்கு சட்ட மன்றமே அதிகாரப் பூர்வமான மூலமாகும். சட்டமன்றம் இயற்றும் சட்டங் களுக்கு எல்லோரும் கட்டுப்பட்டாக வேண்டும். தற்கால மக்க ளாட்சி சமுதாயத்தில் எல்லா சட்ட மூலங்களையும்விட சட்ட மன்ற சட்ட மூலமே மிகவும் உயர்ந்தது ஆகும்.

உட்ரோ வில்சன் (Woodrow Wilson) சட்ட வளர்ச்சியின் முழு முறையை கீழ்க்கண்டவாறு மிக அழகாக எடுத்து இயம்பி உள்ளார்: 'சட்டத்தின் மிகப் பழமையான மூலம் பழக்க வழக்க மாகும். ஆனால் மதம் சட்டத்திற்கு ஓர் நிகழ்கால, நயமான மற்றும் பழக்க வழக்கம் போன்றே ஓர் மூலமாக உள்ளது. நீதி மன்றத்தின் தீர்ப்பு ஓர் அதிகார மூலமாக உருவாகியது. மேலும் அது சமநீதியுடன் இணைந்து செல்ல செல்ல பழமையான ஒன்றா கவும் ஆகிவிட்டது. சட்டமியற்றுதலும், அறவியல் விமர்சனங் கள் மட்டுமே அரசியல் அமைப்பில் சட்டமியற்றும் தொழிலில் மூன் நிலை வளர்ச்சியினை எதிர்நோக்கி உள்ளன'.

சட்டத்தின் வகைகள் (Kinds of Law)

சட்டங்கள் பல வகைகளாக பாகுபடுத்தப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணைகளில் சட்டங்கள் பல்வேறு அறிஞர்களால் எவ்வாறு பாகுபடுத்தப்பட்டுள்ளன. எனக் காண்பிக்கப் பட்டுள்ளது:

A. மாக்ஐவர் (MacIver) அரசியல் சட்டத்தினை (Political Law) கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தியுள்ளார் :

- அரசியல் சட்டம் (Political Law)
  - தேச சட்டம் (National Law)
    - அரசியலமைப்புச் சட்டம் (Constitutional Law)
    - சாதாரணச் சட்டம் (Ordinary Law)
      - பொதுச் சட்டம் (Public Law)
        - நிர்வாகச் சட்டம் (Administrative Law)
        - பொதுச் சட்டம் (General Law)
      - தனிச் சட்டம் (Private Law)
  - சர்வதேசச் சட்டம் (International Law)

B. பேராசிரியர் ஆலண்டினுடைய (Prof. Holland) சட்ட வகைப்பாடு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

- அரசியல் சட்டம்
  - தனிச் சட்டம்
  - பொதுச் சட்டம்
    - அரசியலமைப்புச் சட்டம்
    - நிர்வாகச் சட்டம்

C. பேராசிரியர் கில்கிறைஸ்டு கீழ்க்கண்டவாறு சட்டங்களை வகைப்படுத்தியுள்ளார் :

- அரசியல் சட்டம்
  - அரசியலமைப்புச் சட்டம் (Constitutional Law)
  - சட்டமன்றச் சட்டங்கள் (Statute Laws)
  - அவசரச் சட்டங்கள் (Ordinances)
  - பொதுச் சட்டம் (Common Law)
  - சர்வதேசச் சட்டம் (International Law)

D. தற்கால வகைப்பாடு :

- அரசியல் சட்டம்
  - தனிப்பட்ட சட்டங்கள் (Personal Laws)
    - சிவில் சட்டங்கள் (Civil Laws)
    - குற்றவியல் சட்டங்கள் (Criminal Laws)
  - தேசச் சட்டங்கள் (National Laws)
    - நிர்வாகச் சட்டங்கள் (Administrative Laws)
    - பொதுவான சட்டங்கள் (General Laws)
  - அரசியலமைப்புச் சட்டங்கள் (Constitutional Laws)
  - சர்வதேசச் சட்டங்கள் (International Laws)

தற்காலத்தில் மிக முக்கியமானது எனக் கருதப்படுகின்ற சட்ட வகைகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளது :

1. அரசியலமைப்புச் சட்டம் (Constitutional Law)

இது ஒரு நாட்டினுடைய அடிப்படைச் சட்டமாகும். இந்தியாவிலும், அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் உள்ளது போல இவ்வரசியலமைப்புச் சட்டம் எழுதப்பட்டதாகவோ அல்லது இங்கிலாந்தில் உள்ளது போல ஓர் பகுதி எழுதப்படாததாகவோ இருக்கலாம். இது அரசினுடைய அமைப்பினையும், அரசாங்க அதிகாரத்தின் வரையறை மற்றும் அதனைப் பயன்படுத்தும் முறையினையும் விவரிக்கிறது. அரசாங்கத்தின் அதிகாரத்தினையும், குடிமக்களின் உரிமைகளையும், குடிமக்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையிலான உறவுகளையும் வரையறுக்கக் கூடிய கொள்கைகளின் தொகுப்பே அரசியலமைப்புச் சட்டம் என அரசியலமைப்புச் சட்டத்தினை வரையறுக்கலாம். சுருங்கக்கூறின், அரசியலமைப்புச் சட்டம் அரசுக்குள் இறைமையின் இருப்பிடத்தை முடிவு செய்து, அங்கு வைக்கிறது ; ஆகவே அது அரசுக்குள் பொதுச் சட்டம் மற்றும் தனிச் சட்டம் போன்ற எல்லா சட்டங்களுக்கும் மூலமாகத் திகழ்கிறது.

2. சாதாரணச் சட்டம் (Ordinary Law)

இதற்கு சட்டமன்றச் சட்டம் என்றும் பெயர். இச்சட்டம் சட்ட மன்றத்தினால் இயற்றப்படுகிறது. நம்முடைய அன்றாட வாழ்க்கையினை ஒழுங்குபடுத்தும் சட்டங்களில் இது மிக முக்கியமானதாகும். சாதாரண சட்டத்தில் சிவில் சட்டம் (Civil Law), மற்றும் குற்றவியல் சட்டம் (Criminal Law) உட்படும். இச்சாதாரண சட்டத்தை தனிச் சட்டம் (Private Law) எனவும், பொதுச் சட்டம் (Common Law) எனவும் பிரிக்கலாம். குடிமக்களுடைய தனிப்பட்ட உரிமைகளையும், குடிமக்களுக்கிடையில் ஏற்படுகிற சச்சரவுகளையும் தீர்த்துவைப்பது தனிச் சட்டமாகும். தனிச் சட்டத்தில் குற்றம்சாட்டுவோன், குற்றம் சாட்டப்படுவோன் இருவருமே குடிமக்கள் ; அரசு ஓர் நீதிபதியாக உள்ளது. பொதுச் சட்டத்தில் அரசு வழக்கில் ஒரு சாரராகவும், நீதிபதியாகவும் உள்ளது.

3. பொதுச் சட்டம் (Common Law)

இதனை வழக்குச் சட்டம் (Case Law) எனவும், நீதிபதி இயற்றிய சட்டம் (Judge-made Law) எனவும் அழைக்கலாம். இங்கிலாந்தில் இந்த சட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. பொதுச் சட்டம் பழக்கவழக்கங்களிலிருந்தும்,

மூன் தீர்ப்புகளிலிருந்தும், மற்றும் பாரம்பரியத்திலிருந்தும் பெறப் பட்ட எழுதப்படாத சட்டமாகும்.

4. நிர்வாகச் சட்டம் (Administrative Law)

அரசாங்கப் பணியாளர்களின் கடமைகளையும், நடத்தை யினையும் வரையறுக்கும் நிர்வாகச் சட்டம் பொதுச் சட்டத்தின் ஒரு பகுதியாகும் இரண்டு சிறப்புத் தன்மைகள் நிர்வாகச் சட்டத்தினை பிற வகையான சட்டங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன. அவையாவன: (அ) நிர்வாகச் சட்டம் அரசாங் கப் பணியாளர்களுக்கிடையே ஏற்படும் உறவுகளை நிர்ணயம் செய்வதோடு, அரசாங்கப் பணியாளர்களுக்கும், குடிமக்களுக்கும் இடையே ஏற்படும் உறவுகளையும் நிர்ணயம் செய்கிறது. (ஆ) நிர்வாகச் சட்டம் அரசாங்க நிறுவனங்களுக்கும் குடிமக்களுக் கும் இடையே ஏற்படும் பொது நிர்வாகம் பற்றிய உறவுகளை நிர்ணயிக்கிறது. பிற சட்டங்களிலிருந்து வேறுபடுகின்ற நிர்வாகச் சட்டமானது. பிரான்சில் தோன்றி, சாதாரண சட்டங்களுடன் இணைந்து வளர்ந்தது. இது பிரெஞ்சு மொழியில் 'டிரோய்ட் அட்மினிஸ்டிராப்' (Droit Administratit)

5. சர்வதேசச் சட்டம் (International Law)

தேசச் சட்டம் (National Law) அல்லது நாட்டுச் சட்டம் (Municipal Law) போன்று, அரசு என்ற அமைப்பின் மூலமாக குடிமக்களுக்கிடையே ஏற்படும் உறவுகளையும், குடிமக்களுக்கும், அரசுகளுக்குமிடையே ஏற்படும் உறவுகளையும் நிர்ணயிக்காமல் சர்வதேச சட்டம் அரசுகளுக்கிடையே ஏற்படுகின்ற உறவுகளை நிர்ணயிக்கின்றது. நாகரிகமடைந்த அரசுகளுக்கிடையே ஏற்படும் உறவுகளை நிர்ணயிக்கும் சட்டங்களின் தொகுப்பே சர்வதேசச் சட்டமாகும். சர்வதேசச் சட்டம் அரசுகளின் புற இறைமையுடன் தொடர்பு கொண்டுள்ளது. சர்வதேசச் சட்டம் எந்த இறைமைச் சக்தியாலும் இயற்றப்படவில்லை. மேலும் இதனைச் செயல்படுத்த எந்த இறைமை சக்தியும் இல்லை.

சட்டமும் மனஒழுக்கமும் (Law and Morality)

சட்டமும், மன ஒழுக்கமும் நெருங்கிய தொடர்புடையவை யாக இருந்தபோதிலும், அவை தெளிவாக வேற்றுமைபடுத்தப் படவேண்டும். தார்மீகச் சட்டம் ஒருவனது மனசாட்சியினைத் தூண்டி நல்லது எது, தீயது எது என்று அவனை தீர்மானிக்கச் செய்கிறது. மன ஒழுக்கம் தனிப்பட்டது. ஒருவன் தன்னுடைய சுதந்திரத்திற்காகவும், நல்வாழ்விற்காகவும் தார்மீக அடிப்படை

யில் சுயமாக சட்டமியற்றிக் கொள்கிறன். இதுவே ஒருவனது மன ஒழுக்கமாகும். 'எக்காலத்திலும் சமூகத்தில் வாழ்கின்ற மக்கள் ஏற்றுக்கொள்ளும் விதிகளின் தொகுப்பே மன ஒழுக்க மாகும்' என்ற மற்றொரு பொருளையும் ஆக்கமுறை மனஒழுக்கத் திற்கு கூறலாம். சட்டத்திற்கும், ஆக்கமுறை மன ஒழுக்கத்திற்கு முள்ள வேறுபாடுகளை நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

சட்டமும், மனஒழுக்கமும் பழங்கால சமூக வாழ்க்கையின் அனுபவத்தாலும், பழக்க வழக்கங்களாலும் தோன்றியதால் ஆரம்ப காலத்தில் இவையிரண்டும் ஒன்றையொன்று ஒட்டி யிருந்தன. சட்டம் அரசியல் விஞ்ஞானத்திலும், மனஒழுக்கம் ஒழுக்க இயலிலும் கற்பிக்கப்படுகின்றன. பண்டைய இந்தியாவில் தர்மம் (Dharma) என்ற சொல் சட்டத்தையும், மனஒழுக்கத்தை யும் ஒருங்கே குறிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்பட்டது. அரசியல் விஞ்ஞானமும், ஒழுக்க இயலும் மனிதனை சமூகத்தில் ஒழுக்கத்தின் பிரதிநிதியாகக் கருதுகின்றன. இவ்விரண்டும் மனிதனது நடத்தையை நிர்ணயிப்பதில் குறிக்கோளாகக் கொண் டுள்ளது. இருப்பினும், சட்டமும் மனஒழுக்கமும் அவைகளின் உட்பொருளிலும், அங்கீகாரத்திலும் மற்றும் உறுதிப்பாட்டிலும் வேறுபடுகின்றன.

ஒழுக்க விதிகள் ஒருவனுடைய மனச்சாட்சியினாலோ அல்லது பொது அபிப்பிராயத்தினாலோ செயல்படுத்தப்படு கின்றன. ஆனால் சட்டம் அரசினால் செயல்படுத்தப்படுகிறது. மன ஒழுக்கம் ஒருவனது எண்ணங்கள், செயல்கள் மற்றும் குறிக் கோள்கள் ஆகிய அனைத்துடனும் தொடர்பு கொண்டுள்ளது. ஆனால் சட்டம் ஒருவனது புறச் செயல்களுடன் மட்டும்தான் தொடர்புகொண்டுள்ளது. இருப்பினும் சில வழக்குகளில் சட்டத்தை அமல் செய்யும்போது குறிக்கோள்களுக்கும் முக்கியத் துவம் கொடுக்கப்படுகிறது. ஆகவே, சட்டங்கள் சமுதாயத்தில் மனிதனின் நல்வாழ்வை பாதிக்கும் செயல்களை ஒழுங்குபடுத்த முயற்சிக்கின்றன. மேலும் ஒரே மாதிரியான, நடைமுறைக்கு சாத்தியமான கட்டுப்பாடுகளுக்கு கீழ்வரக்கூடிய செயல்களை மட்டுமே சட்டம் கட்டுப்படுத்தும்.

சட்டத்தின் முக்கியத்துவம் (Importance of Law)

சட்டம் மனிதனுக்கு மிக முக்கியமானதாகும். சட்டம் இல்லை யென்றால், மனித இனத்தின் நடத்தைகளுக்கான விதிகள் இல்லை. சமுதாயத்தில் வாழும் கட்டுப்பாடற்றவர்களைச் சட்டம் கட்டுப் படுத்துகிறது. சட்டம் மனித இனத்தின் நடத்தைகளை கட்டுப்

படுத்துவதன் மூலமாக, கட்டுப்பாடான வாழ்க்கையினைச் சமூதாயத்தில் தோற்றுவிக்கிறது. சட்டத்தின் முக்கியத்துவத்தினை மாக்ஐவர் (MacIver) மிக அழகாக கீழ்க்கண்டவாறு எடுத்தியம்புகிறுர். 'சட்டம் இல்லையென்ருல் ஒழுங்குமுறை இல்லை. ஒழுங்குமுறை இல்லையென்ருல் மனிதர்கள் தாங்கள் எங்கு செல்கிரேம், என்ன செய்கிரேம் என்று அறியாத நிலையில் அவர்களே அழிந்துவிடுவர். மனித வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் ஒழுங்குமுறை என்பது ஆதாரமான தேவையாகும். எல்லாவற்றிற்கும் மேலாக, சமூகத்தின் நோக்கம் எதுவோ அதுவே சட்டமாகும். சமூக விரோத சக்தி, கடல் கொள்ளைக் கப்பல், ஒரு திருடர் கூட்டம் மற்றும் வழிப்பறி கொள்ளைக்காரர்கள் கூட தங்களுக்கென சட்டவிதிகளைக் கொண்டுள்ளனர், சட்டங்கள் இல்லாமல் இவை இருக்கமுடியாது.'[1]

மேற்கோள் நூல்கள்

(1) இ. என். கான்: ஒழுக்கத்துடன் கூடிய முடிவு.

(2) எப். டபிள்யூ. காக்கர் : தற்கால அரசியல் சிந்தனைகள்.

(3) ஆர். பவுன்டு: சட்டத்தின் நீதி.

(4) இ. எக்ஸ். ரொஸ்டொ (பதிப்பாளர்): சட்டம் இறந்துவிட்டதா?

(5) ஆர். பி. வுல்ப் (பதிப்பாளர்): சட்டத்தின் ஆட்சி.

கேள்விகள்

1. சட்டத்தினை வரையறை செய்க.
2. சட்டம் பற்றிய பல கழகங்கள் அல்லது பள்ளிகள் யாவை?
3. சட்டத்தின் மூலங்களை ஆராய்க.
4. சட்டத்தின் வகைகளை விவரிக்கவும்.
5. சட்டத்திற்கும், மனஒழுக்கத்திற்கும் இடையிலான உறவுகளை விளக்குக.

[1] ஆர். எம். மாக்ஐவர்: அரசாங்கம் என்னும் சிலந்தி வலை, பக். 61.

இயல் 11

மக்களாட்சியும் வல்லாட்சியும்

அரசாங்க வடிவங்கள்—மக்களாட்சியின் வகைகள், தேவையான அம்சங்கள், குறைபாடுகள்—வல்லாட்சி அதன் வரலாறு—தற்கால வல்லாட்சியின் முக்கிய அம்சங்கள், நிறைகள், குறைகள் முதலியன.

அரசாங்க வடிவங்கள்

அறிவியல் அரசியல் போதகர்கள் அதிகமாக வலியுறுத்திக் கூறுவது அரசு என்பதும் அரசாங்கம் என்பதும் ஒன்றல்ல; அரசு என்பது அரசாங்கத்தைவிட முக்கியமானதும் நிலையானதும் ஆகும் என்பதே. ஆனால் பொதுவாக அரசுகள் இன்னவகை என்பது அதன் அரசாங்கத்தைப் பொறுத்து வேறுபடுத்திக் காட்டப்படுகிறது என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. எடுத்துக்காட்டாக ஒரு அரசை இது மக்களாட்சி நிலவும் அரசு என்கிறோம்; அது வல்லாட்சி அரசு என்கிறோம். இந்த அரசு மக்களால் ஆளப்படுகிறது; அது குறுகிய சுயநலம்கொண்ட சிறுபான்மையினரால் ஆளப்படுகிறது என்கிறோம். அரசியல் உண்மையென்பது நாம் நம்மை சுற்றியுள்ள உலகத்தைப் பற்றி கொண்டுள்ள மிக எளிய கற்பனையைவிட மிக சிக்கலானது. இந்த பகுதியில் அரசாங்கங்கள் அதை ஆள்பவரின் எண்ணிக்கையையும் அதன் குறிக்கோள்களைப் பொறுத்தும் வகைப்படுத்தப்பட்டிருக்கின்றன.

அரசானது அவற்றினது பங்கீட்டைப் பொறுத்தும் அல்லது அதனின் அதிகாரம் நிர்ணயிக்கப்பட்ட இடத்தைப் பொறுத்தும் பகுக்கப்படுகிறது. அதிகாரம் ஒருவராலோ அல்லது சிலராலோ அல்லது பலராலோ ஆணை செலுத்தப்படுகிறது. ஒருவர் அல்லது சிலர் அல்லது பலர் ஆணை செலுத்தும் அரசாங்கமானது நல்லது அல்லது தீயது என்று வகைப்படுத்தப்படும். எந்த நல்ல அரசாங்கமும் அதற்கொரு தீயபுறம் உடையதாக இருக்கும். முடிவில் ஆறு வகையான அரசாங்கங்கள் இருப்பதைக் காணலாம். அவை குடியாட்சி, உயர்குடி ஆட்சி, மக்களாட்சி; அவற்றின் தீய வகைகள் கொடுங்கோலாட்சி, சிறுகுழு ஆட்சி, கும்பலாட்சி.

முடியாட்சியிலும் கொடுங்கோலாட்சியிலும் ஒருவனே ஆட்சி செய்வான். அது நல்லதாகவோ தீயதாகவோ இருக்கலாம். அதேபோல் உயர்குடி ஆட்சியும் சிறுகுழு ஆட்சியும் சிறுபான்மையினரால் நடத்தப்படும் ஆட்சியாகும். இதுவும் நல்லதாகவும் தீயதாகவும் இருக்கலாம்,

ஒருவரது ஆட்சி முடியாட்சியாகவோ கொடுங்கோலாட்சியாகவோ இருக்கலாம். இவை இரண்டிற்கும் உள்ள வித்தியாசமானது முடியாட்சியில் ஆளும் அரசன் பரம்பரை உரிமையில் அரசோச்சும் உரிமை உடையவன்; கொடுங்கோலாட்சியில் ஆளும் கொடுங்கோலன் தனது படைபலத்தினால் ஆணை செலுத்துகிறான். இரண்டாவது வகை அரசில் அதாவது உயர்குடி ஆட்சி, சிறுகுழு ஆட்சி இவற்றில் ஆணை ஒரு சில தனி மனிதர்களால் செலுத்தப்படுகிறது, சிறுபான்மையினர் மேற்குடியாளராக இருந்தால் அது உயர்குடியாட்சி எனப்படுகிறது. அந்த சிறுபான்மையினர் மேற்குடியாளராக இல்லையென்றால் அது சிறுகுழு ஆட்சி எனப்படும். அதேபோல் அரசாங்கம் பலரால் கோலோச்சப்பட்டால் அது மக்களாட்சி என்றும் அல்லது கும்பலாட்சி என்றும் கூறப்படும். மக்களாட்சி நல்ல அரசாக கருதப்படுகிறது. கும்பலாட்சி தீய அரசாக கருதப்படுகிறது. பலவகை அரசாங்கங்களைப் பற்றிய விரிவுரையை விடுத்து மக்களாட்சியைப் பற்றிய விரிவுரையை மட்டும் காண்போம்.

மக்களாட்சி

மக்களாட்சியை வரையறுப்பதில் உள்ள பிரச்சினைகள்

'வரலாற்றில் அவ்வப்பொழுது செயல்படுத்தப்பட்ட அரசாங்க வகைகளிலேயே மிக மோசமானது மக்களாட்சியாகும்.'[1] 'மக்களாட்சிக்கலானதும் மறை புதிரான அரசியல் அமைப்பும் ஆகும்.'[2] மக்களாட்சிக்கு மிக எளிய பொருள் மக்களால் நடத்தப்படும் ஆட்சி என்பதாகும். ஆனால் இந்தப் பொருள் தவறானதாகும். மனித வரலாற்றில் எந்தக் காலத்திலும் மக்கள் தம் அரசை அமைப்பதற்கும் அதிகாரப்பிரிவினை செய்யவும் முடிந்ததில்லை. குடிமக்கள் தம் அரசியல் உரிமைகளை பயன்படுத்துவதற்கு சில கட்டுப்பாடுகள் உள்ளன. வாக்காளர் அனைவரும் நாட்டின் கொள்கைகளை வரையறுப்பதிலும் செயல்படுத்துவதிலும் பங்கு பெற்றதும் இல்லை, பெறப்போவதும் இல்லை.

[1] வின்ஸ்டன் சர்ச்சில்—காமன்ஸ் சட்டசபையில்.

[2] கியோவானி சார்டோரி : மக்களாட்சிக் கொள்கை.

மக்களாட்சி என்பதன் சரியான விளக்கம் மக்கள் அனைவரின் சார்பிலும் சிலர் நடத்தும் அரசு என்பதாகும். பொது பணிகள் அளிப்பதில் எல்லோருக்கும் சம சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட வேண்டும் என்பதும் இந்த நூற்றாண்டில் தான் உண்டாயிற்று. அரசின் கொள்கைகளை உருவாக்குவதிலும் மாற்றங்கள் ஏற்படுத்துவதிலும் சிலருக்கு அதிக சுதந்திரங்கள் கிடைக்கின்றன.

அரசியல் முறைகளில் அடிக்கடி உண்டாகும் மாற்றங்களினால் மக்களாட்சி இன்னது என வரையறுத்தல் என்பது முடிவதில்லை. 'பத்தொன்பதாம் நூற்றாண்டில் மக்களாட்சி அரசாங்கம் அரசியல் சட்ட உரிமைகளில் சமபங்கு அளிப்பதை வைத்து வெவ்வேறான அரசியல் கொள்கைகளை வெளிப்படுத்தவும் வெவ்வேறு அரசியல் கட்சிகள் மூலம் அரசியல் கொள்கைகளை வகைப்படுத்துவதும், தேர்ந்தெடுக்கப்பட்ட வாக்காளரின் அரசின் தினசரி நடவடிக்கைகளை மேற்பார்வை அல்லது கட்டுப்படுத்தும் உரிமை ஆகியவைகளில் சமத்துவம் கொடுப்பதாகும்.'[1] இன்று நாட்டின் அதிகாரங்கள் மேற்கூறியவற்றை விட அதிகமாக உள்ளன. கருத்துக்கள் மாறுதலுடன் மக்களாட்சி என்பதன் பொருளும் மாறுபடுகிறது. சென்ற நூற்றாண்டில் நாடாளுமன்ற அரசாங்கம் மக்களாட்சியாக இருக்க வேண்டும் என்று எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்படவில்லை. எடுத்துக்காட்டாக டிஸ்ரேலி மக்களாட்சியை முழுமையும் தீமையான அரசாங்கமாக கருதினார். 'இன்று அது மிகச் சிறந்த வகையான அரசாங்கமாக கருதப்படுகிறது. குடும்பம், உண்மை, சூரிய ஒளி, ப்ளாரன்ஸ் நைட்டிங்கேல் இவற்றைப் போல மக்களாட்சியும் சந்தேகத்துக்கிடமின்றி நிற்கிறது.'[2]

மக்களாட்சியைப் பற்றி ஒரு மாறுதலான எண்ணம் உண்டானதிலிருந்து பலவகை அரசாங்கங்களுக்கு அந்த பெயரை உபயோகிக்கும் பழக்கம் உண்டாயிற்று. இது அவ்வளவு நல்லதல்ல. ரெஜினால்ட் பாசெட் என்பவர் நாடாளுமன்ற மக்களாட்சியின் முக்கிய இயல்புகள் பற்றி குறிப்பிடுகையில் மக்கள், மக்களாட்சி என்ற சொல்லை பயன்படுத்தி அவர்கள் விரும்பும் எதையும் எல்லாவற்றையும் சேர்த்துக்கொள்கிறார்கள் எனவும், சிலர் தமக்கு வேண்டாதவற்றை கூறுவதற்கு பயன்படுத்திக் கொள்கிறார்கள் எனவும் கூறுகிறார். மக்களாட்சி என்பது மிக விரிவான அரசியல் முறைகளை விளக்கப் பயன்படுகின்றன. சில—புதியன சில பழையன.

1 டாரதி பிக்கிள்ஸ் : மக்களாட்சி, பக். 11
2 ஜே. கே. கால்பிரெய்த்: ரெய்த் சொற்பொழிவுகள். பக், 882

மக்களாட்சி முறை அரசாங்கம்

மக்களாட்சி என்பது ஒருமுறை அரசாங்கமாகக் கருதப்படு வதற்கு இரு முக்கிய இயல்புகள் உள்ளன. மக்களாட்சி அனைவருக்கும் வாக்குரிமை, அரசியல் கட்சிகள் இயங்குதல். சுதந்திரமாக ஓட்டளித்தல், லஞ்சமற்ற வாக்கெடுப்பு முதலிய வற்றை சரியான இடைவெளிகளுடன் பாதுகாக்கின்றன. மக்களாட்சி மக்களுடைய எண்ணங்களை அவ்வப்போது அறிந்து கொள்ள சந்தர்ப்பம் அளிக்கிறது. மக்களாட்சியில் அரசாங்கம் என்பது ஆள்பவருக்கும் ஆளப்படுபவருக்கும் இடையே நடக்கும் பேச்சுக்களாகும். மக்கள் அரசாட்சியில் பங்கேற்கவும் சந்தர்ப் பங்கள் அளிக்கப்படுகின்றன. மக்களாட்சி சமூகத்தின் குறிக் கோள்களை நிறைவேற்ற செயல் வழிமுறைகளாக செயல்படு கின்றது.

மக்களாட்சியின் பிரச்சினைகள்

மக்களாட்சியில் அரசாங்கம் நிறைய பிரச்சினைகளைத் தீர்க்க நேரிடும். குறிக்கோள்களை நிறைவேற்ற செயல்முறைகள் என் பவை முதலாவதாகும். மக்களாட்சி அரசியலில் சில கொள்கை களை நிறைவேற்ற முயற்சி செய்வது இருதலைக் கொள்ளி எறும்பு போன்ற நிலையை உண்டுபண்ணுகின்றது. எடுத்துக்காட்டாக சுதந்திரத்தை அதிகப்படுத்தி சமத்துவத்தை நிலைநிறுத்தப் பயன் படுத்தப்படும் சட்டம் செயல் படுத்தப்படும்போது சில குழப் பத்தை உண்டாக்குகிறது. ஒரு சிக்கல் தீர்க்கப்படும்போது மற்றொன்று உருவாகிறது. தற்கால மக்களாட்சி அரசாங்கம் அதிகமான செயல்களை மேற்கொண்டுள்ளது. இதன் விளைவாக குடிமகனுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே இடைநிலைக் குழுக் கள் எழுந்துள்ளன; இக்குழுக்கள் மக்களாட்சி தத்துவத்தை நிலை நிறுத்துகின்றன; அதே நேரத்தில் ஒரு சாதாரண குடிமகனுக்கும் அரசிற்கும் இடையேயுள்ள தூரத்தை அதிகப்படுத்துகின்றன.

மக்களாட்சி

நேர்முக மக்களாட்சி என்றால் குடி மக்கள் அரசாங்கத்துடன் நேரடியான தொடர்பு கொள்வது என்பதாகும். இம்முறை மக்களாட்சியை முதன் முதலாக தம் நாட்டில் நிலவ முயற்சி செய்தது கிரேக்கர்களாகும். இந்த முறை ஆதென்ஸ் மாநகரில், 4ஆம் 5ஆம் நூற்றுண்டுகளில் நிலவியது. கிரேக்க மக்களாட்சி யைப்பற்றிய விபரங்கள் பெரிக்கிளீஸ் என்னும் ஆதென்ஸ் மாநகர தலைவர்களில் பெரு மதிப்பு வாய்ந்தவரது பேச்சுக்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம். நம் நாட்டை மக்களாட்சி என்பதற்குக்

காரணம் நாடு சிலருக்காக நடத்தப்படுவதில்லை. பலருக்காக நடத்தப்படுகிறது. சுதந்திரம் என்பது நம் பொது வாழ்வின் முக்கிய கொள்கை... நாம் ஒருவரை ஒருவர் அவரது சொந்த விஷயங்களில் தலையிட்டு தொல்லை செய்வது இல்லை. சட்டங்களுக்குக் கொடுக்கும் மதிப்பால் அவற்றை மீறுவது இல்லை. சட்டத்தின் பாதுகாவலருக்கும் சட்டத்திற்கும் பணிகிறோம்; அதிலும் முக்கியமாக தீங்கிழைக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பளிக்கும் சட்டங்களுக்கும் பொதுமக்களின் ஒப்புதல் பெற்ற எழுதப்படாத சட்டங்களுக்குமாகும். கிரேக்க மக்களாட்சியை தற்கால கண்கொண்டு ஆய்வு செய்ய முடியாது. கிரேக்க அரசுகளுக்கோ தற்கால அரசுகளுக்கோ தலைநகரங்களுக்கோ ஒப்பிட முடியாது. கிரேக்க மக்களாட்சிக்கே உரித்தான சில நூதனமான சிறப்பம் சங்கள் தற்கால மக்களாட்சியினின்றும் வேறுபட்டவை. தற்கால நேர்முக மக்களாட்சி கிரேக்கர்களின் பழக்கங்களினின்றும் வேறுபட்டது.

பிரதிநிதித்துவ மக்களாட்சி

'பிரதிநிதித்துவ அரசாங்கம் என்பதன் பொருள் எல்லா மக்களும் அல்லது பெரும்பான்மையோர் குறிப்பிட்ட காலவரையறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அதிகாரம் செலுத்துவர் என்பதாகும்.' எல்லா அரசியல் முறைகளிலும் ஓரளவிற்கு பிரதிநிதித்துவம் உள்ளது. எல்லா நாடுகளிலும் ஒரு சிலர் மற்றவர்களுக்காக பிரதிநிதித்துவம் வகிக்கிறார்கள். வல்லரசுகளுடைய அரசாங்கங்களில்கூட ஆள்பவர் ஆளப்படுபவருடன் இடைநிலையாளர் மூலம் தொடர்பு வைத்துக் கொள்ளுகிறார்கள். பிரதிநிதித்துவம் மக்களாட்சிக்கு ஓர் உத்தரவாதமல்ல. தற்கால பிரதிநிதித்துவ அரசாங்கம் பல காலங்களாக மெதுவாக வளர்ந்து வந்தது, இடைக்காலங்களில் அரசாட்சி தெய்வாம்சம் பொருந்தியதாக கருதப்பட்டு வந்தது. அரசர்கள் தாங்கள் இறைவனுக்கு மட்டுமே பதில் சொல்ல கடமைப்பட்டவர்கள் என நினைத்து வந்தனர். ஆனால் அவர்கள் இயற்கையின் ஆணைகளை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட சட்டங்களையும் பரம்பரை பழக்க வழக்கங்களையும் மதித்து நடக்கவேண்டும். அரசன் மடாலயங்களில் கூறப்பட்ட பொது கருத்துக்களுக்கு ஏற்றவாறு தன் ஆணையை செலுத்துவான். ஆனால் எப்பொழுதுமே அமைதியாக செயல் பட்டனர் என்று கூற இயலாதவாறு மடாலயங்களின் ஆணைக்கும் அரசாணைக்கும் நிறைய வழக்குகள் உருவாயின. பதினாறும் நூற்றாண்டிலிருந்து ஐரோப்பாவில் அதிகாரத்தைக் கைப்பற்ற பல போர்கள் நடந்தன. 17ஆம் நூற்றாண்டிற்குள் அநேக அரசர்கள் மடாலயங்களை எதிர்க்கும் அளவிற்கு பலம்

பொருந்தியவராயினர். இங்கிலாந்தில் தெய்வாம்ச உரிமை வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டு அரசரும், அரசாங்கங்களும் சேர்ந்து மக்களுக்காக ஆட்சி செலுத்துவாராயினர். இங்கிலாந்தில் பிரதிநிதித்துவ நாடாளுமன்ற முறை அரசாங்கம் உருவாகிக் கொண்டு வருகையில் பிரான்ஸில் பலம் பொருந்திய அரசாட்சி உருவாகியது.

இங்கிலாந்துடன் ஒப்பிட்டு பார்க்கையில் ஐரோப்பிய நாடுகள் மிக மெதுவாகத்தான் பிரதிநிதித்துவ அரசாங்கத்தை நிலை நாட்டின. இறைமை மக்களிடம் உள்ளது என்ற தத்துவத்தை ஒப்புக்கொண்ட பின்பே பிரதிநிதித்துவ குழுக்கள் பிரான்ஸில் நிறுவப்பட்டன. ஐக்கிய அமெரிக்க நாடுகளிலும் பிரதிநிதித்துவ அரசாங்கம் வெகு சீக்கிரம் உருவாகியது.

பிரதிநிதித்துவ மக்களாட்சியில் குடிமக்கள் அனைவருக்கும் சட்ட மன்றத்திற்கு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை உண்டு. இவ்விதம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தாம் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதிகளின் நலத்தையும் நாட்டின் நலனுக்கான கொள்கைகளை உருவாக்குவதிலும் செயல்பட வேண்டும். எழுத்துவடிவில் இருக்கும் இக்கொள்கைகள் செயல் முறையில் நடப்பதில்லை. இந்த நிலை அரசியல் கட்சிகள் தோன்றியதால் உருவாகியது. பிரதிநிதித்துவ மக்களாட்சியில் இன்று அரசியல் கட்சிகள் மிக முக்கியமான அங்கமாக செயலாற்றுகின்றன. அரசியல் கட்சிகள் தவிர்க்க முடியாதவை: அவைகள் நன்மையும் தீமையும் விளைவிக்கின்றன. அவைகள் இல்லாவிடில் தற்காலத்தில் பிரதிநிதித்துவ மக்களாட்சி சரிவர இயங்காது.

மக்களாட்சி வெற்றிபெற நிபந்தனைகள்

தனியார் சொத்துரிமை மக்களாட்சிக்கு மிக விரும்பத்தக்கது. சொத்துரிமை எங்கே பரவலாகவும் சமமாகவும் பிரிக்கப்பட்டுள்ளதோ அங்கே மக்களாட்சி பலம் பொருந்தியதாக இருக்கும். செல்வமும் ஏழ்மையும் எங்கே உச்சத்தில் இல்லாமல் இருக்கிறதோ அங்கே மக்களாட்சி பாதுகாக்கப்படும். மக்களாட்சி அதை புரிந்து கொள்ளாத மக்களிடையே வெற்றிகரமாக செயல்படாது. மக்களாட்சியின் உன்னத தோற்றம் மக்களாட்சியின் வெற்றிக்கு மிக அவசியம். அதாவது மக்களிடையே சமூக விழிப்புணர்வு வேண்டும். குடிமக்கள் நன்கு கற்றவராயிருப்பின் மக்களாட்சி வெற்றிகரமாக செயல்படும். கல்வியுணர்வு அதிகமாக உள்ள இடத்தில் மக்களாட்சி வெற்றிகரமாக வளரும்; சமுதாயத்தைப் பற்றிய ஆர்வம், விழிப்பு, சமூகத்தைப்பற்றி சுயமாக

ஆராய்ந்தறிந்த கருத்துக்கள் இவை குடியாட்சியின் வெற்றிக்கு காரணமாகின்றன.

குறைபாடுகள்

மக்களாட்சி முழுமையான வெற்றியுடையதல்ல. மக்களாட்சி பற்றிய கொள்கையும் அது செயல்படும் விதமும் வேறாக இருப்பது தெளிவாக தெரிகிறது. மக்களாட்சிக் கெதிராக சொல்லப்படும் குற்றச்சாட்டு என்னவெனில் அது நிறையானதல்ல என்பதாகும். அரசின் நிறைவை அளப்பது மிகவும் கடினமான செயல் என்பது குறிப்பிடத்தக்கது. மக்களாட்சி சாதாரண நடவடிக்கைகளையே பிரதிபலிக்கிறது. ஏனெனில் அதைக் கட்டுப்படுத்தி ஆட்சி செலுத்துவோரில் பெரும்பான்மையோர் அறிவாற்றல் இல்லாதவராயும் விஷய ஞானம் இல்லாதவராயும் ஓர் பக்கம் சார்ந்துரைப்பவராயும் மூடத்தனமான எண்ணங்கள் உடையவராயும் பிறரிடம் உள்ள உயர்வுகளை வெறுப்பவராயும் இருக்கின்றனர். பொறுக்கும் தன்மை மக்களாட்சியில் இல்லை என்பதும் உண்மை. சில விமரிசகர்கள் மக்களாட்சியை அடைய இயலாத ஓர் உன்னத நிலை என்று நினைக்கிறார்கள். ஓர் விமரிசகர் மக்களாட்சியை மக்களிடம் இருந்து உருவான கற்றவரால் ஆட்சி செய்யப்படும் மக்களாட்சி என்கிறார்.[1] சிக்கலான நிலைகள் உள்ள தற்கால வாழ்வில் மக்களாட்சி செயல்பட முடியாத ஒன்று என்றும் கூறப்படுகிறது.

மக்களாட்சிக் கெதிரான கருத்துக்கள் எத்தனை சொல்லப்பட்டாலும் அனைவராலும் விரும்பப்படுவது மக்களாட்சியே; இதை யாரும் மறுப்பதற்கில்லை. வின்ஸ்டன் சர்ச்சில் சொல்லுவது போல் மற்றெல்லா அரசாங்கமும் நீங்கலாக மக்களாட்சி ஒரு மோசமான அரசாங்கம் முறையாகும்.

வல்லாட்சி அல்லது ஆதிக்க ஆட்சி

'அரசின் தலைமையாளனுக்கு இருக்க வேண்டிய சட்டபூர்வமான அதிகாரத்திற்கும் மேற்பட்டது வல்லாட்சி;[2] வல்லாட்சி இருவகைப்படும். ஒன்று தனிப்பட்ட மனிதனால் செயல்படுத்தப்படும் ஆட்சி. மற்றொன்று ஒரு தனிப்பட்ட அரசியல் கட்சியால் நடத்தப்படும் ஆட்சி; தனி மனிதனின் வல்லாட்சி ஆணை ஆளப்படுபவரின் கட்டாயத்தால் அல்லது சம்மதத்தால் அல்லது இரண்டினாலும் செலுத்தப்படும்.

[1] மாரிஸ் டியூவெர்ஜர்: அரசியல் கட்சிகள், பக். 425

[2] போர்டு: தற்காலத்தில் வல்லாட்சிகள், பக். 27

வரலாறு, வல்லாட்சி வகைகளால் நிறைந்துள்ளது. பழங்கால கிரேக்க ரோமாபுரி நாட்டவரின் நாள் முதல் தற்காலம் வரை வெவ்வேறு காலங்களில் உலகின் வெவ்வேறு பாகங்களில் ஆணை செலுத்திய தனிமனிதனின் வல்லாட்சிகள் நிறைய உண்டு.

வல்லாட்சி எழப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. நெருக்கடி காலங்களில் ஆணை ஒருவரிடத்தில் குவிந்துள்ளதால் அது வல்லாட்சி எழ வழிகோலுகிறது. இரண்டாவது மற்ற நாடுகளுக்கு ஓர் நாடு அநீதிகள் இழைப்பதால் ஒரு வல்லவனுக்கு வல்லாட்சி அமைக்க சந்தர்ப்பங்கள் தருகிறது. இதுபோல் ஜெர்மனியில் ஏற்பட்டது. இத்தாலியில் ஏற்பட்டது போல், மக்களாட்சியின் போதிய சக்தியின்மைகூட சில நேரங்களில் வல்லாட்சியை ஏற்படுத்துகின்றது. மக்களாட்சி பாரம்பரியம் இன்மைகூட வல்லாட்சிக்கு வழி வகுக்கிறது. இது போர்ச்சுகளிலும், ஸ்பெயினிலும் ஏற்பட்டது. பிற்போக்கான பொருளாதார நிலைகூட வல்லாட்சிக்கு வழி வகுக்கலாம்.

வல்லாட்சியின் அம்சங்கள்

எல்லாவித வல்லாட்சியும் சில பொதுவான அம்சங்களைப் பெற்றுள்ளது. ஒரு வல்லாட்சியாளன் அரசை மிகுந்த பலமுள்ளதாக ஆக்குகின்றான். அரசு முழுமையான அதிகாரம் பெற்று விளங்கும். அரசியலமைப்பு சட்டங்கள் ஏற்படுத்துகின்ற கட்டுபாடுகள் இருக்காது. மக்களுக்கு எந்தவித உரிமைகளும் இருக்காது. நாட்டில் ஒவ்வொரு அரச காரியமும் பலத்த கட்டுகாப்புடன் செயல்படும். கொடுமை, தீமை, தீவிர கட்டுபாடு இவை அரசியலை ஆட்டுவிக்கும்.

வல்லாட்சி எந்தவிதமான எதிர்ப்பையும் பொறுக்காது; அதிகாரம், ஒழுங்கு, பணிவு இவை வலியுறுத்தப்படும்; மக்கள் தொடர்புநிலை அரசால் முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டு வல்லாட்சியாளன் விரும்பும் அல்லது அனுமதிக்கும் செய்திகளே மக்களுக்கு அளிக்கப்படும். மக்களுடைய எண்ணங்கள் முழுமையாக அலட்சியம் செய்யப்படும்.

குறைபாடுகள்

வல்லாட்சி முழுமையாக வேண்டப்படாததன் காரணம் அதில் பல குறைகள் இயற்கையாகவே உள்ளன. மக்கள் தம் உரிமைகளையும் சுதந்திரத்தையும் இழக்கிறார்கள். அரசு முழு அதிகாரம் பெற்றுள்ளதால் மக்களுக்கு அதில் பங்கேற்க வாய்ப்புகள் இல்லை. எல்லா வல்லாட்சியும் போருக்கு வழி வகுக்கின்றன. போர்கள் அழிவிற்கு வழி கோலுகின்றன. வல்லாட்சி வல்லாட்சி

யாளன் அழிந்தபின் நிலைப்பதில்லை. தனிமனிதன் முழுமையாக அலட்சியம் செய்யப்படுகிறுன். வல்லாட்சியில் எப்பொழுதும் புரட்சி அல்லது கலகங்கள் நடக்கக்கூடிய அபாயம் இருந்து கொண்டே இருக்கிறது. இந்த அரசாங்கம் ஆள்பவனுக்காகவே யன்றி ஆளப்படுபவர்களுக்காக அல்ல என்பதால் இது கண்டனம் செய்யத்தகுந்த ஒன்ருகும்.

மேற்கோள் நூல்கள்

(1) ஜே. ஷும்பீட்டர்: முதலாளித்துவம், சமுதாய உடைமை, மக்களாட்சி.

(2) டி. ஸ்பிட்ஸ்: மக்களாட்சியும் அதிகாரத்தின் ஆணை களும்.

(3) ஜெ. பிரைஸ்: தற்கால மக்களாட்சிகள்.

(4) ஜி. எஸ். போர்டு (பதிப்பு): தற்காலங்களில் வல்லாட்சி கள்.

(5) இ. எம். செபட்: மக்களாட்சி.

கேள்விகள்

1. அரசாங்கங்களின் பல வகைகள் யாவை?
2. நேர்முக, மறைமுக மக்களாட்சியை வேறுபடுத்தி விளக்குக.
3. வல்லாட்சிகள் பற்றி குறிப்பு வரைக.
4. மக்களாட்சி வெற்றிகரமாக நடக்க வேண்டிய நிபந்தனைகள் யாவை?
5. மக்களாட்சி, வல்லாட்சி இவற்றின் குறைகளை ஆராய்க.

இயல் 21

சமுதாய உடைமை அல்லது சோஷலிஸம்

சமுதாய உடைமை அல்லது சோஷலிஸம் — சமத்துவம் — குடியாட்சி முறையில் சோஷலிஸம் — கம்யூனிஸம் அல்லது பொது உடைமை.

'மற்றெந்த கோட்பாட்டையும்விட சோஷலிஸம் அதை விவரிப்பவர்களின் கைகளில் மாறுபாடு அடைகிறது. அதை தெளிவுபடுத்துவோரது மனப்பக்குவத்திற்கேற்றவாறும் சீர்கேடடைந்துள்ள சமூகத்திற்கு தக்கவாறும் வேறுபாடுகள் உண்டாகின்றன. சோஷலிஸத்தைப் பற்றிய ஏடுகள் அதிகமாக உள்ளதால் வெகு எளிதில் சோஷலிஸத்தில் அடங்கியுள்ள கொள்கைகள் இன்னது என சொல்ல முடியாது. சோஷலிஸம் என்பது சுருங்கச் சொல்லபோனால் எல்லோரும் அணிவதால் தன் சொந்த அமைப்பை இழந்துவிட்ட ஒரு தொப்பியை போன்றதாகும்" என்கிறார் ஜோட் சி. இ. எம். என்ற பேராசிரியர்.

சோஷலிஸம் என்பதை இன்னது என்று வரையறுத்துக் கூறுதல் மிகக் கடினம். சோஷலிஸம் தனித்துவக் கொள்கைக்கு எதிராக கிளம்பிய ஒன்றாகும். அதை அரசியல் கொள்கையாகவும் ஓர் அரசியல் இயக்கமாகவும் எடுத்துக்கொள்ளலாம். சோஷலிஸம் பொருளாதாரக்கருத்துக்களும் அரசியல் கருத்துக்களும் அளவியல் இயலும் கலந்த கலவையாகும். சோஷலிஸம் என்பது வாழ்க்கை நடத்துவதற்குரிய ஓர் வழியுமாகும். சோஷலிஸ்டுகளுக்குள் வேறுபாடும் ஒருமைப்பாடும் ஆகிய இரண்டையும் காணலாம். சோஷலிஸ்டுகள் அனைவரும் பொருள் உற்பத்திக்கான வகைகள் பொதுவுடைமையாக்கப்பட வேண்டும் என்பதில் ஒருமித்த கருத்துடையவராக இருக்கிறார்கள். சோஷலிஸம் என்பதற்கு பொதுவான பொருளாக இதைக் கொள்ளலாம். கீழ்க்கண்டவை சோஷலிஸத்திற்குக் கொடுக்கப்பட்ட அறுதியிட்ட கருத்துக்களில் சிலவாகும்.

சோஷலிஸம் சமூகத்தின் ஒரு வகை அமைப்பாகும். அதில் சமுதாயத்தைச் சேர்ந்த வழிமுறைகள் முழுவதுமாக மலர்வதுடன்

சமுதாயத்தால் வழி நடத்திச் செல்லப்படுவது அதனுடைய பொது மேம்பாட்டின் குறிக்கோளுக்காகத்தான். —ஹம்பரீ

சோஷலிஸம் என்ற நோக்கு அல்லது கோட்பாடு மக்களாட்சி அதிகாரத்தின் மையச் செயலால் மேலான பங்கீட்டிற்கும் முறையான அடிபணிதலுக்கும் இப்பொழுது இருப்பதைவிட மேலான செல்வ உற்பத்தி அடைவதற்கும் உரிய குறிக்கோளைக் கொண்டது. —என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா

இவ்வுலக பொருளாதாரச் சமூக சக்திகளும், மனித சக்திகளால் அவற்றைக் கட்டுப்படுத்துவதும் என்று கூறுவதைவிட சிறந்த ஒரு அறுதியிட்டக் கருத்தை சோஷலிஸத்திற்கு, பொதுவான வார்த்தைகளில் விளக்கம் கூறமுடியாது.

—ராம்சே மெக்டோனல்ட்

வெவ்வேறு அறுதியிட்ட கருத்துக்களில் சோஷலிஸத்தைப் பற்றி வேறுபட்ட பொருள்கள் உண்டு. ஒரு மையக் கருத்து, மட்டும் எல்லா அறுதியிட்ட கருத்துக்களிலும் மீண்டும் மீண்டும் தோன்றுவது யாதெனின் உற்பத்தி வழிகளை ஒருங்கிணைந்து கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்வது ஆகும்.

வளர்ச்சி

பதினெட்டாம் நூற்றுண்டின் இடைப் பகுதியிலிருந்து 19ஆம் நூற்றுண்டின் இடைப்பகுதிவரை அறிவியல் துறையிலும் கலைத் துறையிலும் ஐரோப்பாவில் ஏற்பட்ட கணிசமான வளர்ச்சியானது நடுத்தர வகுப்பினரை முதன்மை நிலைக்குக் கொண்டு வந்தது. அதை அடுத்து எழுந்த தொழிற் புரட்சியானது முதலாளித்துவத்தை முன்னுக்கு கொண்டுவந்தது. பல சமூக சீர்கேடுகளை நின்று நிலவச் செய்தது முதலாளித்துவக் கொள்கையாகும்.

தனியுரிமைக் கோட்பாட்டின் விளைவாக குடியாட்சி மற்றும் தேசியம் சார்ந்த ஐரோப்பிய அரசாங்கங்கள் முதலாளித்துவத்தின் சீர்கேடுகளை நீக்கவோ குறைக்கவோ முயற்சிகள் எடுக்கவில்லை. இதன் விளைவாக உழைக்கும் பாட்டாளி வர்க்கத்தின் நிலை மேலும் சீர்கேடடைந்தது. பாட்டாளி மக்களின் நிலை கண்டு வருந்திய காரல் மார்க்ஸ் அறிவியல் சோஷலிஸத்தை வளர்ச்சியுறச் செய்தார். உண்மையில் சோஷலிஸ வடிவை முதன் முதலாக உருவகித்தவர் மார்க்ஸ் அல்லர். மார்க்ஸிற்கு முன்பாக இருந்த சோஷலிஸ அறிஞர்கள் கற்பனை உலக சமத்துவவாதிகள். அவ்வாறு கார்ல் மார்க்ஸிற்கு முந்தைய சோஷலிஸ

சிந்தனையாளர்கள் கற்பனை உலக சோஷலிஸ வாதிகள் என்றழைக்கப்பட்டதற்குக் காரணம் அவர்களுடைய வாதங்கள் நடைமுறைக்கு ஒத்ததாக இல்லாததே; சோஷலிஸக் கருத்துக்கள் முதன் முதலாக பிளேட்டோ என்ற கிரேக்க சிந்தனையாளரால் உருவகிக்கப்பட்டது. தனிப்பட்ட உடமைகளையும் தனியான குடும்பங்களையும் இல்லாமல் ஆக்கவே அவர் விரும்பினர். இடைக்காலங்களில்கூட மேம்பாடடைந்தன. முன்னணியில் இருந்த தற்கால சோஷலிஸ்டுகள் சிஸ்மாண்டி (1773-1818), ராபர்ட் ஆவன் (1771-1858), செயின்ட் சைமன் (1760-1825), சார்லஸ் ப்பௌரியர் (1772-1873), லூயிஸ் பிளாங்க் (1811-1882) ஆவர்.

சிஸ்மாண்டி அரசின் சொத்து பிரிவினை சரிசமமாக பிரிக்கப்படுவதற்கு நாட்டின் தலையீடு வேண்டும் என்று வாதித்தார். இங்கிலாந்தில் சோஷலிஸத்தை ஆரம்பிக்க காரணமானவர் ராபர்ட் ஆவன் என்பவர். அவர் முதலாளி வர்க்கத்தினருக்கும் தொழிலாளி வர்க்கத்தினருக்கும் நல்ல ஒற்றுமை நிலவ வேண்டுமென விரும்பினர். அவருடைய எண்ணங்களினலும் எடுத்துக்காட்டுகளினலும் பிரிட்டிஷ் அரசாங்கம் தொழிலாளிகளின் நலத்தை முன்னேற்ற பல சட்டங்களை இயற்றியது. செயின்ட் சைமன் என்ற பிரெஞ்சு சோஷலிஸ்டும் ஒற்றுமையின் முக்கியத்துவத்தை வலியுறுத்திஞர். அவருடைய நோக்கமும் ஏழைகளின் நலத்தை நிலைநாட்டுவதுதான். சார்லஸ் ப்பௌரியர் இன்னெரு பிரெஞ்சுக்காரர். சோஷலிஸத்தை அமுலாக்குவதற்கு இவர் சில திட்டங்களைக் கொண்டிருந்தார். லூயிஸ் பிளாங்க் ஒரு சோஷலிஸ கருத்துத் தொகுதியை வளர்த்தார்; மக்கள் அரசோய்ச்சும் அதிகாரம் பெற்றிருக்க வேண்டும் என விரும்பினர்; அடிப்படைத் தொழில்கள் தேசிய மயமாக்கப்பட வேண்டும் என்பதிலும் சாதகமான கருத்தையே கொண்டிருந்தார்.

கற்பனை உலக சோஷலிஸம் அல்லது சமுதாய உடைமை மனிதனுடைய அறிவாற்றலுக்கும் நல்ல இயல்புகளுக்கும் நல்லெண்ணங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றது. கற்பனையுலக சோஷலிஸ வாதிகள் முதலாளித்துவத்திற்கு எதிரான கருத்துக்கள் கொள்ள காரணம் அது சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை உண்டாக்கியதோடு ஒழுக்கத்தையும் பாதித்ததுதான். சோஷலிஸத்தை விரும்பி ஏற்பதால் முதலாளித்துவத்தை நீக்கிவிட முடியும் என்று நம்பினர்கள். கற்பனை உலக சமுதாய உடைமை அல்லது சோஷலிஸம் குறைந்த உண்மைக் கூறு உடையதாகவும் செயல்படுத்த இயலாத ஓர் உன்னத நிலையாக அல்லது கோட்பாடாகவும் உள்ளது. கார்ல் மார்க்ஸின்

அறிவியல் சோஷலிஸம் வந்தவுடன் கற்பனை உலகுச் சமத்துவம் மங்கிவிட்டது. மார்க்ஸ் பொருளுற்பத்தி துறையின் ஆற்றல்கள் பொதுவுடைமையாக்கப்படவேண்டும் என்றார். இதுவே தற்கால சோசலிஸத்தின் மையக்கருத்தாகும்.

சோஷலிஸம் ஏன் ?

சோஷலிஸம் முதலாளித்துவத்திற்கு எதிரானது. முதலாளித்துவம் அநேகம் பேருக்கு தொல்லையைத் தரவல்லதாக இருக்கிறது. ஏனெனில் செல்வந்தராய் உள்ள சிறுபான்மையினருடைய சொந்த நலனுக்காக ஏழைகளைச் சுரண்டுகிறது. பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை உண்டாக்கி அதன் மூலம் பல்வேறு பிரச்சினைகளை உருவாக்குகிறது. சோஷலிஸம் இந்த ஏற்றத் தாழ்வுகளை சமன்செய்ய விழைகிறது. ஆக்கச் செயலுக்கு பயன்படுத்தக் கூடிய பணம், மூலப்பொருள் இவற்றை முதலாளித்துவத்தின் விளைவு விரயம் செய்கிறது என்று சொல்லப்படுகிறது. இதுபோட்டியினால் விளைவதாகும். முதாலாளித்துவத்தில் பொருள் உற்பத்தி, உடைமை அவாவினால் உண்டாவதாகும். இது இன்றியமையாத தேவைப் பொருள்கள் உற்பத்தியாவதை பாதிக்கின்றது. சோஷலிஸம் இவற்றைச் சரிசெய்ய உதவுகிறது. செல்வம் சில கைகளில் மட்டும் குவிவது முதலாளித்துவத்தின் விளைவாகும். இது மிகக் கடுமையான அநீதியில் முடியும். செல்வம் சரிசமமாக பகிர்ந்தளிக்கப் படுவதன் மூலம் நியாயம் எல்லோருக்கும் அளிக்கப்படுவதே சோஷலிஸத்தின் நோக்கம் ; முதலாளித்துவம் பொருளாதாரச் சமத்துவத்திற்கு உகந்ததல்ல. பொருளாதாரச் சமத்துவம் இல்லாத பட்சத்தில் மக்களாட்சி கேலிக்குரியதாகிவிடும்.

சோஷலிஸம் இந்த நிலையை சரிப்படுத்துவதில் நம்பிக்கை வைக்கிறது. மக்களாட்சி வெற்றி பெறவேண்டுமெனில் அங்கு பொருளாதார சமநிலை இருக்கவேண்டும்.

சோஷலிஸத்திற்கு எதிர்க் கருத்துக்கள்

சோஷலிஸத்திற்கெதிராக பல வாதங்கள் சொல்லப்படுகின்றன. சோஷலிஸம் தனிப்பட்டவர் முயற்சிகளைக் கொன்றுவிடுகின்றன என்று சொல்லப்படுகிறது. செயலும் அதிக ஊக்கத்துடன் கூடிய செயலும் இலாபத்தினால் தூண்டப்படுபவை. தனிப்பட்ட இலாபத்திற்காக எதுவும் செய்யப்படுவதில்லையாதலால் இலாபம் என்ற கேள்வி சோஷலிஸத்தில் எழுவதில்லை, இலாபம் இல்லாத விடத்து உற்பத்தியை அதிகரிக்க தனிமனிதனின் ஆக்க செயல்கள் முடக்கம் கொள்கின்றன. ஒரு சோஷலிஸ நாடானது

நிறைய செயல்களை நிறைவேற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதிக பளுவுடைய நாடானது தனது செயல்களை திருப்திகரமாக நிறைவேற்றாது. சோஷலிஸத்தை நடைமுறையில் வெற்றிகரமாக நடத்துவது என்பது இயலாத செயல் என்றும் வாதிக்கப்படுகிறது.

சோஷலிஸத்திற்கெதிரான கருத்துக்களின் தொகுப்பு என்ன வாயிருந்தபோதிலும் சோஷலிஸ கருத்துக்கள் உலக முழுவதும் மிகவும் பிரபல்யமாகி வருகின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது, ஏதாவது ஒரு வகையில் உலகின் பல பாகங்களிலும் பின்பற்றப்பட்டு வருகின்றன. மக்களின் பொதுநலம் பேணும் நாடு சோஷலிஸக் கருத்துக்களுடன் பிணைக்கப்பட்டுள்ளது.

மக்களாட்சி சமுதாய உடைமை அல்லது சோஷலிஸம்

சோஷலிஸம் பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. எடுத்துக் காட்டாக பேபியன் சோஷலிஸம். கில்டு சோஷலிஸம், கற்பனை உலக சோஷலிஸம், அறிவியலாய்ந்த சோஷலிஸம், விருப்பக் கொள்கை சோஷலிஸம். ஒரு வகை சோஷலிஸமானது தற்காலத்தில் குடியாட்சி சோஷலிஸம் எனப்படுகிறது. மக்களாட்சி அரசுள்ள நாடுகளில் எல்லாம் மக்களாட்சி சோஷலிஸத்தின் கொள்கைகள் சேர்க்கப்பட்டு விட்டதால் சோஷலிஸத்திற்கு மதிப்பு கூடியிருக்கிறது. இந்தியக் குடியரசிலும் 42-ஆவது திருத்தப்பட்ட அரசியலமைப்பு சட்டம் அமலுக்கு வந்தபின்பு சோஷலிஸத்திற்கு மதிப்பு கூடியுள்ளது.

மக்களாட்சி சோஷலிஸம் சந்தேகத்துக்கிடமின்றி மேற்கு நாடுகளில் உதயமானது தான்; கிழக்கிலும் அதிவேகமாக பரவியது. இது இந்தியாவில் வெகு விரைவில் மதிப்பு பெற்றது. 1955-ல் சென்னைக்கு அருகிலுள்ள ஆவடியில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் வருடாந்திர மகாநாட்டில் இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் முன்னுரையில் கூறப்பட்டுள்ள அடிப்படைக் கருத்துக்களை சார்ந்து எழுதப்பட்ட கொள்கைகளால் சோஷலிஸம் இந்தியாவில் மதிப்பு பெற்றது. இந்தியாவை பொறுத்த மட்டில் மக்களாட்சி சோஷலிஸம் என்ற கொள்கையை உருவாக்கியவர்கள் காலம்சென்ற பண்டித ஜவஹர்லால் நேருவும், கே. காமராஜரும் தான். 1955ஆம் ஆண்டு மன்ற தீர்மானம் மறுபடியும் 1957விலும், 1964விலும் முறையே இந்தூர், புவனேஸ்வரில் நடைபெற்ற ஆண்டு கூட்டங்களிலும் உறுதியாக்கப்பட்டன. அகில இந்தியக் காங்கிரஸின் மன்ற தீர்மானங்களில் பயன் படுத்தப்பட்ட 'சோஷலிஸ முறையிலமைந்த சமுதாயம்'

என்பது முறையான மக்களாட்சி சோஷலிஸம் அல்ல. இந்திய அரசியலமைப்புச் சட்டம் எழுத்திலும் நடைமுறையிலும் அரசியல் ரீதியாகத் தன்னால் இயன்ற வரையில் மக்களாட்சி, சோஷலிஸ முறை இவ்விரண்டு வார்த்தைகளையும் ஒன்று சேர்த்து படித்தால் அது 'மக்களாட்சி சோஷலிஸம்' என்றாகிறது. எனவே இந்தியா வின் குறிக்கோளாக மக்களாட்சி சோஷலிஸம் ஏற்றுக் கொள்ளப் பட்டதில் எவ்வித சிக்கலும் இல்லை.

முக்கியமாக (இந்த சோஷலிஸ முறை சமுதாயம்) இதன் பொருள் என்னவெனில் முன்னேற்றத்திற்கான பாதைகளின் அடிப்படை நோக்கம் சொந்த இலாபத்தைக் கருதி இருத்தல் கூடாது என்றும் ஆனால் சமுதாயத்தின் மொத்த நன்மையை நோக்கமாகக் கொண்டு செயல்படவேண்டும் என்பதும் ஆகும். வளர்ச்சியின் முறைகளும் சமூகப்பொருளாதார உறவுகளின் முறை பாடுகளும் திட்டமிடப்பட்டு நாட்டின் வருவாயையும் வேலை வாய்ப்புகளையும் அதிகரிக்கும். பலனைத் தரக்கூடியதாகவும் வருவாயையும் செல்வத்தையும் சமமாக்கும் முயற்சிகளுடைய தாகவும் இருப்பது மிக அவசியமாகும். உற்பத்தித் துறை, பிரித் தளிக்கும் துறை, பயன்படுத்தும் துறை, முதலீடு செய்யும் துறை ஆகியவற்றை பொறுத்த முக்கியமான முடிவுகளும் சமூக பொரு ளாதார உறவு முறைகள் எல்லாம் சமூகத்தின் நலன்களை குறிக் கோள்களாக கொண்டுள்ள சமூக நிறுவனங்களால் எடுக்கப்பட வேண்டும்.

சோஷலிஸ முறை சமுதாயம் என்பது வரையறுக்கப்பட்ட அல்லது நிலையான முறையாக கருதப்படுகிறது. அது எந்த கொள்கையிலும் கோட்பாட்டிலும் வேரூன்றியதல்ல. முக்கிய மான குறிக்கோள்களை அடைவதிலும், வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதிலும், எல்லோருக்கும் சமவாய்ப்புகளை அதிகமாக்கு வதிலும், பின்தங்கிய வகுப்பினருக்கு அளிக்கும் ஊக்கத்தை அதிகப்படுத்துவதிலும் சமூகத்திலுள்ள எல்லா மக்களும் தாம் அனைவரும் கூட்டாளிகள் என்ற எண்ணம் தோற்றுவிக்கப்பட வேண்டும். இந்திய குடியரசின் அரசு செயல்பட பின்பற்ற வேண்டிய குறிக்கோள்கள் அரசு செயல்பட வேண்டிய முறைகள் இன்னதென்று மேலோட்டமாகக் கோடிட்டுக் காட்டுகிறது. முறைகள் இன்னதென்று தெளிவாக வரையறுத்துக் கூறப் படுவது சோஷலிஸ முறையில் அமைந்த சமுதாயமாகும்.

'குடியாட்சி என்பது ஒரு வகை அமைக்கப்பட்ட நிறுவன முறை என்பதைவிட ஒரு வகை வாழ்க்கை முறை என்பதே

சரியானக் கருத்தாகும்.'[1] இதையே சோஷலிஸ முறைக்கும் கூறலாம்.

குடியாட்சி சோஷலிஸம் என்பது மக்கள் அல்லது அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பொருளாதாரத்தை நிலைநிறுத்தவும் சமூக நலனை அதிகரிக்க சமூக பாதுகாப்புகளை உண்டாக்குவதற்கும் சரியான கொள்கைகளை முடிவு செய்தல் என்பதாகும். இவ்வாறு நோக்கினுல் எல்லா குடியாட்சி முறை தொழில் வளமுள்ள நாடுகளும் சோஷலிஸத்தை பின்பற்றுபவை தான். மக்கள் நலனைக் குறிக்கோளாக உள்ள நாடு குடியாட்சி சோஷலிஸத்தின் பண்புகளை பிரதிபலிக்கின்றது.

மக்களாட்சி சோஷலிஸத்தின் நல்லியல்பே குடியாட்சி அரசியல்மைப்பில் சட்ட முறைகளால் சோஷலிஸத்தை செயல் படுத்துவதாகும். அது இயற்கையாக வளர்ச்சி அடையும்,

மக்களாட்சியும் சோஷலிஸமும் ஒன்ருக செயல்படுத்துதல் இயலுமா என்பது பொதுவாக கேட்கப்படும் ஒரு கேள்வியாகும். பேரறிஞர்கள் தாங்கள் மக்களாட்சி பற்றியும் சோஷலிஸத்தைப் பற்றியும் கொண்டுள்ள கருத்துக்களைக் கொண்டும் சில நாடுகளில் சோஷலிஸத்தைப்பற்றி கொள்கை அளவில் கேள்விப்படாத ஆனுல் செயல்படுத்துகின்ற நாடுகளின் நிலையையும் மனதில் கொண்டு வெவ்வேறு விதங்களில் பதிலளிக்கிருர்கள். இந்த புத்தகத்தை எழுதியவர்களுக்கு சரியாகத் தோன்றுவது என்னவெனில் மக்களாட்சியும் சோஷலிஸமும் ஒன்ருக செயல்படுத்தக்கூடியது என்பதேயாகும். ஏனெனில் குடியாட்சி வாழ்க்கையின் ஒரு முறையாக மட்டும் அல்லாமல் அரசியல் வழியாகவும் உள்ளது. சோஷலிஸம் அதன் பொருளாதாரத் தத்துவமாக கருதலாம். ஒரு அரசின் அடிப்படை செயலே அதற்கு சரியெனப்படும் வகைகள் அல்லது முறைகளைக்கொண்டு குடிமக்களின் பொருளாதார நிலையை சீர்படுத்துவதுதான் மக்களாட்சியில் இது மிகவும் உண்மையானது. தற்கால மக்களாட்சியில் சோஷலிஸ குறிக்கோள்களை, திட்டங்களை செயலாற்றும் ஆர்வத்தில் சோஷலிஸ முறைகளை பயன்படுத்துகிருர்கள். இதற்கு சந்தேகமின்றி பொது மக்களின் சம்மதம் தேவை; எனவே மக்களாட்சியும் சோஷலிஸமும் ஒன்ரேடொன்று நன்கு இணைந்துள்ளது என்று கூறலாம். அவை ஒன்றை ஒன்று சார்ந்தவையாயும் ஒன்றை ஒன்று வளப்படுத்துவனவாயும் உள்ளன; எனவே அவை ஒன்றுடன் ஒன்று போட்டியிடும் என்ரே ஒன்றை ஒன்று அழிக்க வல்லது என்ரே கூறுவதில் பொருளில்லை.

[1] நார்மன் டி. பால்மர் : இந்திய அரசியல் அமைப்புகள், பக். 112-113

இந்த வகையில் ஐரோப்பாக் கண்டத்தில் முக்கியமாக இங்கிலாந்தில் குடியாட்சி சோஷலிஸம் உருவான சூழ்நிலைகளை தெரிந்து கொள்வது அவசியமாகும். சில அறிஞர்கள் கூற்றுப்படி குடியாட்சி சோஷலிஸத்தை பொதுவுடமை அல்லது சோஷலிஸ அரசு என்றும் கூறலாம். தனியுரிமை கொள்கைக்கு எதிராக வளர்ந்தது சோஷலிஸம் அல்லது சமத்துவம். 'அரசுகளால் சீர்திருத்தப்படாத முதலாளித்துவக் கொள்கைகளுக்கு எதிராகவும் உழைக்கும் வர்க்கத்தினரின் பிரதிநிதித்துவத்திற்கு முக்கியத்துவம் அளிக்கவும், செயல்படவும், சோஷலிஸம் மக்களாட்சியுடன் இணைய ஆரம்பித்துள்ளது.'[1] மக்களாட்சி சோஷலிஸம் ஓர் கொள்கை என்பதைவிட செயலாற்றப்படும் முறை என்பது தகும். ரஷ்யாவில் சமத்துவக் கோட்பாடு உறுதியாக வேரூன்றிய பொழுது மேற்கில் குறிப்பாக பிரிட்டனில் மக்களாட்சி சமத்துவம் தலைகாட்டியது. இதற்கு சோஷலிஸ இயக்கம் புரட்சிகரமான வழிகளை நீக்கம் செய்து விட்டதுதான் காரணமாகும். சார்டிஸ்டுகள் வாக்குரிமைகளை அதிகப்படுத்துவதையும் சோஷலிஸ்டுகள் உழைப்பவர்கள் சங்கத்தையும் ஆதரித்தனர். பேபியன் சோஷலிஸ்டுகள் உழைக்கும் வகுப்பினருக்குத் தனி அரசியல் கட்சி ஏற்படுவதை ஆதரித்தனர். இத்தகைய கொள்கைகளுக்கு பிரிட்டனில் ஆதரவு இருந்தது. உழைக்கும் வகுப்பினரின் சமூக வாழ்க்கை தரத்தைச் சீர்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மிக முக்கிய ஆக்க செயல்களை பொதுவுடைமையாக்க இங்கிலாந்தில் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. இதன் விளைவாக மக்களாட்சி சோஷலிஸம் பிரிட்டனில் உருவாகியது.

பொது உடைமை

காரல் மார்க்ஸ் (1818—1883) தற்கால கம்யூனிஸத்தின் தந்தையாவார். மார்க்ஸால் தோற்றுவிக்கப்பட்ட கம்யூனிஸம் மார்க்ஸிஸக் கொள்கை என்றும் அறிவியல் சமத்துவம் என்றும் அழைக்கப்படுகிறது. மார்க்ஸ் 1818 இல் ஜெர்மனியிலுள்ள டிராவ்ஸ்கில் யூதரான தாய் தந்தையருக்கு மகனாய்ப் பிறந்தார். 1841-இல் எபிகுரியஸின் இம்மை சார்ந்த மெய்ப்பொருள் பற்றி எழுதிய கட்டுரைக்காக டாக்டர் பட்டம் பெற்றார். ஆசிரியர் வேலையை ஏற்க மார்க்ஸ் விரும்பியபோதிலும் அவருடைய தீவிரக் கொள்கைகள் ஜெர்மனியில் விரும்பப்படவில்லை. பாரிஸில் கொஞ்ச காலம் வாழ்ந்தார். பிரெஞ்சு அரசாங்கத்தால் நாடு கடத்தப்பட்டபின் பிரஸ்ஸல்ஸில் குடியேறினார். இங்குதான் தன்னுடைய 'பொது உடைமை பிரகடனம்' என்ற புத்தகத்தை

[1] ராடீ : அரசியல் பாடத்திற்கு அறிமுக உரை, பக். 93

எழுதினார். முடிவில், லண்டன் மாநகருக்கு சென்று, 1883இல் காலமாகும் வரை அங்கேயே வாழ்ந்தார். இங்கிலாந்தில் தான் அவருடைய ஞாபகார்த்தமாக விளங்கும் மிகச் சிறந்த 'தாஸ் காபிடலை' எழுதினார்.

மார்க்ஸீய கம்யூனிஸத்தின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ள 11ஆம் நூற்றாண்டின் சமூக நிலை பற்றிய கருத்துக்கள் இன்றியமையாததாகும்.

'பொதுவுடைமை பிரகடனம்' (1848) வெளியானபோது தொழிற்சாலை முறைகள் திடமாக நிறுவப்பட்டிருந்தன: 'இயந்திரங்களால் உருவாக்கப்பட்ட பொருள்களுடன் கைகளால் பொருள்களை உருவாக்கும் தொழிலாளிகள் வீணே, போராடினர். தொழிலாளி விருப்பின்றி தொழிற்சாலையில் நுழைவதைத் தவிர வேறு வழியின்றி மூலதனமின்றி இருந்தான்.'[1] சுயமாக பொருளுற்பத்தி செய்யும் தொழிலாளிக்கு அதை விடுத்து, தொழிற்சாலை விதிகளுக்கு கட்டுப்படுவது இன்னது என்பது தொழிற்சாலையை தவிர்த்து எண்ண இயலாத இக்கால தொழிலாளிக்கு அறிந்து கொள்ள இயலாது. தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளியின் வேலை செய்யும், வாழ்க்கை நடத்தும் நிலைமைகள் மிக மோசமானவை.

சமத்துவ வாதிகள் தொழிற்சாலைத் தன்மைகளின் கொடுமைகள் கண்டு திடுக்கிட்டனர். எமிலி டாக்கியம் என்னும் பிரெஞ்சு சோஷலிஸவாதி சமூக சிந்தனைகளையும் அரசியலையும் 'துன்பத்தின் ஒரு கூக்குரல்' என்றார். 'மார்க்ஸின் புத்தகங்களைப் பற்றி எழுதும் தற்கால பேரறிஞர்கள் மார்க்ஸின் பொருளாதார சட்டங்களுக்கும் அரசியல் சமூகவியல் உரைகளுக்கும் பின்னால் மனிதத் தன்மையின் மெய்ப்பொருள் பொதிந்துள்ளது என்கிறார்கள்.'[2]

தொழில் இயக்க நாடுகளில் உள்ள பெரும்பான்மையான மக்களின் சீர்குலைந்த தன்மைகளின் காரணங்களை ஆராயுமுன் வரலாற்று ஆராய்ச்சி செய்கிறார் மார்க்ஸ். அவருடைய வரலாற்று ஆராய்ச்சி அறிவியல் அல்லது உலகியலைச் சார்ந்த ஒன்றாக இருக்கிறது. அவர் மனிதனை பொருளியலைச் சார்ந்த ஒரு பருப்பொருளாகக் கருதுகிறார். சுயதேவைகளைப் பூர்த்திசெய்யும் கருவியாக பயன்பட்டது பண்டைக்கால சமூகம். ஒவ்வொரு தனி மனிதனும் தான் உயிர் வாழ தேவையானவற்றை உற்பத்தி செய்தான். பின்பே விருப்பமான பொருளுற்பத்தி துவங்கியது. தனி

[1] ஆர்தர் பர்னி: ஐரோப்பாவின் பொருளாதார வரலாறு, பக். 8
[2] ராபர்ட்சி. டக்கர்; கார்ல் மார்க்ஸின் தத்துவமும் கற்பனையும்.

மனிதர்கள் தாம் விரும்பியவற்றை மட்டுமே உற்பத்தி செய்தனர். இது சமூக நிலையில், செல்வத்தில், அரசியல் அதிகாரத்தில் வேறு பாடுகளைக் கொண்டுவந்தது. இதில் ஆதிக்கம் செலுத்தும் இரண்டு வகுப்பினர்களும் செல்வத்தையும் உற்பத்திக்குதவும் பொருள் களையும் உழைக்கும் வகுப்பினரையும் தன்னகத்தே கொண்டவர் களாவார்கள். இந்தவகுப்பினரிடையே கலவரங்கள் உண்டாயின. மார்க்ஸ் இதை வகுப்பு சண்டையாக உருவகிக்கிருர். 'பொது உடைமைபிரகடன'த்தின் முதல் பாகம் முதல் வாக்கியம் கீழ்க் கண்டவாறு ஆரம்பமாகின்றது. 'சமூகத்தின் இன்றைய நாள் வரை உள்ள வரலாறு வகுப்பு கலவரங்களின் வரலாறுதான்'[1] என்கிருர். வகுப்பு கலவரங்களில் பூர்ஷ்வாக்கள் அல்லது செல்வத்தையுடைய நடுத்தர வகுப்பினர், பட்டாளிகள் அல்லது பெரும்பான்மையான உழைக்கும் வர்க்கத்தினரைச் சுரண்டினர். உற்பத்தி செலவினத்தைவிட அதிகமாக இருந்ததால் வகுப்பு வாதங்கள் தீவிரமாயின. இந்த நிலையில் உழைப்பாளிகளுக்கு உயிர் வாழ்வதே மிக கடினமாக இருந்தது. இந்தவித பயங்கர நிலையில் புரட்சி தவிர்க்க முடியாதது.

'வரலாற்றின் இயற்கை ஆற்றல்களை விளக்குவதற்கு மார்க்ஸ் 'டைலெக்டிக்' என்ற பதத்தை பயன்படுத்துகிருர். ஜெர்மானிய தத்துவ மேதை ஹெகலிடமிருந்துஇதை மார்க்ஸ் எடுத்தாளுகிருர். 'டைலெக்டிக் என்பது குறிப்பாக எல்லா செயல்களின் இடைநிலை உறவுகளையும் குறிக்கும். எந்த ஒரு செயலையும் சுற்றுப்புறத்தைக் கொண்டு பொதுவாக அறிந்து கொள்ள முடியும்.' எடுத்துக்காட் டாக முதலாளித்துவத்தின் வளர்ச்சியை முறையாக அறிந்த பின்னரே அதன் முக்கிய இயல்புகளை அறியமுடியும். வரலாறு என்பது ஒன்றுக் கொன்று முரணுன உறவுகளின் சாசனமே என்கிருர் மார்க்ஸ், மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள முரண் பாடுகள், பொருளுற்பத்தி துறை முறைகளில் ஏற்பட்டுள்ளமாறு பாடுகள், சமூகத்திலுள்ள வகுப்பினரிடையேஉள்ள வேறுபாடுகள் கொள்கைகளில் ஏற்பட்டுள்ள வித்தியாசங்கள் முதலியனவாகும். டைலெக்டிக் முறைப்படி வரலாற்றை விளக்கப் போந்தால் பிரபுத் துவத்திலிருந்து முதலாளித்துவத்திற்கு ஏற்பட்ட மாறுதல் பொருளாதார கட்டுப்பாட்டிற்கும் சுதந்திர வியாபார முறைக்கும் உள்ள மாறுபாடுகள் இவைகளால் விளைந்த முரண்பாடுகள் சோஷலிஸத்தை உண்டாக்கி அதனுல் பிரபுத்துவத்தையும் முதலாளித்துவத்தையும் ஒன்று சேர்த்துவிட்டது.

[1] ராடீ. ஆன்டர்ஸன், கிறிஸ்டல், கிரீன் : அரசியல் பாடத்திற்கு அறிமுக உரை, பக். 76

மனித வரலாற்றில் ஒவ்வொரு நிலையிலும் ஒரு வகுப்பினர் மற்ற வகுப்பினரை அகத்தே அடக்கி அதிகாரம் செலுத்துவதுடன் அரசையும் தங்கள கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொண்டனர். பொருளாதார அதிகாரங்களை பங்கிட்டு கொடுப்பது பழக்கமாயிற்று. 'நாடு, அதன் கோட்பாடுகள், அதன் சட்டங்கள் அதன் காவல்துறை மற்றும் நீதித்துறைகள் ஒரு வகுப்பினரின் ஆணைகளை செலுத்தும் கருவிகளாகவும் சமூகத்திலுள்ள பிற வகுப்பினரை சுரண்டுதலை நியாயமாக்கவும் செயல்பட்டு வந்தன.'[1]

முதலாளித்துவத்தை கொள்கையாக கொண்ட சமூகம் மிகுந்த ஏற்றத் தாழ்வுகளை உண்டு பண்ணும் ஓர் சமூகம் என்கிறார். மார்க்ஸ் சிறுபான்மையினர் வளமுடன் வாழ்வதும் பெரும்பான்மையினர் கஷ்டப்படுவதும் காணப்படும். பொருள்களை உற்பத்தி செய்யும் ஆக்க வேலை செய்பவருக்கு மிகக் குறைந்த ஊதியம் தரப்பட்டது. உண்மையில் அவர்கள் உயிர் வாழ்வதற்கு தேவையானது மட்டுமே அளிக்கப்பட்டது. அவர்கள் உற்பத்தி செய்த பொருள்களினால் அவர்கள் எந்தவித பலனும் அடையவில்லை. மார்க்ஸ் ஒரு பொருளை உண்டாக்க ஒருவன் அளித்த உழைப்பை கொண்டே அதன் மதிப்பை நிர்ணயித்தார். முதலாளிகள் அந்த பொருளுக்கு எந்த மதிப்பையும் உண்டாக்க முடியாது. முதலாளிகள் செய்ய இயன்றதெல்லாம் உழைப்பாளிகளிடமிருந்து அதிகப்படியான மதிப்பை எடுத்துக் கொண்டு விடுவது தான். இந்த விளக்கவுரை மார்க்ஸால் உருவாக்கப்பட்டது.

முதலாளித்துவ பொருளுற்பத்தி முறைகள் அதிகப்படியான உழைப்பாளிகளை ஒன்று சேர்த்தன. வேறுவிதமாகச் சொன்னால் உழைப்பாளிகள் ஒருவரை ஒருவர் நெருங்கிப் பழக வைத்தது முதலாளித்துவமாகும். அது மக்களுக்கு வகுப்புக்களுடன் தங்களை ஒன்றாக நினைத்தறிய ஏதுவாயிற்று. இந்த விழிப்பு உழைப்பாளிகளிடையே தோன்றவும் அவர்கள் தம் சீர்குலைந்த நிலையை அறிந்து வன்முறையிலாவது சமூக நிறுவனங்களை தமக்கு சாதகமாக மாற்றியமைக்க முடிவு செய்தனர். இதன் பலனாக முதலாளித்துவ ஆட்சியை நீக்கிவிட்டு உழைப்பாளிகள் வல்லாட்சி விளைகிறது. இதுவே பெரும்பான்மையினர் ஆட்சி; உழைக்கும் வகுப்பினர், உற்பத்தி, பிரித்தளித்தல் ஆகியவற்றின் முறைபாடுகளை நாட்டின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருகின்றனர். உண்மையான சோஷலிஸத்தை நிலைநாட்ட பல

[1] ராடீ. ஆன்டர்ஸன், கிறிஸ்டல். கிரீன் : அரசியல் பாடத்திற்கு ஓர் அறிமுக உரை, பக். 77

முறைகளும் கையாளப்படுகின்றன. முதலாளித்துவ கொள்கை முழுமையாக அழிக்கப்பட்டபின் அரசு தேவையில்லாததாகிறது. ஏனெனில் இதுவரை அரசு சுரண்டலுக்குக் கருவியாக பயன்பட்டது. தற்போதைய நிலையில் சுரண்டுவதற்கோ சுரண்டப்படுவதற்கோ வகுப்புகள் இன்மையால் அரசு மெதுவாக மறைகிறது.

குறைபாடுகள்

பொருளாதாரம் ஒன்றே மனிதனின் வாழ்க்கைக்கு தூண்டு கோல் என்ற மார்க்ஸின் கருத்தை நாம் ஒப்புக் கொள்வதற்கு இல்லை. வரலாற்றை பொருளாதார இயலாக மார்க்ஸ் விளக்குவதும் முழுமையாக ஒப்புக் கொள்வதற்கில்லை. பேராசிரியர் ஹெலோவெல் என்பவர் பொருளாதார எண்ணங்கள் அல்லாமல் கருத்துகளும் மனிதனுடைய வாழ்க்கைக்கு இன்றியமையாத பிற தூண்டுகோல்களாக விளங்குகின்றன எனக் கூறுகிறார். மார்க்ஸியம் முழுமையான கோட்பாடாக இருக்கிறது.

அரசு மறைந்துபடும் என்ற கருத்து நடைமுறையில் நிலைக்கக் கூடியதல்ல. அரசு மறைந்துபடும்முன் மார்க்ஸ் உழைப்பாளிகளின் வல்லாட்சி நடைபெற வேண்டும் என்ற முறையினை வலியுறுத்துகிறார்; எந்தவித வல்லாட்சியும் கொடுங்கோலாட்சியில் விளையும். எனவே உழைக்கும் வர்க்கத்தின் வல்லாட்சியும் ஒப்புக் கொள்வதற்கில்லை. மார்க்ஸின் 'அபரிமிதமான வருவாய்' கொள்கையும் தவறு என நிரூபிக்கப்பட்டுள்ளது. லாஸ்கி சொல்வது போல பொது உடைமை தத்துவத்தில் அறிவாய்ந்த தவறுகளும் ஒழுக்கமின்மை என்ற குருட்டுத்தனமும் சமூகத்தைப் பற்றி வேண்டத்தகாத கோளாறான எண்ணங்களும் உள்ளன.

பல குறைகள் இருந்தபோதிலும் இந்த கோட்பாடு உலகில் சிறந்த வரவேற்பை பெற்றுள்ளது. இன்னும் ஐரோப்பாவில் பல அரசுகளிலும் மற்றும் பல இடங்களிலும் பொது உடைமைத் தத்துவத்திற்கு உட்பட்டு வருவதைக் காணலாம்,

மேற்கோள் நூல்கள்

(1) இ. பர்ன்ஸ்டீன்: உருவாகும் சமுதாய உடைமை.

(2) டபிள்யூ. எப். பக்லீ ஜூனியர்: தனித்துவக் கொள்கையிலிருந்து.

(3) ஜி. டி. எச். கோல்: அறிவியல் எண்ணங்களின் வரலாறு.

(4) ஸி. ஏ. ஆர். க்ராஸ்லாந்து: சமுதாய உடைமையின் எதிர்காலம்.

கேள்விகள்

1. சமுதாய உடைமை அல்லது சோஷலிஸத்தை அறுதியிட்டுக் கூறுக.

2. மக்களாட்சி சமத்துவம் அல்லது சோஷலிஸம் என்பது என்ன ?

3. அறிவியல் சோஷலிஸத்தை ஆராய்க.

இயல் 13

பாஸிஸமும் நாஸிஸமும்

முன்னுரை

இத்தாலியின் பாஸிஸம், ஜெர்மனியின் நாஸிஸம் அல்லது ஹிட்லரிஸம் என்பதெல்லாம் பொதுவாக வல்லரசுகள் என்று அழைக்கப்படுகின்றன. மற்ற அரசியல் கொள்கைகளின் தீவிர முரண்பாடுகளின் விளக்கம் இந்த வல்லரசுகள். இவை தோன்றிய தன் மூலகாரணம் ரஷ்யாவின் கம்யூனிஸம் ஆகும். இந்த வல்லரசுகள் அனைத்தும் ஏற்பட பல காரணங்கள் இருந்தபோதிலும் அடிப்படை கொள்கைகளில் இவை யாவும் ஒன்றே.

பாஸிஸம்

1914—1918 முதல் உலகப் போர் முடிவடைந்தபோது ரஷ்யக் கம்யூனிஸ்டுகள் இத்தாலியில் உழைக்கும் வர்க்கத்தினரின் வல்லாட்சியை நிறுவ மேற்கொண்ட முயற்சிகளால் பாஸிஸம் ஓர் அரசியல் சக்தியாக உருவெடுத்தது. முதல் உலகப் போரினின்று இத்தாலி வெறுப்புடன் வெளிப்போந்தது. கிழக்கே தனக்கு ஊன்றுகோலாக சில குடியேற்ற நாடுகள் கிடைக்கும் என எதிர்பார்த்தது. இவை மட்டுமே பாஸிஸம் தோன்றக் காரணமல்ல. பாஸிஸம் தோன்ற உடனடி காரணம் பொருளாதார சீர்குலைவுதான். போரினால் ஆக்க சக்திகள் அழிந்து, அயல் நாடுகளிடம் கடன்கள் ஏற்பட்டு, பட்ஜெட்டுகளில் குறைகள் விழுந்து நாட்டின் நிதிநிலை மீளா நிலைக்கு அழுந்தியது. போரிலிருந்து திரும்பிய வீரர்களின் அதிருப்தி ஒரு புறமும் உழைக்கும் வர்க்கத்தினரின் நிலைகுலைவு மறுபுறமும் சேர்ந்து ஒவ்வொரு மூலையிலும் வன் முறைகள் தலைதூக்கக் காரணமாயிற்று. பல தொழிற்சாலைகளை உழைக்கும் வர்க்கத்தினர் கைப்பற்றியும் பொருளுற்பத்தி குறையவே ஆரம்பித்தது. இத்தாலியின் இத்தகைய சீர்குலைவு உழைக்கும் வர்க்கத்தின் வல்லாட்சியை அமைக்க வன்முறையாளர் ஆதரவாக நினைத்து செயல்பட்டனர். இவ்வமயம் இத்தாலிய சோஷலிஸ்டான பெனிடோ முஸோலினி 'போர்ப்படை' ஒன்றை உருவாக்கினர். இதன் நோக்கங்கள் அரசிடமிருந்து உழைப்பவருக்காக சில சீர்திருத்தங்களை வலியுறுத்தி பெறுவதும் முதல் உலகப் போர் வெற்றிக்கனிகளை

இத்தாலிக்கு கேட்டுப்பெறுவதும்தான். இந்த அமைப்பு சமூகத்தில் வெவ்வேறு மட்டத்திலுள்ள மக்களை அங்கத்தினர்களாக கொண்டது ; அவர்கள் மாஜி படை வீரர்கள், உழைக்கும் வர்க்கத்தினர், மாணவர், இலக்கிய, வர்த்தக துறையினர், நிலச்சுவான்தார்கள், பிரபுக்களின் வழித்தோன்றல்கள் முதலியோராவர். 1922-இல் முஸோலினியும் அவரது படையினரும் ரோம் நகரைக் கைப்பற்றினர். அவர் அங்கே முறைப்படி தன் ஆதிக்கத்தை நிலைநாட்டிய பின்பு சில காலத்தில் இத்தாலி முழுமைக்கும் தன்னிகரற்ற தலைவரானார்.

இந்த இயக்கம் துவங்கியபோது தொழிற்சாலை சீராக நிர்வகிக்கவும் நடத்தவும் படையை திரட்டினர். பாஸிஸத்தின் ஆற்றல் அதிகரிக்கவும் அதன் அங்கத்தினர்களின் எண்ணிக்கை பெருகி தனித்ததொரு படையாக உருவாகியது ; (நாட்டின் அங்கீகாரம் பெற்ற படையில்லாமல்) அப்படையினர் அணிந்த துணிகளின் நிறம் காரணமாக 'கறுப்பு சட்டைகள்'[1] என அழைக்கப்பட்டனர்.

பாஸிஸ கொள்கை

முதல் உலகப் போருக்குப்பின் 1930இல் பாஸிஸம் ஓர் நாட்டின் அரசியல் கொள்கையாக உருவாகியது.

பாஸிஸம், அதை பிறப்பித்தவர்கள் எண்ணப்படி குடியாட்சி கொள்கைக்கு எதிரிடையானது. தனிமனிதன் உரிமை, சமத்துவம் இவைகளுக்கும் எதிரானது. நாடானது பலப்படியான நிலைகளில் மெதுவாக தானே வளர்ந்து முதிர்ச்சியடைவது என்ற எண்ண முடையது. நாடு மனிதர்கள் சில காரணங்களுக்காக கூட்டுறவு கொண்டு வாழ்பவர்கள் என்ற எண்ணத்தைவிட அதிகப்படியானது. நாடு அல்லது அரசு என்பதற்கு ஒரு ஒன்றிய நிலையும் வாழ்க்கையும் உண்டு. நாட்டின் மொத்த நலனும் அதன் குறிக்கோள்களும் தனி மனிதர்களின் நோக்கங்களைவிட முக்கியமானதால் அது இருப்பது அவசியமாகிறது. தனி மனிதன் நலம் நாட்டின் நலனிற்கு அடுத்தப்படிதான். காலம் காலமாக நாடு வளர்ந்து தொடர்ந்து இயங்கி வருதலை வலியுறுத்துகிறது. அரசை நிலைநாட்டுதல், வரிவுபடுத்துதல், சீர் செய்து வருவது ஆகியவை முதல் குறிக்கோளாகும். குடிமக்களுக்கு அவர்கள் கடமையை வலியுறுத்துகிறது. நாட்டின் நலனுக்காக தனி மனிதர்கள் உரிமைகளை தியாகம் செய்வதும் போர் செய்வதும் தியாகமாக கருதப்பட்டது. இதுவே குடிமகனுக்கு நிலையான தலையாய சட்டமென பாஸிஸம் கூறுகிறது. ஜெர்மானிய அறிஞர்கள் சில

[1] கில்கிறைஸ்ட் : அரசியல் கோட்பாடுகள், பக். 261–262

ராலும், ஹெகலாலும் புகழப்பட்ட கட்டுப்பாடுகள் மிகுந்த அரசும் பாஸிஸமும் ஒன்று எனக் கூறலாம். அத்தகைய அரசின் மேன்மையை பெருமைப் படுத்திக் கூறுகையில் 'அது தெய்வத்தன்மை உடையது' என்னும் அளவிற்கு பாஸிஸ்டுகள் வர்ணித்தார்கள்.

பாஸிஸ்டுகளின் உயர்ந்த நோக்கம் என்னவென்ருல் அரசு சிறப்பாக நிலையாக செயலாற்றவேண்டும். நாட்டின் நலனைக் கருதி ஏற்படுத்தப்படும் திட்டங்களை மக்கள் கட்டுபாட்டுடன் முழுமையாக நிறைவேற்றவேண்டும் என்பதே. குடிமகனின் கடமை தன்னலத்தை மறந்து நாட்டின் நலனைக்கருதி செயலாற்றி அதன் உரிமைகளைப் பாதுகாத்து வருவதேயாகும். அரசிற்கு அவனை அவ்விதம் கட்டாயப்படுத்தவும் உரிமை உண்டு.

பாஸிஸ்டுகள் இறைமாட்சி, குடியாட்சி இவற்றை ஒதுக்கி விடுகிருர்கள். அவர்களின் கருத்தில் நாடுதான் இறைமாட்சி பெற்றது, மக்கள் அல்ல. மக்களுடைய அரசியல் திறனில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. மக்கள் விருப்பத்தை, கருத்துக்களை திசைமாற்ற இயலும் என்பதில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. மக்களுக்கு தாங்கள் விரும்பும் அரசை அல்லது கொள்கைகளை தேர்ந்தெடுக்க இயற்கையில் மாற்றமுடியாத உரிமைகள் இருப்பதை பாஸிஸம் ஏற்பதில்லை. அரசு, அறிவார்ந்த முறைகளால் தேர்ந்தெடுக்கப்படும் வல்லவரான சிறுபான்மையோரிடம் இருக்க வேண்டும் என விரும்பினர். அவ்வப்போது கொள்கைகளில் மாற்றங்கள் செய்யும் சுயநலம்கொண்ட தலைவர்களால் நிலைதடு மாறும் மக்களுக்கு அறிவார்ந்த முறைகளில் அரசை அமைக்க இயலாது என நினைத்தனர். எனவே பெருவாரியான மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பார்லிமெண்டரி அரசு முறையை எதிர்த்தனர். நாட்டின் நலனைக் குறிக்கோளாக கொண்ட குழுக்களில் அங்கத்தினர்களாக தனி நபர்களை அரசு நியமிக்கவேண்டும். செயற்குழு அமைப்புகள், வர்த்தக சங்கங்கள், வேறு வாய்ப்புச் சங்கங்கள், பங்கீட்டு நிறுவனங்கள், கில்டு சோஷலிஸம், கில்டுகள், சிண்டிகலிஸம் முதலிய அமைப்புகள் மூலம் இது சாத்தியமாகும் என்பது பாஸிஸ்டுகளின் கருத்து. சோஷலிஸ கொள்கைகள், வகுப்பிரிவினை வாதங்கள் இவை தேவையில்லை என ஒதுக்குகின்றனர். நாட்டிலுள்ள செல்வமும் உழைக்கும் சக்தியும் தானுக ஒன்றுபட்டு, இல்லாவிடில் நிர்பந்தமாக ஒன்ருக்கப்பட்டு நாட்டின் நலனுக்காக செயலாற்றவேண்டும்; மக்களின்மேல் வலுவில் திணிக்கப்படும் இந்த பொருளியல் ஒருமைப்பாடு சட்டமன்றத்திற்குப் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க அடிப்படையாகிறது. அரசின் முக்கியமான அங்கங்களான செயற்குழு, அரசின் பொது நிர்வாகத்தினர் முதலியோருக்கு

முக்கிய இடம் அளிக்கிறது. சட்டமன்றம் செயற்குழுவிற்கு தகுந்த ஆலோசனைகள் சொல்வதிலும் அவர்களுடன் ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டுமேயன்றி நாட்டை ஆள்வதில் கவனம் செலுத்தக்கூடாது. ஒரு அரசியல் கட்சிதான் நாட்டில் இருக்க வேண்டும் என்பதில் கம்யூனிஸமும் பாஸிஸமும் ஒரே எண்ணம் உடையவை. அந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் அரசை ஏற்று நடத்தவேண்டும். அதன் கொள்கைகளை பொதுமக்கள் விமரிசனம் செய்ய அனுமதிக்கப்படமாட்டாது. நாட்டின் கல்வித் திட்டத்தை ஏற்று நடத்துவதன் மூலம் வருங்கால மக்களுக்கு பாஸிஸ கொள்கைகளைப் போதித்து அதனால் அவர்கள் கருத்துக்கள் இளமையிலேயே மாற்றம் அடையவேண்டும் என விரும்பினர். ஸ்திரமான பொது நிர்வாகம், ஸிண்டிகல் சோஷலிஸம் இவற்றை நாட்டின் பொருளாதார அமைப்புடன் இணைந்து செயலாற்றவைத்து பொருளுற்பத்தியை அதிகரிக்க எண்ணம் கொண்டது. நிர்பந்தித்தல், அச்சுறுத்தல் போன்ற முறைகளை சரியென ஏற்றுக்கொண்டு செய்திறன் ஒன்றையே அளவுகோலாக பயன்படுத்துகிறது. உழைப்பு, கட்டுப்பாடு, செய்திறன், ஒருமைப்பாடு இவையே பாஸிஸ்டுகளின் கோஷங்களாகும்.

பாஸிஸம் உலக நாடுகளின் நல்லுறவை எதிர்க்கிறது. நாடு மட்டுமே இயற்கையாக தன்னிச்சையாக முறைப்படி வளர்ந்த அமைப்பு என்று கருதுகிறது. அரசியல் ஒருமை நேயமும் நாட்டு மக்கள் அனைவரும் ஓரினம் ஒரே பாரம்பரியத்தைச் சேர்ந்தவர் என்ற எண்ணமும் இருக்கும் நிலை ஒரு நாட்டின் மிக உன்னத நிலை என்று கருதுகிறது. நாட்டின் கடமை அந்த நாட்டிலுள்ள மக்கள் அனைவருக்கும் மட்டுமே; உலகத்திற்கு எவ்வித கடமையும் இல்லை. நாடு முழுமையடைய தன் சுய பலத்தை பெருக்கி தனக்குரிய வளர்ச்சியை அடைய பாடுபடவேண்டும். திறனும் ஆற்றலும் மிகுந்த நாட்டு மக்கள் செயல்புரிய தேவை ஏற்படும்போதும் ஆதலால் உற்பத்தி செய்ய இயலாத மூலப் பொருள்கள் தேவைப்படும் பொழுதும் நாட்டை விரிவுபடுத்த வேண்டும். எனவே பாஸிஸம் போரை விரும்பவும் அவசியமாகவும் எண்ணுகிறது. தனி நபரின் நலனைக் கருதாமல் நாட்டு மக்கள் அனைவரின் பொது நலத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதால் தன் சுய படை பலத்தையும் அதிகாரத்தையும் பெருக்கி ஆக்கிரமிப்பு கொள்கையை பின்பற்றுகிறது.

பண்டைக்கால இத்தாலிய எழுத்தாளர்களிடமிருந்து பாஸிஸம் பல கொள்கைகளை பெற்றுள்ளது. செயின்ட் தாமஸ் அக்வினாஸ் அரசியல் துறையில் ஒருமைப்பாட்டை வலியுறுத்தி

"பலர் ஆட்சி செய்வதால் உண்டாகும் தீமைகளையும் ஒருவர் ஆட்சிபுரிவதால் உண்டாகும் நன்மைகளையும் சுட்டிக்காட்டியதை நினைவு கூர்ந்தது 18ஆம் நூற்றுண்டில் இயற்கை தத்துவ சட்டத்திற்கு மறுப்பு கூறிய தத்துவ மேதைகளைச் சாடிய விக்கோவின் கருத்துக்களை மிக உயர்வாக கொண்டாடியது. வரலாறு, அனுபவ அறிவு இவற்றின் மதிப்பைச் சுட்டிக்காட்டி குடியாட்சி குற்றங்குறைகள் மிக உடையது என விக்கோ வாதித்தார்; சுயநலம் பொது நலத்திற்கு உட்படவில்லை எனில் எந்த உரிமையையும் அனுபவிக்க முடியாது என்பதையும் காட்டினர். க்ரொச்சேயின் பயனீட்டு வாதக் கொள்கைக்கு (Pragmatic doctrinc) பாஸிஸம் கடமைப் பட்டுள்ளது. வரலாற்றில் உள்ள ஆற்றல் வேகம் பொருந்திய வீரர்களை க்ரொச்சே புகழ்ந்துள்ளார். நாட்டுப் பற்றின் பெருமை உணர்வைத் தூண்ட பாஸிஸ்டுகள் அடிக்கடி ரோமானிய கலாச் சாரத்தைப் பற்றி பேசினர்கள். மாஸினியின் நாட்டுப் பற்றை நாட்டின் இளைய தலைமுறையின் புதிய கொள்கைகளுக்கு மக்கள் சுயநலனை தியாகம் செய்யவேண்டியதன் அவசியத்தை பாஸிஸம் வலியுறுத்தியது. பாஸிஸ்டுகள் மாக்கியவெல்லியின் மேல் உயர்ந்த மதிப்பு கொண்டுருந்தனர். அதற்குக் காரணங்கள் பின்வருமாறு; 'அவர் இத்தாலியர்; இத்தாலிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தினர்; அரசியலில் செயல்படுத்த முயன்ற பாதையை கடைபிடித்தார்; படை வலிமையில் நம்பிக்கை கொண்டு நாட்டின் எல்லைகளை விரிவுபடுத்துதலின் மதிப்பை எடுத்துக் கூறினர். எல்லாவற்றிற்கும் மேலாக நாட்டிற்கு மிக உயர்ந்த ஸ்தானத்தை கொடுத்தார்.'[1]

அதிகாரபூர்வமான அரசியல் பண்பாட்டினை அடிப்படையாக கொண்டதில்தான் பாஸிஸத்தின் வெற்றி அடங்கியுள்ளது. அதிகாரபூர்வமான தலைவனுக்கு அளிக்கப்படும் முழுமையான பணிவும் இறுகிய படிநிலை அமைப்பும் பாஸிஸத்தின் முக்கிய அம்சங்கள். தலைவனுடைய இறைமைத்தன்மை அவனுடைய முடிவுகள் மொத்த சரியானவை என்ற நம்பிக்கையும் கேள்வியில்லாத முழுப்பணிவையும் ஏற்படுத்துகிறது. இத்தகைய அரசியல் சமூக அமைப்பை போற்றும் அரசியல் பண்பாடு குடியாட்சியையும் அதன் முக்கிய அம்சமான மக்கள் பங்கேற்கும் அரசியலையும் ஒதுக்குகிறது. பாஸிஸத்தை பின்பற்றும் நாடுகளில் குடும்பம், மடாலயங்கள், தொழிற்சாலை மற்றும் எல்லாவித சமூக அரசியல் அமைப்புகளிலும் எடுக்கப்படும் முடிவுகள் உடன்பாடுகளாக அல்லாமல் ஆணைகளாக இருக்கும். அந்த ஆணைகளுக்குக்

1 ஆர். ஜி. கெட்டல்: அரசியல் விஞ்ஞானம், பக். 416-419.

கட்டுப்பட்டுத்தான் ஆகவேண்டுமேயொழிய கலந்துபேசி சமரசமோ உடன்பாடுகளோ காண முடியாது.

கத்தோலிக்க நாடுகளில் அதிகமாக பாஸிஸ இயக்கம் எழுந்துள்ளது மடாலயங்களின் ஆணைச்சட்டங்கள் பல காலத்திற்கு செயல்முறையில் இருந்த நாடுகளிலும் பாஸிஸம் தோன்றியது. அரசியல் கட்சிகள் அமைக்கப்படுவதும், தேர்தல்கள், குடிமக்கள் அனைவருக்கும் வாக்குரிமை முதலியன வளர்வதற்கும். மடாலயங்கள் எதிர்ப்பு தெரிவித்த நாடுகளில் பாஸிஸம் வளர்ந்தது. மதச்சார்பற்ற அரசு நிறுவப்பட மடாலயங்கள் எதிர்ப்பு தெரிவித்த நாடுகளிலும் பாஸிஸம் இயக்கமாக வளர்ந்தது. எங்கே மாடலயங்கள் மிகுந்த வல்லமை பெற்று விளங்கியதோ எங்கே குடியாட்சியின் சமரச முறைகள் பிரச்சினைக்குத் தீர்வு காண பயன் படுத்தப் படவில்லையோ அங்கே பாஸிஸம் வளர்ந்தது. குடியாட்சி முறைகள் சமூகத்தில் தமது அந்தஸ்து, அதிகாரம், உயர்நிலை இவற்றிற்கு எதிரானவை என மடாலயங்கள் கருதின.

தொழில் வளர்ச்சியும் சமூக அந்தஸ்தும்

பாஸிஸம் வளர்ந்தது மலர்ச்சி அடைய போரில் தோல்வி, பொருளாதார பிற்போக்கு நிலை, பலவீனமான அரசியல் நிறுவனங்கள் இவை மட்டுமல்லாமல் பிற வாய்ப்புக்களும் ஏதுவாக இருந்தன. தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளில் மத்திய வகுப்பினரை துணை கொள்ளுதல் பாஸிஸந்தின் அடிப்படை நோக்கமாகும். பாஸிஸத்தின் வெற்றிச் சமூகச் சீர்குலைவின் மத்திய வகுப்பினரிடையே உண்டாகும் அச்சத்தின் விளைவு என்று விளக்கம் சொல்லலாம். பொருளாதார சீர்குலைவின் விளைவாக சமூகத்தின் கீழ்பட்டத்தினர் ஒன்று சேருவதால் பிற வகுப்பினரிடையே உண்டாகும் அச்சத்தின் விளைவு பாஸிஸமாகும். தொழிற்சங்க இயக்கத்தினுலும் உழைக்கும் வர்க்கத்தினரையும் சமூக புரட்சியையும் உயர்வாக எண்ணும் கம்யூனிஸ்டு கட்யாலும் கீழ்மட்டத்தினரின் கூட்டு வலிமை பயங்கராகம தெரிகிறது.

ஏற்கனவே அரசியல் சலுகைகள் பெற்றுவிட்ட மக்களின் அந்தஸ்த்தைக் குலைக்காமல் தொழில் வளர்ச்சியை தொடரும் இயக்கமாக பாஸிஸத்தை கொள்ளலாம்: பாஸிஸ இயக்கம் நாட்டின் மொத்த நலன்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதால் மேல் மட்டத்தினர் அந்தஸ்து பாதுகாக்கப்படுகிறது. கீழ் மட்டத்தினரின் பொருளாதார நிலையில் முன்னேற்றம் கொண்டு வருவது என்ற கொள்கையை விடுத்து நாட்டின் நிலையை உயர்த்தப் பாடுபடுவதில் அனைவரும் சம பங்காளிகள் என்ற போடி சமத்து

வத்தை அளிக்கிறது. அரசியல் கலகங்களில் 'டைலெக்டிக்' செயல்படுவதற்கு தகுந்த விளக்கம் வலது இடது ஆகிய தீவிரக் கொள்கைகள் ஒன்றை ஒன்று வலிவுபடுத்தும் அளவாகும்.[1]

நாஸிஸம்

முதல் உலகப்போரில் தோல்வியுற்ற நாடுகளில் மிக முக்கிய மான ஜெர்மனி, பாரிஸ் அமைதி மாநாட்டில் இத்தாலியைவிட கேவலமான நிலைக்குத் தள்ளப்பட்டது. போரில் ஜெர்மனியின் நடத்தைக்கு 1919இல் ஏற்படுத்தப்பட்ட புதிய வீமார் குடியரசை காரணகர்த்தாவாக குற்றஞ்சாட்டியது வெர்செயில்ஸ் உடன் படிக்கை. ஜெர்மானிய பகுதிகள் பிரான்ஸ், போலந்து, டென் மார்க்கு, பெல்ஜியம் முதலிய நாடுகளுக்கு பங்கிட்டு கொடுக்கப் பட்டன. மேற்கு ஜெர்மனியின் ரைன் நிலப்பகுதி நேச நாடு களுக்கு (முக்கியமாக பிரான்ஸிற்கு) போரில் ஏற்பட்ட இழப்புக்கு நஷ்ட ஈடாக அளிக்கப்பட்டது. அயல் நாட்டுறவில் கசப்பும் உட்பகுதிகள் பிறநாட்டவருக்கு பிரித்தளிக்கப்பட்டதும் எரிபொருள் எண்ணையாக ஆனது. போருக்குப்பின் நாட்டில் ஏற்பட்ட தீவிர அமைப்புகளில் சோஷலிஸ ஜெர்மானிய உழைப் பாளர் கட்சி முக்கியமானதாகும் (NSDAP அல்லது National என்ற வார்த்தையின் முதலிரண்டு எழுத்துகள் சேர்ந்து ஜெர்மனில் 'நாஸி' என்று கூறப்படுகிறது. நாஸிக் கட்சி சோஷலிஸத்தை தத்துவமாகக் கொண்டதல்ல) உழைக்கும் வர்க்கத்தினரை அடிப்படையாகக் கொண்டதுமல்ல. ஹிட்லரின் தலைமையில் ஜெர்மானிய சமூகத்தினர் அனைவருக்கும் நாஸி படையில் சேர அழைப்பு விடுக்கப்பட்டது—ஜெர்மானிய யூதர்களைத் தவிர.

போரின் பின்பு இத்தாலியில் முஸோலினியின் வெற்றியால் தூண்டப்பட்டு (பீர் ஹால் புஷ் என்னும் இடத்தில்) 1923இல் மியூனிச்சில் ஹிட்லரின் தீவிரப்படை அரசியல் சதியில் இறங்கியது. அதில் தோல்வியும் ஹிட்லரின் சிறைவாசமும் (மெயின் கேம்ப் எழுதியது அப்பொழுதுதான்) போரின் பின் விளைவுகளினின்று மீள முடியாமையும், 1923-லிருந்து அரசு மேற்கொண்ட பொரு ளாதார சீரமைப்புச் செயல்களும் நாஸிப்படையின் அங்கத்தினர் தொகையையும் அரசியல் செயல்களையும் வெகுவாக பாதித்தது, 1929இல் உலகம் முழுவதையும் பாதித்த பொருளாதார சீர்குலைவு ஜெர்மானிய பொருளாதாரத்தை மிகக் கடுமையாக பாதித்தது. அதன் விளைவாக நாஸியினரின் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டது

[1] ராடீ, ஆன்டர்ஸன், கிறிஸ்டல், கிரீன்: அரசியல் பாடத்திற்கு ஒரு அறிமுக உரை, பக். 11

ஜெர்மனியில் வேலையில்லாதவர் எண்ணிக்கை 2 கோடியிலிருந்து 6 கோடியாக உயரவும் நாஸி அங்கத்தினர் எண்ணிக்கை 100,000-லிருந்து 1·4 கோடியாக 1928இல் இருந்து 1932-க்குள் உயர்ந்தது. நாஸி வாக்காளர் பட்டியல் 5·5 கோடியாக 1928லிருந்து 1930க்குள் மாறிவிட்டது. இவ்வாறு முறியடிக்கப்பட்ட அரசு, ஹிட்லரை அரசு அமைக்க அழைத்து 1933 ஜனவரியில் சான்சலராக நியமித்தது. இத்தாலியில் முஸோலினி செய்தது போல் அரசியல் எதிர்ப்புக்களை சமாளித்து ஹிட்லர் வாக்காளர், பார்லிமெண்ட் இவற்றின் துணையால் வல்லாட்சியாளராக மாறினர்.

நாட்டுப் பற்று

ஜெர்மனியிலும் இத்தாலியிலும் ஒருங்கே அரசியல் ஒருமைப்பாடு தற்கால ஐரோப்பிய வரலாற்றிலேயே மிகத் தாமதமாக ஏற்படுத்தப்பட்டது; தற்செயலாக நிகழ்ந்தது அல்ல. (1871இல் இரண்டு நாடுகளிலும்) பல நூற்றுண்டுகளாக தனித்தனி அரசியல் அமைப்புகளில் வாழ்ந்த மக்களிடையே ஒருமை நேயத்தை வளர்க்க அரசியல் கொள்கைகள் பாடுபட்டன தாம் அனைவரும் பொதுவான கலாச்சாரத்தை உடைய ஓரின மக்கள் என்ற உணர்வை ஊட்ட ஜெர்மானிய இத்தாலிய அரசியல் அரசு நிறுவனங்களை வலிமையுடையதாக்கிற்று. எனவே ஜெர்மானிய இத்தாலிய அரசியல் தனிமனிதன் அல்லது குடிமகன் மேல் அக்கறை செலுத்தாமல் நாடு முழுமைக்கும் முக்கியத்துவம் கொடுத்தது. தனிமனிதர் நலம், இயற்கை உரிமைகள் மேற்கு ஐரோப்பாவிலும் ஐக்கிய அமெரிக்க நாடுகளிலும் அரசியல் தத்துவமாக ஏற்கப்பட்ட சமூக ஒப்பந்த கொள்கையை முக்கியமாக கருதவில்லை. ஆனல் தொழில் வளர்ச்சி, சமூக மாற்றங்கள், மிகக் கடுமையான படை புரட்சி, இவை ஆரம்பிக்கும் முன்பே அரசியலில் ஒருமை நேயம் அடைந்த நாட்டில் இலக்கியல் பொது நோக்கமும் குடியாட்சி சோஷலிஸமும் வளர்ந்து தனிநபரின் ஆக்கச் செயல்களுக்கும் நலன்களுக்கும் வழிவகுத்தது. இதனல் அரசு ஆதிக்கத்திலிருந்து குடிமகன் பாதுகாக்கப்படுகிறன்.[1]

நாஸிக் கொள்கை

ஜெர்மானிய அரசு சோஷலிஸம் அல்லது நாஸிஸம் அதன் பெயர் குறிப்பிடுவது போல் நாட்டுப்பற்று மிகுந்ததாக இருந்தது. அரசியல் பொருளாதாரத் தத்துவங்களை விட மனேதத்துவத்தில்

[1] ராடீ, ஆண்டர்ஸன், கிறிஸ்டல், கிரீன்: அரசியல் பாடத்திற்கு ஒரு அறிமுக உரை, பக். 110–111.

அதன் தோற்றத்திற்கான காரணங்களைக் காணலாம். கொள்கை அளவில் நாஸிஸம் குடியாட்சி நாடுகளைப்போல் பிற வகுப்பின ருடன் உழைக்கும் வகுப்பினரை ஒன்று சேர்க்க விழைகிறது. உண்மையில் 'ஜெர்மனி ஜெர்மானியருக்கே' என்பதை அடிப் படையாகக் கொண்ட கொள்கை இது. மிக ஆழ்ந்த நாட்டுப்பற்று கொண்டது நாஸிஸ கொள்கை. அதன் கொள்கைகள் உள் நாட்டில் பொருளாதார சீரமைப்பும், போல்ஷவிஸத்தை எதிர்ப் பதும், போரில் இழந்த பகுதிகளை மீட்பதும் ஆகும். ஜெர்மானிய அல்லது ஆரிய இனத்தைச் சேர்ந்தவரை மட்டுமே உயர்வாகக் கருதும் இனவெறிகொண்டதும் ஆகும். ஜெர்மனி உலகப்போரில் தோல்வியடைந்தாலும் போர்க்களங்களில் ஜெர்மானியர் தோல்வி யுறவில்லை என்பதே இதற்குக் காரணமாகும். பிறநாடுகள் பின்னணியில் கீழ்த்தரமாக வதந்திகளைப் பரப்பியதுதான் தோல்வியின் காரணமாக ஜெர்மனி நினைத்தது. கம்யூனிஸ்டுகள் போல் பாஸிஸ்டுகளைப் போல் நாஸிக் கட்சியும் தன் இளைய தலைமுறையினருக்கு நாட்டுப் பற்று, நாட்டு மக்கள் அனைவரும் ஓரினம் என்ற கொள்கைகளை கற்பிக்க முயற்சிகளை மேற் கொண்டது. பிரிவினை வாதங்கள், எதிர்ப்புகள், ரகசிய சதிகள் முதலியன கடுமையான முறைகளில் அடக்கப்பட்டன.

நாஸிக் கட்சியின் அமைப்பு

தலைமைச் செயலகம் அவற்றைச் சார்ந்த சிறிய அமைப்புகள் என்ற அடிப்படையில் நாஸிகட்சி அமைக்கப்பட்டது. மத்திய தலைமைச் செயலகம் பிற சிறிய அமைப்புகளின் தலைவர்களை நியமிக்கும் உழைக்கும் வர்க்கத்தின் நிலை இந்த அமைப்புகளின் மேற்பார்வையில் இருக்கும். முஸோலினியின் கறுப்புச் சட்டை களைப் போன்று இதற்கும் ஒரு தனி ஆதரவாளர் படை இருந்தது. தலைவர் என்று அழைக்கப்பட்ட ஹிட்லரின் கட்டுப்பாட்டிற்குள் நாஸி கட்சி முழுமையாக இருந்தது. அவர் கட்சியை மட்டு மல்லாமல் அரசையும் தன் அதிகாரத்திற்குள் வைத்திருந்தார். அரசியலமைப்பு சட்டத்தைப் பயன்படுத்தி அவர் சான்சலர் பதவியை மட்டும் பெற்றுரில்லை; அவரும் அவரது செயற்குழுவும் மிக எளிய முறையில் இயற்றும் தீர்மானங்களை சட்டங்களாக்க அனுமதி சட்டம் ஒன்றையும் உருவாக்கினர். ஜெர்மனியின் ஒரே சட்டமன்றம் ரீச்டாக் என்றழைக்கப்பட்டது. அதில் ஹிட்லர் அறுதி பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெற்றிருந்தார். தனித்தனி சட்டங்களால் நாட்டின்பிற பகுதிகள் ஹிட்லர் அவரது செயற்குழு ஆகியோரின் நேரடி அதிகாரத்திற்குள் வந்தன. ஜெர்மனி மத்திய அரசுள்ள ஒரே நாடாக மாறியது.

தற்கால வல்லாட்சிகளின் பொது இயல்புகள்

ரஷ்ய அல்லது மார்க்ஸிய கம்யூனிஸம், பாஸிஸம், ஜெர்மானிய அரசு சோஷலிஸம் அல்லது நாஸிஸம் இவைகளுக்கு பொதுவான சில இயல்புகள் உள்ளன. பாஸிஸம் நாஸிஸம் இவை இறந்த காலத்தில் குறிப்பிடப்பட்டாலும் கம்யூனிஸத்தில் இவை தற்காலத்திலும் செயல்பட்டு வருகின்றன; முதலாவதாக செயல் முறைகளை விட குறிக்கோள்களை முக்கியமாக கருதின மூன்று இயக்கங்களும் வெவ்வேறு அளவுகளில் எதிர்ப்புகளை சமாளிக்க நியாயமற்ற வன்முறைகளை பயன்படுத்தின. படை வலிமை நாட்டிற்கு மிக அவசியமானதாக கருதப்பட்டது. நாடு என்பது ஒரு வகுப்பினரை (உழைக்கும் வர்க்கத்தினரை) அடக்கி யாள பிற வகுப்பினர் பயன் படுத்தும் வன்முறை என்றார் லெனின். இரண்டாவதாக நாட்டின் உட்பகுதிகளின் தனித்தன்மை, வகுப்பு பிரிவினைகள் இவற்றை அழிக்க விரும்பினர். வகுப்புக்களுக்கு இடையே போர்மூண்டு உழைக்கும் வர்க்கத்தினரை தவிர பிற வகுப்பினர் அழியவேண்டும் என்று கம்யூனிஸம் விரும்புகிறது. பாஸிஸமும் நாஸிஸமும் எல்லா வகுப்பினரும் பேதமின்றி நாட்டின் ஒருமைப்பாட்டு நேயத்தில் கலந்து வகுப்புக்களே இல்லாமல் போக வேண்டுமென விரும்பின. மூன்றாவதாக ஒவ்வொரு வல்லாட்சியும் தன் வலிமையை நிலைநாட்ட சில குறிப்பிட்ட முறைகளை முக்கியமாக மேற்கொண்டது. சீர்குலைக்கும் தனித்துவ சக்திகள் அடக்கப்பட வேண்டுமாதலால் பெருமளவு குடிமக்கள் சிறைச் சாலைகளில், பிரிக்கப்பட்டு அடைக்கப்பட்டார்கள்; அல்லது கொல்லப்பட்டார்கள்; வல்லாட்சியாளர்கள் விருப்பத்தை நிறைவேற்ற முக்கிய கருவியாக ரகசிய காவல் துறையினர் செயலாற்றினர். அவர்களுக்கு மிகப் பரவலான அதிகாரங்கள்—தேடுதல், கைது செய்தல், தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் போன்ற சட்ட நீதி மன்றங்களுக்கு தேவை ஏற்படாதவாறு செயல்பட்டனர்; நான்காவதாக தலைவன் அவனது செயற்குழு ஆகியோரிடம் அதிகாரங்கள் குவிந்திருந்தாலும் சட்டம், நீதி ஆகியவற்றின் வெளித்தோற்றங்கள் அழிக்கப்படவில்லை. ஐந்தாவதாக மக்களின் விருப்பமே அரசின் அடிப்படை என்பதை உணர்ந்து ஒவ்வொரு வல்லாட்சியும் கல்வி கற்பித்தல் மூலம் கட்சி மாநாடுகள் கூட்டுவதன் மூலம் கொள்கைகளை விளக்கி பரவச் செய்தலை மேற்கொண்டது. ஆறுவதாக இக்கருத்தின் தொடர்ச்சியாக 'தடைச் சட்டத்தை' எல்லா வல்லாட்சியாளரும் பயன்படுத்தினர். இதன் தீவிர முறை கம்யூனிஸ்டுகளின் 'இரும்புத்திரை' எனப்படுகிறது. இதன் விளைவு கம்யூனிஸ நாடுகள் பிறநாடுகளுடன் சமூக, அரசியல் அறிவுலக தொடர்புகள் போன்ற உறவுகள் வைத்துக் கொள்ள

முடியாது. இத்தகைய கட்டுப்பாடுகளில் கம்யூனிஸ்டுகள் பாஸிஸ்டுகளையும் நாஸிகளையும் வென்றுவிட்டனர். குறிப்பாக 'கோமின்டெர்ன்' என்ற அமைப்பு கம்யூனிஸத்தை பிறநாடு களில் உழைக்கும் வர்க்கத்தினரின் ஆட்சியை நிலை நாட்டுவ வதற்காக பரவச் செய்கிறது. இரண்டாம் உலகப்போரில் சோவியத் யூனியன் மேற்கத்திய குடியரசுகளுடன் நேச உறவு கொண்டிருந்தபோது பெயரளவில் கோமின்டெர்ன் அழிக்கப் பட்டாலும் போருக்குபின் மறுபடியும் செயல்பட ஆரம்பித்தது. கோமின்பார்ம் என்ற அமைப்பும் கோமின்டெர்னைப் போல் குறிக்கோள்களும் செயல் முறைகளும் உடையது ஆகும்.

முடிவுரை

1939-45இல் உலகப் போரில் இத்தாலியும் ஜெர்மனியும் தோல்வியுற்றபோதே பாஸிஸ நாஸிஸ வல்லரசுகள் அழிந்தன. அந்தப் போரின் விளைவாக சோவியத் யூனியன் மிக வலிமை யுடையதாகவே சோவியத் கம்யூனிஸம் கிழக்கிலும் மேற்கிலும் விரிவடையத் துவங்கியது. அதைப் பரப்புவோர் மிகப் பெருமை யாக இது சமூக அல்லது மக்கள் ஆட்சியின் விரிவு என்கிறார்கள். ஆனால் கம்யூனிஸ்டுகள் பயன்படுத்தும் மக்கள் ஆட்சி என்ற வார்த்தையை உன்னிப்பாக கவனிக்க வேண்டும்.

மார்க்ஸிய கம்யூனிஸம் குடியாட்சிக்கு எதிரானது; ஒரே ஒரு வகுப்பினரை மட்டும் முக்கியமாக நினைத்து உரிமைகள் தருகிறது; குடி ஆட்சி மக்களிடையே இருக்கும் திறனில், அடையும் ஆற்றலில், இயல்புகளில், பரம்பரைக் குணங்களில் மற்றும் சமூக சுற்றுப்புறங்களில் இருக்கும் வேறுபாடுகளை உணர்ந்து செய லாற்றுகிறது; குடிமகனுக்கு நாட்டு நடப்புகளில் தன்னிச்சை யாக செயல் உரிமையும் அனைவருக்கும் நீதி வழங்குவதில் சமத் துவமும், அனைவருக்கும் அடிப்படை சுதந்திரமான உடைமை, பேச்சு, கொள்கை, மதச்சார்பு, சட்டத்தின் முன் சம உரிமை ஆகியவற்றை அளிக்கிறது. இந்த உரிமைகள் கம்யூனிஸ் வல்லரசுகளில் மறுக்கப்படுகின்றன.

அரசியல் துறை அறிஞர்களுக்கு குடியாட்சியின் முக்கிய கொள்கையே வயதுவந்த ஆண் பெண் இரு பாலோருக்கு சட்ட மன்ற உறுப்பினரை தேர்ந்தெடுக்க கொடுக்கப்படும் உரிமைதான். தேர்தல்கள் குறிப்பிட்ட இடைநிலை காலங்களில் நடைபெற வேண்டும்; நான்கு வருடங்களுக்கு ஒரு முறை அல்லது பார்லி மெண்டரி அரசுகளில் நடப்பதுபோல செயற்குழு சட்டமன்றத் தின் நம்பிக்கை இழந்ததால் ராஜினமா செய்யும் பொழுதும் நடக்கலாம். வாக்களிக்கும் உரிமையை பயன்படுத்துகையில் மக்கள் தங்கள் விருப்பம்போல் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க

வேண்டும். நடைமுறையிலும் மக்கள் ஒரு கட்சி உறுப்பினரை தேர்ந்தெடுக்க வற்புறுத்தப்படாமல் எந்த கட்சியிலிருந்தும் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கப்பட அனுமதிக்க வேண்டும். கம்யூனிஸ்டு நாடுகளில் கம்யூனிஸ்டு கட்சியால் முடிவு செய்யப்பட்ட கட்சி உறுப்பினர்களினின்றும் மக்கள் சட்டமன்றத்திற்கு தேவைப்பட்ட எண்ணிக்கையை தம் வாக்குகளை அளித்து தேர்ந்தெடுக்கலாம் அல்லது வாக்களிக்காமல் விட்டுவிடலாம். இது குடியாட்சிக்கு புறம்பானது. கம்யூனிஸ்டு நாடுகளில் இந்த முறையினுல் குடிமகனுக்கு எந்தவித உரிமையும் கிடையாது. ஏனெனில் அவன் வாக்களித்தாலும் அளிக்காவிட்டாலும் கட்சி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். கம்யூனிஸ்டு நாடுகளில் செயற்குழு ஆட்சியிலிருந்து அகற்றப்பட முடியாதது. பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படும் சட்டமன்றத்திற்கு கட்டுப்பட்டவரல்லர். பார்லிமெண்டரி அரசின் செயற்குழுபோல் சட்டமன்றத்திற்கு கடமைப்பட்டதல்ல; அடிக்கடி தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படுவதுமல்ல பிரசிடெண்டு முறை அரசு போலும் தேர்ந்தெடுக்கப்படுவதல்ல. குடியாட்சியில் மக்கள் உரிமைகளின் காப்பாளராக இயங்கும், நீதி மன்றங்கள் கம்யூனிஸ நாடுகளில் செயற்குழுவின் கருவிகளாக இயங்குகின்றன. அவை கம்யூனிஸ கொள்கை, மற்றும் வல்லாட்சியாளர்களின் கொள்கைகளை மக்களுக்கு விளக்குகின்றன.

முன்பே கூறப்பட்டது போல் சமூக குடியாட்சி என்பது சோவியத் நாட்டையும் அது போன்ற பிற நாடுகளையும் குறிக்க பயன்படுத்தப்படுகிறது. அவை மார்க்ஸிய வகுப்பில்லா சமூகத்தை உருவாக்கும் நோக்கம் கொண்டுள்ளதால் அவ்வாறு அழைக்கப் படுகின்றதேயொழிய குடியாட்சி நாடுகள் என்று அவற்றை கருதமுடியாது. இந்த கருத்துதான் குடியாட்சி என்ற வார்த்தையின் விளக்கமும் ஆகும். இதில் கம்யூனிஸத்தில் மக்கள் என்பதற்கு (உழைப்பாளிகளும் உழவர்களுமே) உழைக்கும் வர்க்கத்தினர் என்பதுதானே யொழிய அரசியல் சலுகைகள் பெற்ற மேல்மட்டத்தினரை குறிப்பதல்ல. குடியாட்சியில் இந்த வேற்றுமைகள் கிடையாது. குடிமக்கள் தம் சம உரிமைகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட பல கட்சிகளின் பிரதிநிதிகளையும் அவர்களின் வேறுபாடுகளையும் குடியாட்சி அரசில் காணலாம். உழைக்கும் வர்க்கத்தினரின் வல்லாட்சி மிக தீவிரமான கொள்கையாகும். குடியாட்சியில் இத்தகைய தீவிர வாதங்களுக்கு இடமில்லை. அது ஒரு வகை சமரசம் காணும் அரசாகும். பலதரப்பட்ட மனிதர்கள், கட்சியினர், குழுவினர் ஆகியவர்களின் விருப்பம், தேவை இவை தன்னிச்சையாக விவாதிக்கப்

பட்டு அனைவரும் சரியெனக் கொள்ளும் உடன்பாடுகளின்படி செயல்படும் அரசாகும்.

இந்த முடிவுரை கம்யூனிஸத்தை கண்டனம் செய்வதாக மாணவன் எண்ணக்கூடாது. கம்யூனிஸம் குடியாட்சி என்ற வார்த்தையை தவருக பயன்படுத்துவதையே இது எடுத்துக் காட்ட விழைகிறது. முன்பே சுட்டிக்காட்டப்பட்டதுபோல வல்லாட்சிகள் குடியாட்சியின் வெளித்தோற்றங்களை கொண்டுள்ளன. மக்களுடைய இணக்கத்தை கல்வி கற்பித்தல், கொள்கையை பரப்புதல் போன்ற வழிமுறைகளில் பெற முயற்சிக்கின்றனர். ஆரம்ப காலங்களில் வல்லரசு படைபலத்திலும் வன்முறைகளிலும் மிகுந்த நம்பிக்கை கொண்டு அவற்றை பயன்படுத்துகிறது. காலம் செல்ல செல்ல குடிமக்கள் பெரும்பான்மையோராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. குடிமக்களுக்கு அவர்களுடைய அரசே அவர்களுக்கும் உலகத்திற்கும் சிறந்த அரசு முறையாகும் என அவர்களுக்குக் கற்பிக்கப்படுகிறது. 1939–45ஆவது உலகப் போருக்குமுன் சுதந்திர வாக்கெடுப்பு நடந்திருந்தால் பெரும்பான்மையான இத்தாலியரும் ஜெர்மானியரும் பாஸிஸ, நாஸி அரசுகளுக்கு இணக்கம் தெரிவித்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை. இன்றும் ரஷ்யாவில் பெரும்பான்மை மக்கள் கம்யூனிஸ அரசை ஆதரிப்பார்கள். கற்றறிந்த மக்கள் தம் வாக்குரிமையால் வல்லரசிற்கு இணக்கம் தெரிவிக்கலாம். இத்தகைய சூழ்நிலையில் வல்லரசு, குடியரசின் முக்கிய இயல்புகளை தன்னகத்தே கொண்டு விளங்கலாம். அதாவது குடியாட்சி முறையான சுயதேர்வு முறைகளில் பொதுமக்கள் ஆதரவை பெற்று ஆட்சி செய்கிறது என்பதாகும். மக்கள் ஆதரவு இருக்கிறதா என்பதை அடிக்கடி சோதனை செய்து பார்க்க முடியாது. வல்லாட்சியாளர் சுதந்திர தேர்தல்கள் நடத்த விரும்புவதில்லை.[1]

மேற்கோள் நூல்கள்

(1) எப். எல். கார்ஸ்டென்: பாஸிஸத்தின் உதயம்.
(2) எப். ஏ. ஹயக்: அடிமைத்தனத்திற்கு ஓர் வழி.
(3) எஸ். ஜே. வூல்ப் (பதிப்பு): பாஸிஸத்தின் இயல்புகள்.

கேள்விகள்

1. பாஸிஸத்தை வரையறுத்துக் கூறுக.
2. பாஸிஸ இயக்கம் தோன்றுவதற்கான நிலைகள் யாவை?
3. பாஸிஸம் நாஸிஸம் இவற்றிற்கு இடையே இருக்கும் ஒற்றுமைகளைக் குறிப்பிடுக.

[1] ஆர். என். கில்கிறைஸ்டு: அரசியல் கோட்பாடுகள், பக். 264–268

இயல் 14

காந்தியமும் சர்வோதயமும்

காந்தியம்

முன்னுரை

காந்தியம் நாட்டின் தந்தை எனப்போற்றப்படும் மகாத்மா காந்தியின் எண்ணங்களாகும். மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி 1869ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2ஆம் தேதி பிறந்தார். வக்கீல் தொழிலுக்குப் படித்து தேறிய பின்பு அவர் சட்டத் தொழிலை முதலில் இந்தியாவிலும் பின்பு தென்னுப்பிரிக்காவிலும் பயிலத் துவங்கினுர். தென்னுப்பிரிக்காவில்தான் முதன் முதலாக, அங்கே குடியேறிருந்த இந்தியர்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற காந்தி தன் போராட்டங்களைத் துவங்கினுர். 1915இல் இந்தியாவிற்கு திரும்பிய காந்தி 1920லிருந்து 1948இல் அவர் இறக்கும் வரை இந்தியாவை ஆங்கிலேயரின் ஆட்சியிலிருந்து விடுவிப்பதற்காக முழுமையாக பாடுபட்டார். அவர் தாழ்த்தப்பட்டவர்களின் நிலையை உயர்த்துவதற்காகவும் இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காகவும் உழைத்தார். இந்தியாவின் சுதந்திரத்திற்காக தன் வாழ்க்கையை அர்பணித்தார்; அமைதி யான முறையில் ஒத்துழையாமை இயக்கம் நடத்தி உலகத்திற்கே அதன் வலிமையைக் காண்பித்தார். அவருடைய செயல் முறை களும் குறிக்கோள்களும் மிகப் புனிதமானவை.

காந்தியம் என்ருல் என்ன ?

மகாத்மா காந்தி அரசியல் மேதை அல்ல; தத்துவ ஞானியும் அல்ல; எந்த 'இஸத்தையும்' அவர் ஏற்படுத்தவுமில்லை; எந்த தத்துவ அறிஞர்கள் கூட்டத்தையோ கொள்கையையோ சார்ந்த வருமல்லர். சமுதாயம், அரசியல், பொருளாதாரம், மதம் முதலிய வற்றைப்பற்றி அவர் கொண்டிருந்த எண்ணங்களின் திரட்டே காந்தியம் எனப்படுகிறது. 1936ல் காந்தியே 'காந்தியம் என்று எதுவும் இல்லை. எனக்குப்பின் எந்த கொள்கையையும் விட்டுச் செல்ல நான் விரும்பவும் இல்லை. நான் எந்த கொள்கையையும் கோட்பாட்டையும் கண்டுபிடித்ததாக உரிமை கோரவும் இல்லை

ஏளிய முறையில் சில அடிப்படை உண்மைகளை என்னுடைய தினசரி வாழ்க்கையில் எழும் பிரச்சினைகளுக்குப் பயன்படுத்தி வந்துள்ளேன். நான் கொண்டுள்ள கருத்துக்களும் நான் அடைய முயன்ற முடிவான கொள்கைகளும் இறுதியானவை அல்ல நான் அவற்றை நாளையே மாற்றலாம். உலகத்தாருக்கு கற்றுக்கொடுக்க என்னிடம் ஒன்றும் இல்லை. சத்தியமும் அகிம்சையும் மலைகளைப் போன்றே மிகப் பழமையானவை. நான் செயல்படுத்தியதாகக் கூறுபவை எல்லாம் எனக்கு வெற்றியான சில சோதனைகளை பெரிய அளவில் இயற்ற முயற்சிகள் செய்வது தான். இதைச் செய்வதில் சில சமயங்களில் தவறுகள் பல நேர்ந்ததுண்டு. அதனால் நான் திருத்திக் கொண்டதும் உண்டு. என்னுடைய எண்ணங்கள் அனைத்தும், அதை தத்துவம் என்ற போலி பெயருடன் அழைக்கலாம் என்றால், அவை நான் கூறியுள்ளவைகளில் அடங்கும். அதை யாரும் காந்தியம் என்ற ழைக்க வேண்டாம்; அதில் எந்தவித இஸமும் இல்லை,' என்று கூறியிருக்கிறார்.[1]

காந்தி எந்த கொள்கைகளையும் கண்டுபிடிக்கவில்லை. அவருடைய வாழ்க்கைத் தத்துவம் நூதனமானது நம் நாட்டைப் பற்றியும் உலக நாடுகளைப் பற்றியும் எழும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சில கொள்கைகளைப் பயன்படுத்தினார். சத்தியம், அகிம்சை, பிற மதங்களுக்குப் மதிப்பு, சமுகத்தில் சமத்துவநிலை ஆகியவை காந்தி மிக விரும்பிய சில கருத்துக்கள் ஆகும். அவருடைய முறைகள் சத்தியாக்கிரகம், அமைதியான முறையில் ஒத்துழை யாமை செய்தல், சட்டப்படி மறுப்பு தெரிவித்தல், வேலைசெய்ய மறுப்பு, பட்டினி கிடத்தல் முதலியன. காந்தியின் கருத்துப்படி நல்ல குறிக்கோள்களை அடைய நல்ல வழிமுறைகள் அவசியம்.

காந்தியின் எண்ணங்களில் மாறுதல் உண்டுபண்ணிய கூறுகள்

இந்தியப் பண்பாடு, மதம் இவைகள் காந்தியின் எண்ணங் களில் மிக முக்கியமான இடம் வகித்தன. பகவத் கீதை காந்தியின் மனதில் அழியா எண்ணங்களை விளைவித்தது. 'சந்தேகங்கள் என்னை ஆட்டுவிக்கையில் ஏமாற்றங்கள் என்னை நோக்கி வருகை யில் நான் பகவத் கீதையை கையில் எடுத்து என்னை சமநிலைப் படுத்தும் வாசகத்தைப் படிப்பேன்' என்றார். ஜைனமும் பௌத் தமும் கூட காந்தியின் எண்ணங்களை மாற்றும் அளவுக்கு செல் வாக்குப் பெற்றிருந்தன. கிறித்துவ விவிலிய நூலிலுள்ள

[1] பி. சீத்தாராமையா : காந்தியும் காந்தியமும், நூல் 1, பக். 26

'மலையினின்று கிறித்து அளித்த பொன்மொழிகள்' காந்தியின் மனதில் அழிக்க முடியாத விளைவை உண்டாக்கியது.

ஜான் ரஸ்கினின் 'இறுதி நிலைமுறை வரை', டேவிட் தாருவின் 'சட்டப்படி மறுத்தலித்தல்', லியோ டால்ஸ்டாயின் 'இறைவனின் அரசு உன்னுள்ளே இருக்கிறது' போன்றவை காந்தியின் எண்ணங்களுக்கும் கொள்கைகளுக்கும் வடிவம் கொடுத்தவை ஆகும்.

மதத்தையும் சமுதாயத்தையும் பற்றி காந்தி

காந்தி தீவிர இறைப்பற்றுள்ளவர். அவருக்கு எல்லா மதங்களிலும் பற்றும் மதிப்பும் இருந்தன. இறைப்பற்று இல்லாமல் எந்தவித அரசியலும் இருக்கமுடியாது என்ற எண்ணமுடையவர். அவர் மதங்களை ஒழுக்கத்தின் பிறப்பிடமாகவும் சத்தியம், அகிம்சை, உலகியல் செல்வங்களை மறுத்தல் முதலியனவற்றை கற்றுக்கொடுப்பவையாகவும் கருதினார். காந்தி, அவருடைய இறை நம்பிக்கைதான் அவரை அரசியலுக்கு தள்ளியதாகக் கூறுகிறார். நான் அரசியலில் பங்கேற்றதன் காரணம் அது பாம்பு கழுத்தை வளைப்பதுபோல் அரசியல் நம் தினசரி வாழ்வை சுற்றிக் கொண்டிருப்பதால் தான். அதனின்று எத்தனை முயன்றாலும் ஒருவன் விடுபடமுடியாது. அந்த பாம்புடன் நான் சண்டையிடுகிறேன். அதனால்தான் அரசியலில் மதத்தை நுழைக்கிறேன்" என்றார்.

காந்தி சமூகத்தில் சமத்துவத்தை விரும்பினார். இந்து முஸ்லிம் ஒருமைப்பாட்டிற்காக கடுமையாக உழைத்தார். தீண்டாமையையும் பிற வேற்றுமைகளையும் நீக்குவதற்கும் கடுமையாக உழைத்தார்.

காந்தியின் அரசியல் கருத்துகள்

காந்தியை புத்தருடன் ஒப்பிடுகிறார்கள். அவர் சத்தியத்தில் நம்பிக்கை வைத்து அதை தினசரி வாழ்க்கையில் பயின்று சமூகத்தின் மொத்த நலனுக்காக பரவச் செய்தார். காந்தியின் மேன்மை அவருடைய ஒழுக்கமேம்பாட்டில்உள்ளது. அவருடைய இந்த இயல்பினால்தான் இந்தியாவிலுள்ள மக்களுக்கு அவர் அரசியலில் ஒழுக்கம் மிகுந்த தலைமை நிலை வகுக்க முடிந்தது. அவர் அரசியலை சத்தியம், அகிம்சை ஆகிய இருகருத்துகள்மூலம் செயல்படுத்தினார். காந்தியின் முக்கியத்துவத்திற்கு காரணம் அவல நிலையிலிருந்த அரசியலை தூய்மைப்படுத்தி அதை புனிதமான நிலைக்கு உயர்த்தியதுதான் என்கிறார் பேராசிரியர் சரன் என்பார்.

சத்தியமும் அகிம்சையும் அரசியல் எதிரிகளான பிரிட்டிஷாரை முறியடிக்க காந்தி பயன்படுத்திய அரசியல் கருவிகள் ஆகும். அகிம்சை என்பது எல்லையில்லா அன்புத் தத்துவமாகும். இதுவே மிக உயர்ந்த கொள்கையாகும். மனிதகுலம் இதனுல்தான் காக்கப் படுகிறது. அகிம்சையும் சத்தியமும் ஒன்றுக்கொன்று வேறு பட்டவை அல்ல. இரண்டும் ஒன்றை ஒன்று ஈடுசெய்பவைதான். அகிம்சை என்பதே வீரர்களின் கருவியாகும். அகிம்சையில் நம்பிக்கை வைத்துள்ள ஒருவன் வலிமையைப் பயன்படுத்தும் சக்தி இருந்தாலும் பயன்படுத்தமாட்டான். அகிம்சையில் நம்பிக்கை வைப்பவன் ஓர் ஆங்கிலேயனை எண்ணத்தில், வார்த்தைகளில் அல்லது செயல்களில் எதிலும் தீங்கு செய்ய மாட்டான்.[1] அகிம்சை மிகக் கொடூரமான ஒருவனின் மனத்தைக்கூட மாற்றியமைக்கும் என்று காந்தி கருதுகிருர்.

காந்தி சத்தியாக்கிரகத்தை மன வலிமை அல்லது அன்பின் வலிமை என்று கூறுகின்ருர். சத்தியாக்கிரகி தன்னுடைய எதிரியை எந்த விதத்திலும் தீங்கு செய்யாமல் மிக எளிய வாதங்களால் அவனுடைய அறிவை அணுகி தன் மெய்வருத்தத்தால் அவனை தன் பக்கம் வெல்வான். சத்தியாக்கிரகம் இரட்டைவித நன்மைகள் உடையதாகும். அதைக் கடைப்பிடிப்பவருக்கு மட்டுமல்லாமல் அது பயன்படுத்தப்படும் எதிராளிக்கும் நன்மையே விளைவிக்கும். சத்தியாக்கிரகி தோல்வியைக் கண்டு கலங்க மாட்டான். ஏனெனில் அவன் சத்தியத்திற்காக தளராமல் உழைக்கிருன். இத்தகைய போரில் சிறைச்சாலை விடுதலையின் வழியாக, இறத்தல் முக்தி நிலையாக கருதப்படும். சத்தியாக்கிரகம் காந்தியால் பயன்படுத்தப்பட்ட மிக சக்தியுள்ள கருவியாகும். சத்தியாக்கிரகம் என்பது செக்கோஸ்லோவாகியாவின் மேல் ஜெர்மனியால் பயன்படுத்தப்பட்ட படைக்கலன்களின் சக்திக்கு சமமாகும் என்று காந்தி கருதினுர். சத்தியாக்கிரகம் மிக வல்லமை மிகுந்த முறையாக இந்திய விடுதலைக்கு பயன் பட்டது.

காந்திக்கு சுயராச்சியம் அல்லது தன்ஞட்சி பற்றிய எண்ணங்கள் இருந்தது. 1925இல் இதை அவர் வரையறுத்துக் கூறினுர். சுயராச்சியம் என்பது நாட்டிலுள்ள மிக எளிய மக்களுக்கும் விடுதலை முழுமையாக கிடைக்கவேண்டும் என்பதாகும். மிகச் சிலர் அதிகாரத்தை கைப்பற்றுதல் என்பது உண்மையான சுயராச்சியமாகாது அதிகாரம் தவருக, மிகையாக பயன்படுத்தப்படும்பொழுது அதை எதிர்க்க அனைவருக்கும் சக்தி

[1] பி. சீத்தாராமையா : காந்தியும் காந்தியமும், நூல் 1. பக். 33

வேண்டும். அந்த நிலைதான் சுயராச்சியமாகும். காந்தி அதிகாரத்தையும் ஆணையையும் பரவலாக்க விரும்பினார். கிராம பஞ்சாயத்துக்களுக்கு அதிகப்படி அதிகாரங்கள் கொடுக்கப்படவேண்டும் என்று அவர் விரும்பினார். மத்திய அரசுக்கு மிகக் குறைந்த அதிகாரங்களே அளிக்கப்பட வேண்டுமென விரும்பினார்.

அரசு நிறுவப்படுவதொன்றே இறுதிக் குறிக்கோள் அல்ல என்றார் காந்தி. அது இறுதிக் குறிக்கோளுக்கு ஒரு வழி முறைதான் என்றார். நாட்டின் இறுதிக்குறிக்கோள் மக்களின் நலனாகும். நாட்டை மிகத் தூய்மையான நிறுவனமாக அவர் கருதாததால் சட்டங்கள் மக்களுடைய நியாயங்களுக்கு எதிராக இருந்தால் அதைப் பணிய மறுக்கலாம் என்று கூறுகிறார்.[1]

காவல் துறைக்கு நாட்டில் ஓர் புதிய நிலையை கொடுக்க விரும்பினார். காவல் துறையினர் மக்களுடைய பணியாட்களாக, தீயவரை நல்வழிப்படுத்துபவராக செயல்பட வேண்டுமென்றார். காந்தியை பொறுத்தவரை அகிம்சை செயல்படுத்தப்படும் நாட்டில் தனியார் சொத்துரிமை அதிகம் இருக்காது. அதிகப்படி சொத்து ஓர் நிறுவனத்தின் மேற்பார்வையில் வைக்கப்படும்.[2] இதனால் தீமைகள் வெகுவாகக் குறையும். காந்தி நிலையான படை, கட்டாய படைக்கலப் பயிற்சி இவற்றிற்கு எதிரானவர். அகிம்சையை பயிற்றுவிக்கும் ஓர் படைதான் தேவை என்று நினைத்தார்.[3]

பொருளியலைப் பற்றி காந்தி

காந்தி கனரகத் தொழில்களுக்கு எதிரியல்ல. கனரகத் தொழில்கள் லாபத்தை மட்டும் கருதி எற்படுத்தப் படக்கூடாது என்றும் அவை குடிசைத் தொழில்களை அழிக்கும் அளவிற்கு வலிமை பெற்றிருக்கக்கூடாது என்றும் கருதினார்,[4] பொருளுற்பத்தி ஆக்க சக்திகள் அரசுடைமையாக்கப்படுவதை அவர் விரும்பவில்லை. அகிம்சையை தத்துவமாகக்கொண்ட நாடு பொருளாதாரத்தேவைகளை சுயமாக பூர்த்தி செய்து கொள்ளும் சக்தி, சமூக நீதி, அனைவருக்கும் சம பொருளாதார வாய்ப்புகள் முதலியவைகளை நிலைநாட்டவேண்டும் என்றார் வனங்கள், சுரங்கங்கள், மின் சக்தி, போக்குவரத்து முதலியவை பொது நலன்களுக்காக

[1] டாக்டர் ஜி. தாவன் : மகாத்மா காந்தியின் அரசியல் தத்துவம், பக். 293
[2] 'ஹரிஜன்' செப்டம்பர் 1, 1940, பக். 265
[3] 'இளமையான இந்தியா' செப்டம்பர் 24, 1925
[4] டாக்டர் ஜி. தாவன் : மகாத்மா காந்தியின் அரசியல் தத்துவம், பக். 309–310

அரசின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கவேண்டும் என்றார். குடிசை தொழில்கள் அரசால் ஊக்குவிக்கப்படவேண்டும் என்றார். 'ஒருவருக்கும் அவரதுதேவைக்கும் மேல் சொத்துக்கள் இருக்கக்கூடாது என்றார். கூட்டுப்பண்ணை விவசாயத்தை அவர் வரவேற்றார்''[1].

காந்தி மிக உன்னதமாக கருதிய நிலை வகுப்பு வேற்றுமையில்லா—அரசு என்பதே இல்லா சமுதாயமாகும். மார்க்ஸிஸ்டுகளும் அரசு இல்லாநிலை வேண்டும் கொள்கையினர். இவர்களுடைய கருத்துக்கள் ஒத்ததுபோல் தோன்றிலும் காந்தி கொடுமைகளை விளைவிக்கும் வன்முறைப் புரட்சிகள், வகுப்பு போராட்டங்கள் இவற்றை ஆதரிக்கவில்லை. பொருளாதார சமச்சீர் முறைகளில் முதலாளித்துவத்தை ஒடுக்கவே விரும்பினார்.

காந்தியைப் பற்றிய மதிப்பீட்டுரை

காந்தி அரசியல் வாதியுமல்ல; அரசியல் தத்துவ மேதையுமல்ல. அவர் அடிப்படையில் ஓர் சீர்திருத்தவாதி; தான் கூறியவற்றை செயலில்செய்து காட்டியவர். ராம ராச்சியம் அவருடைய எண்ணத்தில் மிகஉயர்ந்த நாடாகும். சத்தியாக்கிரகம், அகிம்சை இரண்டிற்கும் சிறந்த வடிவமும் பொருளும் அளித்தார். காதி அல்லது கைத்தறித்துணி, சுதேசி இயக்கம், நாட்டின் கல்வி முறை, இந்து-முஸ்லீம் ஒருமைப்பாடு, கிராமங்கள் முன்னேற்றம், மது விலக்கு, இளமை திருமணத்தை எதிர்த்தல், விதவை மறுமணத்தை ஆதரித்தல். இவைமிக உயர்ந்த கருத்துக்களாகும். காந்தி மிகச்சிறந்த மனித நலவாதி அவர் இந்து மதத்தால் வெகுவாக மாற்றம் பெற்றார். இந்திய வரலாற்றில் காந்தியின் இடம் ஐக்கிய அமெரிக்க நாடுகளில் வாஷிங்டன், ஜெபர்ஸன் போன்றவர்களைப் போன்றது. லாவோ-சே, புத்தர், ஸொராஸ்தர், செயிண்ட்பால் இவர்களைப்போல் ஓர் மகாஞானி. தற்கால இந்தியா காந்தியின் எண்ணங்களாலும் பாடங்களாலும் பெருமளவிற்கு பாதிக்கப்பட்டுள்ளது. காந்தியின் பல கொள்கைகளுக்கும் சரியான வடிவம் கொடுத்துள்ளது இந்திய அரசு. காந்தியின் அநேக கொள்கைகள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் இடம் பெற்றுவிட்டது. கிராம பஞ்சாயத்துக்களின் அமைப்பு காந்தியின் கொள்கைகளால் பெருமளவிற்கு மாற்றம் கொண்டுள்ளது. இந்தியாவின் அயல் நாட்டுக் கொள்கை நடுவு நிலையாக இருப்பதற்கு காரணமே காந்தியின் அகிம்சைக் கொள்கைதான் அரசின் சமூக பொருளாதார செயல்கள் எல்லாம் காந்தியின் கொள்கைகளால் மாற்றம் கண்டவை.

[1] 'ஹரிஜன்' ஏப்ரல் 20, 1940, பக். 97

சர்வோதயம்

ஆசார்ய விநோபா பாவே, காகா கலேல்கர், ஜயப்பிரகாஷ் நாராயண், டாக்டர் குமரப்பா, கே. சி. மஷ்ரூவாலா ஆகிய தலைவர்கள் காந்தி 1948இல் இறந்தபின் 'முன்னேற்ற கொள்கை'களை செயலாக்க விழைந்தனர். சர்வோதய சமூகத்தில் எல்லோருக்கும் சுதந்திரமும் சமத்துவமும் அளிக்கப்படும். அங்கு வகுப்பு அல்லது ஜாதிபிரிவினைகள் இருக்காது. சுரண்டலுமில்லை; அநீதியும் இல்லை. முழுமையான வளர்ச்சிக்கு சமவாய்ப்புகளே உண்டு. தனிமனிதன் தான் அத்தகைய சமுதாயத்தின் ஆணி வேராக இருப்பான். ஆனால் தனிமனிதனின் சுயநலம் சமுதாய அமைப்பிற்கு அடிப்படையாக இருக்காது. அத்தகைய சமுதாயத்தில் அனைவருடைய வாழ்க்கையும் ஒன்றுபட்டு முழுமையாக விளங்கும். ஆதலால் உழைப்பும், கலையும், கேளிக்கைகளும் ஒரே மாதிரியான முறையில் நடைபெற்று முழுமையான ஒருமைப்பாட்டு நேயம் விளங்கும். சர்வோதய சமூகத்தின் அடிப்படை சத்தியமும் அகிம்சையும் ஆகும்.

சர்வோதய சமூகத்திற்கு நாடு தேவையில்லை. விளக்கமாகச் சொன்னால் சர்வோதய சமூகம் அரசு இல்லாத சமூகமாகும். சர்வோதய கோட்பாட்டை விளக்கமாக செயல்படுத்துவோர் அரசியல் கட்சிகளுக்கு எதிரிடையான எண்ணங்கள் கொண்டவர்கள். ஆதலால் பிரதிநிதித்துவ மக்களாட்சியை ஆதரிப்பதில்லை. அது கிராம மக்களின் ஒப்புதலை பெறும் கிராம அரசை ஆதரிக்கிறது. சர்வோதய சமூகத்தில் உழைப்பும் செல்வமும் பொது உடைமையாக இருக்கும். கிராமம் முழுமையும், அதன் நிலங்களுக்கு உரிமையாளராக இருக்கும். அரசு முழுமையாக அழிக்கப்படமாட்டாது. இறைமை மக்களிடையே இருக்கும். மக்களுக்கு சேவை செய்வது அரசின் கடமையாகும். மக்கள் நலனே அரசு கொள்கைகளுக்கு அடிப்படைத் தத்துவமாக விளங்கும். அரசு இல்லா—வகுப்பு பிரிவினை இல்லா ஒரு சமூகத்தை உருவாக்க உடனடியாக இயலாது. எனவே சர்வோதய தலைவர்கள் அகிம்சையை அடிப்படையாக கொண்ட நாட்டை தற்காலிக நிலையாக உருவாக்க முயற்சி செய்கின்றனர். அத்தகைய நாட்டில் உடலுழைப்பிற்கும் அறிவினால் செய்யும் பணிக்கும் வேறுபாடுகள் இருக்காது. அன்பும் ஒத்துழைப்புமே சமூகத்தின் அடிப்படையாக விளங்கும். ஒவ்வொருவரின் தேவைக்கேற்றபடி என்பதும் ஒவ்வொருவரின் திறமைக்கேற்றபடி என்பதும் கடைபிடிக்கப்படும். நிலமும் செல்வமும் பொதுவுடைமையாக்கப்படுவதால் செல்வந்தனோ ஏழையோ சர்வோதய சமூகத்தில் இருக்க முடியாது.

சர்வோதயம் காந்தியத்திலிருந்து மாறுபடுவது எதில் என்று ஆராய்ந்தால் காந்தியம் தனிமனிதனுக்கு அளவற்ற அதிகாரங்களை கொடுப்பதை ஆதரிப்பதில்லை என்பதே.

குறிக்கோள்களைப் பொறுத்தவரை சர்வோதயத்திற்கும் மார்க்ஸியத்திற்கும் ஒற்றுமை உண்டு. இரண்டு வகுப்பு பிரிவினைகளற்ற—அரசு அற்ற சமுதாயத்தை நிலைநாட்ட விரும்புகிறது. சர்வோதயமும் மார்க்ஸியமும் அதை நிறைவேற்ற பின்வரும் வழிகளில் வேறுபடுகிறது. சர்வோதய கட்டுபாடு அகிம்சை, சத்தியம், சுயமாக ஒத்துழைத்தல் இவற்றை வலியுறுத்துகிறது. மார்க்ஸிஸ்டுகள் தங்கள் நோக்கங்களை நிறைவேற்ற வன்முறைகளைப் பின்பற்றுகின்றனர். காந்தியின் அடிப்படைக் கொள்கை ஆன்மநேயம். மார்க்ஸினுடைய உலகாயதம்.

மேற்கோள் நூல்கள்

(1) ஜி. என். தாவன் : மகாத்மா காந்தியின் அரசியல் தத்துவம்.

(2) டி. கே. தத்தா : மகாத்மா காந்தியின் தத்துவம்.

(3) எம். கே. காந்தி : சர்வோதயம்.

(4) ஜே. பி. கிருபாளனி : காந்திய வழி.

கேள்விகள்

1. 'காந்தியம்' என்றால் என்ன ?
2. காந்தியின் அரசியல் கருத்துக்களை கோடிட்டுக் காட்டுக.
3. 'சர்வோதயமாக்குதல்' என்பதை விளக்கவும்.